இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை

பொது மற்றும் சமூகப்பிரிவு

மார்ச் **2013**-உடன் முடிந்த ஆண்டிற்கானது

தமிழ்நாடு அரசு

அறிக்கை எண் **4 - 2014**

பொருளடக்கம்

	பத்தி	பக்கம்
முகவுரை		v
அத்தியாயம் I - முன்னுரை		
இவ்வறிக்கை பற்றிய விவரம்	1.1	1
தணிக்கைக்குட்படுத்தப்பட்ட அமைப்புகளின் விவரக்குறிப்புகள்	1.2	1
தணிக்கை செய்வதற்கான அதிகாரம்	1.3	2
திட்டமிடல் மற்றும் தணிக்கை நடத்துதல்	1.4	3
தணிக்கைக்கான பதிற்குறிப்பு	1.5	4
செயலாக்கத் தணிக்கைகளின் தணிக்கைக் குறித்துரைகள்	1.6	4
இணக்கத் தணிக்கையின் தணிக்கைக் குறித்துரைகள்	1.7	8
பரிந்துரைகள்	1.8	10
அத்தியாயம் II - செயலாக்கத் தணிக்கைகள்		
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு த்துறை		
தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் செயல்பாடு	2.1	11
உயர்கல்வித் துறை		
பாலிடெக்னிக் கல்லூரிகள் வாயிலாக தொழில்நுட்பக் கல்வி பயிற்றுவிப்பு	2.2	34
பாரதியார் பல்கலைக்கழகத்தின் செயல்பாடு	2.3	55
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை *சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*		
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மின்னாட்சி முயற்சிகளின் செயலாக்கம்	2.4	78

	பத்தி	பக்கம்
அத்தியாயம் III - இணக்கத் தணிக்கை		
பள்ளிக் கல்வித் துறை		
பொது நூலகங்களின் செயல்பாடுகள்	3.1	91
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை		
மருத்துவ சாதனங்களின் கொள்முதல் மற்றும் அவற்றை உபயோகித்தல்	3.2	101
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்	3.3	108
மிகைக் கொடுப்புகள்/வீணான மற்றும் பயனற்ற செலவினம்	**3.4**	
வருவாய், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைகள் *தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்*		
தற்காலிகத் தங்குமிடங்கள் கட்டியதில் நேர்ந்த வீண் செலவினம்	3.4.1	114
தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்/கூடுதல் செலவினம்	**3.5**	
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை		
தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்	3.5.1	116
உயர் கல்வித் துறை		
குறைபாட்டுடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளால் நேரிட்ட கூடுதல் செலவினம்	3.5.2	117
ஒழுங்குமுறை விவகாரங்களும் மற்றவையும்	**3.6**	
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை		
தொலைமருத்துவ வசதிகள் பராமரிக்கப்படாமை	3.6.1	119
உயர் கல்வித் துறை *அண்ணா பல்கலைக்கழகம் - மண்டல மையம், கோயம்புத்தூர்*		
சரியான முறையில் ஆராயாது இயந்திரங்கள் வாங்கப்பட்டமையும் அவை நிறுவப்படாமையும்	3.6.2	121

	பத்தி	பக்கம்
உள்துறை		
மத்திய அரசு பொறுப்பேற்ற திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம்	3.6.3	122
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை		
நடமாடும் எடைமேடை பரிசோதனை வாகனங்கள் பயனற்று இருந்தமை	3.6.4	124
திட்டமிடல், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை		
பயன்படுத்தப்படாத நிதி மற்றும் சரியற்ற செலவின அறிக்கையளிப்பு	3.6.5	125
மலைப்பகுதி வள தகவல் அமைப்பு செயல்படுத்தப்படாமை	3.6.6	127

இணைப்புகள்

இணைப்பு எண்	விவரங்கள்	பக்கம்
1.1	நிலுவையிலுள்ள ஆய்வறிக்கைகள் மற்றும் தணிக்கைப் பத்திகளின் துறைவாரியான விவரங்கள்	129
2.1	தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் செயல்படுத்தும் நலத் திட்டங்கள்	130
2.2	ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள்	131
2.3	பெறப்பட்டு பயன்படுத்தப்பட்ட தொகுப்பு மானியங்களின் விவரங்கள்	132
2.4	அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் சிறப்புக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ஆகியவற்றின் பயன்பாடு	133
2.5	தங்கும் விடுதிகள் கட்டுமான நிலவரம்	134
2.6	பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு செயல்முறை வகுப்புகள் நடத்தப்படாமை	135
2.7	ஆசிரியப் பணியிடங்களில் காலியிடங்கள் - அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள்	136
2.8	திட்ட அனுமதி வழங்குவதில் மின்னாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கு முன்னரும் பின்னரும் காணப்பட்ட செயலாக்கம்	137

இணைப்பு எண்	விவரங்கள்	பக்கம்
2.9	ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேர்வுகளில் 2013ஆம் ஆண்டில் திட்ட அனுமதி வழங்குவதில் ஏற்பட்ட காலஅளவின் போக்குநிலை மீதான பகுப்பாய்வு	138
3.1	மாவட்ட வாரியாக எழுத்தறிவு பெற்றோர் மற்றும் நூலக உறுப்பினர்கள்	139
3.2	தமிழ்நாடு சுகாதாரக் கூடுதல் நிதியுதவித் திட்டத்தின் கீழ் TNMSCக்கு தமிழ்நாடு ஒப்பளித்த மற்றும் விடுவித்த நிதி	140
3.3	கைவிடப்பட்ட மற்றும் முழுமை பெறாத கொள்முதல்கள்	142
3.4	கொள்முதல்களில் ஏற்பட்ட காலதாமதம் குறித்த விவரங்கள்	143
3.5	பணி மதிப்பீடு அதிகரித்துக் காட்டப்பட்டமை	144
	இந்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட சுருக்கக் குறியீடுகள், சொற்றொகுதிகளுக்கான பொருள்விளக்கத் திரட்டு	145

முகவுரை

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட செலவினத்தின் மீதான இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151-வது பிரிவின் கீழ், மாநில ஆளுநருக்குச் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை பல்வேறு துறைகள் அல்லது நடவடிக்கைகளின் மீதான இணக்க தணிக்கை மற்றும் செயலாக்க தணிக்கைகளில் வெளிப்பட்ட முக்கிய கருத்துகளை உள்ளடக்கியுள்ளது. அரசின் ஆண்டு கணக்குகள் மீதான தணிக்கையின் காண்புரைகள் தனியாக சமர்ப்பிக்கப்படுகின்ற மாநில நிதி நிலை மீதான அறிக்கையின் ஒரு பகுதியாக அமையும்.

தணிக்கையில் உள்ளடக்கப்பட்ட பகுதி, தணிக்கை செய்வதற்கான அதிகாரம் மற்றும் தணிக்கையின் விளைவாக வெளிப்பட்ட முக்கிய தணிக்கைக் குறிப்புகளை சுருக்கமாக வழங்கிடும் முன்னுரையுடனான அத்தியாயத்துடன் இவ்வறிக்கை துவங்குகிறது. அறிக்கையின் அத்தியாயம் - II செயலாக்க தணிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. அத்தியாயம் - III இணக்க தணிக்கையிலிருந்து வெளிப்படும் முக்கிய கண்டுபிடிப்புகளை விவரிக்கிறது.

2012-2013 ஆண்டின் கணக்குகளை சோதனைத் தணிக்கை செய்யும்போது அறியப்பட்ட நேர்வுகளும், முந்தைய ஆண்டுகளில் கண்டறியப்பட்டு சென்ற ஆண்டுகளின் அறிக்கைகளில் சேர்க்கப்படாத நேர்வுகளும் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. 2012-2013 ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் அறியப்பட்ட குறிப்புகளும் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரால் வெளியிடப்பட்ட தணிக்கை தரங்களுக்கு இணங்கும் வகையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தமிழில் தரப்பட்டுள்ள இவ்வறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தணிக்கைக் குறிப்புகள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துக் குறிப்புகளிலுமுள்ள உண்மைகளின் அர்த்தம் தமிழில் தரப்பட்டுள்ள அறிக்கையில் மாறுபடாமல் இருக்க எல்லாவித முயற்சியும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மொழி பெயர்க்கப்பட்ட இவ்வறிக்கையில் ஏதாவது சந்தேகம் எழுமானால், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையையே அதிகாரபூர்வமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அத்தியாயம் I

முன்னுரை

அத்தியாயம் I

முன்னுரை

1.1 இவ்வறிக்கை பற்றிய விவரம்

இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் இவ்வறிக்கையானது தெரிவு செய்யப்பட்ட திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் மீதான தணிக்கை, சட்டங்கள், விதிகள் ஆகியவற்றுடன் அரசுத் துறைகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளின் இணக்கம் மீதான தணிக்கை ஆகியவற்றின் மூலம் எழும் குறிப்புகள் தொடர்பானதாகும்.

தணிக்கையின் முக்கிய விளைவுகளை மாநில சட்டமன்றத்தின் பார்வைக்குக் கொண்டு செல்வதே இவ்வறிக்கையின் முக்கிய நோக்கமாகும். நிதிசார் நடவடிக்கைகளின் இயல்பு, அளவு மற்றும் பரிமாணம் ஆகியவற்றிற்கு ஏற்றாற் போல் அறிக்கையளித்தலின் தன்மை இருக்கவேண்டும் என்று தணிக்கைத் தரநிலைகள் கூறுகின்றன. சிறந்த ஆட்சி முறைக்கும் அரசு அமைப்புகளின் மேம்பட்ட நிதி மேலாண்மைக்கும் வழி வகுக்கும் தகுந்த கொள்கை முடிவுகளையும், ஆணைகளையும் உருவாக்கவும் அவற்றை நிறைவேற்றுபவர்கள் தகுந்த திருத்த நடவடிக்கைகளை எடுக்கவும் தணிக்கைக் கண்டுபிடிப்புகள் உதவிட வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பொருத்தமான சட்டங்கள், விதிகள் முறைமைகள், பல்வேறு ஆணைகள், தகுதி வாய்ந்த அமைப்புகளின் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு தணிக்கைக்குட்படுத்தப்படும் அமைப்புகள் இணங்கி நடக்கின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ள அந்த அமைப்புகளின் வரவுகள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளின் ஆய்வையே இணக்கத் தணிக்கை குறிக்கிறது.

ஓர் அமைப்பு, பெருந்திட்டம் அல்லது திட்டத்தின் நோக்கங்கள் எந்த அளவு சிக்கனமாகவும், சிறந்த முறையிலும் பயனுள்ளதாகவும் நிறைவேறின என்பதை ஆய்வு செய்வது செயலாக்கத் தணிக்கையாகும்.

தணிக்கைக்குட்படுத்தப்படும் அமைப்புகளின் விவரம், தணிக்கைக்குத் திட்டமிடல் தணிக்கையின் அளவு மற்றும் தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம் இந்த அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளன. செயலாக்கத் தணிக்கையின் குறிப்புகளை அத்தியாயம் IIலும், பல்வேறு துறைகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளின் நடவடிக்கைகள் மீதான இணக்கத் தணிக்கையின் குறிப்புகள் அத்தியாயம் IIIலும் தரப்பட்டுள்ளன.

1.2 தணிக்கைக்குட்படுத்தப்பட்ட அமைப்புகளின் விவரக்குறிப்புகள்

அரசு தலைமைச் செயலக அளவில், ஆணையர்கள், இயக்குநர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களின் உதவியோடு செயல்படும் முதன்மைச்

இவ்வறிக்கையில் உபயோகிக்கப்பட்ட சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டு 145ம் பக்கத்தில் உள்ளது.

செயலாளர்கள்/செயலாளர்கள் தலைமையில், மாநிலத்தில் 37 துறைகள் இயங்குகின்றன. அவற்றில் 13 பொதுத்துறை நிறுவனங்கள், 2386 தன்னாட்சி/ உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட 23 துறைகள், முதன்மை கணக்காய்வுத் தலைவர் (பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை), தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி, அவர்களின் தணிக்கைக்கு உட்பட்டவையாகும்.

அரசு 2012-13ம் ஆண்டில் மேற்கொண்ட செலவினம் அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளோடு ஒப்பீடு செய்யப்பட்டதன் நிலை **அட்டவணை 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 1.1 : செலவினத்தின் ஒப்பீட்டு நிலை

(₹ கோடியில்)

செலவுகள்	2010-11			2011-12			2012-13		
	திட்டம்	திட்டம் சாரா	மொத்தம்	திட்டம்	திட்டம் சாரா	மொத்தம்	திட்டம்	திட்டம் சாரா	மொத்தம்
வருவாய் செலவினம்	***14,267***	***58,649***	***72,916***	***17,576***	***66,262***	***83,838***	***23,384***	***73,683***	***97,067***
பொதுச் சேவைகள்	28	25,896	25,924	52	28,889	28,941	36	31,616	31,652
சமூகச் சேவைகள்	11,258	17,651	28,909	13,728	19,534	33,262	19,288	19,335	38,623
பொருளாதார சேவைகள்	2,473	9,749	12,222	3,172	10,970	14,142	3,277	14,351	17,628
உதவி மானியங்களும் பங்குத் தொகைகளும்	508	5,353	5,861	624	6,869	7,493	783	8,381	9,164
மூலதனச் செலவினம்	***12,219***	***217***	***12,436***	***16,216***	***120***	***16,336***	***14,351***	***217***	***14,568***
வழங்கப்பட்ட கடன்களும் முன்பணங்களும்	***292***	***1,960***	***2,252***	***338***	***5,145***	***5,483***	***170***	***4,599***	***4,769***
பொதுக்கடன் திருப்பிச் செலுத்துவது (வழிவகை முன்பணங்களின் கீழான நிதி நடவடிக்கைகள் உட்பட)	*	*	***3,297***	*	*	***3,830***	*	*	***5,015***
எதிர்பாராச் செலவு நிதி	*	*	*30*	*இல்லை*	*இல்லை*	*இல்லை*	*இல்லை*	*இல்லை*	*இல்லை*
பொதுக் கணக்கு செலவுகள்	*	*	***1,04,959***	*	*	***1,20,953***	*	*	***1,33,101***
மொத்தம்			**1,95,890**			**2,30,440**			**2,54,520**

* திட்டம் மற்றும் திட்டம் சாராதது என்ற பாகுபாடு இங்கு பொருந்தாது

(ஆதாரம் : அந்தந்த ஆண்டுக்கான நிதிக் கணக்குகள்)

1.3 தணிக்கை செய்வதற்கான அதிகாரம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 149 மற்றும் 151 பிரிவுகள் மற்றும் இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத்தலைவரின் (கடமைகள், அதிகாரம் மற்றும் பணி முறைமை) 1971 ஆண்டு சட்டத்தின் (சட்டம்) மூலம் இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத்தலைவர் (C&AG) தணிக்கை செய்வதற்கான அதிகாரத்தைப் பெறுகிறார். இச்சட்டத்தின் பிரிவு 13[1]ன் கீழ் தமிழ்நாடு அரசுத் துறைகளின் செலவுகளை C&AG தணிக்கை செய்கிறார்.

[1] (i) மாநிலத்தின் தொகு நிதியிலிருந்தான அனைத்து நிதி நடவடிக்கைகள், (ii) எதிர்பாராச் செலவு நிதி மற்றும் பொதுக் கணக்குகள் தொடர்பான அனைத்து நிதி நடவடிக்கைகள், (iii) வணிகம், உற்பத்தி, இலாப நட்டக் கணக்குகள், ஐந்தொகைக் குறிப்பு மற்றும் இதர துணை கணக்குகள் ஆகியவற்றின் மீதான தணிக்கை

இச்சட்டத்தின் பிரிவுகள் 19(2)[2], 19(3)[3] மற்றும் 20(1)[4] ஆகியவற்றின் கீழ் தணிக்கை செய்யப்படும் 33 தன்னாட்சி அமைப்புகள் தொடர்பாக C&AG தான் தனித்த தணிக்கையாளராவார். மேலும், அரசால் கணிசமான அளவு நிதியுதவி வழங்கப்படும் இதர தன்னாட்சி அமைப்புகளின் தணிக்கையும் இச்சட்டத்தின் பிரிவு 14[5]ன் கீழ் C&AGஆல் மேற்கொள்ளப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைக்கு வேண்டிய தொழில்நுட்ப வழிகாட்டுதலையும் உதவியையும் C&AG உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு வழங்குகிறார். பல்வேறு தணிக்கைகளுக்கென கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் C&AGஆல் 2007ல் வெளியிடப்பட்ட தணிக்கை மற்றும் கணக்குகள் மீதான தணிக்கைத் தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.4 திட்டமிடல் மற்றும் தணிக்கை நடத்துதல்

ஒட்டுமொத்தமாக ஒரு துறை/அமைப்பின் தவறு செய்யும் சாத்தியக்கூறின் மதிப்பீடு, அரசுத் துறைகளின் அலகுகள் மேற்கொண்ட செலவினம், நிதிசார்ந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருப்பதன் அளவு, உள்ளீட்டுக் கட்டுப்பாடுகளின் ஒட்டுமொத்த நிலையின் மதிப்பீடு மற்றும் சம்பந்தப்பட்டோரின் நியாயமான பயங்கள், தவறுகளால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இம்மதிப்பீடுகளில் முந்தைய ஆண்டுகளில் தணிக்கையில் கண்டறியப்பட்ட குறிப்புகளும் கருத்தில் கொள்ளப்பட்டன. தவறு செய்யும் சாத்தியக்கூறின் மதிப்பீடு அடிப்படையில், தணிக்கை நடத்தப்படும் காலஅளவு மற்றும் மீண்டும் தணிக்கை மேற்கொள்வதற்கான கால இடைவெளி ஆகியவை முடிவு செய்யப்படுகின்றன.

தணிக்கை முடிவடைந்த பின்னர், தணிக்கைக் குறிப்புகள் அடங்கிய ஆய்வறிக்கைகள் தணிக்கை செய்யப்பட்ட அலுவலகங்களின் முதன்மை அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஆய்வறிக்கைகள் பெறப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் தணிக்கைக் குறிப்புகளுக்கு பதில் அளித்திட அவ்வலுவலகங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. பதில்கள் பெறப்படும் நேர்வுகளில், தணிக்கைக் குறிப்புகள் தீர்வு செய்யப்படுகின்றன அல்லது தீர்வு பெறும்வரை தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆய்வறிக்கைகளில் உள்ள முக்கிய தணிக்கைக் குறிப்புகளை மாநில சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கும் பொருட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 151ன் கீழ், மாநில ஆளுநருக்கு அனுப்பப்படும் தணிக்கை அறிக்கைகளில் சேர்ப்பதற்கென நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

---

2 சம்பந்தப்பட்ட சட்டங்களில் செய்யப்பட்டுள்ள வழிவகைக்கு ஏற்ப பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அல்லது பாராளுமன்றம் தாமே நிறுவிய கழகங்களின் கணக்குகள் மீதான தணிக்கை (நிறுமங்கள் அல்லாதவை)

3 மாநில ஆளுநர் கேட்டுக் கொண்டதன் பேரில் மாநில சட்டப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அல்லது மாநில சட்டப் பேரவை தாமே நிறுவிய கழகங்களின் கணக்குகள் மீதான தணிக்கை (நிறுமங்கள் அல்லாதவை)

4 C&AG மற்றும் அரசு ஒப்புக்கொண்ட விதிமுறைகள் வரையறைகளின்படி மாநில ஆளுநர் கேட்டுக் கொண்டதன் பேரில் எந்தவொரு அமைப்பு அல்லது அதிகார அமைப்பின் கணக்குகள் மீதான தணிக்கை

5 (i) மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து கணிசமாக மானியங்கள் அல்லது கடன்கள் மூலம் நிதியுதவி பெறும் ஒரு அமைப்பு/அதிகார அமைப்பின் அனைத்து வரவுகள் மற்றும் செலவினங்களின் தணிக்கை, (ii) ஒரு நிதியாண்டில் மாநிலத்தின் தொகுநிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவி ₹ ஒரு கோடிக்கு குறையாமல் எந்தவொரு அமைப்பு/அதிகார அமைப்பு உள்ளதோ அவ்வகை அமைப்பு/அதிகார அமைப்பின் அனைத்து வரவுகள் மற்றும் செலவினங்களின் தணிக்கை

1.5 தணிக்கைக்கான பதிற்குறிப்பு

1.5.1 தணிக்கை பத்திகள் மற்றும் செயலாக்கத் தணிக்கைகள்

ஆறு வார காலத்திற்குள் தங்களது மறுமொழிகளை அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையுடன் பன்னிரெண்டு வரைவுத் தணிக்கைப் பத்திகளும் நான்கு வரைவு செயலாக்கத் தணிக்கைகளும் சம்பந்தப்பட்ட துறைகளின் முதன்மை செயலாளர்/செயலாளர்களுக்கு நேர்முகக் கடிதங்கள் மூலம் மே முதல் டிசம்பர் 2013 வரையிலான காலத்தில் அனுப்பி வைக்கப்பட்டன. அனுப்பப்பட்ட பன்னிரெண்டு தணிக்கைப் பத்திகளில், ஏழு பத்திகளுக்கு மட்டுமே துறையின் மறுமொழி பெறப்பட்டன. பெறப்பட்ட மறுமொழிகள், இவ்வறிக்கையில் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. வரைவு செயலாக்கத் தணிக்கைகளைப் பொருத்தவரை நவம்பர் 2013 முதல் பிப்ரவரி 2014 வரையிலான காலத்தில் அரசுப் பிரதிநிதிகளுடன் தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வுகள் நடத்தப்பட்டன. தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடு மீதான ஓர் செயலாக்கத் தணிக்கைக்கு மட்டுமே அரசின் மறுமொழி பெறப்பட்டுள்ளது. அரசின் பதில்களும் தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வில் அரசுப் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களும் இவ்வறிக்கையை இறுதி செய்யும் போது கருத்தில் கொள்ளப்பட்டன.

1.5.2 ஆய்வறிக்கைகளுக்கான மறுமொழிகளின் நிலுவைநிலை

செப்டம்பர் 30, 2012 வரை அனுப்பப்பட்ட ஆய்வறிக்கைகளை கூர்ந்தாய்வு செய்ததில் 4,539 ஆய்வறிக்கைகளுக்குத் தொடர்பான 15,370 தணிக்கைப் பத்திகள் மார்ச் 2013 நிலைப்படி நிலுவையில் இருந்தது என கண்டறியப்பட்டது. இதன் விவரம் **இணைப்பு 1.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையிலான ஆய்வறிக்கைகளுக்கு மறுமொழி பெறப்படவில்லை என்பது, இவ்வாய்வறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள், விடுபாடுகள் மற்றும் முறைகேடுகளை களைவதற்கு அலுவலகத் தலைவர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் தகுந்த மற்றும் போதுமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதை உணர்த்துகிறது.

1.6 செயலாக்கத் தணிக்கைகளின் தணிக்கைக் குறித்துரைகள்

இவ்வறிக்கை ஒரு தகவல் தொழில்நுட்பத் தணிக்கை உள்ளிட்ட நான்கு செயலாக்கத் தணிக்கைகளைக் கொண்டுள்ளது. அரசுத் துறையிலுள்ள நிர்வாகிகள் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மக்களுக்கு மேம்பட்ட சேவைகளை வழங்கவும் உதவி செய்யும் நோக்கத்துடன் குறிப்பிட்ட திட்டங்கள்/துணைத் திட்டங்கள் செயலாக்கத் தணிக்கை செய்வதும், தகுந்த பரிந்துரைகளை வழங்குவதுமே தற்போதைய தணிக்கையின் முக்கிய கவனமாக இருந்து வருகிறது. முக்கியத் தணிக்கைக் குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1.6.1 தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் செயல்பாடு

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982ன் (சட்டம்) கீழ் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை (வாரியம்) (1994) உருவாக்கியது. மாநிலத்திலுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட பயன்களை

வழங்குவதில் வாரியத்தின் செயல்திறனை மதிப்பிட வாரியத்தின் செயல்பாடு மீது தணிக்கை நடத்தப்பட்டது. முக்கியத் தணிக்கைக் குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- தகுதியுள்ள தொழிலாளர்களைக் கண்டறிந்து பதிவு செய்ய வாரியத்திடம் எந்த ஒரு செயல்முறையும் இல்லை. மற்ற மாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் வாரியத்தால் பதிவு செய்யப்படவில்லை.

- வாரியம் ஏப்ரல் 2011லிருந்து முறையாக அமைக்கப்பட்ட ஒரு ஆட்சிக்குழுவைப் பெற்றிருக்கவில்லை. ஏப்ரல் 2011லிருந்து, வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர், அரசின் அனுமதி இல்லாமலேயே, வாரியத்தின் ஆட்சிக்குழுவின் அதிகாரங்களை பயன்படுத்தி ஆட்சிக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றினார்.

- வாரியம், 2008-13 காலகட்டத்தில், தன்வசம் இருந்த ₹ 687.08 கோடியில் ₹ 147.31 கோடி மட்டுமே கட்டுமானத் தொழிலாளர்களின் நலத்திட்டங்களுக்காக செலவிட்டது.

- தினக்கூலி அடிப்படையில் அதிக பணியாளர்களை அமர்த்தியதாலும், ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கு மேல் பணியிடங்களை இயக்கி வந்ததாலும், வாரியத்தின் நிர்வாகச் செலவினம் உயர்ந்து அது மொத்தச் செலவினத்தில் 26 சதவீதமாக இருந்தது.

- உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறைகள் மற்றும் இதர நிறுவனங்கள், பங்களிப்புத் தொகையை வசூலித்து வாரியத்திடம் செலுத்துவதைக் கண்காணிக்க எந்த ஒரு அமைப்புமுறையும் இல்லை. பதிவு பெற்ற தொழிலாளர்களில், 10 முதல் 12 சதவீதத்தினர் மட்டுமே பதிவினைப் புதுப்பித்தனர்.

- வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மற்றும் அத்திட்டங்களின் கீழ் பெறப்படும் உதவித்தொகைகள் அரசின் மற்ற துறைகளால் செயல்படுத்தப்படும் இதே போன்ற திட்டங்களோடு ஒப்பிடும் போது பதிவு பெற்ற தொழிலாளர்களை ஈர்க்கக்கூடியதாக இல்லை.

- சோதனைச் சரிபார்ப்பில் தொழிலாளர்களுக்கு பல்வேறு வகையான உதவித்தொகைகள் முறைகேடான மற்றும் தகுதியற்ற முறையில் வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது. வாரியத்தில் கண்காணிப்பு செயல்முறைகள் பயனற்றதாக இருந்ததோடு உள்தணிக்கை முறையும் ஏற்படுத்தப்படவில்லை.

(பத்தி 2.1)

1.6.2 பாலிடெக்னிக் கல்லூரிகள் வாயிலாக தொழில்நுட்பக் கல்வி பயிற்றுவிப்பு

பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளின் பல்வேறு பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் பாடப் பிரிவுகளை பாலிடெக்னிக் கல்லூரிகள் வழங்குகின்றன. பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களும் தொழிற்பயிற்சி நிறுவனங்களிடமிருந்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றவர்களும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேரத் தகுதியுடையவராவர். மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியை தொழில்நுட்பக் கல்வி

இயக்குநரகம் ஒருங்கிணைக்கிறது. பாலிடெக்னிக் கல்லூரிகள் வாயிலாக தொழில்நுட்பக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டதன் செயலாக்கத் தணிக்கையின் முக்கிய தணிக்கைக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

- தொழில்நுட்பக் கல்விக்கென பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட ₹ 241.60 கோடியில், பாலிடெக்னிக் கல்லூரிகளின் வளர்ச்சிக்காக ₹ 14.78 கோடி (ஆறு சதவீதம்) மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியில் ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கொண்டு வரத் தேவையான பொதுவான செயல்முறைத் திட்டம் மற்றும் குறிப்பிட்ட தனித் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கான மாநில வாரியம் நவம்பர் 2008க்குப் பிறகு மாற்றியமைக்கப்படவில்லை.

- அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்ட கூடுதல் மானியங்கள் அவை வழங்கப்பட்டதிலிருந்து இரண்டு முதல் ஒன்பது ஆண்டுகள் கடந்த பின்னரே பிடித்தம் செய்யப்பட்டன. மத்திய அரசு நிதியை தமிழ்நாடு அரசு விடுவித்ததிலும் தாமதங்கள் இருந்தது தெரியவந்தது.

- மாணவர் சேர்க்கையில் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 5 முதல் 11 சதவீதம் வரையிலும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 6 முதல் 15 சதவீதமும் குறைவினம் இருந்தது.

- மாதிரி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளில் குறைவினம் இருந்து, தங்கும் விடுதிகளின் கொள்திறனைக் காட்டிலும் கூடுதலாக (மாணவர் விடுதிகளில் 74 சதவீதமும் மாணவியர் விடுதிகளில் 94 சதவீதமும்) மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

- ஆசிரியப் பணியாளர் மற்றும் ஆசிரியரல்லாத தொழில்நுட்பப் பணியாளர் பதவிகளில் காலிப் பணியிடங்கள் காணப்பட்டன.

- அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் 2008-11 தொகுதியில் 72 என்பதிலிருந்து 2010-13 தொகுதியில் 47ஆகக் குறைந்தது.

(பத்தி 2.2)

1.6.3 பாரதியார் பல்கலைக்கழகத்தின் செயல்பாடு

கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் அடங்கிய அதிகார எல்லை கொண்ட பாரதியார் பல்கலைக்கழகத்தை (பல்கலைக்கழகம்) பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம், 1981ன் கீழ் கோயம்புத்தூரில் தமிழ்நாடு அரசு உருவாக்கியது (1982). இளைஞர்களுக்கு தரமான உயர்கல்வி புகட்டுதல், ஆராய்ச்சி மற்றும் அறிவாற்றல் பரவலுக்கு வழி வகுத்தல், பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் கல்விரீதியிலான பிற மதிப்புச் சின்னங்களை நிறுவி வழங்குதல் ஆகியவை பல்கலைக்கழகத்தின் முக்கியமான குறிக்கோள்களாகும். பல்கலைக்கழகத்தின் செயல்பாடு மீது நடத்தப்பட்ட ஒரு

செயலாக்கத் தணிக்கை குறிப்பிடத்தக்க தணிக்கைக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

- சுயநிதிக் கல்லூரிகளில் வழங்கப்படும் சமூகத்தின் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய, பொதுமக்களிடையே வரவேற்பு மிகுந்த இளநிலை/முதுநிலை பாடப்பிரிவுகள் எதுவும் பல்கலைக்கழகத்தின் உறுப்பு மற்றும் அதனுடன் இணைக்கப் பெற்ற கல்லூரிகளில் வழங்கப்படவில்லை.

- தொலைதூரக்கல்விப் பிரிவில், மாணவர்கள் தாங்களாகவே கற்கும் வகையில் அமைந்த பயிற்சி பாடப்புத்தகங்களைத் தயார் செய்வதற்குப் போதுமான கல்வியியல் ஊழியர்கள் இல்லை.

- மொத்தமுள்ள 135 ஆராய்ச்சித் திட்டங்களில், 33 ஆராய்ச்சித் திட்டங்கள் அவை நிறைவடைய நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட 5 முதல் 36 மாதங்கள் கடந்த பின்னும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

- தொலைதூரக்கல்விப் பிரிவு நிதிக்கணக்கில் உபரியிலிருந்து ₹ 55.25 கோடி, குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்குக் கூடுதலாக பொதுநிதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

- மிகை நிதியை முதலீடு செய்வதற்காக நிதிக் கணக்குகளின் வங்கி இருப்புகள் காலமுறை தோறும் ஆய்வு செய்யப்படவில்லை.

- 43 அறக்கட்டளை கணக்குகளுள், 17 கணக்குகளின் கீழ் ஈட்டப்பட்ட வட்டி மாணவர்களுக்குப் பரிசுகள் அல்லது படிப்புதவித் தொகைகள் வழங்குவதற்கு பயன்படுத்தப்படவில்லை.

- பல்கலைக்கழக விடுதிகளில் 619 மாணவர்களும் 602 மாணவியர்களும் தங்குவதற்குரிய இடவசதிக்கெதிராக 2008-13 காலகட்டத்தில் வருடாந்தரச் சேர்க்கை முறையே 868 மாணவர்கள் மற்றும் 1,020 மாணவியர்கள் என்றிருந்தது.

(பத்தி 2.3)

1.6.4 சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மின்னாட்சி முயற்சிகளின் செயலாக்கம் மீதான தகவல் தொழில்நுட்பத் தணிக்கை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) கட்டுப்பாட்டுச் செயல்பாடுகளுக்கான மின்னாட்சி முறையை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது (2006). திட்ட அனுமதி விண்ணப்பம் (PPA) ஒப்புதல் வழங்குவதற்கான நேரத்தினை குறைப்பது, CMDAவின் அன்றாட செயல்பாடுகளில் ஒளிவுமறைவுத் தன்மையை மேம்படுத்துவது, மற்றும் அமைப்பு முறை மற்றும் இணையவழி மூலம் செயல்படுத்தப்பட்ட தொடர்புகள் ஆகியவற்றை சிறப்புறக் கண்காணிப்பது இந்த மின்னாட்சிப் பயன்பாட்டின் நோக்கங்களாகும். முக்கிய அங்கமான கட்டட திட்டங்களை சரிபார்ப்பதை மின்னணுவியல் ரீதியாக தானியக்கியாகக் கட்டுப்படுத்துவது உட்பட மேம்பட்ட மின்னணு பணியோட்டத்தினை அறிமுகப்படுத்தி கணினிமயமாக்குதலை எளிதாக்கும் வகையில் ஒரு அலுவல் நடைமுறைப் புத்தாக்க (Business Process Re-engineering) நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. CMDAவின் மின்னாட்சி முயற்சிகளின் செயலாக்கத்தின் மீது செய்யப்பட்ட செயலாக்க தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

- மின்னாட்சி முறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னரும், PPA பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கால அளவில் எவ்வித முன்னேற்றமும் இல்லை மற்றும் குடிமக்கள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள காலவரையறை பின்பற்றப்படவில்லை. தானியங்கி பணியோட்ட அமைப்பில் ஏற்பட்ட தடையின் காரணமாக தொகுதிச் செயல்முறை கடைபிடிக்கப்பட்டதால் பொதுமக்கள் தங்கள் விண்ணப்பங்களின் நிலையை இணையதளம் மூலமாக சரிபார்க்கக்கூடிய வசதியை இழக்க நேரிட்டது. இதனால், CMDAவின் அன்றாட செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கம் நிறைவேறவில்லை.

- மின்னாட்சி அமைப்புடன் ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்ட கட்டடத் திட்ட மீளாய்விற்கான முக்கிய மென்பொருளான தானியங்கி திட்ட அனுமதி பயன்பாட்டு மென்பொருள் (APPAS), மின்னாட்சி அமைப்பு முறை முழுமையற்ற/ பகுதியாக செயல்படுத்தப்பட்டதன் காரணமாக ஒருங்கிணைக்கப்படவில்லை. APPAS தரவுத்தள வடிவமைப்பிலும் குறைபாடுகள் இருந்தன.

- ₹ 1.01 கோடி செலவு செய்து மின்னாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும் CMDAவால் திட்டமிட்ட நோக்கங்களை எய்த இயலவில்லை .

(பத்தி 2.4)

1.7 இணக்கத் தணிக்கையின் தணிக்கைக் குறித்துரைகள்

அரசுத் துறைகள்/அமைப்புகள் திறம்பட செயலாற்றுவதற்கு ஊறு விளைவிக்கும் பல குறைபாடுகளை முக்கியமான செயற்களங்களில் தணிக்கை கண்டறிந்தது. இணக்கத் தணிக்கையில் கண்டறியப்பட்ட முக்கிய தணிக்கைக் குறிப்புகள் பின்வருமாறு:-

பொது நூலகங்களின் செயல்பாடுகள்

மாவட்டங்களில் பயனாளர் குழுக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட நூலக ஆணைக்குழுவை (LLAs) அரசு அமைக்கவில்லை. LLAக்கள் இல்லாத காரணத்தால், திட்டமிடுதல் மற்றும் முடிவெடுத்தல் ஆகிய பணிகளை மாவட்ட நூலக அதிகாரிகளே மேற்கொண்டனர். நூலகங்களை சரிவர பராமரிப்பதற்கு முக்கிய வருவாய் வரவான நூலக மேல்வரியின் வசூல் நிலுவையில் இருந்தது. மாநில நிதியிலிருந்து ஆரம்பத்தில் அரசு வழங்கிய பணியாளர் தொகையினை LLAக்களால் திரும்ப செலுத்த இயலவில்லை. மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களுள் 10 மாவட்டங்களிலுள்ள எழுத்தறிவு பெற்றவர்களில் 10 சதவீதத்தினர் கூட நூலகங்களில் உறுப்பினர்களாகச் சேரவில்லை. சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில், நூலகக் கட்டடங்கள் பழுதடைந்த நிலையிலிருந்தன. மேலும், உள்கட்டமைப்பு வசதிகளான புத்தகங்களை அடுக்கி வைப்பதற்கான அலமாரி அடுக்குகள், ஊழியர்கள் மற்றும் வாசகர்களுக்கான கழிப்பிட வசதிகள் ஆகியவற்றில் பற்றாக்குறைகள் இருந்தன. மாவட்ட நூலக அலுவலர், நூலகர், பதிவு எழுத்தர் மற்றும் காவலாளி ஆகிய பணியிடங்கள் பெரிய அளவில் காலியாக இருந்தது காணப்பட்டது.

(பத்தி 3.1)

மருத்துவ சாதனங்களின் கொள்முதல் மற்றும் அவற்றை உபயோகித்தல்

ஒப்பந்தப்புள்ளிகளை ஆய்வு செய்து இறுதி செய்ததிலும் ஒப்பந்தம் வழங்குவதிலும் ஏற்பட்ட காலதாமதம், காலதாமதத்தினால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவினம், கொள்முதல் செய்யப்பட்ட மருத்துவ சாதனங்களை திட்டத்தில் சேராத வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கியமை, ஒப்புதலளிக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்ட சில சாதனங்களை கொள்முதல் செய்யாமை போன்ற குறைபாடுகள் தணிக்கையில் கண்டறியப்பட்டன. மேலும், கொள்முதல் செய்யப்பட்ட சாதனங்கள் இடவசதியில்லாததால் அவை மருத்துவமனைகளில் நிறுவப்படாமல் இருந்ததும், நிறுவப்பட்ட சாதனங்கள் மருத்துவமனைகளில் உபயோகப்படுத்தப்படாமல் இருந்ததும் உலக வங்கி உதவி பெற்ற இந்த கூடுதல் நிதியுதவித் திட்டத்தின் நோக்கங்கள் முழுமையாக நிறைவேறுவதை தாமதப்படுத்திவிட்டன.

(பத்தி 3.2)

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு பணஉதவி வழங்குவதற்கென அரசு 2011-13 காலத்தில் ₹ 1,174.21 கோடி செலவு செய்தது. செயல் இலக்குகள் இயல்பு மீறிய வகையில் நிர்ணயிக்கப்பட்டதால் வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கத்தில் பெரும் மீதங்கள் ஏற்பட்டன. DMRMBSன் கீழ் முதல் தவணை நிதியுதவி பெற்ற பயனாளிகளில் 36 சதவீதத்தினர் அரசு மருத்துவமனை அல்லாத பிற மருத்துவமனைகளில் குழந்தையை ஈன்றதால் அடுத்த தவணைகளை பெறவில்லை. பண உதவி அளிப்பதில் ஒரு மாதம் முதல் 26 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டது என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

(பத்தி 3.3)

குடிசைப்பகுதி குடும்பங்களை தங்க வைக்கும் பொருட்டு ₹ 1.83 கோடி செலவில் கட்டப்பட்ட தற்காலிகத் தங்குமிடங்கள் மூன்றாண்டுகளுக்கும் மேலாக யாரும் குடியேறாமல் இருந்து பின்னர் இடிக்கப்பட்டதால் கட்டுமானச் செலவினம் வீணானது.

(பத்தி 3.4.1)

மாநில மருத்துவ உதவி சங்கம், தேவையான ஆவணங்களை குறித்த காலத்தில் மத்திய அரசிடம் அளிக்கத் தவறியால் மத்திய அரசின் நிதியுதவியாக ₹ 12 கோடி பெறப்படாமல் போனதுடன் மாநில நிதியிலிருந்து ₹ 9.50 கோடி தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினமானது.

(பத்தி 3.5.1)

மதுரையிலுள்ள தொழில்நுட்பக் கல்விக் கோட்டச் செயற்பொறியாளர், சிறப்பு பணியினத்திற்கு, குறித்துரைக்கப்பட்ட தரவுகளைத் (observed data) தயார் செய்து, அதனைப் பின்பற்றி மதிப்பீடு தயார் செய்யத் தவறியதால், பணிகளின் மதிப்பீட்டுத் தொகை மிகைப்படுத்திக் காட்டப்பட்டதுடன் கூடுதலாக ₹ 1.36 கோடியும் செலவானது.

(பத்தி 3.5.2)

துறை ₹ 2.29 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்ட தொலைமருத்துவ வசதிகளை நடைமுறைப்படுத்தவும் பராமரிக்கவும் தவறியதால், மூன்றாண்டுகளுக்கு மேலாக சாதனங்களும் கருவிகளும் பயன்படுத்தப்படாமலே இருந்தன.

(பத்தி 3.6.1)

ஆய்வகம் அமைப்பதற்காக அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ₹ 5.47 கோடி செலவில் வாங்கிய இயந்திரங்கள், அவற்றை நிறுவுவதற்குத் தேவையான இடம் இருப்பதை உறுதி செய்து கொள்ளாததால், மூன்றாண்டுகளாகியும் நிறுவப்படாமலே இருந்தன.

(பத்தி 3.6.2)

தீயணைப்பு மற்றும் அவசரகாலப் பணிகளை வலுப்படுத்தும் பொருட்டு ₹ 10.45 கோடியை மத்திய அரசு வழங்கியிருந்தாலும் கூட, அனுமதியளிக்கப்பட்ட ஒதுக்கீடான ₹ 13.06 கோடிக்கெதிராக தமிழ்நாடு அரசால் ₹ 4.26 கோடிக்கு மட்டுமே நிதிசார் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டமையால் மத்திய அரசு பொறுப்பேற்ற திட்டத்தின் நோக்கம் எட்டப்படாமல் போனது.

(பத்தி 3.6.3)

மத்திய அரசு இலவசமாக வழங்கிய நடமாடும் எடைமேடை பரிசோதனை வாகனங்களை இயக்குவதற்கான ஓட்டுநர் மற்றும் உதவியாளர் பணியிடங்களும், பராமரிப்புச் செலவினமும் ஒப்பளிப்பு செய்யப்படாத காரணத்தால் இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரையில், ₹ 1.78 கோடி பெறுமான மூன்று வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தன.

(பத்தி 3.6.4)

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியான ₹ 68.40 கோடி பயன்படுத்தப்படாமல் அரசுக் கணக்கிற்கு வெளியே இருந்ததுடன் செலவினம் குறித்த சரியற்ற அறிக்கையளிப்பும் செய்யப்பட்டது.

(பத்தி 3.6.5)

நீலகிரி மாவட்டத்திற்கான மலைப்பகுதி வள தகவல் அமைப்பை உருவாக்குவதற்காக திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு ₹ 1.45 கோடி வழங்கப்பட்ட போதிலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட இயக்குநருக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையே ஒருங்கிணைப்பு மற்றும் உரிய கண்காணிப்பு இல்லாத காரணத்தால் இவ்வமைப்பு பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(பத்தி 3.6.6)

1.8 பரிந்துரைகள்

சிறந்த ஆட்சிமுறையையும் பொதுவாக துறைத்திட்டங்களின் செயலாக்கத்தின் மீது சிறந்த கண்காணிப்பையும் மேம்பாடு அடையச் செய்ய உதவும் நிர்ணயிக்கப்பட்ட உள்செயல்முறை மற்றும் ஒழுங்கு முறைகளை கடைபிடிக்காமை தொடர்பான உள்ளிட்ட பல விஷயங்கள் மீது குறிப்பிட்ட பரிந்துரைகளை இவ்வறிக்கை கொண்டுள்ளது. இப்பரிந்துரைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு செயல்படுமாறும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் தகுந்த நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யுமாறும் மாநில அரசிடம் எடுத்துச் சொல்லப்படுகிறது

அத்தியாயம் II

செயலாக்கத் தணிக்கைகள்

அத்தியாயம் II

செயலாக்கத் தணிக்கைகள்

இந்த அத்தியாயம் (i) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் செயல்பாடு, (ii) பாலிடெக்னிக் கல்லூரிகள் வாயிலாக தொழில்நுட்பக் கல்வி பயிற்றுவிப்பு, (iii) பாரதியார் பல்கலைக்கழகத்தின் செயல்பாடு மற்றும் (iv) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மின்னாட்சி முயற்சிகளின் செயலாக்கம் மீதான தகவல் தொழில்நுட்பத் தணிக்கை ஆகியவற்றின் மீதான செயலாக்கத் தணிக்கைகளில் கண்டறிந்த குறிப்புகளைக் கொண்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

2.1 தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் செயல்பாடு

தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம்

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982ன் (சட்டம்) கீழ் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை (வாரியம்) (1994) உருவாக்கியது. மாநிலத்திலுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட பயன்களை வழங்குவதில் வாரியத்தின் செயல்திறனை மதிப்பிட வாரியத்தின் செயல்பாடு மீது தணிக்கை நடத்தப்பட்டது. முக்கியத் தணிக்கைக் குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

தகுதியுள்ள தொழிலாளர்களைக் கண்டறிந்து பதிவு செய்ய வாரியத்திடம் எந்த ஒரு செயல்முறையும் இல்லை. மற்ற மாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் வாரியத்தால் பதிவு செய்யப்படவில்லை.

வாரியம் ஏப்ரல் 2011லிருந்து முறையாக அமைக்கப்பட்ட ஒரு ஆட்சிக்குழுவைப் பெற்றிருக்கவில்லை. ஏப்ரல் 2011லிருந்து, வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர், அரசின் அனுமதி இல்லாமலேயே, வாரியத்தின் ஆட்சிக்குழுவின் அதிகாரங்களை பயன்படுத்தி ஆட்சிக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றினார்.

வாரியம், 2008-13 காலகட்டத்தில், தன்வசம் இருந்த ₹ 687.08 கோடியில் ₹147.31 கோடி மட்டுமே கட்டுமானத் தொழிலாளர்களின் நலத்திட்டங்களுக்காக செலவிட்டது.

தினக்கூலி அடிப்படையில் அதிக பணியாளர்களை அமர்த்தியதாலும், ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கு மேல் பணியிடங்களை இயக்கி வந்ததாலும், வாரியத்தின் நிர்வாகச் செலவினம் உயர்ந்து அது மொத்தச் செலவினத்தில் 26 சதவீதமாக இருந்தது.

உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறைகள் மற்றும் இதர நிறுவனங்கள், பங்களிப்புத் தொகையை வசூலித்து வாரியத்திடம் செலுத்துவதைக் கண்காணிக்க எந்த ஒரு அமைப்புமுறையும் இல்லை. பதிவு பெற்ற தொழிலாளர்களில், 10 முதல் 12 சதவீதத்தினர் மட்டுமே பதிவினைப் புதுப்பித்தனர்.

வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மற்றும் அத்திட்டங்களின் கீழ் பெறப்படும் உதவித்தொகைகள் அரசின் மற்ற துறைகளால் செயல்படுத்தப்படும் இதே போன்ற திட்டங்களோடு ஒப்பிடும் போது பதிவு பெற்ற தொழிலாளர்களை ஈர்க்கக்கூடியதாக இல்லை.

சோதனைச் சரிபார்ப்பில் தொழிலாளர்களுக்கு பல்வேறு வகையான உதவித்தொகைகள் முறைகேடான மற்றும் தகுதியற்ற முறையில் வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது. வாரியத்தில் கண்காணிப்பு செயல்முறைகள் பயனற்றதாக இருந்ததோடு உள்தணிக்கை முறையும் ஏற்படுத்தப்படவில்லை.

2.1.1 முன்னுரை

தமிழ்நாடு அரசு, உடலுழைப்பு தொழிலாளர்களின் வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்த தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982ஐ (சட்டம்) இயற்றியது. இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) விதிகள், 1986ஐ (விதிகள்) உருவாக்கியது. இச்சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிப்பதுவும் சட்டம் மற்றும் விதிகளின் நோக்கங்களாகும். இச்சட்டத்தின் பிரிவு 6ன் கீழ், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை, நவம்பர் 1994ல் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசு உடலுழைப்பு தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தினை (திட்டம்) 1994ல் உருவாக்கி அதனை அதிகாரப்பூர்வமாக அறிவிப்பும் செய்தது. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் செயல்படுத்தும் திட்டங்கள் மற்றும் அதன்கீழ் வழங்கப்படும் உதவித்தொகைகள் பற்றிய விவரங்கள் **இணைப்பு 2.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.1.2 நிர்வாக அமைப்புமுறை

அரசு அளவில், முதன்மை செயலர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் தலைவராவார். தொழிலாளர் ஆணையர், இத்துறையின் நிர்வாகத் தலைவராவார். இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நலநிதியை நிர்வகிப்பது, பணி அமர்த்துவர் பிரதிநிதிகள் (9 உறுப்பினர்கள்), உடலுழைப்பாளர்கள் பிரதிநிதிகள் (9 உறுப்பினர்கள்) மற்றும் அரசு பிரதிநிதிகள் (5 உறுப்பினர்கள்) ஆகிய 23 உறுப்பினர்களை உள்ளடக்கிய வாரியத்தின் ஆட்சிக்குழு(ஆட்சிக்குழு)வின் பொறுப்பாகும். அரசுப்பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து ஆட்சிக்குழுவின் தலைவர் அரசால் நியமிக்கப்படுகிறார். சட்டத்தை நிர்வகித்தல் மற்றும் திட்டச் செயலாக்கம் போன்றவை மீது அரசுக்கு ஆலோசனை வழங்க, ஒரு மாநில ஆலோசனைக் குழுவை தோற்றுவிக்க சட்டம் வகை செய்கிறது. முதன்மை செயல் அலுவலர் கட்டுமானத் தொழிலாளர் வாரியத்தின் செயலராவார். சட்டத்தில் வரையறுத்துள்ளவாறு நலத்திட்டங்களைச் செயல்படுத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) பொறுப்பாவார்.

2.1.3 தணிக்கை குறிக்கோள்கள்

- கட்டுமானத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் திட்டமிடுதல் மற்றும் செயலாக்கம் பயனுள்ளதாக இருந்தனவா;
- வாரியம் திறம்படவும், பயனுள்ள முறையிலும் தன்னுடைய அதிகாரங்களை செயல்படுத்தி சட்டம் மற்றும் விதிமுறைப்படி தன்னுடைய செயல்பாடுகள் மற்றும் கடமையை ஆற்றியதா என்பதையும்;
- நிதி மேலாண்மை பயனுள்ளதாகவும், திறம்படவும், சிக்கனமாகவும் இருந்ததா என்பதையும் மற்றும்

- வாரியத்தில் கண்காணிப்பு மற்றும் உள்கட்டுப்பாட்டு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு அவை பயனுள்ளதாக இருந்தனவா என்பதை மதிப்பீடு செய்வதும் தணிக்கையின் குறிக்கோள்களாகும்.

2.1.4 தணிக்கை அளவுகோல்கள்

கீழ்க்கண்ட ஆதாரங்களிலிருந்து பெறப்பட்ட அளவுகோல்கள் வாரியச் செயல்பாட்டை மதிப்பிட பயன்படுத்தப்பட்டன:

- தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982.
- தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) விதிகள், 1986.
- தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டம் (திட்டம்) 1994.
- அரசு மற்றும் தொழிலாளர் ஆணையரின் முக்கிய ஆணைகள் மற்றும் அறிவுரைகள் மற்றும் வாரிய ஆட்சிக்குழுவின் நடவடிக்கை குறிப்புகள்.

2.1.5 தணிக்கைப் பரப்பு மற்றும் முறைமை

தணிக்கையின் குறிக்கோள், அளவுகோல் மற்றும் பரப்பு ஆகியவை மே 2013ல் நடைபெற்ற தணிக்கைக்கு முந்தைய கலந்தாய்வில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் முதன்மைச் செயலருடன் விவாதிக்கப்பட்டன. 2008 முதல் 2013 வரையிலான காலகட்டத்திற்கான செயலாக்கத் தணிக்கை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அலுவலகம், தொழிலாளர் ஆணையர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய அலுவலகம் மற்றும் 32 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி மாவட்டத்தை அடுத்த மாவட்டத் தேர்வுக்கு சேர்க்காத தொடர்பற்ற மாதிரி முறையின் (random sampling without replacement method) அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டு[1] தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்களிலும் மே முதல் செப்டம்பர் 2013 வரை நடைபெற்றது. மேலும், பங்களிப்புத் தொகையினை பெற்று வாரியக் கணக்கில் செலுத்தும் ஏழு[2] அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பதிவுருக்களும் தணிக்கையில் ஆய்வு செய்யப்பட்டன. அரசு, தொழிலாளர் ஆணையர், வாரியம் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட திட்டச் செயலாக்கம் குறித்த தகவல், ஏனைய சம்பந்தப்பட்ட தகவல் மற்றும் மறுமொழியையும் கூர்ந்தாய்வு செய்து தணிக்கைக் குறிப்புகள் முடிவு செய்யப்பட்டன. தணிக்கைக் குறிப்புகள் அரசுக்கு அக்டோபர் 2013ல் தெரிவிக்கப்பட்டன. தணிக்கைக் குறிப்புகளை விவாதிக்க தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை முதன்மை செயலருடன் தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வு நவம்பர் 2013ல் நடைபெற்றது. அரசு, தணிக்கைக் குறிப்புகளுக்கான வாரியத்தின் மறுமொழியை வழிமொழிந்து அனுப்பியது (ஜனவரி 2014). முதன்மை செயலரின் கருத்துக்களையும், வாரியத்தின் மறுமொழியையும் கருத்தில் கொண்டு தணிக்கைக் குறிப்புகள் இறுதி செய்யப்பட்டன. முக்கிய தணிக்கைக் குறிப்புகள் கீழக்கண்ட பத்திகளில் விவாதிக்கப்படுகின்றன.

---

[1] கடலூர். திண்டுக்கல். கிருஷ்ணகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் விழுப்புரம்

[2] சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் சென்னையில் உள்ள தென்னக ரயில்வே பிரிவு அலுவலகங்கள் மற்றும் வேலூர் மாநகராட்சி மற்றும் கடலூர் நகராட்சி அலுவலகங்கள்

தணிக்கைக் குறிப்புகள்

2.1.6 திட்டமிடல்

2.1.6.1 பயனாளிகளைக் கண்டறியாமை

அரசு ஒரு திட்டத்தின் மூலமாக, அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையளிப்பவர்களையும் மற்றும் தொழிலாளர்களையும் பதிவு செய்ய சட்டப்பிரிவு 3(1) வகைசெய்கிறது. திட்டத்தின் பிரிவு 2(c)உடன் படிக்கப்பட்ட பிரிவு 5ன்படி, 18 வயது பூர்த்தியடைந்த மற்றும் 60 வயது பூர்த்தியடையாத கட்டுமானத் தொழிலாளர்கள் திட்டப்பயன்களைப் பெற தகுதியானவர்கள் ஆவர். மாநிலத்தில் திட்டத்தின் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள தொழில் இனங்களில் ஈடுபடும் கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை மதிப்பிடவோ, கணிக்கவோ வாரியத்திடம் எந்த ஒரு செயல்முறையும் இல்லை. மேலும், மாநிலத்தில் தொழிலாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையை கண்டறிய வாரியம் எந்த ஒரு ஆய்வையும் நடத்தவில்லை. சரியான திட்டமிடலுக்கும் பல்வேறு வகையான நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் தேவையான இத்தகவலை பராமரிக்க வாரியம் தவறிவிட்டது.

வாரியத்திடம் மாநில அளவிலும் அதே போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டுமானத் துறையில் வேலை செய்யும் கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை இல்லாததால், நலத்திட்டங்கள், பதிவு செய்த மற்றும் புதுப்பித்த தொழிலாளர்களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டன.

எந்த ஒரு சமயத்திலும் கட்டுமானத் துறையில் ஈடுபடும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்வது கடினம் என்றும் விழிப்புணர்வு மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்தி அனைத்து தகுதி பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களையும் பதிவு செய்ய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது. திட்டப்பயன்கள் உடல் உழைப்போருக்கு சென்று சேர்வதற்காக, வேலையளிப்போரையும் தொழிலாளர்களையும் பதிவு செய்ய சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, இம்மறுமொழியை நோக்கவேண்டும். கட்டுமானத் துறையைச் சார்ந்த வேலையளிப்போரை வாரியம் பதிவு செய்யத் தவறியதால், அவர்களால் பணியமர்த்தப்படும் தொழிலாளர்களை கண்டறிய முடியவில்லை.

2.1.6.2 வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்படாமை

திட்டத்தின் பிரிவு 4(9)(b)ன் படி, வாரியம் ஒரு வருடத்திற்கான தோராயமான வரவு மற்றும் செலவை உள்ளடக்கிய வருடாந்திர வரவு-செலவுத் திட்டத்தை தயார் செய்து ஒப்பளிப்பு வழங்கலாம். வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்து எந்த ஒரு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டையும் வாரியச் செயலர் தயாரிக்கவில்லை என்பது பதிவுருக்களை ஆய்வு செய்த போது தெரியவந்தது.

வாரியம் தனது மறுமொழியில் (ஜனவரி 2014), வாரியத்தின் வருடாந்திர வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்ற தணிக்கையின் கருத்து பரிசீலிக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தது.

2.1.6.3 மாநில ஆலோசனைக்குழு

சட்டத்தின் பிரிவு 15ன் படி, அரசு, சட்டம் அல்லது சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட எந்த ஒரு திட்டத்தையும் செயற்படுத்துவதில் ஏற்படும் விஷயங்கள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்க ஒரு மாநில ஆலோசனைக் குழுவை தோற்றுவிக்கலாம். விதி 4ன் படி, மாநில ஆலோசனைக்குழுவின் அரசுப் பிரதிநிதிகளான வாரியத்தலைவர் மற்றும் அதிகாரபூர்வமான உறுப்பினர்கள்

அரசின் விருப்பத்தின் அடிப்படையிலும் மற்றும் அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்கள் மூன்று வருட காலத்திற்கும் பதவி வகிக்கலாம். தமிழ்நாடு அரசு, மாநில ஆலோசனைக் குழுவை மார்ச் 2007லும் அதன் பின்னர் ஆகஸ்ட் 2010லும் திருத்தியமைத்தது. அதனுடைய பதவிக்காலமானது, ஆகஸ்ட் 2013ல் முடிவடைந்தது. விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு வருடத்தில் குறைந்தபட்சம் கூட்டப்பட வேண்டிய நான்கு கூட்டங்களுக்கு எதிராக, இக்குழு, 2008-13 கால கட்டத்தில் இரண்டு முறை மட்டுமே கூடியது. இக்குழு இறுதியாக ஜனவரி 2011ல் கூடியது. வாரியம் தனது மறுமொழியில் (ஜனவரி 2014) மாநில ஆலோசனைக் குழுவை திரும்ப அமைக்கும் கருத்துரு அரசின் தீவிர கவனத்தில் உள்ளதென்று தெரிவித்தது. ஆலோசனைக் குழு கூட்டங்கள் குறைவாக நடைபெற்றமைக்கு காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

2.1.6.4 வாரிய ஆட்சிக்குழுவின் கூட்டங்கள்

விதி 20ன் படி, வாரியத்தின் ஆட்சிக்குழு குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டப்படவேண்டும். சட்டத்தின் பிரிவு 8ன்படியும் மற்றும் திட்டத்தின் பிரிவு 4(3)ன்படியும், திட்ட நிர்வாகத்திற்கும் மற்றும் நல நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்வதற்கும் தேவையாக கருதப்படும் நடவடிக்கைகளை எடுக்க ஆட்சிக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. 2008-11 காலத்தில் கூட்டப்படவேண்டிய குறைந்தபட்சமான 13 கூட்டங்களுக்கெதிராக, ஐந்து கூட்டங்கள் மட்டுமே கூட்டப்பட்டன. ஏப்ரல் 2011லிருந்து வாரியத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியிடங்கள் காலியாக இருந்ததால் அதற்குப் பிறகு ஆட்சிக்குழுக் கூட்டம் கூட்டப்படவில்லையென வாரியம் கூறியது. வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014), ஆட்சிக்குழுவை திரும்ப அமைப்பது குறித்த கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளதென்றும், வாரியம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வழக்கமான நடவடிக்கைகள் ஆட்சிக்குழு இல்லாமையால் பாதிக்கப்படவில்லையென்றும் தெரிவித்தது. ஆனால், வாரியத்தின் நிதியிலிருந்து திட்டச் செலவினத்தை அனுமதிக்க, சட்டம் மற்றும் திட்டத்தின்படி, ஆட்சிக்குழு மட்டுமே அதிகாரம் கொண்டுள்ளது என்பதே உண்மைநிலை. ஏப்ரல் 2011லிருந்து வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் ஆட்சிக்குழுவின் அதிகாரங்களைப் பயன்படுத்தி வந்தார்.

2.1.6.5 வாரியத்தின் நிர்வாகம்

முதன்மை செயல் அலுவலருடைய நிதிச் செலவின அதிகாரம் வரம்பிற்குட்பட்டதுடன் அவர் ஒரு மாதத்தில் நிர்வாகச் செலவினத்திற்கு ₹ ஒரு இலட்சம் வரை மட்டுமே ஒப்புதலளிக்க முடியும். திட்டச் செலவினத்திற்கு அனுமதியளிப்பதற்கும் உபரி நிதியை முதலீடு செய்வதற்கும் வாரியத்தின் ஆட்சிக்குழுவிற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது. ஏப்ரல் 2011லிருந்து, அரசின் அனுமதி இல்லாமலேயே முதன்மை செயல் அலுவலர் ஆட்சிக்குழுவின் அதிகாரங்களை பயன்படுத்தி திட்டச் செலவினங்களையும் உபரி நிதியை முதலீடு செய்வதையும் மேற்கொண்டார்.

மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் ஏப்ரல் 2011லிருந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்சிக்குழு திரும்ப அமைக்கப்படும்போது பின்னேற்பு பெறப்படும் என வாரியச் செயலர் தெரிவித்தார் (ஜூன் 2013).

2.1.7. நிதி மேலாண்மை

2.1.7.1 வாரியத்தின் நிதி ஆதாரங்கள்

சட்டத்தின் பிரிவு 8Aவின்படி, கட்டுமானப் பணிக்கு அனுமதி வேண்டி, உள்ளாட்சி அமைப்பிடம் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும் கட்டுமானப் பணியை மேற்கொள்ளும் அல்லது அப்பொறுப்பிலுள்ள ஒவ்வொரு நபரும்,

கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் ஒரு சதவீதத்திற்கு மிகாமல் கட்டுமானத் தொழிலாளர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட நல நிதிக்கு பங்களிப்புத் தொகையாக செலுத்த வேண்டும். கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 0.3 சதவீதத்தை பங்களிப்புத் தொகையாக, அரசு நிர்ணயம் செய்தது (ஜூலை 1997). பங்களிப்புத் தொகையும், வட்டி வரவும் வாரியத்தின் நிதி ஆதாரங்களாகும்.

வாரியத்தின் ஆட்சிக்குழுவானது பங்களிப்புத் தொகையை ஒரு சதவீதமாக உயர்த்த தீர்மானித்தது (டிசம்பர் 2010). பங்களிப்புத் தொகையை தற்போதுள்ள 0.3 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதமாக உயர்த்தியமைக்கும் ஆட்சிக்குழுவின் தீர்மானத்திற்கு மாநில ஆலோசனைக்குழுவும் ஒப்புதல் அளித்தது (ஜனவரி 2011). தொழிலாளர் ஆணையர், பங்களிப்புத் தொகையை 0.3 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதமாக உயர்த்த அரசுக்குக் கருத்துரு அனுப்பினார் (டிசம்பர் 2012). ஆனால், அரசு ஒரு வருட காலதாமதத்திற்குப் பிறகே டிசம்பர் 2013ல் அதற்கு ஒப்புதலளித்தது.

2.1.7.2 வரவு மற்றும் செலவினம்

2008-13 காலகட்டத்திற்கான வாரியத்தின் வரவு மற்றும் செலவின விவரங்கள் **அட்டவணை 2.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1: 2008-13 காலகட்டத்தில் வரவு மற்றும் செலவின விவரங்கள்

(₹ கோடியில்)

ஆண்டு	ஆரம்பக் கையிருப்பு	திரட்டப் பட்ட பங்களிப்புத் தொகை	வட்டி வரவுகள்	ஆண்டில் பெறப் பட்ட வரவுகள் (3) + (4)	மொத்தம் (2)+(5)	நலத் திட்டச் செலவி-னங்கள்	நிர்வாகச் செலவினம்*	மூலதனச் செலவினம் மற்றும் முன் பணங்கள்	மொத்தச் செலவினம் (7)+(8)+(9)	இறுதிக் கையிருப்பு (6)-(10)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
2008-09	185.12	49.53	21.82	71.35	256.47	13.86	6.23 (29)	1.25	21.34	235.13
2009-10	235.13	58.11	13.47	71.58	306.71	27.35	12.60 (23)	15.56	55.51	251.20
2010-11	251.20	68.30	25.90	94.20	345.40	30.70	15.75 (27)	12.15	58.60	286.80
2011-12	286.80	92.66	32.57	125.23	412.03	29.53	13.50 (30)	1.65	44.68	367.35
2012-13	367.35	125.43	14.17	139.60	506.95	45.87	15.07 (25)	0.11	61.05	445.90
மொத்தம்		**394.03**	**107.93**	**501.96**		**147.31**	**63.15 (26)**	**30.72**	**241.18**	

* நிர்வாகச் செலவினம், மொத்தச் செலவினத்தில் சதவீதமாக அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது
(ஆதாரம்: 2008-09 முதல் 2012-13 வரையிலான வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள்)

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடி, 2008-13 காலகட்டத்தில் ₹ 687.08 கோடி[3] நிதியில், ₹ 147.31 கோடி (21 சதவீதம்) மட்டுமே கட்டுமானத் தொழிலாளர்களின் நலத் திட்டங்களுக்காக வாரியத்தால் செலவு செய்யப்பட்டது. 31 மார்ச் 2013 அன்று இறுதிக் கையிருப்பான ₹ 445.90 கோடியில், வாரியம் ₹ 423.02 கோடியை காலமுறை வைப்பீடுகளில் முதலீடு செய்தது.

2.1.7.3 நிர்வாகச் செலவினம்

மத்திய சட்டத்தின் படி[4], ஒரு ஆண்டிற்கான சம்பளம், படிகள் மற்றும் இதர நிர்வாகச் செலவினங்கள் வாரியத்தின் மொத்தச் செலவினத்தில் ஐந்து சதவீதத்திற்கு மேல் அதிகரிக்கக்கூடாது. ஆனால், மாநிலச் சட்டத்தில் நிர்வாகச் செலவினம் மேற்கொள்ள அம்மாதிரியான வழிவகை ஏதும் செய்யப்படவில்லை.

---

[3] ஆரம்பக் கையிருப்பு : ₹ 185.12 கோடி + பங்களிப்புத் தொகை மற்றும் இதர வரவினங்கள் : ₹ 501.96 கோடி

[4] கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1996ன் பிரிவு 24(3)

அட்டவணை 2.1ல் கொடுக்கப்பட்டுள்ளபடி, 2008-13 காலகட்டத்தில், வாரியம் ₹ 63.15 கோடியை நிர்வாகச் செலவினங்களுக்கு செலவு செய்தது (இது மொத்தச் செலவினத்தில் 26 சதவீதமாகும்). தணிக்கைப் பத்திகள் 2.1.10.1 மற்றும் 2.1.10.3ல் விவரித்துள்ளபடி, மாவட்ட அலுவலகங்களில் காலியாக உள்ள பதவியிடங்களுக்கு மேல் தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்தியதும், சென்னையிலுள்ள வாரிய அலுவலகத்தில் ஒப்பளிப்புக்கு மேல் அதிக பணியிடங்களை இயக்கியதும் நிர்வாகச் செலவினம் அதிகமானதற்கான முக்கிய காரணங்களாகும்.

வாரியம், தனது மறுமொழியில் (ஜனவரி 2014), வாரியத்தின் நிர்வாகச் செலவினம் அதிகமானதற்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் கீழ் இயங்கும் பிற 16 நல வாரியங்களுக்கும் சேர்த்து மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டதே (அக்டோபர் 2008) காரணம் என்றும் நிரந்தரப் பணியாளர்களை பணியமர்த்தினால் ஆகும் செலவை விட அதிக எண்ணிக்கையில் தினக்கூலி பணியாளர்களை பணியமர்த்தியதால் குறைந்த செலவினமே ஏற்பட்டது என்றும் தெரிவித்தது. எனினும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், சட்டத்தின்கீழ் ஒரு தனியான நிறுவனமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளதால், கட்டுமானத் தொழிலாளர்களின் நலத் திட்டங்களுக்காகவும், நல வாரியத்தின் நிர்வாகத்திற்காகவும் மட்டுமே பங்களிப்புத் தொகையைப் பயன்படுத்தவேண்டும்.

2.1.7.4 பங்களிப்புத் தொகையைப் பெற்று செலுத்துவதை கண்காணிக்க அமைப்புமுறை இல்லாமை

வாரியம், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்தும் பங்களிப்புத் தொகையை வாரியச் செயலரின் பெயரில் கேட்புக் காசோலையாக பெறுகிறது. எனினும், வாரியம், கீழே விவாதித்துள்ளபடி, வாரியத்திற்கு நிறுவனங்களால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகைகள் சரியான முறையில் கணக்கிடப்பட்டு, வசூலிக்கப்பட்டு உடனுக்குடன் செலுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்யவில்லை.

(i) சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL) பிப்ரவரி 2009லிருந்து ₹ 10,302 கோடி செலவில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டது. வாரியத்திற்கு பங்களிப்புத் தொகையை செலுத்துமுன், CMRL, பங்களிப்புத் தொகையை வசூல் செய்து செலுத்தும் முறை பற்றி வாரியத்திடம் விளக்கம் கேட்டது (அக்டோபர் 2010). வாரியச் செயலர், அனுமதிக்கப்பட்ட கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 0.3 சதவீதத்தை பங்களிப்புத் தொகையாக, கட்டுமானப் பணி துவங்கி 30 நாட்களுக்குள், வாரியத்திற்கு செலுத்திட வேண்டும் என்று விளக்கம் அளிக்காமல், 0.3 சதவீதம் பங்களிப்புத் தொகையானது ஒப்பந்ததாரர் பட்டியலுக்குப் பணம் வழங்கும் போது பிடித்தம் செய்யப்பட்டு, வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்தார். அதன்படி, CMRL, அனுமதிக்கப்பட்ட கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் 0.3 சதவீதமான ₹ 30.91 கோடியை பங்களிப்புத் தொகையாக செலுத்தாமல் பங்களிப்புத் தொகையை முடிக்கப்பட்ட கட்டுமான வேலையின் மதிப்பின்படி ஒப்பந்ததாரரின் தொடர் கணக்குப் பட்டியலிலிருந்து பிடித்தம் செய்து ₹ 7.44 கோடியை செலுத்தியது. இதனால், மார்ச் 2013 வரை CMRLஆல் ₹ 23.47 கோடி குறைவாகச் செலுத்தப்பட்டதை தணிக்கை கண்டறிந்தது.

பங்களிப்புத் தொகையை CMRL குறைவாக செலுத்தியமை, வாரியச் செயலரின் விளக்கத்தின் விளைவாக இல்லை என்றும் ஆனால், CMRLன் முடிவினால் தான் என்றும் வாரியம் தெரிவித்தது (ஜனவரி 2014). எனினும், சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடி, கட்டுமானப் பணி துவங்கி 30 நாட்களுக்குள் மொத்த

பங்களிப்புத் தொகையும் செலுத்தப்படவேண்டும். மேலும், வாரியத்தின் தவறான விளக்கத்தின் விளைவாக பங்களிப்புத் தொகை செலுத்துவது தள்ளிப் போனதுடன் CMRLக்கு கருதா நிதிப்பலனும் கிட்டியது.

(ii) திட்டமிடப்பட்ட கட்டுமானப் பணியின் மதிப்பீட்டில் பங்களிப்புத் தொகை வசூல் செய்யப்பட சட்டம் வகை செய்துள்ளது. கடலூர் நகராட்சி, கட்டட அனுமதி வழங்கும் போது, பொதுப்பணித்துறையின் விகிதத்தைப் பின்பற்றி மதிப்பீட்டுத் தொகையை கணக்கிட்ட போதிலும், வேலூர் மாநகராட்சி சரியான நடைமுறையை பின்பற்றாமல் கட்டட மதிப்பைக் கணக்கிடுவதற்கும், பங்களிப்புத் தொகையை வசூல் செய்வதற்கும் வேறுபட்ட விலைவீதத்தை பின்பற்றியது தணிக்கையில் தெரியவந்தது. தொழிலாளர் துறையிலிருந்து அலுவலர்களை நியமித்து வாரியத்தின் பங்களிப்புத் தொகை உடனுக்குடன் வசூல் செய்யப்படுவதை கண்காணிக்க, மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அமைப்புமுறையை உருவாக்கும் ஒரு கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது.

(iii) மத்திய அரசு நிறுவனமான நெய்வேலி நிலக்கரி நிறுவனம் (NLC), அதனுடைய நகரியப் பகுதியில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்ட போதிலும், வாரியத்திற்குப் பங்களிப்புத் தொகையைச் செலுத்தவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. பங்களிப்புத் தொகையை செலுத்தும்படி NLC கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக வாரியச் செயலர் மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தார்.

2.1.7.5 காலவரை கடந்த கேட்பு வரைவோலைகள் பெறப்பட்டது

விதி 20Aன்படி, உள்ளாட்சி அமைப்புகளால் ஒரு மாதத்தில் கேட்பு வரைவோலைகளாக பெறப்படும் பங்களிப்புத் தொகையானது அடுத்து வருகிற மாதத்தின் 15ம் தேதி அல்லது அதற்கு முன் செலுத்தப்படவேண்டும். மேலும், கட்டுமானப் பணியை மேற்கொள்ளும் அல்லது கட்டுமானப் பணியின் பொறுப்பிலுள்ளவர்கள் கட்டுமானப் பணி துவங்கி 30 நாட்களுக்குள் பங்களிப்புத் தொகையை செலுத்த வேண்டும். பங்களிப்புடன் கட்டுமானப் பணி விவரங்கள் குறித்த அறிக்கையையும் அனுப்ப வேண்டும்.

அரசு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட பங்களிப்பு நிறுவனங்கள் கட்டட அனுமதிக்காக விண்ணப்பித்தவர்களிடமிருந்து பெற்ற, பங்களிப்புத் தொகைக்கான கேட்பு வரைவோலைகளை காலதாமதமாக வாரியத்திற்கு அனுப்பியது பதிவுருக்களை ஆய்வு செய்தபோது தெரியவந்தது. 2007-13 காலகட்டத்தில், வாரியம் பெற்ற காலவரை கடந்த 11,002 கேட்பு வரைவோலைகளை மறுபடியும் செல்லுபடியாக்க பங்களிப்பு நிறுவனங்களுக்கு திருப்பி அனுப்பியது. எனினும், நிறுவனங்கள் செல்லுபடியாக்கிய கேட்பு வரைவோலைகளை வாரியத்திற்கு திருப்பி அனுப்பாததன் விளைவாக, 31 மார்ச் 2013 வரையில், ₹ நான்கு கோடியைப் பெறமுடியவில்லை. இதில், ₹ 1.71 கோடி மதிப்புள்ள 1,871 கேட்பு வரைவோலைகள், 43 உள்ளாட்சி அமைப்புகள்/அரசு நிறுவனங்களால் செல்லுபடியாக்கப்பட வேண்டும். இது மேலும், பங்களிப்புத் தொகை நிறுவனங்களால் உடனுக்குடன் செலுத்தப்படுவதைக் கண்காணிக்க வாரியத்திடம் எந்த ஒரு அமைப்புமுறையும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. வாரியம் இத்தணிக்கைக் குறிப்பை ஏற்றுக் கொண்டதுடன் உரிய நடைமுறையை இதற்கென உருவாக்க தீர்மானித்தது (ஜனவரி 2014).

2.1.7.6 கிராம ஊராட்சிகளிடமிருந்து பங்களிப்புத் தொகை பெறப்படாமை

தமிழ்நாட்டில், மார்ச் 2013 அன்றுள்ளவாறு, 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. உள்ளாட்சி அமைப்புகள் கட்டுமானப் பணிக்காக கட்டட அனுமதி வழங்கும்

போது தனி நபர் மற்றும் கட்டடம் கட்டுபவரிடமிருந்தும் பங்களிப்புத் தொகையை பெற சட்டம் வழிவகை செய்திருந்தாலும், 6,455 கிராம ஊராட்சிகள் மட்டுமே பங்களிப்புத் தொகையை செலுத்தின. வாரியம் மற்ற ஊராட்சிகளிடமிருந்து பங்களிப்புத் தொகையைப் பெற்றனவா இல்லையா என்பதற்கும் அவை செலுத்தப் படாததற்கான காரணங்களையும் பெறத் தவறியது. இது பற்றி தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று வாரியம் (ஜனவரி 2014) தெரிவித்தது.

2.1.8. தொழிலாளர் பதிவு மற்றும் புதுப்பித்தல்

பதினெட்டு வயது பூர்த்தியடைந்த மற்றும் 60 வயது பூர்த்தியடையாத கட்டுமானத் தொழிலாளர்கள் திட்டப்பயன்களைப் பெற, பதிவு செய்யத் தகுதியானவர்கள் என்று திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. திட்ட வழிகாட்டுநெறிகளின்படி, பதிவானது பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்குச் செல்லுபடியாகும் மற்றும் பதிவு செய்த தொழிலாளர் இரண்டாண்டு காலம் முடிவதற்குள் பதிவினை புதுப்பிக்க வேண்டும். கட்டுமானத் தொழிலாளர் 60 வயதை அடைந்த பிறகு வாரியத்தின் பதிவு பெற்ற தொழிலாளராக கருதப்படமாட்டார். உறுப்பினர் பதிவு மற்றும் புதுப்பித்தல் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது வாரியத்தால் எவ்விதக் கட்டணமுமின்றி செய்து தரப்படுகிறது.

2.1.8.1 பதிவு பெற்ற தொழிலாளர்கள்

வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவைப் புதுப்பித்த உறுப்பினர்களின் விவரங்கள் ஆண்டு வாரியாக **அட்டவணை 2.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை **2.2:** பதிவு செய்யப்பட்ட மற்றும் புதுப்பித்த உறுப்பினர்களின் ஆண்டு வாரியான விவரங்கள்

ஆண்டு	பதிவு செய்த தொழிலாளர் களின் எண்ணிக்கை	புதுப்பிக்கப்பட்ட உறுப்பினர்கள்	வாரியத்தில் பதிவு செய்த மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை	புதுப்பிக்கப்பட்ட உறுப்பினர்களின் சதவீதம்
மார்ச் 2008 வரை	-	-	16,54,107	-
2008-09	2,84,358	82,295	19,38,465	-
2009-10	50,417	1,81,155	19,88,882	10.95
2010-11	1,05,879	2,05,566	20,94,761	10.60
2011-12	1,09,828	2,43,331	22,04,589	12.23
2012-13	79,750	2,14,674	22,84,339	10.25
மொத்தம்	**6,30,232**			

(ஆதாரம் : தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்புகள் மற்றும் வாரியத்தினால் அளிக்கப்பட்ட தகவல்கள்)

2008-13 காலகட்டத்தில் வாரியத்தில் பதிவு செய்த 6,30,232 உறுப்பினர்களையும் சேர்த்து, 31 மார்ச் 2013 அன்று, வாரியத்தில் திரளாக சேர்ந்த மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 22,84,339 ஆகும். வாரியம் வழங்கிய தகவல்களின்படி, 31 மார்ச் 2013 அன்று, வாரியத்திடம் நடப்பில் இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 5,91,411 (26 சதவீதம்) மட்டுமேயாகும். இரண்டாண்டிற்கொரு முறை பதிவினை புதுப்பிக்க வேண்டும் என்பதால், 2011-13 காலகட்டத்தில் பதிவு செய்த உறுப்பினர்களும், 2011-13ன் போது பதிவினை புதுப்பித்த முந்தைய உறுப்பினர்களும் சேர்ந்து நடப்பிலுள்ள உறுப்பினர்கள் ஆவர். ஒவ்வொரு ஆண்டிலும் முந்தைய பதிவு செய்த தொழிலாளர்களில் 10 முதல் 12 சதவீதத் தொழிலாளர்களே பதிவினைப் புதுப்பித்தனர் என்பது தணிக்கையில் தெரிய வந்தது.

அரசின் மற்ற துறைகளால் செயல்படுத்தப்படும் இதே போன்ற மற்ற நலத் திட்டங் களிலிருந்து கிடைக்கும் பயன்கள், வாரியத்தினால் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பயன்களை விட அதிகமாக இருந்தது என்பது தணிக்கையில்

கண்டறியப்பட்டது. உதாரணமாக, திருமணம் மற்றும் மகப்பேறு உதவித் திட்டங்களின் கீழ் வாரியத்தினால் வழங்கப்படும் உதவித்தொகை முறையே ₹ 5,000 மற்றும் ₹ 6,000 என்றிருக்க, அரசின் மற்ற துறைகளால் வழங்கப்படும் உதவித்தொகை முறையே ₹ 25,000[5] மற்றும் ₹ 12,000[6] ஆக இருந்தது. இவ்வாறு, இந்நலத் திட்டங்களின் மூலம் கிடைக்கும் உதவித் தொகை கட்டுமானத் தொழிலாளர்களை கவர்வதாக இல்லை. இறந்து போன/60 வயதிற்கு மேற்பட்ட மற்றும் புதுப்பிக்காத உறுப்பினர்களை நீக்காததால் பதிவு பெற்ற மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகைப்படுத்திக் காட்டப்பட்டது.

வாரியம் துவங்கப்பட்ட நாளிலிருந்து பதிவு பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை ஒட்டு மொத்த அடிப்படையில் பராமரிக்கிறது என்றும் கடந்த இரண்டாண்டுகளில் புதிதாக பதிவு செய்த மற்றும் புதுப்பித்த உறுப்பினர்களை உள்ளடக்கிய நடப்பில் வாரியத்திலுள்ள பதிவு பெற்ற தொழிலாளர்களை கண்டறிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று வாரியம் தனது மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது. மேலும், பதிவினை புதுப்பிக்காத தொழிலாளர்களை பதிவுருக்களிலிருந்து நீக்குமாறு தொழிலாளர் அலுவலர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும், வாரியத்தினால் வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் வாரியம் தெரிவித்தது.

2.1.8.2 பதிவு செய்யப்படாத இடம்பெயர்ந்த தொழிலாளர்கள்

தற்போது, சென்னை நகரிலும் மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளிலும் மற்ற மாநிலங்களிலிருந்து இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் அதிக அளவில் கட்டுமானப் பணியில் பணியமர்த்தப்படுகிறார்கள். வாரியம், நலநிதிப் பங்களிப்புத் தொகையை, அந்தக் கட்டுமானப் பணிகளுக்காக பெற்ற போதிலும், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் வாரியத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை, பதிவு செய்யத் தேவையான அடையாளம் மற்றும் குடியிருப்பை நிரூபிக்கும் ஆவணச் சான்றுகளை இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் பெற்றிருக்காததால், அவர்களை பதிவு செய்ய இயலவில்லை என அரசு தெரிவித்தது (ஜனவரி 2013).

அரசின் மறுமொழி, ஆட்சிக்குழு, அதனுடைய 19வது கூட்டத்தில் (அக்டோபர் 2008) தொழிலாளர் அலுவலரை இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் பணியமர்த்தப்படும் கட்டுமானப் பணியிடங்களை சென்று ஆய்வு செய்யவும், அவர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்துமாறு தொழிலாளர் ஆணையரைக் கேட்டுக்கொண்டதைக் கருத்தில் கொண்டு அரசின் மறுமொழி நோக்கப்படவேண்டும். மேலும், ஆட்சிக்குழு, (21வது கூட்டம் - மே 2010) தற்காலிக இருப்பிடச் சான்று, பிறப்பிடச் சான்றிதழ், வயதுச் சான்றிதழ், பணியளிப்பவர் சான்றிதழ் மற்றும் மாநிலத்தில் பணி செய்த காலத்திற்கு பயன்களைப் பெற தகுதியானவர்கள் போன்ற சான்றுகளைப் பெற்று இடம்பெயர்ந்த தொழிலாளர்களை பதிவு செய்யலாம் என முடிவு செய்தது. வாரியம் (ஜனவரி 2014), இடம் பெயர்ந்த வேற்று மாநிலத் தொழிலாளர்களை பதிவு செய்வதற்கான ஒரு கருத்துரு அரசின் தீவிரப் பரிசீலனையில் இருப்பதாகவும் அதற்கென திட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப் படவேண்டும் என்றும் தெரிவித்தது.

2.1.8.3 பதிவு ஆவணங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமை

திட்டத்தின் பிரிவு 8ன்படி, வாரியம் மற்றும் மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு தொழிலாளர் அலுவலரும் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) திட்டத்தின் கீழ் பதிவு

[5] சமூக நலத் துறையால் அளிக்கப்பட்ட திருமண உதவித்தொகை

[6] மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையால் அளிக்கப்பட்ட மகப்பேறு உதவித்தொகை

செய்த கட்டுமானத் தொழிலாளர்களின் பெயர், முகவரி மற்றும் பிற விவரங்கள் அடங்கிய பதிவேட்டினை பராமரிக்க வேண்டும். வாரியச் செயலர், மாவட்டத் தொழிலாளர் அலுவலகங்களை ஆய்வு செய்யும் போது பதிவேடுகள் ஆய்வு செய்யப்படவேண்டும்.

தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), வேலூர் அவர்களால் 1 ஜூன் 2007 முதல் 18 செப்டம்பர் 2008 வரை பராமரிக்கப்பட்ட உறுப்பினர் பதிவேட்டினை சோதனைச் சரிபார்ப்பு செய்த போது, 2,909 பதிவு எண்கள், தொழிலாளர்களின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்படாமல் ஒதுக்கப்பட்டு, பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 16 பதிவு எண்களுக்கெதிராக, கட்டுமானத் தொழிலாளர்களின் பெயர் மற்றும் முகவரி பின்னர் பூர்த்தி செய்யப்பட்டது தெரியவந்தது. இவ்வனைத்து நேர்வுகளிலும் இயற்கை மரண உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நேர்வுகளில் பதிவு செய்த தேதிக்கும் இறந்த தேதிக்கும் இடையேயான கால இடைவெளி 1 நாள் மற்றும் 33 நாட்கள் என்ற ஈரெல்லைக்குள் இருந்தது. தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்), திருச்சிராப்பள்ளியில் பராமரிக்கப்பட்ட உறுப்பினர் பதிவேட்டினை ஆய்வு செய்த போது, 22 நேர்வுகளில் தொழிலாளர் இறந்தபிறகு பதிவு செய்யப்பட்டது தெரியவந்தது.

முறைகேடான பதிவினைத் தடுப்பதற்கும் திட்ட வழிமுறைகளை கடுமையாகப் பின்பற்றுவதற்கும் எந்த ஒரு உள்கட்டுப்பாட்டுமுறையும் இல்லை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இதன் விளைவாக, வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 38 நபர்களுக்கு ₹ 6.46 இலட்சம்[7] முறைகேடாக வழங்கப்பட்டது.

உறுப்பினர் பதிவு மற்றும் புதுப்பித்தல் நவம்பர் 2008லிருந்து கணினிமயமாக்கப் பட்டது என்றும் அந்த இரண்டு தொழிலாளர் அலுவலர்களால் (சமூக பாதுகாப்புத் திட்டம்) துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பயனாளிகள்/தொழிற்சங்கங்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாரியம் தெரிவித்தது (ஜனவரி 2014). மேலும், உதவித் தொகை வழங்கப்பட்டதற்கு பொறுப்பான அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் வாரியம் தெரிவித்தது.

2.1.9 நலத்திட்டங்களின் செயலாக்கம்

ஒரு பதிவு பெற்ற தொழிலாளி, அரசு/மற்ற வாரியங்களின் எந்த ஒரு திட்டத்தின் கீழும் பயன் பெறாமல் இருந்தால் மட்டுமே, அது போன்ற வாரியத்தின் நலத் திட்டங்களின் கீழ் பயன் பெற தகுதியானவர் ஆவர். 2008-13 காலகட்டத்தில், வ்ாரியத்தின் மொத்தச் செலவினமான ₹ 241.18 கோடியில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு உதவித் தொகை வழங்குவதற்கு ₹ 147.31 கோடி (61 சதவீதம்) செலவிடப்பட்டது.

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில், 2008-13 காலகட்டத்தில், செயலாக்கப்பட்ட திட்டங்கள், பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட உதவித்தொகை விவரங்கள் **அட்டவணை 2.3**ல் தரப்பட்டுள்ளன.

[7] 38 நபர்கள் x ₹ 17,000 (இயற்கை மரண உதவித்தொகை: ₹ 15,000 + இறுதிச்சடங்கு உதவித்தொகை: ₹ 2,000).

அட்டவணை 2.3: வாரியத்தினால் செயல்படுத்தப்படும் திட்ட விவரங்கள்

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	பயனாளிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (₹ இலட்சத்தில்)
1	தனி நபர் விபத்து நிவாரண உதவித்தொகை	670	412.46
2	இயற்கை மரண உதவித்தொகை	13,594	2,275.67
3	ஒய்வூதியம்	14,403	486.52
4	குடும்ப ஒய்வூதியம்	2	0.15
5	திருமண உதவித்தொகை	18,517	770.61
6	மகப்பேறு உதவித்தொகை	5,563	336.61
7	கல்வி உதவித்தொகை	1,76,330	2,508.62
8	கண்ணாடிக்கான உதவித்தொகை	3,327	17.47
	மொத்தம்	**2,32,406**	**6,808.11**

(ஆதாரம் : வாரியம் மற்றும் சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட தொழிலாளர் அலுவலர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) ஆகியோரால் அளிக்கப்பட்ட தகவல்கள்)

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் கீழ்க்கண்ட பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

2.1.9.1 தனிநபர் விபத்து நிவாரண உதவித்தொகை

பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்துக்குள்ளாகும் போது விபத்து நிவாரண உதவி பெற தகுதியானவர்கள் என்றும் அந்த விபத்து, இறப்பில் முடியும்போது, அவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் (nominees) விபத்து நிவாரண உதவியான ₹ ஒரு இலட்சத்தைப் பெறுவதற்குத் தகுதியானவர்கள் என திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்த விபத்து, பகுதி/முழு இயலாமையில் முடியும் போது, இயலாமையின் தீவிரத்தின் அடிப்படையில் பதிவு செய்த தொழிலாளர் ₹ ஒரு இலட்சம் வரையில் விபத்து நிவாரண உதவி பெறத் தகுதியானவராவார். திட்டத்தின் படி, விபத்து என்பது வேலை செய்யும் போது அல்லது வேலையின் நிமித்தம் நேரடியாக ஏற்படும் விபத்தினால் ஏற்படும் உடல் காயம் மற்றும் இறப்பு ஆகும்.

பணியில் தொடரும் போது விபத்து ஏற்பட்டவுடன், விபத்தானது இறப்பு அல்லது கை, கால் இழப்பு அல்லது கண் இழப்பில் முடியும் போது, பணியளிப்பவர் விபத்து நடந்து மூன்று நாட்களுக்குள் ஒரு அறிக்கையை அந்த மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மற்றும் காவல்துறைக்கு அனுப்பவேண்டும். அந்த மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), விபத்து அறிக்கை, பணியளிப்பவரிடமிருந்தோ அல்லது பாதிக்கப்பட்ட தொழிலாளரிடமிருந்தோ அல்லது இறந்த தொழிலாளியால் நியமிக்கப் பட்டவரிமிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட தொழிலின் தொழிற்சங்கத்தின் பிரதிநிதியிடமிருந்தோ பெற்றால், பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து குறித்து ஆய்வு செய்யவேண்டும். இந்த உதவித்தொகை பிப்ரவரி 2011லிருந்து விபத்து, வேலையினால் ஏற்படாத போதும் வழங்கப்படுகிறது.

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் மூன்றில்[8] ஏப்ரல் 2008 முதல் ஜனவரி 2011 காலத்தில் 263 நேர்வுகளில் சோதனைச் சரிபார்ப்பு செய்தபோது, 30 நேர்வுகளில் விபத்து நிவாரண உதவித் தொகையான ₹ 30.60 இலட்சம், இறப்பு/இயலாமை, வேலையின் போதோ மற்றும் வேலையினாலோ ஏற்படும் விபத்தினால் இல்லாத போதும் அனுமதி அளிக்கப்பட்டு வழங்கப்பட்டது தெரியவந்தது.

8 மதுரை, சேலம் மற்றும் வேலூர்

ஏப்ரல் 2008 முதல் ஜனவரி 2011 வரை ஏற்பட்ட விபத்து மரணத்திற்கான உதவித்தொகை கோரிய விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்படும் என்றும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாரியம் மறுமொழியில் தெரிவித்தது (ஜனவரி 2014).

2.1.9.2 இயற்கை மரண உதவி

பதிவு செய்த கட்டுமானத் தொழிலாளர் இயற்கையாக மரணம் அடைந்தால், அந்த மாவட்டத்தின் தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) உரிய சரிபார்ப்பிற்குப் பின், ₹ 15,000த்தை இறந்த பதிவு செய்த தொழிலாளரால் நியமிக்கப்பட்டவரிடம் வழங்குவார் என்று திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகை கோரும் விண்ணப்பத்தோடு சேர்த்து இறந்து போன பதிவு செய்த தொழிலாளரின் இறப்புச் சான்றிதழ் மற்றும் அசல் அடையாள அட்டையையும் இணைத்து வைக்கவேண்டும். பதிவினைப் புதுப்பிக்காத நபர்கள் இயற்கை மரண உதவித்தொகை பெற தகுதியானவர் அல்லர் என மாநில ஆலோசனைக் குழு பரிந்துரை செய்தது (டிசம்பர் 2009).

இயற்கை மரண உதவி கோரும் மனுக்கள், தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் மூலம் சரிபார்க்கப்படவேண்டும் என்றும் தொழிற்சங்கங்களிலிருந்து ஒட்டுமொத்தமாக பெறப்படும் விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ்களில் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களின் கையொப்பங்கள், நிதியுதவி ஒப்பளிப்பு செய்யுமுன் சரிபார்ப்பு செய்யப்படவேண்டும் என்றும் தொழிலாளர் ஆணையர் அறிவுறுத்தினார் (ஏப்ரல் 2010). ஒரு மாவட்டத்தின் தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) வருவாய்த்துறை அதிகாரிகளால் அளிக்கப்பட்டது என்று சொல்லப்படும் போலியான இறப்புச் சான்றிதழ்களை இணைத்து இயற்கை மரணம் மற்றும் இறுதிச்சடங்கு உதவித்தொகை கோரும் விண்ணப்பங்களை பெற்றார் என்பதை தொழிலாளர் ஆணையர், மண்டல தொழிலாளர் இணை ஆணையர்கள் மற்றும் வட்டார தொழிலாளர் துணை ஆணையர்களின் பார்வைக்கு கொண்டு வந்து அனைத்து விண்ணப்பங்கள்/இறப்புச் சான்றிதழ்களையும் சரிபார்க்குமாறும் அறிவுறுத்தினார் (டிசம்பர் 2010).

2008-13 காலகட்டத்தில், சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில், இயற்கை மரண உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்ட 13,594 நேர்வுகளில், தணிக்கை 5,131 நேர்வுகளை ஆய்வு செய்தது.

தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்திலிருந்த, இயற்கை மரண உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட குடும்ப அடையாள அட்டை, இறப்புச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றின் நகல்கள் தணிக்கையில் ஆய்வு செய்யப்பட்டன. அதில் 34 நேர்வுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை என்றும் 29 நேர்வுகளில் தகுதியற்ற நியமிக்கப்பட்டோருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது என்றும் தெரியவந்தது. 157 நேர்வுகளில், இறந்த பதிவு செய்த தொழிலாளர்களின் வயது 60க்கு மேல் இருந்தது மற்றும் எட்டு நேர்வுகளில் உதவித்தொகை இறந்த கட்டுமானத் தொழிலாளருக்கு முன் இறந்த நியமிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்டதாக கூறப்பட்டது. இதன் விளைவாக, ₹ 38.76 இலட்சம் முறைகேடாக வழங்கப்பட்டது.

மேலும், இறந்து போன பதிவு செய்த தொழிலாளரின் நியமிக்கப்பட்டோர்களால் சமர்ப்பித்த உதவித் தொகை கோரும் விண்ணப்பங்களின் உண்மைத்தன்மையை கண்டறிய. தணிக்கை, சம்பந்தப்பட்ட மாவட்டங்களின்[9] தொழிலாளர் அலுவலர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) உடன் சேர்ந்து, கூட்டு ஆய்வை நடத்தியது. மேலும்,

[9] கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் விழுப்புரம்

சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர் மாநகராட்சிகள், ஆத்தூர் மற்றும் தஞ்சாவூர் நகராட்சிகள், சில வட்ட அலுவலகங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலகங்களுக்கும் சென்று ஆவணங்களைச் சரிபார்த்தது. சரிபார்ப்பின் போது, 554 நியமிக்கப்பட்டோரால் சமர்ப்பிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ்கள் போலியானவை என்றும் அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படவில்லை என்றும் கண்டறியப்பட்டது. இதன் விளைவாக, ₹ 94.18 இலட்சம் முறைகேடாக வழங்கப்பட்டது.

உதவித்தொகை, மூன்றாவது நபரால் பணமாக்கப்படும் சாத்தியக்கூறு இருந்த கீறாக் காசோலைகளாக வழங்கப்பட்டதால், அவை தகுதியான பயனாளிகள் அல்லாத நபர்கள் திட்டப் பயன்களைப் பெற்றிருக்க வாய்ப்புண்டு. இப்பொருள் மீது விரிவான விசாரணை அரசால் மேற்கொள்ளப்படவேண்டும்.

சில தொழிற்சங்கங்கள் இறப்பு உதவித் தொகை கோரிக்கைகளில் மோசடியில் ஈடுபட்டது என்றும் சில மோசடியான நேர்வுகளில் உதவித்தொகை சம்பந்தப்பட்ட தொழிலாளர் அலுவலரால் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) வழங்கப்பட்டது என்றும் வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது. அத்தகைய தொழிற்சங்கங்களின் நடவடிக்கையை தடை செய்யவும் உதவித்தொகை ஒப்பளிப்பு செய்த அதிகாரிகள் மீது ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் வாரியம் தெரிவித்தது.

2.1.9.3 ஓய்வூதிய உதவி

60 வயது பூர்த்தியடைந்த மற்றும் குறைந்தபட்சம் ஐந்து வருடம் தொடர்ந்து உறுப்பினர்களாக இருந்த பதிவு செய்த தொழிலாளர் ஒவ்வொருவரும் ஓய்வூதிய உதவித்தொகை பெற தகுதியானவர் என திட்டத்தில் வழிவகுக்கப்பட்டுள்ளது. மாநில ஆலோசனைக்குழு, தொடர்ந்து ஐந்தாண்டுகள் பதிவு மூப்பு பெற்றிருக்க வேண்டும் என்பதை நான்காண்டுகளாகக் குறைக்க பரிந்துரை செய்தது (டிசம்பர் 2009). பின்னர், 60 வயது பூர்த்தியடைந்த அனைத்து பதிவு பெற்ற தொழிலாளர் களுக்கும் ஓய்வூதியத் தொகை ஒப்பளிப்பு வழங்கப் பரிந்துரை செய்தது (ஜனவரி 2011). ஓய்வூதிய உதவித்தொகை செப்டம்பர் 2006லிருந்து மாதத்திற்கு ₹ 200 என நிர்ணயிக்கப்பட்டது. இது அவ்வப்போது உயர்த்தப்பட்டு, தற்போதைய ஓய்வூதிய உதவித்தொகை டிசம்பர் 2011லிருந்து மாதத்திற்கு ₹ 1,000 ஆகும்.

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் நான்கில்[10], ஓய்வூதிய உதவித்தொகை வழங்கப்பட்ட 619 நேர்வுகளின் பதிவுருக்களை ஆய்வு செய்த போது, தொழிலாளர் அலுவலர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), 60 வயது பூர்த்தி அடைந்த பின் பதிவு செய்த தொழிலாளர்கள் அல்லது 60 வயதை அடையாத தொழிலாளர்களில், திருத்தப்பட்ட அடையாள அட்டை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களான நியமிக்கப்பட்டவர் சான்று, வயது சான்று போன்றவற்றை சமர்ப்பித்த 92 தகுதியற்ற தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத் தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டது தெரியவந்தது. இதன் விளைவாக, ₹ 22.84 இலட்சம் உதவித்தொகை தவறாக வழங்கப்பட்டது.

வாரியம், நவம்பர் 2008லிருந்து அனுமதிக்கப்பட்ட அனைத்து ஓய்வூதியத் தொகை கோரும் விண்ணப்பங்களும் சரிபார்க்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தது (ஜனவரி 2014).

2.1.9.4 குடும்ப ஓய்வூதிய உதவி

வாரியத்தில் பதிவு செய்து ஓய்வூதியம் பெறும் கட்டுமானத் தொழிலாளி இறந்து விட்டால் அவரது கணவன் அல்லது மனைவிக்கு மாதக் குடும்ப ஓய்வூதியம்

[10] கடலூர், மதுரை, சேலம் மற்றும் வேலூர்

ஜனவரி 2012லிருந்து ₹ 400 வழங்க திட்டம் வகை செய்கிறது. தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) திருச்சிராப்பள்ளி இரண்டு நேர்வுகளில் குடும்ப ஓய்வூதியத் தொகை ஒப்பளிப்பு செய்திருந்த போதிலும், சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மற்ற நான்கு மாவட்டங்களில்[11], 31 மார்ச் 2013 வரையில், 74 ஓய்வூதியதாரர்கள் இறந்த போதிலும் அவர்களைச் சார்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. இது வாரியத்தால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை பிரபலப்படுத்த தேவை இருப்பதைக் குறிக்கிறது. தொழிலாளி இறந்துவிட்டால் வயது வேறுபாடின்றி, கணவருக்கோ அல்லது மனைவிக்கோ ஓய்வூதியம் வழங்குவது குறித்து, மாநில ஆலோசனைக் குழு, ஒரு கருத்துரு அனுப்பி அரசின் முடிவுக்கு விடலாம் என தீர்மானித்தது (டிசம்பர் 2009). எனினும், வாரியம் எந்த ஒரு கருத்துருவையும் அரசின் அனுமதிக்காக சமர்ப்பிக்கவில்லை (டிசம்பர் 2013). குடும்ப ஓய்வூதியம் பெறுவது குறித்து இறந்த ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத்துணையை தொடர்பு கொள்ள மாநிலத்திலுள்ள அனைத்து தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) அலுவலகங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என்று வாரியம் தனது மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது.

2.1.9.5 திருமண உதவி

பதிவு செய்த தொழிலாளர்கள் அல்லது அவர்களின் மகன் அல்லது மகளுடைய திருமணச் செலவினங்களுக்காக தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) ₹ 5,000 பெண்ணிற்கும் ₹ 3,000 ஆணிற்கும் ஒப்பளிப்பு செய்ய வேண்டும் என்று திட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது. முன்பு (பிப்ரவரி 2011 வரையில்), ஆண் பெண் இருவருக்கும் உதவித் தொகை ₹ 2,000 ஆகும். சோதனைச் சரிபார்ப்பில், வேலூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களின் தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) தகுதியற்ற தொழிலாளர்களுக்கு திருமண உதவித் தொகை ஒப்பளிப்பு செய்தது கீழே விவரித்துள்ளபடி தெரியவந்தது.

(i) சோதனை சரிபார்ப்பு செய்த வேலூர் மாவட்டத்தில் 287 நேர்வுகளில் 11 நேர்வுகளில், கட்டுமானத் தொழிலாளர்கள் திருமணத் தேதியன்று 60 வயதைக் கடந்து விட்டவர்களாதலால் அவர்களது பதிவு நடப்பில் இல்லை. எனினும், அத்தகுதியற்ற தொழிலாளர்களுக்கு ₹ 22,000 வழங்கப்பட்டது.

(ii) திட்ட வழிமுறைகள் இரட்டைப் பயன்களை தொழிலாளர் பெறுவதை தடை செய்திருந்த போதிலும், திண்டுக்கல் மாவட்டத்தில், சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட 489 நேர்வுகளில், ஆறு நேர்வுகளில், சமூக நலத்துறையால் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் கீழ் இதே போன்ற பயனைப் பெற்ற தொழிலாளர்களுக்கு தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) ₹ 24,000 (4 நேர்வுகள் x ₹ 5,000 மற்றும் 2 நேர்வுகள் x ₹ 2,000) திருமண உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தார்.

வாரியத்தின் ஆட்சிக்குழு, தன்னுடைய 21வது கூட்டத்தில் (மே 2010), அரசுத் திட்டத்தில் கிடைக்கும் உதவித்தொகையான ₹ 25,000த்தை மேற்கோள் காட்டி, திருமண உதவித் தொகையை ₹ 15,000க்கு உயர்த்த முடிவு செய்தது. உதவித்தொகை இதுவரை உயர்த்தப்படவில்லை.

தவறிழைக்கும் தொழிற் சங்கங்கள்/ தொழிலாளர்கள் மீது உதவித்தொகை திரும்பப் பெறுவது உட்பட தேவையான நடவடிக்கை தொழிலாளர் அலுவலரால் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) எடுக்கப்படும் என்றும் உதவித்தொகை உயர்த்துவதற்கு

[11] கடலூர், மதுரை, சேலம் மற்றும் வேலூர்

கருத்துரு மாநில ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் வாரியம் தனது மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது.

2.1.9.6 கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கருவிகள் வழங்காமை

பணியிடங்களில், கட்டுமானத் தொழிலாளர்கள் உடல்நலத்தை உறுதி செய்யவும் பாதுகாப்பு ஏற்பாடுகளான கவசம் மற்றும் தலைக்கவசம் ஆகியவற்றை வழங்கவும் வாரியம் ஏற்பாடு செய்ய திட்டம் வகைசெய்கிறது. கட்டுமானம் மேற்பார்வையிடல், வர்ணம் பூசுதல், கம்பி வளைத்தல், பூச்சு வேலை செய்தல் மற்றும் மின்சார வேலை செய்வது போன்ற ஆபத்தை விளைவிக்கக்கூடிய பணிகளில் ஈடுபடும் கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடங்களில் அடிக்கடி விபத்தினை சந்திப்பதால், அவர்களுக்கு உயிர் பாதுகாப்பிற்காக தலைக்கவசம் வழங்கப்படவேண்டும் என்று அரசு நவம்பர் 2009ல் அறிவித்தது. ஒவ்வொரு ஆண்டிலும் 10,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தலைக்கவசம் வழங்கப்படும் என்று வாரியம், அரசுக்கு உறுதியளித்த போதிலும் (பிப்ரவரி 2010), இத்திட்டம் 2010-11ஆம் ஆண்டில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது தணிக்கையில் தெரியவந்தது. அதற்கடுத்த ஆண்டுகளில் தலைக்கவசம் வாங்கப்படவில்லை. 2008-11 காலகட்டத்தில் மாநிலத்தில் 701 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் வேலையிடங்களில் மரணம் விளைவித்த விபத்துகளை சந்தித்தார்கள் என்பது தணிக்கையில் தெரியவந்தது.

இப்பொருள் குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும் தகுந்த கருத்துரு அரசுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் வாரியம் தனது மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது.

2.1.9.7 வருங்கால வைப்பு நிதி அமைக்கப்படாமை

சட்டத்தின் பிரிவு 3(2) (i)ன் படி, வாரியம், பதிவு பெற்ற தொழிலாளர்களின் நலனுக்காக வருங்கால வைப்பு நிதி உட்பட எந்த ஒரு நிதியையும் அமைக்கவேண்டும். வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் காப்பீட்டுக் கழக நலன்களை பதிவு செய்த தொழிலாளர்களுக்கு வழங்க, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஆலோசனையுடன் அரசின் முன்அனுமதியோடு, உரிய திட்டங்களை வகுக்க திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வாரியம் அந்த வருங்கால வைப்பு நிதியை நிர்வகிக்கலாம். வருங்கால வைப்பு நிதித் திட்டம் வாரியத்தினால் அமைக்கப்படவில்லை (டிசம்பர் 2013) என்பது தணிக்கையில் தெரியவந்தது.

தனிப்பட்ட வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர்கள் காப்பீட்டு நிதித் திட்டத்தை வாரியம் இயற்றி செயல்படுத்த ஆய்வு செய்து ஒரு கருத்துரு ஆட்சிக்குழு மற்றும் மாநில ஆலோசனைக் குழுவின் முன் சமர்ப்பிக்கப்படும் என்று வாரியம் தனது மறுமொழியில் தெரிவித்தது (ஜனவரி 2014).

2.1.9.8 திட்ட உதவித் தொகை ஒப்பளிப்பு செய்து வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம்

நிலுவையிலுள்ள மனுக்கள்

அனைத்து திட்டங்களின்கீழ், உதவித் தொகை கோரும் தகுதியான விண்ணப்பங்கள், திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளின்படி பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும், விண்ணப்பங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), உதவித் தொகையை விடுவிக்க வேண்டும் என்றும் தொழிலாளர் ஆணையர், வாரியச் செயலருக்கு அறிவுறுத்தினார் (நவம்பர் 2009). சோதனைச் சரிபார்ப்பு

செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் நான்கில்[12], 31 மார்ச் 2013 நிலவரப்படி, பல்வேறு திட்டங்களின்கீழ் பெறப்பட்ட 1,784 மனுக்கள் 3 முதல் 12 மாத காலத்திற்கு, **அட்டவணை 2.4**ல் விவரித்துள்ளபடி, நிலுவையில் இருந்தது.

அட்டவணை 2.4: பல்வேறு திட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள மனுக்களின் விவரம்

வரிசை எண்	திட்டத்தின் பெயர்	நிலுவையிலுள்ள நேர்வுகளின் எண்ணிக்கை	3 மாதங்களுக்கு மேல் 6 மாதங்களுக்குள் நிலுவையிலுள்ள மனுக்கள்	6 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் நிலுவையிலுள்ள மனுக்கள்
1.	ஓய்வூதியம்	441	295	146
2.	விபத்து மரண உதவித்தொகை	65	52	13
3.	இயற்கை மரண உதவித்தொகை	814	498	316
4.	திருமண உதவித்தொகை	205	205	இல்லை
5.	மகப்பேறு உதவித்தொகை	259	117	142
	மொத்தம்	**1784**	**1167**	**617**

(ஆதாரம் : சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களின் தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அளித்த தகவல்கள்)

பயனாளிகள் இரண்டு முறை உதவித்தொகை பெறுவதை தடுக்கும் வகையில் அனைத்து மனுக்களும் இதர சம்பந்தப்பட்ட துறைகளோடு சரிபார்க்கப்பட்ட பின்னரே ஒப்பளிப்பு செய்யப்படவேண்டும் என்று அரசு அறிவுறுத்தியதன் பேரில் மேற்கொண்ட நடைமுறைகளால் தாமதம் ஏற்பட்டது என்று வாரியம் தனது மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது. நிலுவையிலுள்ள விண்ணப்பங்களுக்கு விரைவாக ஒப்பளிப்பு வழங்க தகுந்த அறிவுறுத்தல்கள் ஆய்வுக் கூட்டங்களில் வழங்கப்பட்டுள்ளன என்றும் வாரியம் தெரிவித்தது.

வழங்கப்படாத உதவித்தொகை

தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), திருச்சிராப்பள்ளியால் 56 நேர்வுகளுக்கான திட்ட உதவித்தொகையாக ₹ 8.39 இலட்சத்திற்கான காசோலைகள் (மார்ச் 2009 முதல் டிசம்பர் 2009 வரையிலான காலத்தில் எடுக்கப்பட்டவை), ஒப்பளிப்பு அதிகாரிகளுக்கெதிரான ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் இருந்ததால், மார்ச் 2013 வரையில் பயனாளிகளுக்கு வழங்கப்படவில்லை என்பது தணிக்கையில் தெரியவந்தது. இது, தகுதியான பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு திட்டப் பயன்கள் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வழங்கப்படாததில் முடிந்தது.

அரசின் உத்தரவு பெறப்பட்டபின், தகுதியான பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது.

உதவித்தொகைகள் வழங்குவதில் தாமதம்

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் மூன்று[13] மாவட்டங்களில், சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட 3,418 நேர்வுகளில் 295ல் இயற்கை மரண உதவித்தொகை ஆறு மாதத்திற்கு மேலாக மூன்று ஆண்டுகள் வரை காலதாமதமாக ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டது தணிக்கையில் தெரியவந்தது.

உதவித்தொகை வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கவும் இரண்டு மாதங்களுக்கு மேல் நிலுவையிலுள்ள உதவித்தொகை கோரும் விண்ணப்பங்களை பரிசீலித்து உதவித் தொகை விடுவிக்கவும் தொழிலாளர்

[12] திண்டுக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூர்

[13] மதுரை (75), சேலம் (99) மற்றும் வேலூர் (121)

அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று வாரியம் தனது மறுமொழியில் தெரிவித்தது.

2.1.10 மனிதவள மேலாண்மை

வாரியத்தின் ஆட்சிக்குழு, வாரியச் செயலர் மற்றும் ஏனைய பணியாளர்கள் உட்பட தேவைப்படும் அதிகாரிகளின் பணியிடங்களை தோற்றுவிக்கலாம் மற்றும் பொருத்தமெனக் கருதும் பணி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் அந்தப் பணியிடங்களுக்கு நபர்களை நியமிக்கலாம் என்று திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பணிகளின் தொகுதி "A" அல்லது தொகுதி "B" பதவிகளுக்கு இணையான பணியிடங்களை தோற்றுவிக்கவும் அப்பணியிடங்களுக்கு நியமனம் செய்யவும் வாரியம் அரசின் முன் ஒப்புதல் பெறவேண்டும் என்றும் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

2.1.10.1 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் பணியிலுள்ள நபர்கள்

வாரிய அலுவலகத்திற்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 41 பணியிடங்களில், 23 பணியிடங்கள் தினக்கூலி பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டன. மாவட்ட அலுவலகங்களில், **அட்டவணை 2.5**ல் கொடுக்கப் பட்டுள்ளபடி, 437 ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களில், 31 மார்ச் 2013 அன்றுள்ளவாறு, 175 பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன.

அட்டவணை 2.5: மாவட்ட அலுவலகங்களில் பணியாளர்களின் நிலவரம்

வரிசை எண்	பதவியின் பெயர்	ஒப்பளிக்கப் பட்டவை	நிரப்பப் பட்டவை	காலிப் பணியிடங்கள்
1	தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)	32	20	12
2	உதவிக் கணக்கு அலுவலர்	32	25	7
3	கண்காணிப்பாளர்	43	37	6
4	உதவியாளர்	107	23	84
5	இளநிலை உதவியாளர்	62	49	13
6	கணினி இயக்குபவர்	118	81	37
7	அலுவலக உதவியாளர்	43	27	16
	மொத்தம்	**437**	**262**	**175**

(ஆதாரம்: வாரியத்தால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

வாரியம் அளித்த தகவல்களிலிருந்து, ஜூன் 2013 அன்றுள்ளவாறு, வாரியம் 459 பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தியது தணிக்கையில் தெரியவந்தது.

அரசு, அக்டோபர் 2008ல் தரவுப் பதிவர் (Data entry operator) பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியது. நிரந்தரக் தரவுப் பதிவர் பணியிடங்களை நிரப்புவதில் ஏற்பட்ட காலதாமதத்தால், 15 செப்டம்பர் 2009லிருந்து கணினி மூலமாக செயல்பாட்டினைத் துவங்குவதற்கு ஏதுவாக, மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த சம்பள வீதப்படி, தரவுப் பதிவரை தினக்கூலி அடிப்படையில், நிரந்தரத் தரவுப் பதிவர்கள் நியமிக்கப்படும் வரை, நியமனம் செய்ய தொழிலாளர் ஆணையர் வாரியத்திற்கு அறிவுறுத்தினார் (செப்டம்பர் 2009). அதன்படியே, வாரியம் கணினி இயக்குபவர்களை தினக்கூலி அடிப்படையில் நியமித்தது. 2009-10 காலகட்டத்தில், அரசின் ஒப்பளிப்பின் அடிப்படையில் வாரியம் 114 கணினி இயக்குபவர்களை நியமித்தது. தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள், நிரந்தரக் கணினி இயக்குபவர்கள் நியமனம் செய்யப்படும் வரை மட்டுமே அனுமதிக்கப்பட்ட போதிலும், 2009-10ல் நிரந்தரக் கணினி இயக்குபவர்கள் நியமனம் செய்யப்பட்ட பிறகும், வாரியம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களை தொடர்ந்து

பணியில் ஈடுபடுத்தியது (ஆகஸ்ட் 2013). அதன் விளைவாக, 2010-11 மற்றும் 2011-12 காலகட்டத்தில் ₹ 3.94 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டது.

வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014), பணிகள் மாவட்ட அளவில் பரவலாக்கப்பட்டபின், மாவட்ட அலுவலகங்களின் பணி பன்மடங்கு அதிகரித்ததால், அதனை சமாளிக்க கூடுதல் பணியாளர்கள் தேவைப்பட்டது என்று கூறியது. எனவே, தினக்கூலி பணியாளர்களின் எண்ணிக்கை, ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களுக்கெதிரான காலிப் பணியிடங்களின் எண்ணிக்கைக்கு கட்டுப்படுத்த முடியவில்லை. நிரந்தரப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர படிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நிரந்தர பணியாளர்களை பணியமர்த்துவதை விட தினக்கூலி பணியாளர்களை ஈடுபடுத்தியதால் ஏற்பட்ட செலவினம் குறைவாகவே இருந்தது என்றும் வாரியம் தெரிவித்தது. ஆனால், நிரந்தர கணினி இயக்குபவர்கள் நியமிக்கப்படும் வரை மட்டுமே தினக்கூலி அடிப்படையில் தரவுப் பதிவர்களை பணியமர்த்துமாறு, தொழிலாளர் ஆணையர் வாரியத்திற்கு அறிவுறுத்தினார். எனினும், நிரந்தர நியமனங்கள் செய்யப்பட்ட பிறகும், வாரியம் ஜூன் 2013 வரையில், 459 பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தியது.

2.1.10.2 பணி விதிமுறைகள் உருவாக்கப்படாமை

வாரியக் கூட்டத்தில் (ஆகஸ்ட் 2010) முடிவு செய்தபடி, வாரியப் பணியாளர்களுக்கு வரைவுப் பணி விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்காகவும், அறிவிப்பிற்கும் சமர்ப்பிக்கப்பட்டு (செப்டம்பர் 2010) அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது (ஜனவரி 2014). பணி விதிமுறைகள் உருவாக்கப் படாததால், செப்டம்பர் 2009ல் நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்கு, ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்பு மற்றும் இதர பயன்கள் மறுக்கப்படுகிறது.

2.1.10.3 அதிகப் பணியிடங்கள் இயக்கப்பட்டமை

வாரியத்தின் தொகுதி A மற்றும் தொகுதி B அதிகாரிகள் வேற்றுப்பணி அடிப்படையில் தொழிலாளர் துறை மற்றும் கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறையிலிருந்து நியமிக்கப்பட்டனர். அரசு, சென்னையிலுள்ள வாரிய அலுவலகத்திற்கு இரண்டு கண்காணிப்பாளர் பணியிடங்களை மட்டுமே ஒப்பளிப்பு செய்தது (மார்ச் 1995) தணிக்கையில் தெரியவந்தது. இதற்கெதிராக, வாரியம் எட்டு கண்காணிப்பாளர் பணியிடங்கள் வரை, 2008-13 காலகட்டத்தில் இயக்கி வந்தது முறையற்றதாகும். இதன் விளைவாக, ₹ 87.68 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்பட்டது.

உள்ளாட்சி மன்றங்களிலிருந்து பங்களிப்புத் தொகையாக பெறப்படும் கேட்பு வரைவோலைகள் மற்றும் அது சம்பந்தப்பட்ட பணிச்சுமை அதிகமானதால், வாரியத்தால் ஆறு கண்காணிப்பு பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தொழிலாளர் துறையிலிருந்து வேற்றுப்பணி அடிப்படையில் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நிரப்பப்பட்டனர் என்றும் கூடுதல் கண்காணிப்பாளர் பணியிடங்களை தோற்றுவிக்க அரசின் அனுமதியைக் கோரும் கருத்துரு அனுப்பப்படும் என்றும் வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது.

2.1.10.4 ஆய்வாளர்கள் நியமிக்கப்படாமை

சட்டத்தின் நோக்கத்திற்காகவும், வாரியத்தால் செயல்படுத்தப்படும் எந்த ஒரு திட்டத்தின் நோக்கத்திற்காகவும் ஆய்வாளர்களை நியமிக்க சட்டத்தின் பிரிவு 16 வகைசெய்கிறது. ஆய்வாளர்கள், இச்சட்டத்தின் அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ள தொழில்களில் ஈடுபட்டுள்ள இச்சட்டம் பொருந்தும் நிறுவனங்களில் சட்டம், விதிகள் மற்றும் திட்டங்களில் வழிவகை செய்யப்பட்டுள்ளவை முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து கொள்வதற்காக தேவையான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

வாரியம் தொடங்கியதிலிருந்து ஆய்வாளர்களை நியமிக்கவில்லை. இதனால், நிறுவனங்களிலிருந்து பெறப்படும் பங்களிப்புத் தொகையின் கணக்கீட்டையும் வசூல் செய்து வாரியக் கணக்கில் செலுத்துவதை சரிபார்க்க முடியவில்லை. மேலும், பல்வேறு உதவித்தொகைக்கான விண்ணப்பங்களையும் சரிபார்க்க இயலவில்லை. இவற்றின் விளைவாக. பத்திகள் 2.1.7 மற்றும் 2.1.9ன் கீழ் உள்ள உப பத்திகளில் கூறப்பட்டுள்ளபடி, வாரியத்திற்கு வருவாய் இழப்பு மற்றும் முறைகேடான/ தகுதியற்ற நேர்வுகளுக்கு வாரியத்தின் நிதியிலிருந்து உதவித்தொகையும் வழங்கப்பட்டது.

ஆய்வாளர்கள் பங்களிப்புத் தொகையை வசூல் செய்வது குறித்து சட்டத்தில் வெளிப்படையாக எதுவும் கூறப்படவில்லை என்றும் இது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றும் உரிய நடவடிக்கைக்காக வாரியம் மற்றும் மாநில ஆலோசனைக்குழு முன் சமர்ப்பிக்கப்படும் என்றும் வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது

2.1.11 மின்னாட்சி அமைப்பு

பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு விரைவாகவும், சிறப்பாகவும் சேவைகளை வழங்க, தமிழ்நாடு அரசு, Project LEAD[14], என்ற பெயர் கொண்ட மின்னாட்சி அமைப்புமுறையை வாரியம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் செயல்படுத்தியது. இத்திட்டம், ₹ 5.10 கோடி செலவினத்தில் வன்பொருள் மற்றும் மென்பொருள் அமைக்கப்பட்டு நவம்பர் 2009 முதல் செயல்படுத்தப்பட்டது.

(i) தொழிலாளர்கள் பதிவு மற்றும் பதிவினைப் புதுப்பித்தல்; (ii) வாரிய அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு இடையே பணப்பதிவேடு இருப்புகளை இணையவழி மூலம் ஒத்திசைவு செய்தல்; (iii) ஒவ்வொரு தொழிலாளருக்கும் அளிக்கப்பட்ட அனைத்து உதவித் தொகையின் விவரங்களை ஒரு தொடுகையில் பெறுதல்; (iv) தொழிற்சங்கங்கள், வங்கிகள் மற்றும் திட்டங்கள் போன்றவற்றின் விவரங்களைப் பராமரித்தல்; (v) பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கணினி முறையில் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் பெற்ற திட்டப் பயன்களின் விவரங்கள் உள்ளடக்கிய அச்சிடப்பட்ட கணக்குப் புத்தகம் வழங்குதல்; (vi) பதிவு பெற்ற தொழிலாளர்கள் சம்பந்தமான ஆவணங்களான பதிவு விண்ணப்பங்கள், வயது, முகவரி, குடும்ப நபர்கள் மற்றும் நியமிக்கப்பட்டவர் சான்றுகள் ஆகியவற்றை கணினியில் உள்ளீடு செய்தல்; (vii) ஓய்வூதிய விண்ணப்பங்களைப் பரிசீலித்தல்; (viii) சம்பளம் மற்றும் இதர படிகள் பட்டியல்களை கணினி மூலம் தயாரித்தல் மற்றும் (ix) கணக்குப் பதிவேடுகளை கணினியில் பராமரித்தல் ஆகியவை கணினிமயமாக்கலின் திட்டமிடப்பட்ட பணிகளாகும்.

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில் உறுப்பினர் பதிவு மற்றும் புதுப்பித்தல் என்கிற ஒரே ஒரு துணை மாட்யூல்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது சோதனைச் சரிபார்ப்பில் தெரியவந்தது. மாட்யூல்கள் மற்றும் துணை மாட்யூல்களை பயன்படுத்தாதற்கு/குறைவாக பயன்படுத்தியதற்கு பயிற்சி அளிக்கப்பட்ட பணியாளர்கள் மாவட்ட அலுவலகங்களில் இல்லாததை காரணமாக சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களின் தொழிலாளர் அலுவலர்கள் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தெரிவித்தனர். இவ்வாறு ₹ 5.10 கோடி செலவில் முடிக்கப்பட்ட திட்டம் பயன் தரும் வகையில் பயன்படுத்தப்படவில்லை. வாரிய அலுவலகங்களில் கணினிமயமாக்கல் என்ற நோக்கத்தையும் அடைய முடியவில்லை.

கணினிமயமாக்கலுக்கு மாறுவதிலுள்ள மந்தநிலைக்கு தகுதியான பணியாளர்கள் இல்லாமை, தகவல் இணைப்பிலுள்ள குறைபாடுகள் மற்றும் தொடர் மின்சாரம்

[14] நிர்வாகத்தின் அடிப்படையில் தொழிலாளர் மின்னாட்சி

கிடைக்கப்பெறாமை ஆகியவையே காரணம் என்று வாரியம் தனது மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது. தற்போதுள்ள மென்பொருளை திருத்தியமைக்கவும் மற்றும் வன்பொருளை கொள்முதல் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் கணினிமயமாக்கல் விரைவில் முழுமையாக செயல்படுத்தப்படும் என்றும் வாரியம் தெரிவித்தது.

2.1.12 கண்காணிப்பு மற்றும் உள்கட்டுப்பாடு

2.1.12.1 உள்கட்டுப்பாடு

ஒரு நிறுவனத்தை சிறப்பாக நிர்வகிப்பதற்கு தவறுகள், கையாடல்கள், முறைகேடான வழங்கல்கள் ஆகியவற்றைத் தடுப்பதற்கும்/குறைப்பதற்கும் தேவையான உள்கட்டுப்பாடு அமைப்பு சிறப்பாக செயல்படுவது அவசியமாகும். வாரியத்தில் பயனுள்ள உள்கட்டுப்பாடு அமைப்பு இல்லை. தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), விழுப்புரத்தில் மதிப்பு மிக்க பொருட்களின் பாதுகாப்பு உறுதிபடுத்தப்படவில்லை. ஆகஸ்ட்-செப்டம்பர் 2011 காலத்தில், ஏழு வெற்றுக் கேட்பு வரைவோலைகள் திருடப்பட்டு, அவற்றில் நான்கில், ₹ 4.31 இலட்சம் நிரப்பப்பட்டு முறைகேடாகக் காசாக்கப்பட்டது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் தொழிலாளர் அலுவலகங்களின் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) பதிவேடுகளை தணிக்கை செய்வதற்கு உள்தணிக்கை அமைப்பு ஏதுமில்லை.

பல்வேறு உதவித்தொகைகளுக்கு ஒப்பளிப்பு செய்யும் போது திட்டவழிகாட்டுதல்கள் தொழிலாளர் அலுவலர்களால் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) பின்பற்றப்படுகின்றனவா என்பதை சரிபார்க்க உள்தணிக்கை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று வாரியம் (ஜனவரி 2014) தெரிவித்தது.

2.1.12.2 பதிவேடுகள் பராமரிக்கப்படாமை

சட்டத்தின் பிரிவு 9ல் குறிப்பிட்டுள்ளபடி, வாரியம் பரிந்துரைக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இதர பதிவேடுகளை முறையாக பராமரிக்க வேண்டும். எனினும், வாரியம் தொடங்கியதிலிருந்து பணப்பதிவேடு பராமரிக்காதது தணிக்கையில் தெரியவந்தது. வாரியத்திடம், மார்ச் 2012 நிலவரப்படி, ₹ 4.62 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் (கட்டடங்கள் தவிர) இருந்தன. ஆயினும், வாரியம் சொத்துப்பதிவேடு பராமரிக்காதது தணிக்கையில் தெரியவந்தது.

பணப்பதிவேடும் சொத்துப் பதிவேடும் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் தற்போது பராமரிக்கப்படுகிறது என்று வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014) தெரிவித்தது. எனினும், வாரியம், தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட காலத்தில், பணப்பதிவேடுகளைப் பராமரிக்காததால், நிதி இருப்புகளை வங்கி இருப்புகளோடு ஒத்திசைவு செய்ய இயலவில்லை.

2.1.12.3 ஆய்வுகள்

தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) தலைமையில் மாவட்ட அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்ட (அக்டோபர் 2008) பிறகு, வாரியச் செயலர் ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு மாவட்ட அலுவலகங்களை சென்று பார்வையிட்டு அவற்றின் செயல்பாடுகள் குறித்து விரிவான ஆய்வு செய்து அறிக்கையை தொழிலாளர் ஆணையருக்கு சமர்ப்பிக்கவேண்டும் என்று தொழிலாளர் ஆணையர் அறிவுறுத்தினார் (டிசம்பர் 2008). ஆய்வின் போது பின்பற்றப்பட வேண்டிய விரிவான வழிகாட்டுதல்கள் சுற்றறிக்கையில் இருந்தன. தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்களில், பதிவு மற்றும் புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்களை பெறுதல், மாற்று அடையாள அட்டைகளை வழங்குதல், நியமிக்கப்பட்டவர் மாற்றம், திட்ட உதவித்தொகை

கோரும் விண்ணப்பங்களை ஆய்வு செய்தல், கணக்குகள் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல், காலமுறை விவர அறிக்கைகள் சமர்ப்பித்தல் ஆகியவை தொடர்பான அரசு/தொழிலாளர் ஆணையர்களின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை வாரியச் செயலர் சரிபார்க்க வேண்டும்.

வாரியச் செயலர், 2009-13 காலத்தில் காலமுறை ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை என்பது தணிக்கையில் தெரியவந்தது. மற்றும், தொழிலாளர் ஆணையர் கட்டளைப்படி, வாரியச் செயலர் அத்தகைய ஆய்வு அறிக்கைகளின் நகல்களையும் சமர்ப்பிக்கவில்லை. தொழிலாளர் ஆணையரும் அவருடைய அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டனவா என்பதை உறுதி செய்து கொள்ளத் தவறிவிட்டார்.

வாரியம் மறுமொழியில் (ஜனவரி 2014) வாரியச் செயலர் மாவட்ட அலுவலகங்களை ஆய்வு செய்தார் என்று தெரிவித்தது. எனினும், தொழிலாளர் ஆணையர் அறிவுறுத்தல்களின்படி, அத்தகைய ஆய்வறிக்கைகளின் நகல்களையும் அரசு/தொழிலாளர் ஆணையர் அந்த அறிக்கைகளின் மீது எடுத்த நடவடிக்கையின் விவரங்களையும் வாரியம் தொழிலாளர் ஆணையருக்கு அளிக்கவில்லை.

2.1.13 முடிவுரை

தகுதியுள்ள அனைத்து தொழிலாளர்களைக் கண்டறிந்து பதிவு செய்ய வாரியத்திடம் எந்த ஒரு செயல்முறையும் இல்லை. மற்ற மாநிலங்களிலிருந்து இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், வாரியத்தால் பதிவு செய்யப்படவில்லை. வாரியம் ஏப்ரல் 2011லிருந்து முறையாக அமைக்கப்பட்ட ஒரு ஆட்சிக்குழுவைப் பெற்றிருக்கவில்லை. ஏப்ரல் 2011லிருந்து, வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர், அரசின் அனுமதி இல்லாமலேயே, வாரியத்தின் ஆட்சிக்குழுவின் அதிகாரங்களை பயன்படுத்தி ஆட்சிக்குழுவின் செயல்பாடுகள் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றினார். 2008-13 காலகட்டத்தில் வாரியம் தன் வசம் இருந்த ₹ 687.08 கோடியில் ₹ 147.31 கோடி மட்டுமே கட்டுமானத் தொழிலாளர்களின் நலத்திட்டங்களுக்காக செலவிட்டது. தினக்கூலி அடிப்படையில் அதிக பணியாளர்களை அமர்த்தியதாலும், ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுக்கு மேல் பணியிடங்களை இயக்கி வந்ததாலும், வாரியத்தின் நிர்வாகச் செலவினம் உயர்ந்து காணப்பட்டது (மொத்தச் செலவினத்தில் 26 சதவீதம்). உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறைகள் மற்றும் இதர நிறுவனங்கள், பங்களிப்புத் தொகையை வசூலித்து வாரியத்திடம் செலுத்துவதைக் கண்காணிக்க எந்த ஒரு அமைப்புமுறையும் வாரியத்தில் இல்லை. பதிவு பெற்ற தொழிலாளர்களில், 10 முதல் 12 சதவீதத்தினர் மட்டுமே பதிவினைப் புதுப்பித்தனர். வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் மற்றும் அத்திட்டங்களின் கீழ் பெறப்படும் உதவித்தொகைகள் அரசின் மற்ற துறைகளால் செயல்படுத்தப்படும் இதே போன்ற திட்டங்களோடு ஒப்பிடும் போது பதிவு பெற்ற தொழிலாளர்களை ஈர்க்கக்கூடியதாக இல்லை. சோதனைச் சரிபார்ப்பில் தொழிலாளர்களுக்கு பல்வேறு வகையான உதவித்தொகைகள் முறைகேடான மற்றும் தகுதியற்ற முறையில் வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது. வாரியத்தில் கண்காணிப்பு செயல்முறைகள் பயனற்றதாக இருந்ததோடு உள்தணிக்கை முறையும் ஏற்படுத்தப்படவில்லை.

2.1.14 பரிந்துரைகள்

- மாநிலத்திலுள்ள பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையை மதிப்பிடவும், சட்டத்தில் கூறியுள்ளபடி, வேலையளிப்பவரை பதிவு செய்வது உட்பட, பதிவு பெற்ற தொழிலாளர்களின் சரியான தகவல்களைப் பராமரிக்கவும் வாரியம் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

- அதிகப்படியான பதிவினையும், புதுப்பித்தலின் மூலமாக தொடர்ந்து பதிவில் இருப்பதையும் ஊக்குவிக்க, புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தவும் அல்லது மற்ற துறைகளால் செயற்படுத்தப்படும் இதே போன்ற திட்டங்களில் கிடைக்கப் பெறும் உதவித்தொகைக்கு இணையாக, வாரியத்தில் தற்போதுள்ள நலத் திட்டங்களின் கீழ் கிடைக்கப்பெறும் உதவித்தொகையை சீரமைக்கவும் வாரியம் கருதலாம்.
- உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள இதர நிறுவனங்கள், பங்களிப்புத் தொகையை உடனுக்குடன் செலுத்துவதை கண்காணிக்க முறையான அமைப்பினை ஏற்படுத்தலாம்.
- வாரியத்தின் நிர்வாகச் செலவினம் குறைக்கபடவேண்டும்.
- தொழிலாளர் அலுவலர்கள் முறைகேடான மற்றும் தகுதியற்ற முறையில் உதவித்தொகை வழங்குவதை தடுக்க, உள்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு செயல்முறைகளை வலுப்படுத்தவேண்டும்.

உயர்கல்வித் துறை

2.2 பாலிடெக்னிக் கல்லூரிகள் வாயிலாக தொழில்நுட்பக் கல்வி பயிற்றுவிப்பு

தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம்

பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளின் பல்வேறு பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப் பாடப் பிரிவுகளை பாலிடெக்னிக் கல்லூரிகள் வழங்குகின்றன. பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களும் தொழிற்பயிற்சி நிறுவனங்களிடமிருந்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றவர்களும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேரத் தகுதியுடையவராவர். மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியை தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் ஒருங்கிணைக்கிறது. 2008-13 காலகட்டத்தில் பாலிடெக்னிக் கல்லூரிகள் வாயிலாக தொழில்நுட்பக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டதன் செயலாக்கத் தணிக்கை ஏப்ரல் 2013 முதல் செப்டம்பர் 2013 வரை நடத்தப்பட்டது. முக்கிய தணிக்கைக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

தொழில்நுட்பக் கல்விக்கென பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட ₹ 241.60 கோடியில், பாலிடெக்னிக் கல்லூரிகளின் வளர்ச்சிக்காக ₹14.78 கோடி (ஆறு சதவீதம்) மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியில் ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கொண்டு வரத் தேவையான பொதுவான செயல்முறைத் திட்டம் மற்றும் குறிப்பிட்ட தனித் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கான மாநில வாரியம் நவம்பர் 2008க்குப் பிறகு மாற்றியமைக்கப்படவில்லை.

அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்ட கூடுதல் மானியங்கள் அவை வழங்கப்பட்டதிலிருந்து இரண்டு முதல் ஒன்பது ஆண்டுகள் கடந்த பின்னரே பிடித்தம் செய்யப்பட்டன. மத்திய அரசு நிதியை தமிழ்நாடு அரசு விடுவித்ததிலும் தாமதங்கள் இருந்தது தெரியவந்தது.

மாணவர் சேர்க்கையில் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 5 முதல் 11 சதவீதம் வரையிலும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 6 முதல் 15 சதவீதமும் குறைவினம் இருந்தது.

மாதிரி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளில் குறைவினம் இருந்து, தங்கும் விடுதிகளின் கொள்திறனைக் காட்டிலும் கூடுதலாக (மாணவர் விடுதிகளில் 74 சதவீதமும் மாணவியர் விடுதிகளில் 94 சதவீதமும்) மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

ஆசிரியப் பணியாளர் மற்றும் ஆசிரியரல்லாத தொழில்நுட்பப் பணியாளர் பதவிகளில் காலிப் பணியிடங்கள் காணப்பட்டன.

அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் 2008-11 தொகுதியில் 72 என்பதிலிருந்து 2010-13 தொகுதியில் 47 ஆகக் குறைந்தது.

2.2.1 முன்னுரை

பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளின்[15] பல்வேறு பிரிவுகளில் மூன்றாண்டு பட்டய பாடப் பிரிவுகளை பாலிடெக்னிக் கல்லூரிகள் வழங்குகின்றன. பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களும் தொழிற்பயிற்சி நிறுவனங்களிடமிருந்து (ITIs) பயிற்சிச் சான்றிதழ் பெற்றவர்களும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேரத் தகுதியுடையவராவர். மாநிலத்தில் பட்டம் மற்றும் பட்டயம் ஆகிய இரு படிப்பளவுகளிலும் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியை ஒருங்கிணைப்பது என்ற குறிக்கோளுடன் தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தை[16] தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியது (அக்டோபர் 1957). தொழில்நுட்பக் கல்வியில் பட்டம் பெற்றவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் நடுத்தர அளவிலான தொழில்நுட்ப நிலைப்பிரிவை உருவாக்கும் பொருட்டு பாலிடெக்னிக் கல்லூரிகள் வாயிலாக பட்டயப்படிப்புக் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஆவணத்தின்படி (2007-12), பொருளாதார ரீதியாக நலிவுற்ற பிரிவினருக்கு உயர்கல்வியை அணுகத்தக்கதாகச் செய்யவேண்டும் என்பதே அரசின் குறிக்கோளாகும். மார்ச் 2013 நிலவரப்படி, ஆண்டுக்கு 1.31 இலட்சம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் மாநிலத்தில் 30 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள், 34 அரசு உதவி பெறும்[17] கல்லூரிகள் மற்றும் 395 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகள் என 459 பாலிடெக்னிக் கல்லூரிகள் இருந்தன.

2.2.2 நிர்வாக அமைப்பு முறை

அரசு மட்டத்தில் உயர்கல்வித்துறையின் முதன்மைச் செயலர் துறையின் தலைவராக விளங்குகிறார். மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியை ஒருங்கிணைப்பதற்கும் பாலிடெக்னிக் கல்லூரிகளைக் கண்காணிப்பதற்கும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் (CTE) பொறுப்பு உள்ளவராகிறார். மாநிலத்திலுள்ள அனைத்து பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கும் இணைப்பாணை வழங்கும் அமைப்பான மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தின் (SBTET) அலுவல் சார்பான உறுப்பினர் செயலராக CTE உள்ளார். பாடப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கையை கண்காணிக்கும் பணியையும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு மானியங்கள் வழங்கும் பணியையும் CTE மேற்கொள்கிறார். அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளின் கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை ஒரு தலைமைப் பொறியாளர் தலைமையிலான துறையின் கட்டுமானப் பிரிவு மேற்கொள்கிறது.

2.2.3 தணிக்கைக் குறிக்கோள்கள்

- தேவையான வசதிகளை வழங்கவும், தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், சமுதாயத்தின் நடப்புத் தேவைகளுக்கேற்ற கல்வி செயல்முறைத்திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தவும் உரிய திட்டமிடல் செய்யப்பட்டதா என்பதையும்;
- குறித்த நேரத்தில் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு நிதியொதுக்கம் செய்யப்பட்டதா என்பதையும், நிதியின் பயன்பாடு பயனுறத்தக்க வகையிலும், திறமையாகவும் சிக்கனமாகவும் இருந்ததா என்பதையும்;

---

15 குடிமுறை/இயந்திரப் பொறியியல், கணினி மென்பொருள்/வன்பொருள், மின் பொறியியல், கணக்கியல், ஆடைகள், தோல் தொழில்நுட்பம், அச்சுத் தொழில்நுட்பம், துணிநூல் தொழில்நுட்பம் போன்றவை

16 தொழில்நுட்பக் கல்வி ஆணையரகம் என்றும் கூறப்படுகிறது

17 பணியாளர் சம்பளம் மற்றும் பராமரிப்பிற்கான மானியத்தொகை

- அங்கீகாரம், இணைப்பாணை, மாணவர் சேர்க்கை தொடர்பான அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம் (AICTE) / அரசு ஆகியவற்றின் வரையறைகள்/விதிமுறைகள், CTE மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளால் பின்பற்றப்பட்டனவா என்பதையும்;
- AICTE / அரசு வகுத்துள்ள வரையறைகளின்படி, பாலிடெக்னிக் கல்லூரிகளில் போதுமான உள்கட்டமைப்பு மற்றும் தகுதி வாய்ந்த மனித வளம் இருந்தனவா என்பதையும்;
- பாலிடெக்னிக் கல்லூரிகள் திறமையாக செயல்படுவதை உறுதி செய்வதற்குத் தேவையான பயன் விளைவிக்கக்கூடிய வகையிலான கண்காணிப்பு நடைமுறையில் இருந்ததா என்பதையும்;

ஆராய்வதே செயலாக்கத் தணிக்கையின் நோக்கங்களாக இருந்தன.

2.2.4 தணிக்கை அளவுகோல்கள்

பின்வரும் ஆதாரங்களின் அடிப்படையில் செயலாக்கத் தணிக்கை செய்யப்பட்டது.

- அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்ற வரையறைகள்/விதிமுறைகள்;
- உயர்கல்வி தொடர்பான அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள் மற்றும் திட்ட ஆவணங்கள்;
- அரசு வெளியிட்ட கோட்பாடுகள், கையேடுகள், அரசாணைகள், அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகள்; மற்றும்
- குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

2.2.5 தணிக்கைப் பரப்பு மற்றும் வழிமுறைகள்

2008-13 காலகட்டத்தை உள்ளடக்கிய செயலாக்கத் தணிக்கையானது ஏப்ரல் முதல் செப்டம்பர் 2013 வரை நடத்தப்பட்டது. ஜூலை 2013ல் உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலர் மற்றும் CTEஉடன் நடத்தப்பட்ட தணிக்கைக்கு முந்தைய கலந்தாய்வின்போது, தணிக்கை நோக்கங்கள், தணிக்கை அளவுகோல்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. தலைமைச் செயலகத்திலுள்ள உயர் கல்வித் துறை, CTE, எளிய வகையில் ஒன்றோடொன்று தொடர்பற்ற மாதிரி முறையில் (random sampling) 30 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் தெரிந்தெடுக்கப்பட்டவையான 10, 34 அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஒன்பது ஆகியவற்றின் பதிவேடுகள் மாதிரி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மாதிரி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகளின் பட்டியல் **இணைப்பு 2.2**ல் தரப்பட்டுள்ளன. ஜனவரி 2014ல் CTEஉடன் நடத்தப்பட்ட தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வில் தணிக்கைக் குறிப்புகள் விவாதிக்கப்பட்டன. தணிக்கைக் குறிப்புகள் இறுதி செய்யப்பட்டபோது, துறையின் மறுமொழிகள்/எதிர் குறிப்புகள் கருத்தில் கொள்ளப்பட்டன. முக்கியமான தணிக்கைக் குறிப்புகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

தணிக்கைக் குறிப்புகள்

2.2.6 கொள்கை மற்றும் திட்டமிடல்

2.2.6.1 மாநிலத்தில் பாலிடெக்னிக் கல்லூரிகளின் நிலை

2008-13 காலகட்டத்தில், மாநிலத்தில் இருந்த அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளின் எண்ணிக்கை, அவற்றில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் **அட்டவணை 2.6**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.6 : பாலிடெக்னிக் கல்லூரிகள் (க) மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை (மா)

கல்லூரியின் வகை/ ஆண்டு	அரசு		அரசு உதவி பெறுபவை		சுயநிதி		மொத்தம்	
	க	மா	க	மா	க	மா	க	மா
2008-09	22	5,747	34	12,614	258	82,477	314	1,00,838
2009-10	22	5,792	34	12,025	307	85,582	363	1,03,399
2010-11	30	10,496	34	12,113	365	94,078	429	1,16,687
2011-12	30	11,035	34	11,831	380	98,658	444	1,21,524
2012-13	30	10,662	34	12,173	395	1,07,879	459	1,30,714

(ஆதாரம்: உயர் கல்வித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்புகள்)

2008-13 காலகட்டத்தில் எட்டு அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் (ஏழு மத்திய அரசு நிதியுடனும் ஒன்று மாநில அரசு நிதியுடனும்) தொடங்கப்பட்ட நிலையில் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் இல்லை.

2012-13ல், மாநிலத்தின் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கைக்கெதிராக (1,30,714) அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை (10,662) எட்டு சதவீதமே ஆகும். மேலும், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் (2007-12) போது, மாநில அரசு நிதியளிப்பின் மூலம் ஒரே ஒரு பாலிடெக்னிக் கல்லூரி மட்டுமே அமைக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட பகுதிகளின் பின்தங்கிய தன்மை மற்றும் தொழிற்சாலைகளில் பட்டயச் சான்றிதழ் பெற்றவர்களின் தேவைப்பாடுகளின் அடிப்படையில் புதிய பாலிடெக்னிக் கல்லூரிகள் திறக்கப்படும் என்று தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது CTE தெரிவித்தார் (ஜனவரி 2014).

2.2.6.2 *புதிய அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளைத் தொடங்குதல்*

மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களில், மார்ச் 2013 நிலவரப்படி, 19 மாவட்டங்களில் மட்டுமே அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் இருந்தது கண்டறியப்பட்டது. மேலும், மாநிலத்தில் கூடுதலாக 10 பாலிடெக்னிக் கல்லூரிகள் தொடங்க அரசு அனுமதி அளித்ததில் (ஜனவரி 2013), அரசு பாலிடெக்னிக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் (அரியலூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்) இரண்டு ஒப்புதலளிக்கப்பட்ட நிலையில், எட்டு பாலிடெக்னிக் கல்லூரிகள் ஏற்கனவே அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் அமைந்திருந்த மாவட்டங்களிலேயே தொடங்கப்பட்டன. அரசின் கொள்கை முடிவு மற்றும் அறிவிப்புகளின் அடிப்படையிலேயே மாநிலத்தில் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் தொடங்கப்பட்டதாக CTE தெரிவித்தார் (மார்ச் 2013). ஆக, மார்ச் 2013 நிலவரப்படி, 11 மாவட்டங்களில் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் இல்லை.

மேலும், ஒரு இலட்சம் மக்கட்தொகைக்கு ஒரு பாலிடெக்னிக் கல்லூரி இருக்கவேண்டும் என்ற வரையறையின் அடிப்படையில், மாநிலத்தில் 722 பாலிடெக்னிக் கல்லூரிகள் தேவை என பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கருத்துருக்களில் CTE தெரிவித்திருந்தது (ஜனவரி 2012) கண்டறியப்பட்டது. அந்த சமயத்தில், மாநிலத்தில் 447 பாலிடெக்னிக் கல்லூரிகள் மட்டுமே இருந்தமையால், 2020 ஆண்டுக்குள் மேலும் 275 புதிய பாலிடெக்னிக் கல்லூரிகள் (2012-19 காலகட்டத்தில் ஒவ்வோராண்டும் 35 மற்றும் 2019-20ல் 30 என) அமைக்க உத்தேசிக்கப்பட்டது. எனினும், 2012-13 ஆண்டில், 35 பாலிடெக்னிக் கல்லூரிகள் அமைக்க வேண்டியிருந்ததற்கெதிராக 10 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டதுடன் 15 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் அமைக்கப்பட்டன.

2.2.6.3 நிதிகளின் வறிதான ஒதுக்கீடு

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2007-12) கல்விக்கான ஒப்புதலளிக்கப்பட்ட மாநில திட்ட ஒதுக்கீடான ₹ 3,149 கோடியில் தொழில்நுட்பக் கல்விக்கு ₹ 241.60 கோடி மட்டுமே (7.67 சதவீதம்) ஒதுக்கப்பட்டு, அதிலிருந்து ₹ 14.78 கோடி (ஆறு சதவீதம்) மட்டுமே பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்டது.

2.2.6.4 மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியம் மாற்றியமைக்கப்படாமை

மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியில் ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கொண்டு வரும் பொருட்டு பொதுவான செயல்முறைத் திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட தனித் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஏதுவாக மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியத்தை (SBTET) அரசு அமைத்தது (ஜூலை 1957). SBTETயின் பணிக்காலம் மூன்றாண்டுகளாகும்.

நவம்பர் 2008ல் அதன் பணிக்காலம் முடிவடைந்த பின் SBTET மாற்றியமைக்கப் படாததை தணிக்கை கண்டறிந்தது. மேலும், 2008-12 காலகட்டத்தில், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் கால ஒதுக்கீடுகளில் இருந்து தெரியவருவது போல், பொதுத்துறையின் கீழ் பாலிடெக்னிக் கல்லூரிகளை விரிவாக்கம் செய்யவும் மேம்படுத்தவும் மாநில நிதியைக் கொண்டு எந்தவொரு பெரிய திட்டமும் உருவாக்கப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

ஊழியர் பற்றாக்குறை போன்ற நிர்வாகக் காரணங்களினால் SBTETஐ புனரமைப்பது தொடர்பான கருத்துரு அரசிடம் சமர்ப்பிக்கப்படவில்லை என CTE தெரிவித்தார் (ஜனவரி 2014).

2.2.7 நிதி மேலாண்மை

2008-13 காலகட்டத்தில், மாநில வரவு செலவுத் திட்ட அறிக்கையில் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி (உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தொழில்நுட்பக் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டத்தின் முதற்கட்டத்தினுள் (2004-09) அடங்கிய மூன்று பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு[18] ஒதுக்கப்பட்ட தொகுப்பு மானியங்களையும்[19] சேர்த்து), அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்ட மானியங்கள், தேர்வுகள் மற்றும் மூலதனப்பணிகள் மீதான செலவினங்கள் **அட்டவணை 2.7**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7: வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவினம்

(₹ கோடியில்)

	2008-09		2009-10		2010-11		2011-12		2012-13	
	ஒதுக்-கீடு	செலவினம்	ஒதுக்-கீடு	செலவினம்	ஒதுக்-கீடு	செலவினம்	ஒதுக்-கீடு	செலவினம்	ஒதுக்-கீடு	செலவினம்
அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள்	39.31	38.79	45.34	45.28	62.05	60.10	73.04	69.47	71.30	67.00
அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான மானியம்	55.35	53.40	49.50	49.50	92.35	92.35	99.71	99.71	95.57	95.57
தேர்வுகள்	13.38	13.36	19.99	19.01	18.73	18.66	21.04	20.84	22.61	22.51
மூலதனப் பணிகள்	1.76	1.76	2.00	2.00	7.09	6.76*	2.21	2.04	2.37	1.96
மொத்தம்	109.80	107.31	116.83	115.79	180.22	177.87	196.00	192.06	191.85	187.04

* எட்டு புதிய அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டதையடுத்து 2010-11 ஆண்டில் மூலதனச் செலவினத்தில் உயர்வு காணப்பட்டது

(ஆதாரம்: CTEயிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்)

18 அரசு மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை, டாக்டர் தர்மாம்பாள் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை மற்றும் தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை

19 கருவூலத்திலிருந்து அரசின் தொகுப்புதவி பெறப்பட்டு செலவு செய்யப்பட வங்கி சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது

அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் செய்யப்பட்ட செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது, **அட்டவணை 2.8**ல் விவரித்துள்ளவாறு, சாதனங்கள், புத்தகங்கள், தளவாடப் பொருட்கள் மற்றும் கணிப்பொறி போன்றவற்றின் மீதான செலவினம் 0.80 சதவீதத்திலிருந்து 3.05 சதவீதம் மட்டுமே இருந்தது தெரியவந்தது.

அட்டவணை 2.8: அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் வகை

(₹ இலட்சத்தில்)

செலவின வகை	2008-09	2009-10	2010-11	2011-12	2012-13
சாதனங்கள், புத்தகங்கள், தளவாடப் பொருட்கள் மற்றும் கணிப்பொறிகள்	90.48 (2.31)	131.42 (3.05)	85.53 (1.43)	52.85 (0.80)	107.39 (1.69)
பராமரிப்பு	5.36 (0.14)	6.98 (0.16)	5.43 (0.09)	6.10 (0.09)	7.55 (0.12)
நிர்வாகச் செலவினம்	3,823.03 (97.55)	4,173.66 (96.79)	5,892.60 (98.48)	6,615.53 (99.11)	6,247.55 (98.19)
மொத்தச் செலவினம்*	**3,918.87**	**4,312.06**	**5,983.56**	**6,674.48**	**6,362.49**

அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் மொத்தச் செலவினத்தில் அதன் சதவீதத்தைக் குறிக்கின்றன

* அரசால் மூன்று பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்ட தொகுப்பு மானியமும் சேர்ந்துள்ளதால், அட்டவணை 2.7ல் தரப்பட்டுள்ள அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளின் செலவினத்திலிருந்து இது மாறுபடுகிறது.

(ஆதாரம்: CTEயிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்)

பத்தி 2.2.11.3ல் விவரித்துள்ளவாறு, அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் இருந்த சாதனங்கள் போதுமானவையாக இல்லை என்பதைத் தணிக்கை கண்டறிந்தது.

2.2.7.1 தொகுப்பு மானிய மீதத்தொகை சிறப்பு நிதிக்கு மாற்றம் செய்யப்படாமை

தொழில்நுட்பக் கல்வி தரமேம்பாட்டுத் திட்டத்திற்கான (TEQIP) தேசிய திட்ட செயலாக்க அலகு அறிவுறுத்தல்களின்படி, பாலிடெக்னிக் கல்லூரிகள் சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்ட கருத்துருக்களின் அடிப்படையில், முதற்கட்டத்தின்கீழ், மூன்று பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு 2009-10 ஆண்டு முதல், தொகுப்பு மானியமாக நிதியை CTE அளித்து வந்தார். 2009-13 காலகட்டத்தில், பெறப்பட்டு பயன்படுத்தப்பட்ட தொகுப்பு மானியம் குறித்த விவரங்கள் **இணைப்பு 2.3**ல் தரப்பட்டுள்ளன.

2009-13 காலகட்டத்தில் அவற்றுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகையான ₹ 63.50 கோடி நிதியில் ₹ 53.20 கோடி செலவு செய்யப்பட்டு எஞ்சிய மீதத்தொகை ₹ 10.30 கோடி மூன்று பாலிடெக்னிக் கல்லூரிகளின் வசமிருந்தது.

திட்டக்காலம் கடந்தும் TEQIPன் கீழ் செயல்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் நிலைத்திருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, மூன்று பாலிடெக்னிக் கல்லூரிகளிலும் நான்கு நிதியங்களை, அதாவது, மூலநிதி, ஊழியர் வளர்ச்சி நிதி, சேதார நிதி மற்றும் பராமரிப்பு நிதி ஆகியவற்றை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்தது (மே 2007). தொகுப்பு மானியங்களில் மீதமாகும் தொகை சேதார நிதி மற்றும் பராமரிப்பு நிதியில் செலுத்தப்படவேண்டுமென ஆணையில் கூறப்பட்டிருந்தது. நிதிக் கணக்குகள்மீது நடத்தப்பட்ட ஆய்வில் இரண்டு பாலிடெக்னிக் கல்லூரிகள் (அரசு மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை மற்றும் தர்மாம்பாள் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை) தொகுப்பு மானியத்தின் மீதத்திலிருந்து எந்தத் தொகையையும் சேதார நிதிக்கோ பராமரிப்பு நிதிக்கோ மாற்றம் செய்யாதது தெரியவந்தது (டிசம்பர் 2013). நிதிக் கணக்குகளில் மார்ச் 2013 நிலவரப்படி, இருந்த மீதங்கள் **அட்டவணை 2.9**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.9: சிறப்பு நிதியில் எஞ்சிய மீதங்கள்

கல்லூரி	கணக்கு தொடங்கப் பட்ட மாதம்	தொகை (₹)			
		மூலநிதி	ஊழியர் வளர்ச்சி நிதி	சேதார நிதி	பராமரிப்பு நிதி
அரசு மத்திய பாலிடெக்னிக், சென்னை*	நவம்பர் 2007	60,352	1,20,703	30,176	60,352
தர்மாம்பாள் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை *	ஏப்ரல் / அக்டோபர் 2006	1,42,857	2,17,962	1,05,729	2,17,965
தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை	ஜூன் 2007	99,52,461	1,47,948	24,99,919	25,12,239

* முதன்முதலில் செய்யப்பட்ட வைப்பீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி மட்டுமே இவ்விரண்டு கல்வி நிறுவனங்களின் நிதியில் சேர்ந்துள்ளது

(ஆதாரம்: CTEயிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்)

மேலும், இம்மூன்று கல்வி நிறுவனங்களாலும் எந்த நிதியினின்றும் எவ்வித செலவும் செய்யப்படவில்லை. முதல்வர், தர்மாம்பாள் பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை, நிதிகளிலிருந்து செலவு ஏதும் செய்யாததற்கு பணியாளர் மற்றும் ஆசிரியப் பணியாளர்களின் பற்றாக்குறையை காரணமாகக் கூறினார் (ஆகஸ்ட் 2013).

2.2.7.2 அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான மானிய உதவி

சம்பள மானியம் மற்றும் பராமரிப்பு மானியமாக 34 அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு அவற்றின் தேவையில் 10 சதவீதத்தை பாலிடெக்னிக் கல்லூரி நிர்வாகமே ஏற்க, 90 சதவீதத் தொகையை முன்பண அடிப்படையில் அரசு அவற்றுக்கு வழங்குகிறது. நிரப்பப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் சம்பள மானியம் நான்கு தவணைகளிலும் பராமரிப்பு மானியம் இரண்டு தவணைகளிலும் வழங்கப்படுகின்றன. பாலிடெக்னிக் கல்லூரிகளின் கணக்குகள் மீதான தணிக்கை நிறைவடைந்ததும், மானியமாக விடுவிக்கத் தகுந்த தொகையை உள்தணிக்கைக்கான உதவி இயக்குநர்கள்[20] நிர்ணயம் செய்ய, தணிக்கை அறிக்கையிலுள்ள குறிப்புகளை CTE ஆராய்ந்து, கல்லூரிகளிடமிருந்து கூடுதல் தொகையைப் பிடித்தம் செய்யவோ அல்லது எஞ்சிய மானியத்தை பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு விடுவிக்கவோ ஏதுவாக மானியத்தில் கூடுதல்/குறைவினம் என்பதைக் குறிப்பிட்டு மதிப்பீட்டு ஆணையை அனுமதிக்க வேண்டும்.

இரண்டு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2008-09லிருந்தும், நான்கு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2009-10லிருந்தும், எட்டு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2010-11லிருந்தும், 12 பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2011-12லிருந்தும், எட்டு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2012-13லும் கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. இதனைச் சுட்டிக்காட்டியபோது, சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்களும் உள்தணிக்கைக்கான உதவி இயக்குநர்களும் கணக்குகள் தயார் செய்யவும், தணிக்கையை முடிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக CTE பதிலளித்தார் (செப்டம்பர் 2013).

மேலும், 2006-07 முதல் ₹ 17.68 கோடி அளவுக்கு கூடுதல் மானியம் பிடித்தம் செய்யப்படவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டிருந்த உள்தணிக்கை உதவி இயக்குநர்களிடமிருந்து பெறப்பட்ட 121 தணிக்கை அறிக்கைகள் மீது மதிப்பீட்டு

[20] தமிழக அரசின் சட்டரீதியான வாரியங்களின் தணிக்கையாளர் மற்றும் தலைமை உள்தணிக்கையாளரின் கீழ் பணிபுரிபவர்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள மாவட்ட அதிகார எல்லைக்குள் மாநிலத்திலுள்ள நகரங்களை தலைமையிடங்களாகக் கொண்ட உதவி இயக்குநர்கள்

ஆணையை CTE அனுமதிக்கவில்லை. 2004-05 முதல் 2013-14 (ஜூலை 2013 வரை) வரை பிடித்தம் செய்யப்பட்ட ₹ 20.48 கோடி தொடர்பான 208 நேர்வுகளை பகுப்பாய்வு செய்த போது, மானியம் விடுவிக்கப்பட்ட ஆண்டிலிருந்து கணக்கிட்டால் இரண்டு முதல் ஒன்பது ஆண்டுகள் கடந்த பின்னரே பிடித்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பது காண முடிந்தது. பிடித்தம் செய்யப்பட்ட தொகையானது 73 நேர்வுகளில் ஒவ்வொரு நேர்விலும் ₹ 10 இலட்சத்திற்கும் கூடுதலாக இருந்தது. ஒரு நேர்வில்[21], 2002-03 ஆண்டுக்கான கூடுதல் மானியத் தொகை ₹ 71.67 இலட்சம் 2010ஆம் ஆண்டில்தான் பிடித்தம் செய்யப்பட்டது.

பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் உள்தணிக்கைக் குறிப்புகளை தீர்வு செய்வதில் எடுத்துக்கொண்ட காலதாமதத்தை, தான் ஆணைகள் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்திற்குக் காரணமாகக் கூறிய (செப்டம்பர் 2013) CTE, மதிப்பீட்டு ஆணைகளை குறித்த நேரத்தில் வழங்குவதற்கும், கூடுதலாக அளிக்கப்பட்ட மானியங்களை பிடித்தம் செய்வதற்கும், கல்லூரி முதல்வர்கள் மற்றும் உள்தணிக்கைக்கான உதவி இயக்குநர்களைக் கலந்தாலோசித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். கூடுதலாக வழங்கப்பட்ட மானியங்களை தாமதமின்றி பிடித்தம் செய்வதற்கும் தேவையின் அடிப்படையில் முன்பண மானியத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் வழிமுறைகள் ஏற்படுத்தப்படும் என்று தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது (ஜனவரி 2014) CTE தெரிவித்தார்.

2.2.7.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட சிறப்புக் கட்டணமும் வளர்ச்சிக் கட்டணமும்

ஒவ்வோராண்டும் அரசு/அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் சிறப்புக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணமாக ₹ 1,000 வசூலிக்கின்றன. CTEயின் அறிவுறுத்தல்களின்படி (ஜூலை 2002), விளையாட்டு, நூலக வசதிகள், மாணவர்களின் வேலைவாய்ப்புக்கான ஏற்பாடுகள் போன்றவற்றிற்கு சிறப்புக் கட்டணத்தையும், சாதனங்கள் வாங்குவதற்கான மூலதனச் செலவு, இருப்பு வளங்கள் மற்றும் சாதனங்கள் மற்றும் கலன்களுக்கான நுகர்பொருட்கள், சாதனங்களின் பராமரிப்பு, ஊழியர் மேம்பாடு மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கு வளர்ச்சிக் கட்டணத்தையும் பயன்படுத்த வேண்டும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 10 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில், 2008-13 காலகட்டத்தில், சிறப்புக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ஆகியவற்றின் நிதி இருப்பு மற்றும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட செலவினம் பற்றிய விவரங்கள் **இணைப்பு 2.4**ல் தரப்பட்டுள்ளன.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில், 2008-13 காலகட்டத்தில், சிறப்புக் கட்டணப் பயன்பாடு விழுப்புரம் பாலிடெக்னிக் கல்லூரியில் 12 சதவீதத்திலிருந்து கரூர் பாலிடெக்னிக் கல்லூரியில் 65 சதவீதம் வரை என்ற அளவில் இருந்த நிலையில், வளர்ச்சிக் கட்டணத்தின் பயன்பாடு ஐந்து சதவீதத்திற்கும் (இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ICT), சென்னை) 86 சதவீதத்திற்கும் (அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை) இடையே இருந்தது.

வருங்காலத்தில், இக்கட்டணங்கள் சேர்ந்து குவிந்துவிடாமல் பயன்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் CTE பதிலளித்தார் (ஜனவரி 2014).

---

[21] நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி, பொள்ளாச்சி.

2.2.7.4 மத்திய அரசு நிதி விடுவிக்கப்படாமை

2010-11ம் ஆண்டு "பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான துணைக் குறிக்கோள் பணித் திட்டம்" எனும் திட்டத்தின் கீழ், ஏற்கனவேயுள்ள பாலிடெக்னிக் கல்லூரிகளில் மகளிர் தங்கும் விடுதிகள் கட்டவும், வசதிகளை மேம்படுத்தவும் மத்திய அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு நேரடியாக நிதி வழங்கி வந்தது. 2011-12 ஆண்டு முதல் மத்திய அரசு, தமிழ்நாடு அரசு வாயிலாக இந்நிதியை வழங்கியது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகளில் இரண்டில், கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாடு அரசால் மத்திய அரசின் நிதி காலம் கடந்து வழங்கப்பட்டது அல்லது வழங்கப்படவேயில்லை.

(i) இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனத்தில் சாதனங்களை தரம் உயர்த்த மாநில அரசுக்கு ₹ 20 இலட்சத்தை மத்திய அரசு வழங்கியது (செப்டம்பர் 2011). இந்நிறுவனத்திற்கு நிதி வழங்காததை மத்திய அரசு, மாநில அரசுக்குச் சுட்டிக்காட்டிய பின்னரே (மார்ச் 2013) CTE நிதி வழங்க ஒப்புதல் அளிக்குமாறு தமிழ்நாடு அரசை கேட்டுக் கொண்டார் (ஜூலை 2013). இன்னமும் நிதி ICTக்கு வழங்கப்படவில்லை (டிசம்பர் 2013).

(ii) தர்மாம்பாள் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் மகளிர் தங்கும் விடுதியைக் கட்டுவதற்காக மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்கிய (மார்ச் 2012) ₹ 20 இலட்சம், அக்கல்லூரிக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்படவில்லை (டிசம்பர் 2013).

(iii) சென்னையிலுள்ள ICTயில் மகளிர் தங்கும் விடுதி கட்டுவதற்கு மத்திய அரசு ₹ 40 இலட்சம் வழங்கியது (பிப்ரவரி 2013). தமிழ்நாடு அரசு இத்தொகையை அக்டோபர் 2013ல்தான் ICTக்கு வழங்கியது கண்டறியப்பட்டது.

பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு தமிழ்நாடு அரசு மத்திய அரசின் நிதியை வழங்காதது/காலங் கடந்து வழங்கியது போன்ற காரணங்கள், பத்திகள் 2.2.11.2(i) மற்றும் 2.2.11.3(ii) ஆகியவற்றில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, பணிகள் நிறைவேற்றத்திலும், சாதனங்கள் வாங்குவதிலும் தாமதத்திற்கு வழிவகுத்தன.

2.2.7.5 நிதி திரும்ப ஒப்படைப்பு

சாதனங்கள், தளவாடப் பொருட்கள், புத்தகங்கள் மற்றும் கணிப்பொறிகள் வாங்குவதற்காக 2011-12 மற்றும் 2012-13 காலகட்டத்தில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை, **அட்டவணை 2.10**ல் தரப்பட்டுள்ளபடி, அரசு மற்றும் CTEயின் தாமதமான ஒப்புதல்/நிதி ஒதுக்கீடு போன்ற காரணங்களால் விழுப்புரம், கரூர் மற்றும் மேலூர் பாலிடெக்னிக் கல்லூரிகள் திரும்ப ஒப்படைப்பு செய்து விட்டன.

அட்டவணை 2.10: கருவிகள் வாங்க ஒதுக்கப்பட்ட நிதி திரும்ப ஒப்படைப்பு

(₹ இலட்சத்தில்)

பாலிடெக்னிக் கல்லூரியின் பெயர்	ஆண்டு	அரசு ஒப்புதல் அளித்த நாள்	CTE ஒதுக்கீடு செய்த நாள்	ஒதுக்கப் பட்ட தொகை	பாலிடெக்னிக் கல்லூரிகளால் திரும்ப ஒப்படைக்கப் பட்ட தொகை
விழுப்புரம்	2011-12	25/10/2011	17/11/2011 மற்றும் 09/01/2012	217.26	21.07
	2012-13	12/10/2012	07/12/2012 மற்றும் 28/01/2013	195.23	53.07
கரூர்	2011-12	25/10/2011	17/11/2011 மற்றும் 09/01/2012	217.26	3.09
	2012-13	12/10/2012	07/12/2012 மற்றும் 28/01/2013	195.23	93.29
மேலூர்	2012-13	செப்டம்பர் 2012	அக்டோபர் 2012	192.41	125.52

(ஆதாரம் : அரசாணைகள், CTEயின் ஒதுக்கீட்டுக் கடிதங்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளின் நிதி ஒப்படைப்பு ஆணைகள்)

நிதியாண்டின் கடைசி காலாண்டின் போது தான் CTE, பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு ஒதுக்கீடுகளைச் செய்தார். சாதனங்கள், தளவாடப் பொருட்கள், புத்தகங்கள் மற்றும் கணிப்பொறிகள் ஆகியவற்றை வாங்கும் நடைமுறைகளை அதே ஆண்டுக்குள் பாலிடெக்னிக் கல்லூரிகளால் முடிக்க இயலாமல் போனதையடுத்து, அந்த ஒதுக்கீடுகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன. சாதனங்கள் இல்லாததால் விழுப்புரம் மற்றும் கரூர் பாலிடெக்னிக் கல்லூரிகளில் செயல்முறை வகுப்புகள் நடத்துவதில் குறைபாடுகள் இருந்தது குறித்து பத்தி 2.2.11.3 (ii)ல் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

2.2.8 மாணவர் சேர்க்கை

2.2.8.1 பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையின் போக்கு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2008-13 காலகட்டத்தில் அக்கல்லூரிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட மாணவர் **எண்ணிக்கை** மற்றும் சேர்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் **விளக்கப்படம் 2.1**ல் தரப்பட்டுள்ளன.

விளக்கப்படம் 2.1: அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையின் போக்கு





(ஆதாரம்: உயர் கல்வித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்புகள்)

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை ஒப்புதலளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கெதிராக சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் இருந்த குறைவினங்கள், 2008-13 காலகட்டத்தில் முறையே 5 முதல் 11 சதவீதமாகவும் 6 முதல் 15 சதவீதமாகவும் இருந்தன.

சில பாடப்பிரிவுகளுக்கு மாணவர்களிடையே குறைந்த வரவேற்பே இருந்ததை காலியிடங்களுக்கு CTE காரணமாகக் கூறினார் (பிப்ரவரி 2013). பாடப்பிரிவுகளை ஆய்வு செய்து பொருத்தமானவற்றைப் பரிசீலனை செய்ய வேண்டிய தேர்வுகள் வாரியம், நவம்பர் 2011ல் அதன் பணிக்காலம் கடந்தபின் மீண்டும் அமைக்கப்படவில்லை என்பதன் அடிப்படையில் இந்த மறுமொழியைப் பார்க்கவேண்டும்.

2.2.8.2 பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவிகளின் சேர்க்கை

மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தை அதிகரிப்பதும், உயர்கல்வி பெறுவதில் மாணவர்களுக்கும் மாணவியர்களுக்குமிடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதன் மூலமாக, தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வியில் பாலின சமனற்ற நிலையை அறவே நீக்குவதும் பன்னிரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தன.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2012-13 காலகட்டத்தில் மாணவிகளின் சேர்க்கை விவரங்கள் **விளக்கப்படம் 2.2**ல் தரப்பட்டுள்ளன.

விளக்கப்படம் **2.2: 2012-13**ல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவிகளின் சேர்க்கை



(ஆதாரம்: உயர் கல்வித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்புகள்)

2012-13ல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவியர் சேர்க்கை 20 சதவீதம் மட்டுமே என்பதை விளக்கப்படத்திலிருந்து அறிய முடிகிறது.

2.2.9 அனுமதி நீட்டிப்புக்கான பரிந்துரை

AICTEயின் அனுமதி நடைமுறைக் கையேட்டின்படி, (2007-08) AICTEயின் முன்அனுமதி பெற்றே அரசு, அரசு உதவி பெறும் அல்லது சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரி தொடங்கப்படவும், தொழில்நுட்பக் கல்வியில் புதிய பாடப்பிரிவுகளோ அல்லது செயல்முறைத் திட்டங்களோ அறிமுகப்படுத்தப்படவும், ஒப்புதலளிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையில் அதிகரிப்போ மாறுபாடுகளோ செய்யப்படவும் வேண்டும். மேலும், புதிய பாலிடெக்னிக் கல்லூரிகள் தொடங்குவதற்கான விண்ணப்பங்களைப் பரிசீலிக்கவும், அனுமதி நீட்டிப்பிற்கும், மாணவர் எண்ணிக்கையைத் திருத்தியமைக்கவும் புதிய பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்தவும் மாநில அளவிலான குழு (SLC)[22] AICTEக்கு பரிந்துரை செய்யவேண்டும் என்றும் கூறுகிறது. 2011-12 முதல் கல்வி நிறுவனங்கள் இணையதளம் மூலம் AICTEக்கு ஒப்புதல் கோரி நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும்.

26 SLC கூட்டங்களின்[23] (2008-11) கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளை ஆய்வு செய்த போது, அனுமதி நீட்டிப்பு/மாணவர் எண்ணிக்கை திருத்தியமைப்பு/புதிய பாடப்பிரிவுகள் தொடங்குவது தொடர்பான 832 நேர்வுகளுக்கான (அரசு: 51, அரசு உதவி பெறும்: 93 மற்றும் சுயநிதி: 688) கருத்துருக்கள் CTEயிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது. இவற்றுள், உள்கட்டமைப்பு வசதிகள், பணியாளர் அமைப்பு முறை போன்றவற்றில் உள்ள சில குறைபாடுகளை களைய வேண்டும் என்றும் மூன்று மாதங்களுக்குள் இது பற்றிய இணக்க அறிக்கையை அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும் SLC, **அட்டவணை 2.11**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, 233 நேர்வுகளை (அரசு : 16; அரசு உதவி பெறும் : 44 மற்றும் சுயநிதி : 173) பரிந்துரை செய்தது. இந்நேர்வுகளில், இணக்க அறிக்கையை அளிக்கத் தவறிய பாலிடெக்னிக் கல்லூரிகள் அந்தந்த கல்வியாண்டுகளில் இத்தகைய குறைபாடுகளுடனேயே தொடர்ந்து செயல்பட்டு வந்தன.

---

22 உயர்கல்வித் துறைச் செயலர் AICTEயின் பிராந்திய அதிகாரி மற்றும் அரசால் நியமிக்கப்படும் இரு பாடப்பிரிவு நிபுணர்கள் அடங்கிய குழு

23 மொத்தம் நடத்தப்பட்ட 29 கூட்டங்களில் (26வது, 36வது மற்றும் 37வது கூட்டங்கள் தவிர்த்த 18வது முதல் 46வது கூட்டங்கள் வரை)

அட்டவணை 2.11: குறைபாடுகள் இருந்தும்கூட, பரிந்துரைக்கப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகளின் கருத்துருக்கள்

ஆண்டு	SLC கூட்டங்களின் எண்ணிக்கை	அனுமதி நீட்டிப்பு/மாணவர் எண்ணிக்கை திருத்தியமைப்பு/கூடுதல் பட்டய பாடப்பிரிவுகள் ஆகியவற்றுக்கு SLCயால் பரிந்துரைக்கப்பட்ட நேர்வுகள்				குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் பரிந்துரைக்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை			
		அரசு	அரசு உதவி பெறும்	சுய நிதி	மொத்தம்	அரசு	அரசு உதவி பெறும்	சுய நிதி	மொத்தம்
2008-09	8	13	33	202	248	--	22	86	108
2009-10	9	12	27	215	254	5	18	81	104
2010-11	9	26	33	271	330	11	4	6	21
மொத்தம்	26	51	93	688	832	16	44	173	233

(ஆதாரம்: SLC கூட்டங்களின் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள்)

ஏற்கனவே சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் நலன் கருதியே SLCயின் பரிந்துரைகள் செய்யப்பட்டன என்று CTE பதிலளித்தார் (ஜனவரி 2014).

ஆசிரியப் பணியாளர் எண்ணிக்கை, வகுப்பறைகள், ஆய்வக வசதிகள், கணிப்பொறிகள் மற்றும் நூலகப் புத்தகங்கள் ஆகியவற்றில் காணப்பட்ட குறைவினங்கள் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியின் தரத்தின் மீது எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் இப்பதில் ஏற்புடையதல்ல.

2.2.10 பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இணைப்பாணை

AICTE வழங்கும் ஒப்புதல் கடிதம் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியின் விண்ணப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு SBTET இணைப்பாணை வழங்கவேண்டும்.

பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இணைப்பாணை வழங்கும் அதிகாரத்தை தமிழ்நாடு அரசு SBTETக்கு ஒப்படைத்தது (டிசம்பர் 1997 மற்றும் செப்டம்பர் 2011). SBTET, அது அமைக்கப்பட்டதிலிருந்து ஒவ்வொருமூன்றாண்டுகளுக்குப் பிறகும் மாற்றி அமைக்கப்படவேண்டும். எனினும், நவம்பர் 2008உடன் பணிக்காலம் முடிவடைந்த SBTET, அதன் பின் மாற்றியமைக்கப்படாததுடன், அவ்வாறு இயங்காமல் இருந்த SBTETயின் உறுப்பினர் செயலர் என்ற முறையில், அரசிடமிருந்து அதிகாரம் ஒப்படைக்கப் பெறாமலேயே பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு CTE டிசம்பர் 2008 லிருந்து இணைப்பாணை வழங்கி வந்தார்.

2.2.11 உள்கட்டமைப்பு வசதிகள்

பாலிடெக்னிக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு, தேவையான வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் சாதனங்கள் வழங்குவதென்பது முக்கிய பங்காற்றுகிறது. அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் உள்கட்டமைப்பு வசதிகளில் காணப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

2.2.11.1 கட்டடங்கள்

(i) வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள்

AICTE வரையறைகளின்படி, ஒரு பாலிடெக்னிக் கல்லூரியில் 60 மாணவர்களைக் கொண்ட ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு வகுப்பறையும், அங்கு அளிக்கப்படும் ஒவ்வொரு பாடப்பிரிவுக்கும் ஆறு ஆய்வகங்களும் இருக்கவேண்டும். AICTEயின் இந்த வரையறைகளுக்கெதிராக, **அட்டவணை 2.12**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இரண்டு பாலிடெக்னிக் கல்லூரிகளில் வகுப்பறைகளும், ஏழு பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆய்வகங்களும் குறைவாக இருந்தன.

அட்டவணை 2.12: வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்களில் குறைபாடுகள்

வரிசை எண்	பாலிடெக்னிக் கல்லூரியின் பெயர்	AICTE வரையறைகளின் படியான தேவைப்பாடு	மொத்தம் இருந்த வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள்	குறைவினம்
வகுப்பறைகள்				
1	தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை	21	18	3
2	மேலூர் பாலிடெக்னிக் கல்லூரி	12	10	2
	மொத்தம்	**33**	**28**	**5**
ஆய்வகங்கள்				
1	தர்மாம்பாள் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை	24	15	9
2	மதுரை மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி	23	13	10
3	தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை	24	20	4
4	அறந்தாங்கி பாலிடெக்னிக் கல்லூரி	18	13	5
5	கரூர் பாலிடெக்னிக் கல்லூரி	22	14	8
6	விழுப்புரம் பாலிடெக்னிக் கல்லூரி	22	17	5
7	மேலூர் பாலிடெக்னிக் கல்லூரி	20	12	8
	மொத்தம்	**153**	**104**	**49**

(ஆதாரம்: CTE அளித்த தகவல்கள்)

மேற்கண்ட பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஐந்து வகுப்பறைகளும் 49 ஆய்வகங்களும் குறைவாக இருந்தது காணப்பட்டது. மதுரை மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் தர்மாம்பாள் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆய்வகங்களின் குறைபாடு அதிகமாக முறையே 10 மற்றும் 9 என்றிருந்தது.

(ii) பாலிடெக்னிக் கட்டடங்களை பிற நோக்கங்களுக்கு பயன்படுத்தியமை

அறந்தாங்கி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் இடப் பற்றாக்குறையை சமாளிக்கும் பொருட்டு, கணிப்பொறி ஆய்வகம், மூன்று வகுப்பறைகள், கல்லூரி முதல்வர் அறை மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கட்டடம் (தரைத்தளம் + இரண்டு மேல் தளங்கள்) கட்டி முடிக்கப்பட்டபின் (செப்டம்பர் 2010), உயர்கல்வித்துறைக்கான அரசுச் செயலரின் அறிவுறுத்தலின்படி, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டிற்காக விடப்பட்டதையடுத்து பாலிடெக்னிக் கல்லூரி பழையபடி போதிய இடவசதியின்றியே இயங்கி வந்தது.

2.2.11.2 தங்கும் விடுதிகள்

மார்ச் 2013 நிலவரப்படி, அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள் சார்ந்த 41 தங்கும் விடுதிகள் (மாணவர்களுக்கு 22ம் மாணவிகளுக்கு 19ம்) இருந்தன.

(i) தங்கும் விடுதிகளில் கூடுதல் சேர்க்கை

மொத்தமுள்ள 41 விடுதிகளில் 17ல், அவற்றின் கொள்திறனைக் காட்டிலும் கூடுதலாக, **அட்டவணை 2.13**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

அட்டவணை **2.13:** விடுதிகளில் கூடுதல் சேர்க்கை

விடுதி	விடுதிகளின் எண்ணிக்கை	கூடுதல் குடியிருக்கை காணப்பட்ட விடுதிகளில் இருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை		
		கொள்திறன்	சேர்க்கை	கூடுதல் சேர்க்கை (சதவீதம்)
மாணவர்	8	1,297	2,260	963 (74)
மாணவியர்	9	999	1,936	937 (94)
மொத்தம்	**17**	**2,296**	**4,196**	**1,900 (83)**

(ஆதாரம் : CTE அளித்த விவரங்கள்)

தங்கும் விடுதிகளின் கொள்திறனைக் காட்டிலும் கூடுதலாக (மாணவர் விடுதிகளில் 74 சதவீதம் மற்றும் மாணவியர் விடுதிகளில் 94 சதவீதம்) மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 2009-13 காலகட்டத்தில் "பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான துணை திட்டம்" என்பதன் கீழ் 19 மாணவியர் தங்கும் விடுதிகள் கட்டுவதற்காக மத்திய அரசு வழங்கிய ₹ 13.90 கோடியில் டிசம்பர் 2013 வரை, தமிழ்நாடு அரசு, ₹ 11.86 கோடியை செலவிட்டது. பாலிடெக்னிக் கல்லூரிகளிடம் 19 விடுதிகளில் ஏழு[24] விடுதிகள் ஒப்படைக்கப்பட்டன. ஒரு விடுதி (வணிகக் கல்விக்கான மாநில நிறுவனம் (SICE), சென்னை), அது கட்டி முடிக்கப்பட்டும் கூட (நவம்பர் 2013) சரியான அணுகுசாலை அமைக்கப்படாத காரணத்தால், ஒப்படைக்கப்படாதிருந்தது (டிசம்பர் 2013). கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் இருந்த எஞ்சிய 11 விடுதிகளின் டிசம்பர் 2013 நிலவரம் **இணைப்பு 2.5**ல் தரப்பட்டுள்ளது.

விடுதிகளின் கட்டுமானம் குறித்த முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் CTE அளித்த விவரங்களிலிருந்து, தணிக்கையில் அறிந்து கொள்ளப்பட்டது யாதெனில், 19 மாணவியர் தங்கும் விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டாலும் கூட, **அட்டவணை 2.13**ல் கூறியுள்ள ஒன்பது மாணவியர் விடுதிகளில் மூன்றில் கூடுதல் சேர்க்கைப் பிரச்சனை என்பது தீர்க்கப்படாமலே இருக்கும் என்பது தான். மாணவர் விடுதிகளில் கூடுதல் சேர்க்கையை சரி செய்ய எவ்வித வழிவகையும் செய்யப்படாததுடன் தமிழ்நாடு அரசு தனது தரப்பில் இதற்கென நிதியொதுக்கம் ஏதும் செய்யவில்லை.

(ii) தண்ணீர் வசதி செய்யப்படாததால் பயன்படுத்தப்படாத தங்கும் விடுதி

இருபத்தோரு அறைகள் (100 மாணவர்கள் தங்க வசதியாக) மற்றும் சமையலறை மற்றும் குளியலறைகள்/கழிப்பறைகள் உள்ளிட்ட வசதிகளுடன் கரூர் பாலிடெக்னிக் கல்லூரியில் ₹ 1.40 கோடி செலவில் விடுதிக் கட்டடம் கட்டப்பட்டு (ஜூன் 2012) கல்லூரியிடம் ஒப்படைக்கப்பட்டும் (நவம்பர் 2012) தண்ணீர் வசதி செய்து தரப்படாததால் பயன்படுத்தப்படாமலே இருந்தது (டிசம்பர் 2013).

2.2.11.3 சாதனங்கள்

(i) மத்திய அரசு மானிய உதவியுடன் சாதனங்களை தரம் உயர்த்துதல்

"பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான துணை திட்டம்" என்பதன் கீழ், சாதனங்களை தரம் உயர்த்துவதற்காக ஒரு பாலிடெக்னிக் கல்லூரிக்கு ₹ இரண்டு கோடி வீதம் நிதியுதவி வழங்க ஒப்புதலளித்த (ஜூலை 2009) மத்திய அரசு, மார்ச் 2010 முதல் மே 2013 காலகட்டத்தில், 21 பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு ₹ 19.20 கோடியை வழங்கியது. முதல் தவணையான ₹ 3.20

[24] அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள், எட்டயாபுரம், காரைக்குடி, கிருஷ்ணகிரி, மதுரை (மகளிர்), சீர்காழி மற்றும் தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை மற்றும் வேலூர் (மின் வேலைகள் முன்னேற்ற நிலையில் இருந்தன).

கோடியை மத்திய அரசு 2009-12ல் வழங்கியது. எஞ்சிய தொகையை விடுவிக்குமாறு CTE ஜனவரி 2013ல் தான் மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ள, மார்ச் மற்றும் மே 2013ல் மத்திய அரசு வழங்கிய ₹ 16 கோடி, தமிழ்நாடு அரசால் இன்னமும் (டிசம்பர் 2013) பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு வழங்கப்படவில்லை. எனவே, அவை இருக்கும் சாதனங்களைக் கொண்டே செயல்முறை வகுப்புகளை நடத்த வேண்டிய நிலைக்குள்ளாயின.

வாங்கப்படவேண்டிய சாதனங்கள் பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்களால் தெரிவு செய்யப்பட்டு அச்சாதனங்களின் பட்டியல் சென்னையிலுள்ள தேசிய தொழில்நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NITTTR) வசம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், NITTTRஇடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டதும் சாதனங்கள் வாங்கப்படும் என்றும் CTE பதிலளித்தார் (ஜனவரி 2014).

(ii) செயல்முறை வகுப்புகள் நடத்துவதில் குறைவினம்

2011-12 கல்வியாண்டுக்கு, பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான பாடத்திட்டத்திற்கு ஒப்புதலளிக்கையில், பாடத்திட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ள பரிசோதனைகள் அனைத்தும் தவறாமல் செய்து முடிக்கப்படவேண்டும் என்றும், செயல்முறைத் தேர்வுகளுக்கான வினாக்கள், செய்யப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையிலேயே தொகுக்கப்படவேண்டும் என்றும் CTE குறிப்பிட்டிருந்தார்.

விழுப்புரம் மற்றும் கரூரிலுள்ள பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சென்னையிலுள்ள ICTயின் பதிவேடுகளை ஆய்வு செய்தபோது, அவை CTE குறிப்பிட்டிருந்தவாறு அனைத்துப் பரிசோதனைகளையும் செய்திருக்கவில்லை என்பது தெரியவந்தது. செயல்முறை வகுப்புகள் நடத்துவதில் இருந்த குறைவினமானது, **இணைப்பு 2.6**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, 10 முதல் 70 சதவீதம் வரையிருந்தது. சாதனங்கள், ஆய்வக வசதிகள் மற்றும் மின்சார வசதிகள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் பரிசோதனைகளை நடத்த இயலவில்லை என மூன்று பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் தெரிவித்தனர் (ஆகஸ்ட் முதல் டிசம்பர் 2013).

(iii) புதிதாக தொடங்கப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு CNC கருவிகள் வழங்கப்படாமை

ஏழு புதிய அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இயந்திரப் பொறியியல் பாடப்பிரிவின் மூன்றாமாண்டுக்குத் (2012-13) தேவைப்படும் சுட்டும் முனையுடன் கூடிய கணிப்பொறி எண்ணியல் சார்ந்த முறையில் கட்டுப்படுத்தத்தக்க ஏழு இயந்திரங்கள் (CNC) மற்றும் ஏழு CNC கடைசல் இயந்திரங்கள் வாங்குவதற்காக (முறையே ₹ 10 இலட்சம் மற்றும் ₹ 9 இலட்சம் மதிப்பில்) CTE விலைப்புள்ளிகள் கோரி அழைப்பு விடுவித்ததையடுத்து (செப்டம்பர் 2012) நான்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. ஏலதாரர்களில் ஒருவர், விலை முன்னுரிமை கோரியிருந்ததையடுத்து அதனை அனுமதிப்பது குறித்து ஒரு குறிப்பிட்ட தெளிவுறுத்தத்தை அரசிடம் CTE கேட்டதற்கு, அந்த ஏலதாரர் விலை முன்னுரிமைக்கு தகுதி வாய்ந்தவர் அல்ல என அரசு தெளிவுபடுத்தியது (மே 2013). இதனிடையே, ஏலம் செல்லத்தக்க காலம் கடந்து விட்டது. 2012-13 கல்வியாண்டுக்குத் தேவையான கருவிகள் டிசம்பர் 2013 வரையில் வாங்கப்படவில்லை.

2.2.11.4 நூலகங்கள்

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஐந்து பாலிடெக்னிக் கல்லூரிகளின் நூலகங்களில் பின்வரும் குறைபாடுகள் இருந்தன:

(i) **தர்மாம்பாள் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை** : இந்த பாலிடெக்னிக் கல்லூரியின் மாணவர் எண்ணிக்கை 1,200 என்றாலும்,

நூலகத்துக்குப் போதிய இடவசதி இல்லை. AICTE வரையறைப்படி, இருக்கவேண்டிய 975 சதுரமீட்டருக்கெதிராக 210 சதுரமீட்டர் மட்டுமே இருந்தது. புதிய நூலகத்துக்கான கட்டடம் கட்டுவதற்குரிய கருத்துரு CTEக்கு 2009 மற்றும் 2012ல் அனுப்பப்பட்டிருப்பதாக கல்லூரி முதல்வர் தெரிவித்தார் (செப்டம்பர் 2013). எனினும், பாலிடெக்னிக் கல்லூரியிடமிருந்து அப்படிப்பட்ட கருத்துரு பெறப்படவில்லையென CTE தெரிவித்தார் (டிசம்பர் 2013).

(ii) **இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனம் சென்னை:** இந்த பாலிடெக்னிக் கல்லூரி 1963லேயே தொடங்கப்பட்டு, அதில் 7,000 புத்தகங்கள் இருப்பினும், இதற்கென ஒப்புதலளிக்கப்பட்ட நூலகர் பணியிடம் இல்லாதது தணிக்கையில் கண்டறியப்பட்டது. புத்தகங்கள் அகர வரிசையில் பட்டியலிடப்படாமல் இருந்ததுடன் பெயர் வரிசைப் பட்டியல் இழுப்பறைகளும் பயன்படுத்தப்படாமல் இருந்தன. இதன் விளைவாக, புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. **படம் 2.1** மற்றும் **2.2**ல் கண்டுள்ளவாறு நூலகம் செயல்படாதிருந்தது.

படம் **2.1:** சென்னை இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனத்தில் செயல்படாத நூலகம்

படம் **2.2:** சென்னை இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனத்தில் வறிதாகப் பராமரிக்கப்பட்ட புத்தகங்கள்

(iii) **தோல் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை:** இந்நிறுவனத்தின் நூலகத்தில் 3,300 புத்தகங்கள் இருந்தாலும் கூட, நூலகர் பணியிடம் கடந்த ஆறு ஆண்டுகளாக நிரப்பப்படாத காரணத்தால் பயன்பாட்டுக்கு விடப்படாமல் இருந்தது.

(iv) **விழுப்புரம் மற்றும் கரூர் பாலிடெக்னிக் கல்லூரிகள்** : 2011-13 காலகட்டத்தில் விழுப்புரம் பாலிடெக்னிக் கல்லூரி ₹ 22.62 இலட்சம் செலவில் 9,362 புத்தகங்களையும் கரூர் பாலிடெக்னிக் கல்லூரி ₹ 24.74 இலட்சம் செலவில் 10,694 புத்தகங்களையும் வாங்கின. இவை இரண்டிலும், நூலகங்கள் செயல்படாத காரணத்தால் இப்புத்தகங்கள் பயன்படுத்தப்படாமலிருந்தன.

அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளிலுள்ள நூலகங்களுக்குப் புத்துயிரூட்டி தேவையான நடவடிக்கைகளை எடுக்க தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது (ஜனவரி 2014) CTE ஒப்புக்கொண்டார்.

2.2.12 மனிதவள மேலாண்மை

துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் அடங்கிய ஆசிரியப் பணியாளர்கள் தாம் பாலிடெக்னிக் கல்லூரிகளில் தொழில்நுட்பக் கல்வி போதிப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றனர். செயல்முறை விளக்க வகுப்புகளில் விரிவுரையாளருக்கு உதவியாக விளங்கும் ஆய்வக உதவியாளர் போன்ற ஆசிரியர் அல்லாத தொழில்நுட்பப் பணியாளர்களும் கூட மாணவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளிப்பதற்கு தேவையாவர். தேவையான மனிதவளம் மற்றும் அவற்றில் இருந்த காலியிடங்கள் குறித்து பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

2.2.12.1 ஆசிரியப் பணியில் காலியிடங்கள்

அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2008-13 காலகட்டத்தில் இருந்த ஒப்புதலளிக்கப்பட்ட ஆசிரியப் பணியாளர்கள், நிரப்பப்பட்ட பணியிடங்கள் மற்றும் காலிப் பணியிடங்கள் பற்றிய விவரங்கள் **இணைப்பு 2.7**ல் தரப்பட்டுள்ளன.

ஆசிரியப் பணியாளர் பணிப்பிரிவில் இருந்த காலியிடங்கள் 54 சதவீதத்திலிருந்து (ஆகஸ்ட் 2009) 72 சதவீதமாக உயர்ந்து (ஆகஸ்ட் 2012) பிறகு சற்றே நான்கு சதவீதம் குறைந்து 68 சதவீதமானது (ஆகஸ்ட் 2013). ஆகஸ்ட் 2012லிருந்து ஆகஸ்ட் 2013க்குள் காலியிடங்களின் நிலையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டதற்கு, ஏப்ரல் 2010லேயே விரிவுரையாளர்கள் தேர்வு நடைமுறை தொடங்கப்பட்டு ஏப்ரல் மற்றும் மே 2013ல் 129 விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டது காரணமாகும்.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக 606 ஆசிரியப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, செயல்முறையில் இருப்பதாக CTE பதிலளித்தார் (ஜனவரி 2014).

2.2.12.2 ஆசிரியர் - மாணவர் விகிதம்

ஒவ்வொரு பாலிடெக்னிக் கல்லூரிக்கும் ஒப்புதல் அளிக்கும்போது, மாணவர்களைச் சேர்ப்பதற்கு முன்பாக, AICTEயின் வரையறைகளின்படி, முழுநேர கல்வித்திறன் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள் பணியமர்த்தப்படவேண்டும் என்று AICTE தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளது. பட்டயக் கல்வி வழங்கும் நிறுவனங்கள் ஆசிரியர்-மாணவர் விகிதம் 1:20 என்ற அளவில் இருக்கும் வகையில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென தனது பட்டயக் கல்வி நிறுவனங்களுக்கான ஒப்புதல் நடைமுறைக் கையேட்டில் (2007-08) AICTE வலியுறுத்தியுள்ளது.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 10 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளுமே AICTEயின் ஆசிரியர்-மாணவர் விகித வரையறையை பின்பற்றாதது தணிக்கையில் தெரியவந்தது. ஆசிரியர்களில் இருந்த குறைவினமானது தர்மாம்பாள் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில் 59 சதவீதத்திலிருந்து மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரியில் 74 சதவீதம் என்ற அளவுக்கிடையே இருந்தது.

2.2.12.3 ஆசிரியரல்லாத தொழில்நுட்பக் கல்விப் பணியாளர்கள்

ஆசிரியரல்லாத தொழில்நுட்பக் கல்விப் பணியாளர்களான (i) வரைவு அதிகாரி, தொழிலாளர் மேன்முறையாள் (foreman), பட்டறைப் பயிற்றுநர், தொழிலாளர் மேன்முறையாள் பயிற்றுநர் ஆகியோரை நியமிக்கும் அதிகாரம் படைத்தவராக தொழில்நுட்பக் கல்விக்கான (பாலிடெக்னிக்) கூடுதல் இயக்குநரும் (ii) கைவினைஞர், கைத்திறம் பெற்ற உதவியாளர், கைத்திறம் பெறாத உதவியாளர், ஆய்வக உதவியாள் போன்றோரை நியமிக்கும் அதிகாரம் படைத்தவராக சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வரும் உள்ளனர். அரசுக்குச் சொந்தமான 30 பாலிடெக்னிக் கல்லூரிகளில் இத்தகைய 814 பணியிடங்கள் நிரப்பப்படவேண்டியிருந்ததற்கெதிராக, ஜூன் 2013 நிலவரப்படி, 315 பணியிடங்களே நிரப்பப்பட்டு 499 பணியிடங்கள் (61 சதவீதம்) காலியாக இருந்தன. கூடுதல் இயக்குநர்/பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் வாயிலாக 279 காலியிடங்களை நிரப்புவதற்கு CTEக்கு அரசு அனுமதியளித்த போதிலும் (ஏப்ரல் 2007), பணிநியமன அதிகாரம் படைத்த இவர்கள் மூலம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படவேயில்லை (டிசம்பர் 2013).

கூடுதல் இயக்குநரால் நிரப்பப்படவேண்டிய பணியிடங்களில் பட்டறைப் பயிற்றுநர் (35 சதவீதம்), தொழிலாளர் மேன்முறையாள் (75 சதவீதம்) மற்றும் இளநிலை வரைவு அதிகாரி (42 சதவீதம்) ஆகிய பணிப்பிரிவுகளில் காலியிடங்கள், அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளபடி அதிகமாக இருந்தன.

நேரடி பணி நியமனம்/பணி மாறுதல்/பதவி உயர்வு போன்ற வகைகளில் கல்லூரி முதல்வர்களால் நியமிக்கப்படவேண்டிய ஆசிரியரல்லாத தொழில்நுட்ப பணியாளர் பணியிடங்களைப் பொறுத்தவரை, அரசுக்கும் CTEக்குமிடையே நீண்ட நெடிய கடிதப் போக்குவரத்துக்குப் பின்னர், 146 பணியிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை அரசு அளித்தது (அக்டோபர் 2012). இக்காலியிடங்களை, 1991ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்புக்காக பணியமர்த்தப்பட்டு, பின்னர் வெளியேற்றப்பட்டவர்களின் பட்டியலிலிருந்து பொருத்தமான நபர்களையும், எஞ்சியோரை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் தேர்வு செய்யுமாறு 18 பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்களுக்கு CTE அறிவுறுத்தினார் (டிசம்பர் 2012 மற்றும் பிப்ரவரி 2013). வெளியேற்றப்பட்டோரிலிருந்து தகுதி வாய்ந்த நபர்கள் கிட்டாத பட்சத்தில், பாலிடெக்னிக் கல்லூரிகளிலேயே தகுதிவாய்ந்த நபர்கள் இருந்தால், அவர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதன் வாயிலாக அப்பணியிடங்களை நிரப்ப வேண்டும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகளில், கல்லூரி முதல்வர்கள் வேண்டுகோளுக்கிணங்கி (மே/செப்டம்பர் 2013) மாவட்ட ஆட்சியர்கள் (விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகம் தவிர) தகுதி வாய்ந்த நபர்களின் பட்டியலை வழங்கவோ அல்லது அப்படி தகுதி வாய்ந்த நபர்கள் இல்லை என்ற சான்று வழங்கவோ இல்லை.

ஆசிரியரல்லாத பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவுறுத்தங்கள் ஏற்கனவே பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக CTE பதிலளித்தார் (ஜனவரி 2014).

2.2.12.4 நூலகர் பணியிடங்கள்

நூலகர் பணியிடங்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள 25 அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆகஸ்ட் 2013 நிலவரப்படி, எட்டு பணியிடங்கள் மட்டுமே நிரப்பப் பட்டிருந்தன. ஐந்து பாலிடெக்னிக் கல்லூரிகளில் (இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனம், அச்சுத் தொழில்நுட்ப நிறுவனம், தோல் தொழில்நுட்ப நிறுவனம், துணிநூல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் வணிகக் கல்விக்கான மாநில நிறுவனம்) நூலகர் பணியிடங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டிருக்கவில்லை. மே 2010 முதல் நூலகர் பணியிடமானது சார்நிலைப் பணி வகையிலிருந்து தமிழ்நாடு கல்விப் பணியின் கீழ் கொண்டு வரப்படவேண்டுமாதலால், CTE அரசிடம் அளித்த (செப்டம்பர் 2012) நூலகர் நியமனத்திற்கான வரைவு திருத்தப்பட்ட விதிகள் அரசிடம் நிலுவையிலிருந்தன (டிசம்பர் 2013).

2.2.12.5 அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆசிரியர் பதவிகளில் காலியிடங்கள்

AICTE வரையறைகளின்படி, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதம் இருக்கவேண்டும். எனினும், அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில், 2012-13 காலகட்டத்தில், 2,139[25] ஆசிரியர் பணியிடங்கள் தேவைப்பட்டதற்கு எதிராக (வரையறைகளின் அடிப்படையில் தணிக்கை கணக்கிட்ட எண்ணிக்கை), அரசு 1,249 பணியிடங்களுக்கு (முதுநிலை விரிவுரையாளர், விரிவுரையாளர் மற்றும் பயிற்றுநர்) மட்டுமே ஒப்புதலளித்திருந்தது. ஆக, அரசு உதவி பெறும்

---

[25] 2012-13க்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை : 14,257; மூன்றாண்டுகளுக்கு 14,257 x 3 = 42,771; தேவையான ஆசிரியர்கள் : 42,771÷20=2,138.55 அதாவது 2,139

பாலிடெக்னிக் கல்லூரிகளில் ஆசிரியர் பதவிக்கு ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடங்களில் 42 சதவீதம் குறைவினம் இருந்தது.

மேலும், ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடங்களிலும் கூட, **அட்டவணை 2.14**ல் தரப்பட்டுள்ளவாறு, 43 சதவீத ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடங்கள் நிரப்பப் படாமலேயே இருந்தன.

அட்டவணை 2.14: அரசு உதவி பெறும் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களில் இருந்த காலியிடங்கள்

பணிப்பிரிவு	ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடங்கள்	நிரப்பப்பட்ட பணியிடங்கள்	காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை	காலிப் பணியிடங்கள் (சதவீதத்தில்)
முதல்வர்	32	14	18	56
துறைத் தலைவர்	123	70	53	43
முதுநிலை விரிவுரையாளர்	274	176	98	36
விரிவுரையாளர்	421	284	137	33
பயிற்றுநர்	554	252	302	55
மொத்தம்	**1,404**	**796**	**608**	**43**

(ஆதாரம் : CTE அளித்த விவரங்கள்)

ஆசிரியப் பணியிடங்களில் இருந்த குறைவினம், அரசுக் கல்லூரிகளில் பகுதிநேர ஆசிரியர்களை நியமித்து மணி நேர அடிப்படையில் ஊதியம் வழங்கும் முறையில் பின்பற்றி சமாளிக்கப்பட்டது.

அரசு உதவி பெறும் கல்லூரிகள் CTEன் ஒப்புதலுடன் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் காலியிடங்களை நிரப்பிக் கொள்ளவேண்டும் என்றும், மே 2010ல் திருத்தியமைக்கப்பட்ட காலமுறை ஊதியம் அறிமுகம் செய்யப் பட்டதையடுத்து முதுநிலை விரிவுரையாளர் பணியிடங்கள் அறவே நீக்கப்பட்டு விட்டதால் அப்பணியிடங்களை நிரப்ப இயலவில்லை என்றும் CTE பதிலளித்தார் (ஜூன் 2013). அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள் விரிவுரையாளர்கள் பணியிடங்களைக் கூட நிரப்பவில்லை என்பதைப் பார்க்கும் போது இந்த பதில் முழுமையானதாக இல்லை.

2.2.13 தேர்வுகள்

2.2.13.1 தேர்வுகள் வாரியம் திருத்தியமைக்கப்படாமை

பாலிடெக்னிக் கல்லூரிகளில் பாடத்திட்டங்களை வடிவமைக்கவும், புதிய பாடப்பிரிவுகளை அடையாளம் கண்டறியவும், தேர்வுகளில் மாணவர்களின் செயல்திறனை ஆய்வு செய்யவும் தேர்வுகள் வாரியம் எனும் அமைப்பு அரசால் ஏற்படுத்தப்பட்டது (பிப்ரவரி 1988). இதற்கு முன், மூன்றாண்டுகள் என்ற காலஅளவுடன் ஆகஸ்ட் 2008ல் மாற்றியமைக்கப்பட்ட தேர்வுகள் வாரியம், ஆகஸ்ட் 2011ல் அதன் காலம் நிறைவடைந்த பின்னரும் மாற்றியமைக்கப் படவில்லை. ஆகஸ்ட் 2011க்குப் பிறகு, 2011-12 காலகட்டத்தில், இரண்டு மற்றும் மூன்றாமாண்டுகளுக்கான பாடத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தியமைப்பு மற்றும் இரு பருவமுறைத் தேர்வு முடிவுகள் அறிவிப்பு ஆகியவை, வாரியத்தின் ஒப்புதலின்றியே மேற்கொள்ளப்பட்டன. தேர்வுகள் வாரியத்தைத் திருத்தி அமைப்பதற்காக கருத்துரு அரசுக்கு செப்டம்பர் 2013ல் அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீதான ஆணைகள் எதிர்நோக்கப்பட்டுள்ளதாக CTE தெரிவித்தார் (டிசம்பர் 2013).

2.2.13.2 தேர்வு முடிவுகள்

அரசு/அரசு உதவி பெறும் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டு, 2008-09, 2009-10 மற்றும் 2010-11 தேர்வுத் தொகுதிகளில் தேர்வெழுதிய 51,350 மாணவர்களில், **அட்டவணை 2.15**ல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு, 29,428 மாணவர்கள் (57 சதவீதம்) மட்டுமே தேர்ச்சி பெற்று பட்டயச் சான்றிதழ் பெற்றனர்.

அட்டவணை 2.15: தேர்வு முடிவுகள்

தொகுதி	அனுமதிக்கப்பட்ட மற்றும் தேர்வெழுதிய மாணவர்களின் எண்ணிக்கை*			மூன்றாண்டு பாடப்பிரிவு முடித்து பட்டயச் சான்றிதழ் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை (சதவீதம் - அடைப்புக்குறிக்குள்)		
	அரசு உதவி பெறும் கல்லூரிகள்	அரசுக் கல்லூரிகள்	மொத்தம்	அரசு உதவி பெறும் கல்லூரிகள்	அரசுக் கல்லூரிகள்	மொத்தம்
2008-11	9,762	6,204	**15,966**	5,748 (59)	4,476 (72)	**10,224 (64)**
2009-12	9,253	7,831	**17,084**	5,272 (57)	4,771 (61)	**10,043 (59)**
2010-13	8,920	9,380	**18,300**	4,780 (54)	4,381 (47)	**9,161 (50)**
மொத்தம்	**27,935**	**23,415**	**51,350**	**15,800**	**13,628**	**29,428 (57)**

* இருபருவத் தேர்வு முறையில் உரிய தொகுதிக்கான முதல் பருவத் தேர்வை எழுதிய மாணவர்கள் மற்றும் அடுத்து வந்த ஆண்டில் கிளை வழி நுழைவாகச் சேர்ந்த மாணவர்கள் (lateral entry)
(ஆதாரம் : CTE அளித்த விவரங்கள்)

அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில், தேர்ச்சி சதவீதம் 2008-11 தொகுதியில் 72லிருந்து 2010-13 தொகுதியில் 47 ஆகக் குறையும் போக்கிலேயே இருந்தது. அரசு உதவி பெறும் கல்லூரிகளிலும் கூட, தேர்ச்சி சதவீதம் 2008-11 தொகுதியில் 59லிருந்து 2010-13 தொகுதியில் 54 என கீழிறங்கியது.

ஆசிரியர் பணியிடங்களில் இருந்த அதிகமான காலியிடங்களே மிகக் குறைவான தேர்ச்சி சதவீதத்திற்குக் காரணம் என தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது CTE கூறினார் (ஜனவரி 2014).

2.2.14 கண்காணிப்பு

பாலிடெக்னிக் கல்லூரிகள் ஒப்புதல் நீட்டிப்பு பெறுவதற்காக CTEயிடம் அளிக்கும் இணக்க அறிக்கைகளின் அடிப்படையில், அவற்றில் வரையறைகளும் தரங்களும் பராமரிக்கப்படுவது பற்றிய நிலைமையை ஆய்வு செய்வதற்காக CTE மூலம் அமைக்கப்படும் ஒரு நிபுணர் குழுவானது, அங்கொன்றும் இங்கொன்றுமாக சுழற்சி முறையில் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்குச் சென்று பார்வையிட வேண்டுமென AICTE வரையறைகளில் (2007-08) வகுத்துரைத்தன. உரிய பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு ஏற்ற உபகரணங்கள், பாலிடெக்னிக் கல்லூரிகளின் ஆய்வகங்களில் இருக்கவேண்டுமென்றும் AICTE விதிமுறைகளில் (2011) தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகளில் 2008-13 காலகட்டத்தில் எவ்விதமான ஆய்வோ/சுழற்சிப் பார்வையிடலோ CTEயால் மேற்கொள்ளப்படவில்லை.

AICTE வரையறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் அங்கொன்றும் இங்கொன்றுமான மாதிரி தெரிவு செய்து ஆய்வு செய்யும் அமைப்பு ஏற்படுத்தப்படும் என CTE தெரிவித்தார் (ஜனவரி 2014).

2.2.15 முடிவுரை

தொழில்நுட்பக் கல்விக்கென பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வழங்கப்பட்ட ₹ 241.60 கோடியில், பாலிடெக்னிக் கல்லூரிகளின் வளர்ச்சிக்காக ₹ 14.78 கோடி (ஆறு சதவீதம்) மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாநிலத்தில்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியில் ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கொண்டு வரத் தேவையான பொதுவான செயல்முறைத் திட்டம் மற்றும் குறிப்பிட்ட தனித் திட்டங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கான மாநில வாரியம் நவம்பர் 2008க்குப் பிறகு மாற்றியமைக்கப்படவில்லை. அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்ட கூடுதல் மானியங்கள் அவை வழங்கப்பட்டதிலிருந்து இரண்டு முதல் ஒன்பது ஆண்டுகள் கடந்த பின்னரே பிடித்தம் செய்யப்பட்டன. மத்திய அரசு, நிதியை தமிழ்நாடு அரசு விடுவித்ததிலும் தாமதங்கள் இருந்தது தெரிய வந்தது. மாணவர் சேர்க்கையில் அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 5 முதல் 11 சதவீதம் வரையிலும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 6 முதல் 15 சதவீதமும் குறைவினம் இருந்தது. மாதிரி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளில் குறைவினம் இருந்து, தங்கும் விடுதிகளின் கொள்திறனைக் காட்டிலும் கூடுதலாக (மாணவர் விடுதிகளில் 74 சதவீதமும் மாணவியர் விடுதிகளில் 94 சதவீதமும்) மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆசிரியப் பணியாளர் மற்றும் ஆசிரியரல்லாத தொழில்நுட்பப் பணியாளர் பதவிகளில் காலிப் பணியிடங்கள் காணப்பட்டன. தேர்வுகள் வாரியம் ஆகஸ்ட் 2011க்குப் பின் மாற்றியமைக்கப்படவில்லை. அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் 2008-11 தொகுதியில் 72 என்பதிலிருந்து 2010-13 தொகுதியில் 47ஆகக் குறைந்தது.

2.2.16 பரிந்துரைகள்

- மத்திய அரசின் நிதி, பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு குறித்த நேரத்தில் வழங்கப்படவேண்டும்.
- தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சியின் மீது மாநில அளவிலான திட்டமிடல் கருதி மாநில தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியம் மாற்றியமைக்கப்படவேண்டும்.
- அனைத்து அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளிலும் வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் மனிதவளம் ஆகிய தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேற்கூறிய அனைத்தும் அரசின் பார்வைக்கு நவம்பர் 2013ல் எடுத்துச் செல்லப்பட்டன; பதில் பெறப்படவில்லை (டிசம்பர் 2013).

உயர் கல்வித் துறை

2.3 பாரதியார் பல்கலைக்கழகத்தின் செயல்பாடு

தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம்

கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் அடங்கிய அதிகார எல்லை கொண்ட பாரதியார் பல்கலைக்கழகத்தை (பல்கலைக்கழகம்) பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம், 1981ன் கீழ் கோயம்புத்தூரில் தமிழ்நாடு அரசு உருவாக்கியது (1982). இளைஞர்களுக்கு தரமான உயர்கல்வி புகட்டுதல், ஆராய்ச்சி மற்றும் அறிவாற்றல் பரவலுக்கு வழி வகுத்தல், பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் கல்விரீதியிலான பிற மதிப்புச் சின்னங்களை நிறுவி வழங்குதல் ஆகியவை பல்கலைக்கழகத்தின் முக்கியமான குறிக்கோள்களாகும். 2008-13 காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தின் செயல்பாடு மீது ஒரு செயலாக்கத் தணிக்கை நடத்தப்பட்டு, அதில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க தணிக்கைக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

சுயநிதிக் கல்லூரிகளில் வழங்கப்படும் சமூகத்தின் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய, பொதுமக்களிடையே வரவேற்பு மிகுந்த இளநிலை/முதுநிலை பாடப்பிரிவுகள் எதுவும் பல்கலைக்கழகத்தின் உறுப்பு மற்றும் அதனுடன் இணைக்கப் பெற்ற கல்லூரிகளில் வழங்கப்படவில்லை.

தொலைதூரக்கல்விப் பிரிவில், மாணவர்கள் தாங்களாகவே கற்கும் வகையில் அமைந்த பயிற்சி பாடப்புத்தகங்களைத் தயார் செய்வதற்குப் போதுமான கல்வியியல் ஊழியர்கள் இல்லை.

மொத்தமுள்ள 135 ஆராய்ச்சித் திட்டங்களில், 33 ஆராய்ச்சித் திட்டங்கள் அவை நிறைவடைய நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட 5 முதல் 36 மாதங்கள் கடந்த பின்னும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

தொலைதூரக்கல்விப் பிரிவு நிதிக்கணக்கில் உபரியிலிருந்து ₹ 55.25 கோடி, குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்குக் கூடுதலாக பொதுநிதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

மிகை நிதியை முதலீடு செய்வதற்காக நிதிக் கணக்குகளின் வங்கி இருப்புகள் காலமுறை தோறும் ஆய்வு செய்யப்படவில்லை.

43 அறக்கட்டளை கணக்குகளுள், 17 கணக்குகளின் கீழ் ஈட்டப்பட்ட வட்டி மாணவர்களுக்குப் பரிசுகள் அல்லது படிப்புதவித் தொகைகள் வழங்குவதற்கு பயன்படுத்தப்படவில்லை.

பல்கலைக்கழக விடுதிகளில் 619 மாணவர்களும் 602 மாணவியர்களும் தங்குவதற்குரிய இடவசதிக்கெதிராக 2008-13 காலகட்டத்தில் வருடாந்தரச் சேர்க்கை முறையே 868 மாணவர்கள் மற்றும் 1,020 மாணவியர்கள் என்றிருந்தது.

தனது இணைப்புக் கல்லூரிகளிடமிருந்து தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை பெறத் தவறிய பல்கலைக்கழகம், தவிர்க்கலாகாத களஆய்வுகளையும் நடத்தவில்லை.

2.3.1 முன்னுரை

கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் அடங்கிய அதிகார எல்லை கொண்ட பாரதியார் பல்கலைக்கழகத்தை (பல்கலைக்கழகம்) பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம், 1981ன் கீழ் கோயம்புத்தூரில் தமிழ்நாடு அரசு உருவாக்கியது (பிப்ரவரி 1982). சமத்துவ சமுதாயம் உருவாக்குவதற்குத்

தங்களின் பயனுள்ள பங்களிப்பைத் தரத்தக்க வகையிலான அவசியமான அறிவாற்றல் மற்றும் திறனை இளைஞர்களுக்கு ஊட்டுதல், ஆராய்ச்சி மற்றும் அறிவாற்றல் பரவலுக்கு வழி வகுத்தல், பட்டங்கள், சிறப்புப் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் கல்விரீதியிலான பிற மதிப்புச் சின்னங்களை நிறுவி வழங்குதல் ஆகியவை பல்கலைக்கழகத்தின் முக்கியமான குறிக்கோள்களாகும். 2013ஆம் ஆண்டு நிலவரப்படி, பல்கலைக்கழகத்தின் கீழ் தொலைதூரக்கல்வி முறையும் 108 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும்[26] இயங்கி வந்தன.

இப்பல்கலைக்கழகம் 31 துறைகள் வாயிலாக 13 பயிற்சிப் பிரிவுகளில் 42 முதுநிலைப் பாடப்பிரிவுகளை வழங்குகிறது. இணைக்கப்பெற்ற கல்லூரிகள் மற்றும் தொலைதூரக்கல்விப்பிரிவு வாயிலாக கலை மற்றும் அறிவியல் பயிற்சிப் பிரிவுகளில் 381 இளநிலை மற்றும் முதுநிலை பாடப்பிரிவுகளையும்[27] அது வழங்குகிறது.

2.3.2 நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டின் ஆளுநர், பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும், தலைவராகவும் மாநிலத்தின் உயர்கல்வித்துறை அமைச்சர் அதன் புரவலராகவும் உள்ளனர். பல்கலைக் கழகத்தின் கல்வி சார்ந்த தலைவராக விளங்கும் துணை வேந்தர், அதன் விவகாரங்கள் மீது கட்டுப்பாட்டைச் செலுத்தும் முதன்மை செயலாட்சி அலுவலராகவும் விளங்குகிறார். துணை வேந்தருக்கு உதவியாக பதிவாளர், துறைத் தலைவர்கள், ஒரு நிதி அலுவலர் மற்றும் ஒரு தேர்வு கட்டுப்பாட்டாளர் உள்ளனர். பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு[28] அதன் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுக்கின்றது.

2.3.3 தணிக்கைக் குறிக்கோள்கள்

- கல்விசார்ந்த நடவடிக்கைகள், ஆராய்ச்சி மற்றும் அறிவாற்றலை முன்னெடுத்துச் செல்லுதல்/பரவலாக்கல் ஆகியவற்றுக்கான நன்கு வரையறுக்கப்பட்ட திட்டங்கள் பல்கலைக்கழகத்திடம் உள்ளதா;
- நிதியளிப்பு முகமைகளின் சார்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் உள்ளிட்ட கல்வி சார்ந்த செயற்பாடுகள்/திட்டங்கள், புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகள்/நிபந்தனைகளுக்கு ஏற்ப திறம்பட கையாளப்பட்டனவா;
- வருவாய்/வரவினங்கள் மற்றும் மானிய உதவிகளின் அடிப்படையில் செய்யப்பட்ட நிதி மதிப்பீட்டாய்வு, நிதி திரட்டல் மற்றும் பயன்பாடு உள்ளிட்ட வலுவான நிதி மேலாண்மை பல்கலைக்கழகத்தின் வசம் இருந்ததா;
- கல்வியின் தரத்தை உயர்த்தத்தக்க வகையிலான மனிதவள ஆற்றல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் அதற்குரிய வரையறைகளுக்கேற்றவாறு இருந்தனவா;
- நிலம் மற்றும் கட்டட மேலாண்மை மற்றும் அதன் தொடர்புடைய பணி போதுமானவையாகவும், திறனுள்ளவையாகவும், பயன்தரத்தக்க வகையிலும் இருந்தனவா; மற்றும்
- பயன் விளைவிக்கக்கூடிய கண்காணிப்பு முறை நடைமுறையில இருந்ததா என்பவற்றையெல்லாம் ஆய்வு செய்வது தணிக்கையின் நோக்கங்களாக இருந்தன.

---

26 அரசுக் கல்லூரிகள் : 7; அரசு உதவி பெறும் கல்லூரிகள் : 16; சுயநிதி கல்லூரிகள்: 82 மற்றும் உள்ளமை/ பல்கலைக்கழகக் கல்லூரிகள்: 3

27 இணைக்கப்பெற்ற கல்லூரிகள் : 301 முதுநிலை/இளநிலை பாடப்பிரிவுகள் மற்றும் தொலைதூரக் கல்வி முறை : 80 முதுநிலை/இளநிலை பாடப்பிரிவுகள்

28 கல்வியாளர்கள் மற்றும் தமிழக அரசு அலுவலர்களை கொண்டது

2.3.4 தணிக்கை அளவுகோல்

பின்வரும் மூலாதாரங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற அளவுகோல்களின் பார்வையில் பல்கலைக்கழகத்தின் செயலாக்கப் பாங்கு அளவிடப்பட்டது.

- பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம் 1981 (சட்டம்) மற்றும் அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தங்கள்;
- பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டம் 1956 மற்றும் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் தொலைதூரக்கல்வி மன்ற வழிகாட்டு நெறிமுறைகள்;
- மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் பல்கலைக்கழகம் வெளியிட்ட கோட்பாடுகள் மற்றும் கையேடுகளிலும், அறிவுறுத்தல்களிலும் தரப்பட்டுள்ள வழிவகைகள்; மற்றும்
- பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழு மற்றும் இன்ன பிற அமைப்புகள் வகுத்துள்ள திட்டங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் வழிகள்/வழிகாட்டு நெறிமுறைகள்.

2.3.5 தணிக்கைப் பரப்பு மற்றும் முறைமை

இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் (கடமைகள், அதிகாரங்கள் மற்றும் பணிமுறைமைகள்) சட்டம், 1971ன் பிரிவுகள் 14(2)ன் கீழ், 2008-13 காலகட்டத்தில், பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் மீதான செயலாக்கத் தணிக்கை ஏப்ரல் முதல் அக்டோபர் 2013 வரை நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் பதிவேடுகளைக் கூர்ந்தாய்வு செய்வது தவிரவும், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத எளிய முறை மாதிரிக்கூறுகள் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழில் இரண்டு[29] உறுப்பு அரசுக் கல்லூரிகள், மூன்றில் ஒரு[30] உறுப்புக் கல்லூரி, 16ல் நான்கு[31] அரசு உதவி பெறும் கல்லூரிகள் விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை முதன்மைச் செயலர், கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர், பதிவாளர் ஆகியோருடன் தணிக்கைக் குறிக்கோள்கள் தணிக்கை அளவுகோல் மற்றும் தணிக்கைப் பரப்பு குறித்து தணிக்கைக்கு முந்தைய கலந்தாய்வு ஜூலை 2013ல் நடத்தப்பட்டது. பிப்ரவரி 2014ல் முதன்மைச் செயலர் மற்றும் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருடன் நடத்தப்பட்ட தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது தணிக்கைக் குறிப்புகள் விவாதிக்கப்பட்டன. முக்கியமான தணிக்கைக் குறிப்புகள் பின்வரும் பத்திகளில் விவாதிக்கப்பட்டுள்ளன.

தணிக்கைக் குறிப்புகள்

2.3.6 திட்டமிடல்

2.3.6.1 விரிவான திட்டங்கள் உருவாக்கப்படாமை

கல்வியின் தரம் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை அவ்வப்போது ஆய்வு செய்ய ஏதுவாக பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கு, அதற்கு ஆலோசனை வழங்கவும், ஆட்சி மன்றக்குழு மற்றும் துணைவேந்தரை

---

29 (i) அரசு கலைக் கல்லூரி, கோயம்புத்தூர் மற்றும் (ii) சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்

30 பாரதியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, மோடக்குறிச்சி.

31 (i) PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், (ii) SMRV கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், (iii) வெள்ளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு மற்றும் (iv) ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு

தலைவராகவும் உயர் சிறப்பு வாய்ந்த கல்வியாளர்களை உறுப்பினர்களாகவும்[32] கொண்ட கல்வி விவகாரங்களுக்கான நிலைக்குழு ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்கவும் ஏதுவாகத் திட்டமிடல் வாரியம் ஒன்றை அமைக்க சட்டம் வலியுறுத்தியது. ஆகஸ்ட் 2012 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு ஆகஸ்ட் 2009ல் மாற்றியமைக்கப்பட்ட திட்டமிடல் வாரியம் இன்னமும் மாற்றியமைக்கப்படவில்லை (டிசம்பர் 2013). திட்டமிடல் வாரியம் தனது கடைசி உரிமைக் காலத்தின் போது ஒரே ஒரு முறை மட்டும் கூட்டப்பட்டிருப்பதை (டிசம்பர் 2009) தணிக்கை கண்டறிந்தது. இதன் விளைவாக, நீண்ட கால/வருடாந்திர திட்டங்களை பல்கலைக்கழகம் தயாரித்திருக்கவில்லை.

இதே போன்று, தொலைதூரக்கல்வி மன்றம் 2006ல் வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகளில், தொலைதூரக்கல்வி தொடர்பான கல்வி சார்ந்த மற்றும் நிர்வாக விஷயங்களை நிர்வகிக்கும் பொருட்டு, தாய் நிறுவனத்தால் தொலைதூரக்கல்விப் பிரிவுக்கு ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்படவேண்டும் என வலியுறுத்தப் பட்டிருந்தும், அப்படியொரு குழு அமைக்கப்படவில்லை (ஜனவரி 2014).

தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது, அண்மையில் திட்டமிடல் வாரியம் மாற்றியமைக்கப்பட்டு விட்டதாகவும், நீண்டகாலத் திட்டங்கள் கூடிய விரைவில் உருவாக்கப்பட்டுவிடும் எனவும் துணைவேந்தர் தெரிவித்தார் (பிப்ரவரி 2014). மேலும், பல்கலைக்கழக மானியக் குழுவின் கீழ் அண்மையில் தொலைதூரக்கல்வி செயலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் வழிகாட்டு நெறிமுறைகளுக்கேற்ப ஆலோசனைக் குழு அமைப்பது மற்றும் கல்விப் பணியாற்றுவோரை நியமிப்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

2.3.6.2 புதிய பாடப்பிரிவுகளின் அறிமுகம்

சமுதாயத் தேவைகளுக்குப் பொருத்தமான பாடப்பிரிவுகளைத் தொடங்கி நடத்துவது பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களுள் ஒன்றாகும். சுயநிதி கல்லூரிகளில் (85ல் 11 கல்லூரிகள்) வழங்கப்பட்டு வந்த பிரபலமான 17 இளநிலை/முதுநிலை பாடப்பிரிவுகள்[33] பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளிலும் அரசுக் கல்லூரிகளிலும் தொடங்கப்படவில்லை என்பதை தணிக்கைக் கூர்ந்தாய்வு வெளிப்படுத்தியது. இணைக்கப் பெற்ற உறுப்பு மற்றும் அரசுக் கல்லூரிகளில் அரசின் அனுமதி பெற்று பிரபலமான பாடப்பிரிவுகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழகம் பதிலளித்தது (ஜனவரி 2014).

தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின்போது, திட்டமிடல் வாரியத்தின் பரிந்துரைக்காக இவ்விஷயத்தை அதனிடம் எடுத்துச் செல்லுமாறு துணைவேந்தரை முதன்மைச் செயலர் பணித்தார்.

---

32 64 உறுப்பினர்கள் (2008), 59 உறுப்பினர்கள் (2009), 80 உறுப்பினர்கள் (2010), 80 உறுப்பினர்கள் (2011) மற்றும் 85 உறுப்பினர்கள் (2012).

33 (i) கணினி பயன்பாட்டுடன் கூடிய பிபிஏ (ii) கணினி பயன்பாட்டில் இளங்கலை, (iii) நிறுவனச் செயலாண்மையுடன் கூடிய பி.காம், (iv) தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய பி.காம்., (v) தொழில்முறைக் கணக்கியலுடன் கூடிய பி.காம், (vi) கணினி பயன்பாட்டுடன் கூடிய பிஎஸ்சி கணிதம், (vii) பிஎஸ்சி உயிர்த் தொழில்நுட்பம், (viii) பிஎஸ்சி உயிர் வேதியியல், (ix) பிஎஸ்சி மின்னனுவியல் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகள், (x) பிஎஸ்சி உணவு வழங்கல் மற்றும் விடுதி மேலாண்மை, (xi) பிஎஸ்சி ஆடை வடிவமைப்பு மற்றும் நவீன உடை பாவனைகள், (xii) பி.எஸ்சி நுண்ணுயிரியல், (xiii) பி.எஸ்சி கணினி தொழில்நுட்பம், (xiv) வணிக மேலாண்மையில் முதுகலை, (xv) கணினி பயன்பாட்டுடன் கூடிய எம்.காம், (xvi) எம்எஸ்சி மென்பொருள் அமைப்புகள் மற்றும் (xvii) எம்எஸ்சி உயிர்த் தொழில்நுட்பம்.

2.3.7 மாணவர் சேர்க்கை

பல்கலைக்கழகத்தின் துறைகள் மற்றும் இணைக்கப்பெற்ற கல்லூரிகளில் 2008-13 காலகட்டத்திற்கான மாணவர் சேர்க்கை விவரங்கள் **அட்டவணை 2.16**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.16: 2008-13 காலகட்டத்தின் மாணவர் சேர்க்கை விவரங்கள்

ஆண்டு	அனுமதிக்கப் பட்ட மாணவர் எண்ணிக்கை	மாணவர் சேர்க்கை						அனுமதிக்கப் பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு எதிராக சேர்க்கப்பட்ட மாணவர்களின் சதவீதம்
		ஆதி திராவிடர்	பழங் குடியினர்	பிற்படுத்தப் பட்டோர்	மிகவும் பிற்படுத்தப் பட்டோர்	இதர பிரிவினர்	மொத்தம்	
2008-09	79,026	6,233	120	29,057	7,157	8,644	**51,211**	**64.8**
2009-10	80,578	7,330	160	30,076	8,306	7,054	**52,926**	**65.7**
2010-11	85,235	8,370	249	30,516	8,823	7,448	**55,406**	**65.0**
2011-12	89,676	9,125	1,019	32,098	10,235	7,012	**59,489**	**66.3**
2012-13	96,040	9,150	1,831	33,970	10,596	7,324	**62,871**	**65.5**

(ஆதாரம் : பல்கலைக்கழகம் வழங்கிய தகவல்கள்)

எண்ணிக்கை அளவில் பார்க்கும் போது, 2008-13 காலகட்டத்தில் மாணவர் சேர்க்கை அதிகரித்து வந்த போக்கையே காட்டினாலும், சதவீதக் கணக்கில் அது அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்கு கிட்டத்தட்ட ஒரே அளவிலேயே இருந்தது.

கூடுதலாக வசூலிக்கப்பட்ட விண்ணப்ப மற்றும் பதிவுக் கட்டணங்கள்

அரசு/அரசு உதவி பெறும்/உதவி பெறாத கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளநிலைப் பட்டப்படிப்பு பாடப்பிரிவுகளுக்கான சேர்க்கைக்கு அரசு நிர்ணயித்த விண்ணப்பக் கட்டணம் (2008-13 காலகட்டத்தில்) ஒவ்வோராண்டுக்கும் ₹ 27 (விண்ணப்பக் கட்டணமாக ₹ 25 மற்றும் பதிவுக் கட்டணமாக ₹ 2) ஆகும். சோதனைச் சரிபார்ப்பின் போது, மூன்று அரசு உதவி பெறும் கல்லூரிகள்[34] மற்றும் நான்கு சுயநிதிக் கல்லூரிகளில்[35] விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணமாக மாணவர்களிடமிருந்து[36] ₹ 23 முதல் ₹ 123 வரையில் கூடுதலாக மொத்தம் ₹ 60.93 இலட்சம் அளவிற்கு வசூலிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. இதற்கு, போதிய மனிதவள ஆற்றல் இல்லாமையால் இணைக்கப்பெற்ற கல்லூரிகளை அடிக்கடி ஆய்வு செய்ய இயலவில்லை எனவும், கூடுதலாக வசூலிக்கப்பட்ட விண்ணப்ப மற்றும் பதிவுக் கட்டணங்கள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பல்கலைக்கழகம் பதிலளித்தது (ஜனவரி 2014).

2.3.8 தொலைதூரக்கல்விப் பிரிவு

நாட்டில் திறந்த வெளிப் பல்கலைக்கழகங்களையும் தொலைதூரக்கல்வி முறையையும் ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகச் சட்டம், 1985ன்கீழ் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது தான் தொலைதூரக்கல்வி மன்றம் எனும் தலைமை அமைப்பு. இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக்கல்விப் பிரிவின் கீழ் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் சேர்ந்து 274

---

34 (i) PSG கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், (ii) SMRV கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் மற்றும் (iii) ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு

35 (i) நந்தா கலை கல்லூரி, ஈரோடு , (ii) திருகுமரன் மகளிர்களுக்கான கல்லூரி, திருப்பூர், (iii) ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் மற்றும் (iv) ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி, கோயம்புத்தூர்

36 77,422 மாணவர்களிடமிருந்து விண்ணப்பக் கட்டணம் மற்றும் 65,926 மாணவர்களிடமிருந்து பதிவுக் கட்டணம்.

பயிற்சி மற்றும் இடச் சேர்க்கை மையங்கள்[37] செயல்பட்டன. 2008-13 காலகட்டத்தில் மொத்தமாக தொலைதூரக்கல்விப்பிரிவில் கல்வியாண்டு முறையின் (ஜூன் முதல் மே வரை) கீழ் 1,20,251 மாணவர்களும், ஆங்கில ஆண்டு முறையின் (ஜனவரி முதல் டிசம்பர் வரை) கீழ் 6,184 மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

2.3.8.1 கல்விப் பணியாளர்கள் நியமிக்கப்படாமை

தொலைதூரக்கல்வி மன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, தொலைதூரக்கல்வியின் வாயிலாக வழங்கப்படும் ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் குறைந்த பட்சம் ஒரு கல்விப் பணியாளரேனும் அவசியம் இருத்தல் வேண்டும். நிரந்தர அடிப்படையில் நிரப்பப்பட வேண்டிய இப்பணியிடங்கள், தவறும் பட்சத்தில் வேற்றுப் பணி அல்லது ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும். தொலைதூரக்கல்விப் பிரிவு வழங்கிய 80 பாடத்திட்டங்களில் கல்வியியல் இளங்கலை எனும் ஒரே ஒரு பாடத்திட்டத்திற்கு மட்டுமே நிரந்தர அடிப்படையில் கல்விப் பணியாளரை பல்கலைக்கழகம் நியமித்தது. தொலைதூரக்கல்விப் பிரிவின் ஏழு குழுக்களில் வழங்கப்பட்ட பாடப்பிரிவுகளுக்கு, ஒருங்கிணைப்பாளர்களாக கல்வித்திறன் வாய்ந்த 12 பயிற்றுநர்கள் அனுப்பப்பட்டதாக பல்கலைக்கழகம் பதிலளித்தது (செப்டம்பர் 2013). எனினும், இது தொலைதூரக்கல்வி மன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ளதற்கு இணக்கமாக இல்லை என்பதுடன், பயிற்றுநர் எண்ணிக்கையில் இருந்த குறைபாடு, பின்வரும் பத்திகளில் விவரிக்கப் பட்டுள்ளவாறு, மாணவர்கள் தாங்களாகவே படித்து அறிந்து கொள்வதற்கான பயிற்சிப் பாடப்புத்தகங்கள் தயாரிப்பதில் பாதிப்பையும் ஏற்படுத்தியது.

2.3.8.2 பயிற்சி பாடப்புத்தகங்கள்

தொலைதூரக்கல்வி மன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, மாணவர்கள் தாங்களாகவே படித்து அறிந்து கொள்ளக்கூடிய பயிற்சிப் பாடங்களை தாய்க்கல்வி நிறுவனம், அச்சு வடிவிலோ, ஒலி வடிவிலோ, காட்சி வடிவிலோ அல்லது வேறு ஏதேனும் வடிவிலோ வழங்குவதாக உறுதி மொழி அளிப்பதுடன், அப்பாடத் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன் தொலைதூரக்கல்வி மன்றத்தின் முன்அனுமதியையும் பெறவேண்டும். தொலைதூரக்கல்விப்பிரிவு வழங்கும் ஆங்கில ஆண்டு முறை மற்றும் கல்வியாண்டு முறை பாடப்பிரிவுகள் ஆகியவற்றிற்குரிய அனைத்துப் பாடங்களுக்குமான பயிற்சி பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

பதிவேடுகளின் கூர்ந்தாய்வில், கல்வியாண்டு முறையில் நடத்தப்பட்ட ஒரு தொலைதூரக்கல்விப்பிரிவு பட்டப்படிப்பான முதுகலை (இதழியல் மற்றும் பொதுத் தொடர்பியல்) பாடப்பிரிவில் "திரைப்பட ஆய்வுகள் மற்றும் நிழற்படக்கலை" எனும் ஒரு பாடத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட புத்தகத்தை வெளிச்சந்தையிலிருந்து வாங்க முடிவெடுத்த (டிசம்பர் 2012) பல்கலைக்கழகம், 70 புத்தகங்களுக்கான வழங்காணையையும் அளித்தது (டிசம்பர் 2012) கண்டறியப்பட்டது. இப்புத்தகங்கள், மே 2013ல் தேர்வுகள் முடிந்த பின்பு பெறப்பட்டு 63 மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன (ஜூலை 2013). பயிற்சிப் பாடப்புத்தகங்களை தயார் செய்யும் கல்விப் பணியாளர் நியமிக்கப்படாததே பாடப்புத்தகங்கள் காலதாமதமாக வழங்கப்பட்டதற்குக் காரணமாக பல்கலைக்கழகம் கூறியது (ஜனவரி 2014).

---

37 வெளிநாட்டில் 13 மையங்கள், தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவில் 137 மையங்கள் மற்றும் தமிழ்நாட்டில் 124 மையங்கள்

2.3.9 இணைப்பாணை

சட்டம் மற்றும் நிரந்தர விதிகளின் படி, பல்கலைக்கழகம் (கல்லூரிகளுக்கு) நிரந்தர அல்லது அப்போதைக்கான இணைப்பாணையை/அனுமதியை வழங்கலாம். இவ்வாறான இணைப்பாணை அல்லது அனுமதி, எக்காரணத்தைக் கொண்டும் முன்தேதியிட்டு வழங்கப்படக்கூடாது. எந்தக் கல்வியாண்டில் பாடப்பிரிவுகளை கல்லூரிகள் தொடங்க விழைகின்றனவோ அதற்கு முந்தைய ஆண்டின் ஜூலை முதல் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் 31ம் தேதிக்குள் அக்கல்லூரிகள் இணைப்பாணை/அனுமதி கோரி விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஆட்சி மன்றக்குழு அவற்றை நவம்பர் மாதம் கடக்குமுன்னரே பரிசீலிக்க வேண்டும். 2008-13 காலகட்டத்தில் 14 புதிய கல்லூரிகளுக்கும் (ஒரு உறுப்புக் கல்லூரி மற்றும் 13 சுயநிதிக் கல்லூரிகள்) 429 பாடப்பிரிவுகளுக்கும் பல்கலைக்கழகம் இணைப்பாணை/அனுமதி வழங்கியது. இது தொடர்பான தணிக்கையில் பின்வருவன தெரியவந்தன:

(i) 2008-09 கல்வியாண்டுக்கு எம்பிஏ பாடப்பிரிவுக்கு மாணவர் எண்ணிக்கையை 60லிருந்து 120ஆக அதிகரிக்க தற்காலிக இணைப்பாணை வழங்குமாறு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்ற ஒரு சுயநிதிக் கல்லூரி[38] விண்ணப்பித்திருந்த (அக்டோபர் 2007) நிலையில், பல்கலைக்கழகம் ₹ 10 இலட்சம் அபராதம் விதித்த பின்னர் அதற்கு முன்தேதியிட்டு (2008-09 தொகுதி) அனுமதி வழங்கியது (ஏப்ரல் 2009). கல்லூரி MBA பாடப்பிரிவுக்கு ஏற்கனவே மாணவர்களைச் சேர்த்துக் கொண்டுவிட்டதால் (செப்டம்பர் 2008), மாணவர் நலனைக் கருத்தில் கொண்டு இணைப்பாணை வழங்கப்பட்டதாக பல்கலைக்கழகம் பதிலளித்தது (ஜனவரி 2014). அபராதம் விதித்து, முன் தேதியிட்டு அப்போதைக்கான இணைப்பாணை வழங்கியது நிரந்தர விதிகளுக்குப் புறம்பானதாகும்.

(ii) 2013-14 கல்வியாண்டுக்கு பி.எஸ்சி (கணிதம்) மற்றும் பி.எஸ்சி (கணிப்பொறி அறிவியல்) ஆகிய பாடப்பிரிவுகளின் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டுக்கான தற்காலிக இணைப்பாணையை தொடருமாறு ஒரு உறுப்புக் கல்லூரி[39] கோரியது. கல்வித்திறன் வாய்ந்த கூடுதல் பயிற்றுநர்களை நியமிக்க வேண்டும், கணிப்பொறி சாதனங்கள்/புத்தகங்கள் வாங்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் பேரில் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக் குழு இணைப்பாணைக்குப் பரிந்துரைத்தது (மே 2013). எனினும், இவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்யாமல், **அட்டவணை 2.17**ல் குறிப்பிட்டுள்ளவாறு, 2013-14ல் ஐந்து பாடப்பிரிவுகளுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கைக்குக் கூடுதலாக மாணவர்களை கல்லூரி சேர்த்துக் கொண்டது.

அட்டவணை 2.17: உறுப்புக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை மற்றும் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்

வரிசை எண்	பாடப்பிரிவு	2013-14 ஆண்டுக்கான அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை	2013-14ல் சேர்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை
1	பி.ஏ. ஆங்கில இலக்கியம்	60	126
2	சி.ஏ. உடன் கூடிய பிபிஏ	60	70
3	சி.ஏ. உடன் கூடிய பி.காம்	60	125
4	பி.எஸ்சி கணிதம்	60	69
5	பி.எஸ்சி கணிப்பொறி அறிவியல்	60	128

(ஆதாரம் : பல்கலைக்கழகம் அளித்த விவரங்கள்)

[38] சேரன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காங்கேயம்

[39] பாரதியார் கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகக் கல்லூரி, மொடக்குருச்சி, ஈரோடு மாவட்டம்

கல்லூரி அமைந்துள்ள பகுதியில், அரசுக் கல்லூரி ஏதும் இல்லாத காரணத்தால், உறுப்புக் கல்லூரி தொடங்கப்பட்டபோது (மே 2012), மாணவர் சேர்க்கைக்குப் பெரும் வரவேற்பு இருந்ததன் விளைவாக பல்கலைக்கழக ஆட்சி மன்றக் குழுவின் ஒப்புதலோடு கூடுதல் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர் என்று பதிலளித்த (ஜனவரி 2014) பல்கலைக்கழகம், தேவைப்படும் கூடுதல் ஆசிரியர்களுக்கான ஏற்பாடுகளும் உள்கட்டமைப்பு வசதிகளும் செய்யப்படும் என்று மேலும் தெரிவித்தது. எனினும், கூடுதல் மாணவர் சேர்க்கைக்கு கல்லூரிக்கு பல்கலைக்கழகம் அளித்த ஒப்புதல், விதிகளுக்கு மாறானது என்பதே உண்மை.

(iii) 2008-13 காலகட்டத்தில் பல்வேறு கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட 429 கூடுதல் பாடப்பிரிவுகளுக்கு பல்கலைக்கழகத்தின் இணைப்பாணை/ அனுமதி வழங்கப்பட்டது. இணைப்பாணை/அனுமதி கோரிய 100 நிகழ்வுகளில் கல்லூரிகள் காலதாமதமாக சமர்ப்பித்த விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டிருப்பது தணிக்கைக் கூர்ந்தாய்வில் தெரிய வந்தது. விண்ணப்பங்கள் குறித்த காலத்திற்குள் அளிக்கப்பட்ட 329 நிகழ்வுகளில், குறித்த காலத்திற்குப் பிறகே பல்கலைக்கழகத்தால் இணைப்பாணை/அனுமதி வழங்கப்பட்டது. போதிய அளவு பணியாளர் இல்லாததையும் அதன் விளைவாக ஆய்வு நடத்துவதில் தாமதம் ஏற்பட்டதையும் இணைப்பாணை/அனுமதி வழங்கியதில் நேரிட்ட தாமதத்திற்குக் காரணமாக பல்கலைக்கழகம் கூறியது (ஜனவரி 2014).

தாமதத்தைத் தவிர்க்க, இணைப்பாணை வழங்கும் நடைமுறையை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக, தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது துணை வேந்தர் தெரிவித்தார் (பிப்ரவரி 2014).

2.3.10 ஆராய்ச்சி நடவடிக்கைகள்

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள்,அண்மைய வளர்ச்சிகளை அறியச் செய்வதன் வாயிலாக மாணவர்களிடையே அறிவாற்றலை பரப்ப உதவுவதால் ஒரு கல்வி நிறுவனத்தின் முக்கியமான ஆக்கக்கூறுகளாக அவை அமைந்துள்ளன. பல்கலைக்கழகம் மேற்கொள்ளும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கான நிதியை பல்வேறு நிதியளிப்பு முகமைகளும் அரசு நிறுவனங்களுமே[40] வழங்குகின்றன. 2008-12[41] காலகட்டத்தில், பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுக்காக ₹ 24.23 கோடியைப் பெற்ற பல்கலைக்கழகம், மார்ச் 2012 நிலவரப்படி, அதில் ₹ 16.18 கோடியை (60.25 சதவீதம்) பயன்படுத்தி ₹ 10.67 கோடி[42] மிச்சம் வைத்திருந்தது.

(i) தணிக்கைக் கூர்ந்தாய்வின் போது, 2008-13 காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ₹ 14.88 கோடி மூலதனத்துடனான 135 ஆராய்ச்சித் திட்டங்களில், ₹ 2.44 கோடி பெறுமான 33 ஆராய்ச்சித் திட்டங்கள் அவை நிறைவு பெறக் குறிக்கப்பெற்ற காலத்திற்கு 5 முதல் 36 மாதங்கள் (ஜனவரி 2014) கடந்த பின்னரும் முடிவுறாமல் இருந்தன. இது தொடர்பாக, பல்கலைக்கழகத்தின் மறுமொழி எதிர்நோக்கப்பட்டிருந்தது.

(ii) பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் கணக்குப் பதிவு விதிகளின் 117வது விதியின் படி, ஒவ்வொரு ஆராய்ச்சித் திட்டத்திற்கும் தனியாக துணைக்கணக்கு பேணப்படவேண்டும். நிதி முகமையின் வரையறைகளின்படி, வழங்கப்பட்ட மானியங்கள் மீது ஈட்டப்படும் வட்டித்தொகை, கூடுதல் மானியமாகக் கருதப்பட்டு, மானிய உதவி பெற்ற நிறுவனம் அளிக்கும் பயன்பாட்டுச்

---

40 பல்கலைக்கழக மானியக்குழு, அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி மன்றம், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறை போன்றவை

41 2012-13க்கான கணக்குகள் இன்னும் தயார் செய்யப்படவில்லை

42 ஆரம்பக் கையிருப்பான ₹ 2.62 கோடியையும் சேர்த்து

சான்றிதழ்/செலவின விவர அறிக்கையில் காட்டப்படவேண்டும். மானியம் பயன்படுத்தப்படாமலோ/குறைவாகப் பயன்படுத்தப்பட்டாலோ, மானிய உதவி பெறப்பட்ட நாளிலிருந்து திரும்பச் செலுத்தப்படும் நாள் வரையிலான காலத்திற்கு பயன்படுத்தப்படாத தொகை மீது ஆண்டுக்கு ஆறு சதவீதம் என்ற வீதப்படி சாதாரண வட்டியை நிதியளிப்பு முகமை வசூலிக்கவேண்டும். பல்கலைக் கழக மானியக்குழு மற்றும் இன்னபிற நிதியளிப்பு முகமைகளிடமிருந்து பெறப்பட்ட நிதிக்கான துணைக்கணக்குகளைப் பேணியிராத பல்கலைக்கழகம், நிதி பயன்படுத்தப்படுவதையும், பயன்படுத்தப்படாத நிதி உரிய காலத்திற்குள் திரும்பச் செலுத்தப்படுவதையும் கண்காணிக்கத் தவறியது. ஆராய்ச்சித் திட்டங்கள் சம்பந்தப்பட்ட கணக்குகளின் மீதான ஆய்வில் பின்வருவன தெரியவந்தன:

(அ) 2008-12 காலகட்டத்தில் பல்கலைக்கழக மானியக்குழுவிடமிருந்து பெறப்பட்ட ₹ 3.06 கோடியை[43] பயன்படுத்துவதற்குரிய ஆராய்ச்சித் திட்டங்கள் யாவை என்பதை அறிந்திராத பல்கலைக்கழகம், எந்த செலவும் செய்யாமல் அத்தொகையை அப்படியே வைத்திருந்தது. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட குறிக்கோள்கள் பற்றிய விவரங்கள் இல்லாத நிலையில், செலவேதும் செய்யாமல் அத்தொகை இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனைப் பயன்படுத்தும் பொருட்டு, பல்கலைக்கழக மானியக்குழுவிடமிருந்து விவரங்கள் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பல்கலைக்கழகம் பதிலளித்தது (ஜனவரி 2014).

(ஆ) பல்கலைக்கழக மானியக் குழுவின் 29 மானியங்களில், 31 மார்ச் 2012 அன்றுள்ளவாறு, பொது நிதிக் கணக்கில் ₹ 2.73 கோடி பயன்படுத்தப்படாத மானியமாக இருந்தன. இதே போன்று, பல்கலைக்கழக மானியக்குழு அல்லாத பிற நிதியளிப்பு முகமைகளிடமிருந்து பெறப்பட்ட மானியங்களில் 31 மார்ச் 2012 அன்றுள்ளவாறு 101 மானியங்களுக்குரிய ₹ 3.77 கோடி பயன்படுத்தப்படாமலிருந்தது. இம்மானியங்கள் ஒன்று முதல் நான்காண்டு காலமாகப் பயன்படுத்தாமல் எஞ்சியவையாகும். மேலும், பல்கலைக்கழக மானியக்குழு (51 ஆராய்ச்சித் திட்டங்கள்) மற்றும் பிற நிதியளிப்பு முகமைகள் (87 ஆராய்ச்சித் திட்டங்கள்) தொடர்புடைய 138 ஆராய்ச்சித் திட்டங்களில், 2008-12 வரையிலான ஆண்டுகளில், அவற்றுக்கான கணக்குகள் ₹ 0.78 கோடி முதல் ₹ 6.11 கோடி வரையிலும் எதிர்மறை இறுதி கையிருப்பைக் கொண்டிருந்தன. ஒவ்வொரு கணக்குக்கும் தனியாகத் துணைக்கணக்குப் பதிவேடுகளை பல்கலைக்கழகம் பேணவில்லை என்பதும், நிதியளிப்பு முகமைகளிடமிருந்து பெறப்பட்ட மானிய உதவிகள் அனைத்தும் பொது நிதிக்கணக்கில் வைக்கப்பெற்று, ஆராய்ச்சித் திட்டங்களுக்கான செலவினம் பொது நிதிக்கணக்கிலிருந்தே செய்யப்பட்டது என்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. ஆகவே, எதிர்மறைக் கையிருப்புகளுக்கான காரணங்களை தணிக்கையில் உறுதி செய்ய முடியவில்லை.

(இ) மத்திய நிகர்நிலை மற்றும் மாநிலப் பல்கலைக்கழகங்களுக்கு பொது வளர்ச்சி நிதியுதவி வழங்குவதற்கான பல்கலைக்கழக மானியக்குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, ஆய்வகங்களுக்கான சாதனங்கள் (தளவாடச் சாமான்கள், பொருத்துக் கருவிகள் மற்றும் கணிப்பொறிகள் நீங்கலாக) சிறப்பு அலுவலகச் சாதனங்கள் மற்றும் பன்னூடக ஒளியுருப்படிவுக் கருவி, மேல்நிலை ஒளியுருப்படிவுக் கருவி

43 ₹ 0.30 கோடி (2008-09); ₹ 1.05 கோடி (2009-10); ₹ 1.55 கோடி (2010-11) மற்றும் ₹ 0.16 கோடி (2011-12).

உள்ளிட்ட நவீன பயிற்றுவிப்புச் சாதனங்கள் மட்டுமே வாங்கப்படவேண்டும். பொது வளர்ச்சி நிதியுதவியின் கீழ் பல்கலைக்கழக மானியக்குழு பல்கலைக்கழகத்திற்கு ₹ 8.25 கோடிக்கு ஒப்புதலளித்தது (ஜூலை 2009). பதிவேடுகளை ஆய்வு செய்த போது, பல்கலைக்கழகம் இவ்வழிகாட்டு நெறிமுறைகளுக்கு முரணாக, பொது வளர்ச்சி நிதியுதவியிலிருந்து ₹ ஒரு கோடி செலவு செய்து கணிப்பொறிகள், மடிக்கணினிகள் மற்றும் கணினி சர்வர்கள் வாங்கப்பட்டிருப்பது (நவம்பர் 2008 மற்றும் மே 2012க்கு இடையில்) தெரிய வந்தது. ஆட்சி மன்றக்குழுவின் ஒப்புதலோடு தான் இவை வாங்கப்பட்டதாக பல்கலைக்கழகம் தெரிவித்தது (ஜனவரி 2014). எப்படியானாலும், பொது வளர்ச்சி நிதியுதவி வழிகாட்டு நெறிமுறைகளுக்கு முரணாகவே இந்தக் கொள்முதல்கள் இருந்தன என்பதே உண்மை.

(iii) மத்திய அரசு, "பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (DRDO)- வாழ்க்கை அறிவியலுக்கான பாரதியார் பல்கலைக்கழக மையம்" எனும் ஐந்தாண்டு காலத்திற்கான (அதாவது 2005-10) ஒரு தலைசிறந்த மையத்தை ₹ 18 கோடி செலவில் (மத்திய அரசின் பங்காக ₹ 14 கோடியும், பல்கலைக்கழகத்தின் பங்காக ₹ 4 கோடியும்) ஏற்படுத்தும் செயல்முறைத் திட்டத்திற்கு ஒப்புதலளித்தது (ஜூன் 2005). புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி (ஜூலை 2005), DRDO, ₹ 14 இலட்சத்தை அலுவலக செயலாட்சி செலவுகளாக ஏற்றுக் கொள்ள ஒப்புக் கொண்டது. செயல்முறைத் திட்டம் நிறைவடைந்ததும் செலவிடப்படாத தொகை ₹ 10.88 இலட்சத்தை பல்கலைக்கழகம் திரும்பச் செலுத்தியது (ஜூலை 2013). இதனிடையே, 2012-13 ஆண்டிலிருந்து செயல்முறைத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு தனது பங்காக ₹ 21.90 கோடியை DRDO வழங்கியது (ஜூலை 2012).

அலுவலக செயலாட்சி செலவுகளுக்கு அனுமதியளிக்கப்பட்ட ₹ 14 இலட்சத்திற்கு எதிராக பல்கலைக்கழகம் ₹ 44 இலட்சத்தை செலவுக் கணக்காகப் பதிந்து, DRDOவின் பங்கின் மீது ஈட்டப்பட்ட வட்டியை தெரிவிக்கத் தவறியதுடன், செயல்முறைத் திட்டக் காலத்தின் போது ஈட்டப்பட்ட மொத்த வட்டித் தொகையான ₹ 1.02 கோடியில் DRDOவிற்குரிய விகிதாசாரத் தொகையான ₹ 78.69 இலட்சத்தை[44] திருப்பிச் செலுத்தவும் தவறியது தணிக்கையின் போது தெரியவந்தது. மேலும், செயல்முறைத் திட்டத்தின் முதற்கட்டத்தில் நேரிட்ட இரண்டாண்டு காலதாமதம், இரண்டாம் கட்ட நடவடிக்கைகளை ஒத்தி வைக்கச் செய்ததால், அது இன்னமும் தொடங்கப்படாமல் உள்ளது (டிசம்பர் 2013). ஒதுக்கீட்டுக்கு மேலாக அலுவலகச் செலவுகள் பதியப்பட்டதற்கு மத்திய பாதுகாப்பு அமைச்சரகத்தின் பின்னேற்பு/அனுமதி கோரப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகம் பதில் தெரிவித்தது (ஜனவரி 2014). ஈட்டப்பட்ட வட்டித்தொகை பங்கீடு தொடர்பான கேள்விக்கு, அது பற்றி ஆராயப்படும் என்று தெரிவித்தது.

(iv) பல்கலைக்கழக மானியக்குழு, சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்தின் கணிப்பொறி அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் ஐந்தாண்டு காலத்திற்கு (அதாவது 2002-07) செயல்படுத்தக்கூடிய செயல்முறைத் திட்டம் ஒன்றுக்கு ₹ 27.25 இலட்சத்தை மானியமாக வழங்கியது. திட்டம் நிறைவடைந்த பின்னர் (மார்ச் 2007) எஞ்சிய ₹ 2.72 இலட்சமும் (₹ 24.53 இலட்சத்திற்கு பயன்பாட்டுச் சான்றிதழ் ஜூலை 2008ல் வழங்கப்பட்டது) வட்டித்தொகை ₹ 6.19 இலட்சமும் ஒருசேர பல்கலைக்கழக மானியக்குழுவுக்கு திருப்பியளிக்கப்படவில்லை (டிசம்பர் 2013).

---

[44] DRDO மற்றும் பல்கலைக்கழகத்தின் பங்குகள் 13.5:4 என்ற முறையில் அமைந்ததால் வட்டியாக ஈட்டப்பட்ட ₹ 1.02 கோடியில் விகிதாச்சார அடிப்படையில் ₹ 78.69 இலட்சம் கணக்கிடப்பட்டது

செலவிடப்படாத தொகையை திரும்பச் செலுத்தத் தேவையான நடவடிக்கையை பல்கலைக்கழகம் மேற்கொள்ளும் என தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது முதன்மைச் செயலர் உறுதியளித்தார்.

2.3.11 நிதி மேலாண்மை

ஆராய்ச்சி மற்றும் ஏனைய குறிப்பிட்ட நோக்கங்களுக்காக தமிழ்நாடு அரசு, பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் மத்திய அரசு அமைப்புகளான அறிவியல் மற்றும் தொழிற்சாலை ஆராய்ச்சி மன்றம், DRDO, வேளாண் ஆராய்ச்சிக்கான இந்திய மன்றம், இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகியவை வழங்கும் மானியங்களே பல்கலைக்கழகத்தின் வருவாய்க்கு பெரும் ஆதாரங்களாக உள்ளன. பல்கலைக்கழகமும் தனது மாணவர்களிடமிருந்து இணைக்கப்பெற்ற கல்லூரிகளிலிருந்தும் வசூலிக்கப்படும் கட்டணங்கள், வெளியீடுகள் மற்றும் படிவங்கள் விற்பனை, கட்டடங்களிலிருந்து வரும் வாடகை, செயல்முறைக் கட்டணம் போன்றவற்றின் வாயிலாக தனது வருவாய்க்கு வழி உண்டாக்கிக் கொண்டது. சம்பளங்கள், மூலதன மற்றும் பராமரிப்புச் செலவினம் மற்றும் ஊழியர் ஓய்வூதியம் ஆகியவை செலவின வகைப்பாடுகளில் முக்கியமானவையாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் கணக்குப் பதிவு விதிகளில் உள்ள வழிவகைகளின் படி வருடாந்திர முறையில் வரவுகள் மற்றும் செலவுகளுக்கான ஒரு வகைப்படுத்தப்பட்ட சுருக்க விவரம் தயாரிக்கப்படவேண்டும். பல்கலைக் கழகம் மற்றும் தொலைதூரக்கல்விப் பிரிவின் நிதிகள் தனியாக நிர்வகிக்கப் பட்டதுடன், பொது நிதி (திட்டம் மற்றும் திட்டம் சாராதவை), தேர்வு நிதி, அறக்கட்டளை நிதி, UGC சிறப்பு நிதியுதவித் திட்ட நிதி, ஓய்வூதிய நிதி, பங்களித்துப் பெறும் ஓய்வூதிய நிதி, தொலைதூரக்கல்விப் பிரிவு நிதி மற்றும் ஏனைய நிதிகளை உள்ளடக்கிய 36 கணக்குகளும் பராமரிக்கப்பட்டன.

2.3.11.1 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் செலவினங்கள்

2008-12 காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், திருத்திய மதிப்பீடுகள் மற்றும் வரவு செலவுகள் குறித்த விவரங்கள் **அட்டவணை 2.18**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.18: வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் செலவினங்கள்

(₹ கோடியில்)

ஆண்டு	வரவுகள்			செலவினங்கள்		
	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	வந்த வரவுகள்	வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	திருத்திய மதிப்பீடு	செய்த செலவுகள்
2008-09	67.65	94.70 (39.99)	107.36 (13.37)	75.31	66.26 (-12.02)	85.06 (28.37)
2009-10	109.59	138.60 (26.47)	142.89 (3.10)	97.49	112.34 (15.23)	139.60 (24.27)
2010-11	152.66	165.27 (8.26)	159.04 (-3.77)	147.39	154.35 (4.72)	123.87 (-19.75)
2011-12	193.60	202.15 (4.42)	204.87 (1.35)	192.42	202.22 (5.09)	149.89 (-25.88)

2012-13க்கான கணக்குகள் இன்னமும் தயார் செய்யப்படவில்லை

அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்கள் மாறுபாடுகளைச் சதவீதக் கணக்கில் குறிக்கின்றன

(ஆதாரம்: பல்கலைக்கழகத்தின் நிதி மதிப்பீடுகள் மற்றும் வருடாந்திரக் கணக்குகள்)

மேலேயுள்ள விவரங்களிலிருந்து வரவுகளின்கீழ் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடுகளிடையேயும் திருத்திய மதிப்பீடு மற்றும் வந்த

வரவுகளிடையேயும் முறையே 4.42 முதல் 39.99 சதவீதம் என்ற அளவிலும் (-) 3.77 முதல் 13.37 சதவீதம் என்ற அளவிலும் மாறுபாடுகள் இருப்பதைக் காண இயலும். இதே போன்று, செலவினங்களின் கீழ் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடுகளிடையேயும், திருத்திய மதிப்பீடு மற்றும் செய்த செலவுகளிடையேயும் முறையே (-) 12.02 முதல் 15.23 சதவீதம் என்ற அளவிலும் (-) 25.88 முதல் 28.37 சதவீதம் என்ற அளவிலும் மாறுபாடுகள் இருந்தன. ஆக, வரவுகள் மற்றும் செலவினங்களின் மதிப்பீடுகள் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பவையாக இல்லை.

2.3.11.2 பொதுநிதிக் கணக்கு

2008-12 காலகட்டத்தில் பொது நிதிக்கணக்கின்கீழ் பல்கலைக்கழகத்தின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.19**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.19 : பொது நிதிக்கணக்கு

(₹ கோடியில்)

ஆண்டு	ஆரம்பக் கையிருப்பு	தமிழ்நாடு அரசு, பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் ஏனைய மானியங்கள் உள்ளிட்ட வரவுகள்	மீளப் பெற்ற முதலீடு	மொத்தம்	செலவினம்	செய்யப் பட்ட முதலீடு	இறுதி கையிருப்பு
2008-09	42.65	76.86	1.48	120.99	68.31	31.23	21.45
2009-10	21.45	100.55	8.18	130.18	79.47	19.46	31.25
2010-11	31.25	110.83	17.24	159.32	94.71	36.91	27.70
2011-12	27.70	135.65	22.19	185.54	106.56	33.36	45.62

2012-13க்கான கணக்குகள் இன்னமும் தயார் செய்யப்படவில்லை

(ஆதாரம்: பல்கலைக்கழகத்தின் வருடாந்திரக் கணக்குகள்)

சட்ட விதிகளின்படி, வருடாந்திரக் கணக்குகளை தயார் செய்து தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை வெளியிடும் பொறுப்பைக் கொண்டுள்ள நிதி அலுவலர், ஆட்சி மன்றக் குழுவின் அடுத்த கூட்டத்திலும், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் வெளியான மூன்று மாதங்களுக்குள் அரசிடம் அதனைச் சமர்ப்பிக்க வேண்டும். அரசின் ஆணைகளின் படி, ஒவ்வோராண்டும் உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு கணக்குகளை சமர்ப்பிக்க குறித்துரைக்கப்பட்ட நாள் 30 ஜூன் ஆகும். 2008-12 காலகட்டத்தில், பல்கலைக்கழகம் தனது வருடாந்திரக் கணக்குகளை 13 முதல் 15 மாதங்கள் வரையிலும் காலதாமதமாக சமர்ப்பித்திருப்பது தணிக்கை ஆய்வில் தெரிய வந்தது. 2009-10 மற்றும் 2010-11 ஆண்டுகளுக்கு மொத்தம் ₹ 25.81 கோடியை தொகுப்பு மானியமாகப் பெற பல்கலைக்கழகம் தகுதியளிக்கப்பட்டிருப்பது உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளிலிருந்து புலனானது. தாமதமாக கணக்குகள் தயாரிக்கப்பட்டது/ கணக்குகள் தயாரிக்கப்படவே இல்லாதது போன்ற காரணங்களால், 2011-12 மற்றும் 2012-13 ஆண்டுகளுக்கான தனது ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளுக்கான செலவினத்திற்கான ஒத்த ஈட்டுத் தொகைகளையும் கணக்கிட்டு அரசிடமிருந்து கோரிப் பெறவில்லை. ஊழியர் பற்றாக்குறை மற்றும் பொதுவான நிர்வாகக் காரணங்களாலேயே கணக்குகள் காலதாமதமாக சமர்ப்பிக்கப்பட்டன என்று பல்கலைக்கழகம் மறுமொழி அளித்தது (செப்டம்பர் 2013). கணக்குகளைக் கணினிப்படுத்தும் நடவடிக்கைகள் செயல்முறையில் உள்ளதாகவும் விரைவாகக் கணக்குகளை இறுதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும், தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது (பிப்ரவரி 2014) துணை வேந்தர் மேலும் தெரிவித்தார்.

2.3.11.3 தொலைதூரக்கல்விப் பிரிவு நிதிக் கணக்கு

2008-12 காலகட்டத்தில் தொலைதூரக்கல்விப் பிரிவு நிதியின் கீழ் வந்த வரவுகள் மற்றும் செய்த செலவினங்கள் பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.20**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை **2.20 :** தொலைதூரக்கல்விப் பிரிவு நிதிக் கணக்கு

(₹ கோடியில்)

ஆண்டு	ஆரம்பக் கையிருப்பு	வரவுகள்	மீளப்பெற்ற முதலீடுகள்	மொத்தம்	செலவினம்	செய்யப்பட்ட முதலீடுகள்	இறுதிக் கையிருப்பு
2008-09	12.61	30.50	0.00	43.11	16.75	16.22	10.14
2009-10	10.14	42.34	0.30	52.78	30.53	10.13	12.12
2010-11	12.12	48.21	4.46	64.79	29.17	8.41	27.21
2011-12	27.21	69.23	14.61	111.05	43.33	23.31	44.41

2012-13க்கான கணக்குகள் இன்னமும் தயார் செய்யப்படவில்லை

(ஆதாரம்: பல்கலைக்கழகத்தின் வருடாந்திரக் கணக்குகள்)

ஒவ்வொரு ஆண்டும் தொலைதூரக்கல்விப் பிரிவு அதற்கு அடுத்து வரும் ஆண்டுகளில் அதன் வரவுகளில் கூடுதல்/குறைவு ஏற்படுவதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், தனது பங்களிப்பாக ₹ 0.20 கோடியை[45] பல்கலைக்கழகத்தின் பொது நிதிக்கணக்கிற்கு வழங்கவேண்டும் என தமிழ்நாடு அரசு நிர்ணயம் செய்துள்ளது (மே 1998). பதிவேடுகளை ஆய்வு செய்தபோது, 2008-13ன் போது பொதுநிதிக் கணக்கிற்கு தொலைதூரக்கல்விப் பிரிவு நிதிக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட வரையறைக்கு அதிகமாக ₹ 55.25 கோடி, **அட்டவணை 2.21**ல் விவரித்துள்ளவாறு, பல்கலைக்கழகம் மாற்றம் செய்திருப்பது தெரியவந்தது.

அட்டவணை **2.21 :** தொலைதூரக்கல்விப் பிரிவிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு மாற்றுகை செய்யப்பட்ட தொகை

(₹ கோடியில்)

ஆண்டு	மாற்றுகை செய்ய அரசு நிர்ணயித்த தொகை	தொலைதூரக்கல்விப் பிரிவிலிருந்து பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்ட தொகை	கூடுதலாக மாற்றுகை செய்யப்பட்ட தொகை
2008-09	0.20	2.00	1.80
2009-10	0.20	9.00	8.80
2010-11	0.20	14.35	14.15
2011-12	0.20	19.70	19.50
2012-13	0.20[@]	11.20	11.00
மொத்தம்	**1.00**	**56.25**	**55.25**

[@] தணிக்கை செய்யப்படாத கணக்குகள்

(ஆதாரம்: பல்கலைக்கழகம் வழங்கிய தகவல்கள்)

பொது நிதிக்கணக்கில் நிதி குறைவாக இருந்ததால், துணைவேந்தரின் ஒப்புதலுடன், தொலைதூரக்கல்விப் பிரிவிலிருந்து பொது நிதிக்கணக்கிற்கு நிதி மாற்றம் செய்யப்பட்டதாக பல்கலைக்கழகம் தனது மறுமொழியில் தெரிவித்தது (ஜனவரி 2014). எனினும், தொலைதூரக்கல்விப் பிரிவு பொது நிதியிலிருந்து பல்கலைக்கழகத்தின் பொது நிதிக்கணக்கிற்கு கூடுதலாக மாற்றம் செய்யப்பட்ட நிதி இதுவரை ஈடு செய்யப்படவில்லை (டிசம்பர் 2013) என்பதே உண்மை.

2.3.11.4 வருங்கால வைப்புநிதிக் கணக்கு ஒத்திசைவு செய்யப்படவில்லை

நடப்பு அறிவுறுத்தல்களின்படி, ஓராண்டில் வசூலிக்கப்படும் வருங்கால வைப்பு நிதிக்கான பங்களிப்பில் 75 சதவீதத் தொகை ஒரு பதவிப் பெயர் வைப்புக் கணக்கில் வைக்கப்படவேண்டும். வருங்கால வைப்பு நிதியிலிருந்து முன்பணம்/பணம் எடுத்தல் போன்ற அன்றாட வழங்கீடுகளுக்காக எஞ்சிய 25 சதவீதத் தொகையை வங்கிச் சேமிப்புக் கணக்கிலும் வைத்திருக்க வேண்டும். வருங்கால வைப்பு நிதி கணக்குப் பதிவேடுகள் மற்றும் பணப் பதிவேடுகளை ஆய்வு செய்தபோது, 2008-12க்குரிய கணக்குப் பதிவேடுகளில் உள்ளதைக்

45 1996-97ன் மொத்த வரவுகளான ₹ 134.82 இலட்சத்தில் 15 சதவீதம்

காட்டிலும், பதவிப்பெயர் வைப்புக் கணக்கு மற்றும் வங்கிச் சேமிப்புக் கணக்கு இரண்டிலுமாக சேர்த்து உள்ள கையிருப்புத்தொகை, **அட்டவணை 2.22**ல் கணக்கிட்டுக் காட்டியவாறு, கூடுதலாக இருந்ததும், இதற்கு வருங்கால வைப்புநிதிக் கணக்குப் பதிவேடுகள் பணப்பதிவேடுகளுடன் ஒத்திசைவு செய்யப்படாததே காரணம் என்பதும் தெரியவந்தது.

அட்டவணை 2.22 : பதவிப்பெயர் வைப்புக் கணக்கு, வங்கிச் சேமிப்புக் கணக்கு மற்றும் வருங்கால வைப்பு நிதிக் கணக்குப் பதிவேடு ஆகியவற்றிலுள்ள கையிருப்பு பற்றிய விவரங்கள்

(₹)

ஆண்டு	வருங்கால வைப்புநிதிக் கணக்குப் பதிவேட்டின்படி வட்டியுடன் சேர்த்து இறுதி கையிருப்பு	பற்று வைக்கப்பட்ட வட்டி (பதிவேட்டுச் சரிகட்டல்)	வட்டி நீங்கலாக வருங்கால வைப்புநிதிக் கணக்குப் பதிவேட்டின்படி உள்ள இறுதி கையிருப்பு (நிரல் 2 - நிரல் 3)	பதவிப்பெயர் வைப்புக் கணக்கு மற்றும் வங்கிச் சேமிப்புக் கணக்கு இரண்டிலும் உள்ள இறுதி கையிருப்பு	வித்தியாசம் (நிரல் 5 - நிரல் 4)
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
2008-09	6,09,45,566	43,27,183	5,66,18,383	6,61,46,659	95,28,276
2009-10	7,09,24,035	50,37,041	6,58,86,994	7,39,65,381	80,78,387
2010-11	8,60,19,214	60,86,656	7,99,32,558	8,58,36,015	59,03,457
2011-12	9,77,57,432	72,50,216	9,05,07,216	9,75,67,572	70,60,356

(ஆதாரம்: பல்கலைக்கழகம் வழங்கிய தகவல்கள்)

வருங்கால வைப்புநிதிக் கணக்குப் பதிவேடு, பதவிப்பெயர் வைப்புக் கணக்கு மற்றும் வங்கி சேமிப்புக் கணக்கு மற்றும் பணப் பதிவேடுகளிடையே காணப்படும் வேறுபாடுகளை ஒத்திசைவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என பல்கலைக்கழகம் தெரிவித்தது (ஜனவரி 2014).

2.3.11.5 அரசிடமிருந்து வரவேண்டிய கல்விக் கட்டணம்

தமிழ்நாடு கல்வி விதிகளிலுள்ள விதி 92ன்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் அரசால் ஈடு செய்யப்படுகிறது. மாணவர்களின் பட்டியல் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை சான்றளிக்கும் தொகையின் அடிப்படையில், கல்விக் கட்டண விலக்காக, அனுமதிக்கப்பட்ட தொகை பல்கலைக்கழகத்தால் அரசிடமிருந்து கோரப்பட வேண்டும். 2007-11 காலகட்டத்திற்கு, ஏற்கனவே கட்டணச் சலுகையாக அளித்த தொகையான ₹ 94.55 இலட்சம் (**அட்டவணை 2.23**ல் விவரித்துள்ளவாறு), அரசுக்கு, பல்கலைக்கழகம் அதற்கான கருத்துருக்களை அனுப்பாத காரணத்தால் இன்னமும் பெறப்படாமல் இருப்பது தணிக்கையில் தெரியவந்தது.

அட்டவணை 2.23 : அரசிடமிருந்து கல்விக் கட்டணமாக ஈடு செய்யப்பட வேண்டிய தொகை

வரிசை எண்	ஆண்டு	மாணவர்கள் எண்ணிக்கை	அரசிடமிருந்து பெற வேண்டிய தொகை (₹ இலட்சத்தில்)
1	2007-08	214	22.61
2	2008-09	247	23.25
3	2009-10	278	24.36
4	2010-11	303	24.33
	மொத்தம்	**1042**	**94.55**

(ஆதாரம்: பல்கலைக்கழகம் அளித்த விவரங்களின்படி)

2007-08 ஆண்டுக்குரிய தொகைக்கான கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விட்டதாகவும், 2008-11 காலகட்டத்திற்கான ஆதி திராவிடர்/பழங்குடியின மாணவர்களுக்கான கட்டணச் சலுகை தொடர்பான கருத்துரு உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு சமர்ப்பிப்பதற்காக தயார் செய்யப்பட்டு வருவதாகவும், பல்கலைக்கழகம் தெரிவித்தது (செப்டம்பர் 2013).

2.3.11.6 விநியோகிக்கப்படாத கல்வி உதவித்தொகையை திரும்பச் செலுத்தாமை

பல்கலைக்கழகத்தில் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்ட/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக் கட்டணம் சார்ந்த கல்வி உதவித்தொகையை ஒவ்வோராண்டும் அரசு வழங்குகிறது. பல்கலைக்கழகம் அனுப்பும் கருத்துருக்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாவட்ட நல அலுவலர்களால் பல்கலைக்கழகத்திற்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. அவ்வாறு அரசால் வழங்கப்படும் தொகை மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு, விநியோகிக்கப்படாத கல்வி உதவித்தொகை அரசுக்கணக்கில் திரும்பச் செலுத்தப்படவேண்டும். பதிவேடுகளை ஆய்வு செய்ததில் பின்வருவன தெரியவந்தன.

2008-13 காலத்தில் 6,846 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக அரசிடமிருந்து பெறப்பட்ட ₹ 3.81 கோடியில், 826 மாணவர்களுக்கான ₹ 28.64 இலட்சம் வழங்கப்படவில்லை. கல்வி உதவித்தொகை வழங்கப்படாததற்கான காரணங்கள் தணிக்கையில் கோரப்பட்டு அதற்கான மறுமொழி எதிர்பார்க்கப்பட்டிருந்தது (டிசம்பர் 2013).

இதே போன்று, தொலைதூரக்கல்விப் பிரிவில், 2007-08 முதல் 2011-12 வரை, 149 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக பெறப்பட்ட ₹ 3.28 இலட்சத்தில் 32 மாணவர்களுக்குரிய தொகையான ₹ 0.73 இலட்சம் வழங்கப்படாதிருந்தது. சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு இறுதி நினைவூட்டுக் கடிதம் அனுப்பிய பின்னர், வழங்கப்படாத தொகையை அரசிடம் திரும்பச் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பல்கலைக்கழகம் பதிலளித்தது (ஜனவரி 2014).

2.3.11.7 நிலுவையிலுள்ள முன்பணங்கள்

நிதி மற்றும் கணக்குப் பதிவு விதிகளின்படி, பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் அலுவல் நிமித்தமான பயண முன்பணம் மற்றும் இதர முன்பணங்கள் யாவும் மூன்று மாதங்களுக்குள் பிடித்தம் செய்யப்படவேண்டும் அல்லது சரிகட்டப்படவேண்டும். தேர்வுகள் நடத்துவதற்கு கல்லூரி முதல்வர்களுக்கும், சிறு பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு, பல்வேறு துறைகளின் அலுவலர்களுக்கும், கட்டுமானப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர் களுக்கும், பல்கலைக்கழகம் முன்பணங்களை வழங்கியிருந்தது. பதிவேடுகளை ஆய்வு செய்தபோது, பல்வேறு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணத்தொகையான ₹ 10.45 கோடி, பல்கலைக்கழகப் பதிவேடுகளில் 1982-83 ஆண்டு முதற்கொண்டு சரிகட்டப்படாமலேயே (டிசம்பர் 2013) இருப்பது தெரியவந்தது. சரிகட்டப்படாத முன்பணங்களின் காலவாரியான நிலுவை நிலை **அட்டவணை 2.24**ல் விவரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.24: சரிகட்டப்படாத முன்பணங்களின் காலவாரியான நிலுவை நிலை

நிலுவை நிலை	முன்பணங்களின் எண்ணிக்கை	தொகை (₹ கோடியில்)
பத்தாண்டுகளுக்கும் மேல்	352	0.46
ஐந்தாண்டுகளுக்கு மேல் பத்தாண்டுகளுக்குள்	576	0.69
ஓராண்டுக்கு மேல் ஐந்தாண்டுகளுக்குள்	855	7.54
ஓராண்டிற்கும் குறைவாக	297	1.76
மொத்தம்	**2,080**	**10.45**

(ஆதாரம்: பல்கலைக்கழகம் வழங்கிய தகவல்கள்)

நிலுவையிலுள்ள முன்பணங்கள் தீர்வு செய்யப்படுவதை கண்காணிக்கத் தவறியது உள்கட்டுப்பாடுகள் வலுவின்றி இருப்பதையே பிரதிபலிக்கிறது. நீண்ட காலமாக முன்பணங்கள் நிலுவையாயிருந்து தீர்வு செய்யப்படாமலிருப்பது குறித்த காரணங்கள் தணிக்கையில் கோரப்பட்டு மறுமொழி எதிர்பார்க்கப்பட்டிருந்தது (டிசம்பர் 2013).

2.3.11.8 உபரி நிதிகள் முதலீடு செய்யப்படாமை

நிதி மற்றும் கணக்குப் பதிவு விதிகளின்படி, பல்கலைக்கழகத்தின் எந்தக் கணக்கின்கீழும், உடனடி செலவுக்குத் தேவைப்படாத சேர்ந்து குவிந்த அல்லது உபரி பணக் கையிருப்பு, அங்கீகரிக்கப்பட்ட கடன் பத்திரங்களிலோ அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் நிலை வைப்புகளிலோ ஆட்சிமன்றக் குழுவால் முதலீடு செய்யப்படுவதுடன், இதற்கு ஏதுவாக ஒவ்வொரு கணக்கிலும், உடனடிச் செலவினம் எதற்கும் தேவைப்படாத உபரி நிதி இருப்பது குறித்த விவரஅறிக்கையை ஒவ்வொரு காலாண்டிலும் ஆட்சிமன்றக் குழுவிடம் நிதி அலுவலர் சமர்ப்பிக்கவேண்டும். நிதி மற்றும் கணக்குப் பதிவு விதிகள், இதற்கென முதலீட்டுப் பதிவேடு ஒன்றைப் பராமரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

பல்கலைக்கழகம் பராமரிக்கும் 36 வங்கி சேமிப்புக் கணக்குகளில், பொது நிதி, தேர்வு நிதி மற்றும் தொலைதூரக்கல்விப் பிரிவு நிதி தொடர்புடைய வங்கிக் கணக்குகளில் கணிசமான அளவில் பணப் பரிமாற்றம் இருந்தது. அது தொடர்பான பதிவேடுகளை ஆய்வு செய்தபோது, 2008-12 காலகட்டத்தில், இம்மூன்று வங்கி சேமிப்புக் கணக்குகளில் காலாண்டு இருப்பானது, 26 காலாண்டுகளில் ₹ 33.71 இலட்சம் முதல் ₹ 37.23 கோடி வரை இருந்தது தெரியவந்தது. நிதி மற்றும் கணக்குப் பதிவு விதிகளில் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, உடனடிச் செலவினத்திற்குத் தேவைப்படாத உபரி நிதியை தகுந்த முறையில் முதலீடு செய்வதற்கான வழிமுறையை பல்கலைக்கழகம் பின்பற்றவில்லை. இந்நிதிக் கணக்குகளிலுள்ள கையிருப்பு, முதலீடு செய்வதற்கான உபரி நிதியை மதிப்பீடு செய்யும் பொருட்டு காலமுறையில் ஆய்வு செய்யப்படாததன் விளைவாக வட்டி இழப்பு ஏற்பட்டது. அடுத்த காலாண்டுக்கான உத்தேசச் செலவினத்தை உறுதி செய்து கொண்டபின் எஞ்சிய நிதி, முதலீடு செய்யப்படும் என பல்கலைக்கழகம் பதிலளித்தது (செப்டம்பர் 2013). மேலும், முதலீட்டுப் பதிவேட்டை பல்கலைக்கழகம் பராமரிக்காததன் விளைவாக, முதலீடுகள் காலமுறையில் புதுப்பிக்கப்பட்டனவா என்பதையும் வட்டி வரவுகள் முறையாக வரவு வைக்கப்பட்டனவா என்பதையும் தணிக்கையில் சரிபார்க்க இயலவில்லை.

2.3.11.9 அறக்கட்டளை நிதி

கொடையாளர்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள், அரசு அமைப்புகள் ஆகியவை வழங்குகின்ற நன்கொடை நிதிகளைக் கொண்டு அறக்கட்டளை நிதி உருவாக்கப்பட்டது. அறக்கட்டளை நிதிக்கென பல்கலைக்கழகம் பராமரித்து வந்த மூன்று கணக்குகளில் இப்படிப்பட்ட நிதியிலிருந்து ஈட்டப்படும் வட்டியானது, மாணவர்களின் கல்வித் திறனை அங்கீகரிக்கும் விதமாக அவர்களுக்கு விருதுகளையும் பரிசுகளையும் வழங்குதல் என்ற குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவேண்டும். 31 மார்ச் 2011 அன்றுள்ளவாறு, ₹ 98.51 இலட்சம் அளவுக்கு மூலநிதியுடன் கூடிய 43 அறக்கட்டளைகள் பல்கலைக்கழகத்தால் பராமரிக்கப்பட்டு வந்தன. இவ்வறக்கட்டளைகளின் மூலநிதி ₹ 15,000 முதல் ₹ 25 இலட்சம் வரை என்ற அளவில் இருந்தன. 2008-09 முதல் 2010-11 வரையிலான காலகட்டத்திற்குரிய வருடாந்திரக் கணக்குகளை ஆய்வு செய்தபோது, அறக்கட்டளை நிதி முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதும், 31 மார்ச் 2011 நிலவரப்படி, 43 அறக்கட்டளைகளுள், 2008-11 காலகட்டத்தில், எவ்வித செலவினமும் செய்யாமல் வெறும் வட்டி வருவாயுடன் (₹ 5.20 இலட்சம்) 17 அறக்கட்டளை நிதி செயல்படாமலேயே இருந்ததும் தெரியவந்தது. அறக்கட்டளை நிதியிருப்பில் (வட்டி வருவாய் சேர்த்து) 2008-11 காலகட்டத்தில் 4.1 முதல் 19.5 சதவீத நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது. அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டதற்கான குறிக்கோள் குறித்த விவரங்கள்

தணிக்கையில் கோரப்பட்டு அதற்கான மறுமொழி எதிர்பார்க்கப்பட்டிருந்தது (டிசம்பர் 2013).

2.3.12 மனிதவளம் மற்றும் உள்கட்டமைப்பு

2.3.12.1 நிரப்பப்படாமல் இருந்த திறன்வாய்ந்த பயிற்றுநர் பணியிடங்கள்

பல்கலைக்கழகத்தால் 2009-13 காலகட்டத்தில் திறன் வாய்ந்த பயிற்றுநர் பணியிடங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் நடப்பில் இருந்த எண்ணிக்கை பற்றிய விவரங்கள் **அட்டவணை 2.25**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.25: 2009-13 காலகட்டத்தில் இருந்த காலிப் பணியிடங்கள்

பணிநிலை	01/04/2009 அன்றுள்ளவாறு			01/04/2010 அன்றுள்ளவாறு			01/04/2011 அன்றுள்ளவாறு			01/04/2012 அன்றுள்ளவாறு			01/04/2013 அன்றுள்ளவாறு		
	SS	PIP	V	SS	PIP	V	SS	PIP	V	SS	PIP	V	SS	PIP	V
பேராசிரியர்	26	21	5	26	20	6	24	19	5	27	20	7	27	18	9
முதுநிலை விரிவுரையாளர் / துணைப் பேராசிரியர்	40	35	5	41	35	6	37	35	2	41	34	7	41	33	8
விரிவுரையாளர் / உதவிப்பேராசிரியர்	128	108	20	127	106	21	133	105	28	141	103	38	141	100	41
மொத்தம்	**194**	**164**	**30**	**194**	**161**	**33**	**194**	**159**	**35**	**209**	**157**	**52**	**209**	**151**	**58**
காலிப் பணியிடங்கள் சதவீதக் கணக்கில்	*15.46*			*17.01*			*18.04*			*24.88*			*27.75*		

SS: ஒப்புதலளிக்கப்பட்ட எண்ணிக்கை, PIP: நடப்பில் இருந்த எண்ணிக்கை, V: காலிப் பணியிடங்கள்
(ஆதாரம்: பல்கலைக்கழகம் வழங்கிய தகவல்கள்)

2009-10 முதல் 2012-13 வரையிலான காலகட்டத்தில், கல்வித்திறன் வாய்ந்த பயிற்றுநர் பதவியில் காலிப்பணியிடங்களின் நிலை உயர்ந்து கொண்டே சென்றதுடன், 2009-10க்கும் 2012-13க்குமிடையேயான வித்தியாசம் 15 மற்றும் 28 சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்தது.

2.3.12.2 தங்கும் விடுதி வசதிகள் போதிய அளவில் இல்லாமை

தனது வளாகத்தினுள்ளேயே, எட்டு தங்கும் விடுதிகள் (மாணவர்களுக்கு நான்கும் மாணவிகளுக்கு நான்கும்) வாயிலாக மாணவர்களுக்கு தங்கும் வசதியை பல்கலைக்கழகம் ஏற்படுத்தித் தந்துள்ளது. 2008-13 காலகட்டத்தில், இந்த தங்கும் விடுதிகளின் கொள்திறன் மற்றும் வருடாந்திரக் குடியிருக்கை குறித்த விவரங்கள் **அட்டவணை 2.26**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.26: 2008-13 காலகட்டத்தில் தங்கும் வசதி குடியிருக்கை பற்றிய விவரங்கள்

தங்கும் விடுதியின் பெயர்	கொள்திறன்	2008-13 காலகட்டத்தில் வருடாந்திர குடியிருக்கை
கம்பர் (மாணவர்கள்)	97	111 (14)
இளங்கோ (மாணவர்கள்)	200	313 (56)
திருவள்ளுவர் (மாணவர்கள்)	130	216 (66)
சேக்கிழார் (மாணவர்கள்)	192	228 (18)
மொத்தம்	**619**	**868 (40)**
கண்ணம்மா (மாணவிகள்)	234	443 (89)
செல்லம்மாள் (மாணவிகள்)	192	283 (47)
கஸ்தூரி பாய் (மாணவிகள்)	44	44 (இல்லை)
பெரியார் (மாணவிகள்)	132	250 (89)
மொத்தம்	**602**	**1,020 (69)**

அடைப்புக்குறிகளுக்குள் தரப்பட்டுள்ள எண்ணிலக்கங்கள் கொள்திறனுக்கெதிராக கூடுதல் குடியிருக்கையை சதவீதக் கணக்கில் குறிக்கின்றன
(ஆதாரம்: பல்கலைக்கழகம் வழங்கிய தகவல்கள்)

இந்த தங்கும் விடுதிகளின் கொள்திறன் அடிப்படையில் 619 மாணவர்களும் 602 மாணவிகளுமே தங்கமுடியும் என்கிற நிலையில் 2008-13 காலகட்டத்தில் ஒவ்வோராண்டும் அங்கு 868 மாணவர்களும் 1,020 மாணவிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மாணவர் மற்றும் மாணவியர் தங்கும் விடுதிகளில் கூடுதல் குடியிருக்கை முறையே 40 சதவீதம் மற்றும் 69 சதவீதம் என்றிருந்தது. 2008-13 காலகட்டத்தில், மாணவர்களுக்கான தங்கும் விடுதிக்கான கட்டடம் ஏதும் கட்டப்படாத நிலையில், 123 பேர் கொள்திறன் கொண்ட மாணவிகளுக்கான ஒரு தங்கும் விடுதிக் கட்டடப் பணி முன்னேற்ற நிலையிலிருந்தது. மாணவிகளுக்கான புதிய தங்கும் விடுதிக் கட்டடம் முடியும் தருவாயில் உள்ளதாகப் பல்கலைக்கழகம் பதிலளித்தது (ஜனவரி 2014). தற்போதுள்ள தங்கும் விடுதிகளில் கூடுதல் குடியிருக்கைகளைக் குறைக்கும் முகமாக, மாணவர்களுக்கும் மாணவியர்களுக்குமான புதிய தங்கும் விடுதிகளைக் கட்டும் கருத்துரு பரிசீலனையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

2.3.12.3 தனிப்பட்ட நூலக வசதிகள் இல்லாமை

தொலைதூரக்கல்வி முறை சார்ந்த பயிற்றுவிப்பு மற்றும் அது தொடர்புடைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏதுவாக அவற்றுக்குரிய மற்றும் போதிய அளவிலான கட்டடங்கள், நூலகம், கணிப்பொறி வசதி மற்றும் ஆய்வகங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என தொலைதூரக்கல்வி மன்ற வழிகாட்டு நெறிமுறைகள் குறித்துரைக்கின்றன.

பதிவேடுகளை ஆய்வு செய்தபோது, 2008-13 காலகட்டத்தில் தொலைதூரக்கல்வி முறையின்கீழ், பல்வேறு பாடப்பிரிவுகளுக்கு 21,000 முதல் 31,000 வரை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தாலும் கூட, இளங்கலை கல்வியியல் பாடப்பிரிவு தவிர பிற பாடப்பிரிவுகளுக்கு, தொலைதூரக்கல்விப் பிரிவில் நூலக வசதி இல்லை. தொலைதூரக்கல்விப் பிரிவு, பல்கலைக்கழக வளாகத்தினுள்ளேயே அமைந்துள்ளதால் அதற்கென தனியான ஒரு நூலகம் ஏற்படுத்தப்படவில்லை என பல்கலைக்கழகம் பதிலளித்தது (ஜனவரி 2014). எனினும், தொலைதூரக்கல்வி மன்ற வழிகாட்டு நெறிமுறைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

2.3.13 பிற தணிக்கைக் குறிப்புகள்

2.3.13.1 தாமதத்தால் ஏற்பட்ட கூடுதல் செலவினம்

பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா நினைவுக் கொண்டாட்டங்களையொட்டி (i) ₹ 1.50 கோடி செலவில் உள்விளையாட்டரங்கம் (ii) ₹ 1.50 கோடி செலவில் நானோ (Nano) தொழில்நுட்பத்துறை மற்றும் (iii) ₹ இரண்டு கோடி செலவில் சர்வதேச திறன் வாய்ந்த பயிற்றுநர் மற்றும் மாணவர் மையம் ஆகியவற்றைக் கட்டுவதற்கு சிறப்பு மானியமாக ₹ ஐந்து கோடியை தமிழக அரசு ஒப்பளிப்பு செய்து வழங்கியது (பிப்ரவரி 2006). பொதுப்பணித் துறையின் தொழில்நுட்பக் கல்விக் கோட்டத்திடமிருந்து மூன்று பணிகளுக்குமான மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பெற்றது தாமதமான காரணத்தால் (விரிவான மதிப்பீடுகள் ஜூன் 2006லும், திருத்திய மதிப்பீடுகள் மே 2008லும் சமர்ப்பிக்கப்பட்டன) தனது பொறியியல் பிரிவின் மூலமே இப்பணிகளை செயல்படுத்த பல்கலைக்கழகம் முடிவு செய்தது (செப்டம்பர் 2008). ஜனவரி 2009ல் தொடங்கிய பணிகள் டிசம்பர் 2009க்கும் ஆகஸ்ட் 2012க்கும் இடைப்பட்ட காலத்தில் நிறைவடைந்தன. பொதுப்பணித்துறை மற்றும் பல்கலைக்கழகத்தால் கட்டடத்தின் வடிவமைப்பை இறுதி செய்வதிலும், பணியை செயல்படுத்தும் முகமையை முடிவு செய்வதிலும் இரண்டாண்டுகளுக்கும் மேல் ஏற்பட்ட தாமதத்தையடுத்து, விலை உயர்வு

காரணமாக, **அட்டவணை 2.27**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, செய்யப்பட்ட கூடுதல் செலவினம் ₹ 1.59 கோடி தவிர்த்திருக்கக் கூடியதாகும்.

அட்டவணை 2.27: விலைஉயர்வு விவரங்கள்

(₹ இலட்சத்தில்)

வரிசை எண்	பணியின் விவரங்கள்	ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை	விலைப்புள்ளியில் குறிக்கப் பட்டிருந்த எதிர்பார்க்கப்பட்ட மதிப்பு	ஒப்பந்தப் படியான மதிப்பு	செலவினம்	விலையேற்றம்*
1	உள்விளையாட்டரங்கம்	150	207.25	247.14	297.82	61.20
2	நானோ தொழில்நுட்பத் துறை	150	201.95	240.38	299.00	53.94
3	சர்வதேச திறன் வாய்ந்த பயிற்றுநர் மற்றும் மாணவர் மையம்	200	163.97	197.68	239.34	43.45
	மொத்தம்	**500**				**158.59**

* 2006-07 மற்றும் 2008-09 ஆண்டுகளுக்கான விலைவீத அட்டவணைகளுக்கிடையே உள்ள வித்தியாசம்

(ஆதாரம்: பல்கலைக்கழகம் வழங்கிய தகவல்கள்)

கல்விமுறை சார்ந்த நடவடிக்கைகளின் பயன்பாட்டிற்கு பெருமளவு ஒதுக்கீடு செய்யும் குறிக்கோளை மனதில் கொண்டு திட்டங்களை இறுதி செய்ததால் தாமதம் ஏற்பட்டது என பல்கலைக்கழகம் தனது மறுமொழியில் தெரிவித்தது (ஜனவரி 2014). தாமதத்தால் ஏற்பட்ட கூடுதல் செலவினம் தவிர்க்கத்தக்கது.

2.3.13.2 போதிய திட்டமிடல் இல்லாமை காரணமாக மகளிர் தங்கும் விடுதி கட்டுவதில் பயனற்ற செலவினம்

படம் **2.3:** திருப்பூரிலுள்ள அரசு கலைக் கல்லூரியின் மகளிர் தங்கும் விடுதி ஜூன் **2005** முதல் முடிவடையாமல் உள்ளது

திருப்பூரிலுள்ள சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி (சோதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கல்லூரிகளுள் ஒன்று) முதல்வர் அளித்த கருத்துருவின் (செப்டம்பர் 2004) அடிப்படையில், கல்லூரி தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து ₹ 10 இலட்சம் தொகையை ஏற்க வேண்டும் என்கிற நிபந்தனையுடன் மகளிர் தங்கும் விடுதி கட்டுவதற்காக ₹ 15 இலட்சத்தை தனது பங்களிப்பாக பல்கலைக்கழக மானியக்குழு ஒப்பளிப்பு செய்தது. பல்கலைக்கழக மானியக்குழு ₹ 13.50 இலட்சத்தை (அக்டோபர் 2004ல் ₹ 5.92 இலட்சம் மற்றும் மார்ச் 2007ல் ₹ 7.58 இலட்சம்) வழங்கியது. பொதுப்பணித்துறையிடம் ₹ 13.50 வைப்பீடாகச் செலுத்தப்பட்டு (ஜனவரி 2005 முதல் மார்ச் 2007 வரை) தொடங்கப்பட்ட பணி ₹ 6.70 இலட்சம் (ஜூன் 2005) செலவில் மேற்கூரை மட்டம் அளவுக்கு வளர்ந்து அதன் பின்னர் பணியில் முன்னேற்றம் ஏதுமின்றி இருந்தது. இதனிடையே, கட்டுமானப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பணியின் திருத்திய மதிப்பு ₹ 46.99 இலட்சம் என உயர்ந்தது. செப்டம்பர் 2005ல் முடிவடைந்திருக்க வேண்டிய பணி, **படம் 2.3**ல் கண்டுள்ளவாறு, இன்னமும் முடிவடையாதிருந்தது (டிசம்பர் 2013). ஆக, பல்கலைக்கழக மானியக்குழு அளித்த நிதியான ₹ 13.50 இலட்சம் இருந்தும்கூட, பணி தொடங்குமுன் தனது

பங்கு நிதியை ஏற்பாடு செய்வதில் கல்லூரி தரப்பில் போதிய திட்டமிடல் இல்லாமை காரணமாக, ஓரளவே நடைபெற்ற தங்கும் விடுதி கட்டுமானத்திற்கு ஆன செலவு ₹ 6.70 இலட்சம் பயனற்றதாகிப் போனதுடன், பல்கலைக்கழக மானியக் குழு நிதியான ₹ 6.80 இலட்சம் பொதுப்பணித் துறையிடம் முடங்கியது மட்டுமின்றி மாணவியருக்கு தங்கும் விடுதி வசதி அளிப்பது என்ற குறிக்கோளும் எட்டப்படாமல் போனது. இப்பிரச்சினை குறித்து மறுஆய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தணிக்கைக்கு பிந்தைய கலந்தாய்வின் போது முதன்மைச் செயலர் தெரிவித்தார் (பிப்ரவரி 2014).

2.3.13.3 பயிற்சிப் பாடப்புத்தகங்கள் அச்சிடுவதில் நேரிட்ட கூடுதல் செலவினம்

தொலைதூரக்கல்விப் பிரிவு அச்சிடுவோருடன் இருவிதமான ஒப்பந்தங்களை செயல்படுத்துகிறது. அதாவது (i) பாடப்பிரிவு தொடர்பான பயிற்சிப் புத்தகங்களை உருவாக்கி அச்சிட்டு அவ்வாறு உருவாக்கப்பட்ட பயிற்சிப் புத்தகங்களின் பதிப்புரிமை பல்கலைக்கழகத்திடம் இருப்பது (முதன்மைப் பதிப்பாளருடன்) மற்றும் (ii) தொலைதூரக்கல்விப் பிரிவு உருவாக்கிய பயிற்சிப் புத்தகங்களை அச்சிடுவது (பிற பதிப்பாளர்களுடன்) ஆகியவை.

அட்டவணை 2.28ல் விவரித்துள்ளவாறு, ஒப்பந்தங்களை செய்து கொண்ட பல்கலைக்கழகம், எம்பிஏ பாடப்பிரிவுகளுக்கான பயிற்சிப் புத்தகங்களின் மறுபதிப்புக்காக முதன்மைப் பதிப்பாளர் மற்றும் பிற பதிப்பாளர்களிடம் அதற்கான ஆணைகளை முன்வைத்தது.

அட்டவணை 2.28 : தொலைதூரக்கல்விப் பிரிவு பயிற்சிப் புத்தகங்களை அச்சிட செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த விவரங்கள்

(₹)

ஒப்பந்தக் காலம்	பதிப்பாளர்	பக்கங்களின் எண்ணிக்கைக்கேற்ப ஒரு பக்கத்துக்கான விலைவீதம்		
		500 வரை	501 முதல் 1,000 வரை	1,000க்கு மேல்
18/09/07 முதல் 17/09/10 வரை	முதன்மைப் பதிப்பாளர் (உருவாக்கி அச்சிடுதல்)	0.29		0.25
10/02/11 முதல் 09/02/14 வரை	முதன்மைப் பதிப்பாளர் (உருவாக்கி அச்சிடுதல்)	0.38		
03/11 முதல் 02/12 வரை	பிற பதிப்பாளர்கள் (அச்சிடுதல் மட்டும்)	0.25	0.22	0.19

(ஆதாரம்: பல்கலைக்கழகம் வழங்கிய தகவல்கள்)

பதிவேடுகளை ஆய்வு செய்த போது, மறுபதிப்பு ஆணைகள், அவற்றில் பயிற்சிப் புத்தகங்களை உருவாக்குதல் என்கிற காரணி இல்லாதபோதும், பிப்ரவரி 2014 வரை செல்லத்தக்க ஒப்பந்தத்தின்படி, பிற பதிப்பாளர்களின் விலையைக் காட்டிலும் இரு மடங்கு விலையில் (அதாவது பக்கம் ஒன்றுக்கு ₹ 0.38 வீதம்) முன்வைக்கப்பட்டிருப்பது (பிப்ரவரி 2012) தெரியவந்தது. உருவாக்குதல் (ஒரு முறை செயல்பாடு) மற்றும் பதிப்பித்தல் ஆகியவற்றுக்கு தனித்தனியாக ஒப்பந்தங்களை இறுதி செய்யாததால், ₹ 80.50 இலட்சம்[46] கூடுதல் செலவானது. உருவாக்குதல் மற்றும் பதிப்பித்தல் ஆகியவற்றுக்கு வருங்காலங்களில் தனியான ஒப்பந்தங்கள் போடப்படும் என பல்கலைக்கழகம் பதிலளித்தது (ஜனவரி 2014).

2.3.13.4 வருடாந்திர கையிருப்புப் பொருள் சரிபார்ப்பு

நிதி மற்றும் கணக்குப் பதிவு விதிகளின் படி, நிதியாண்டு முடிவடையும் முன், அனைத்து தளவாடப்பொருட்கள், மின் பொருத்துப் பொருட்கள், சாமான்கள்,

[46] ₹ 0.19 ÷ ₹ 0.38 × 1.61 கோடி (மறுபதிப்பிற்கான மொத்த விலைத்தொகை).

புத்தகங்கள், எழுது பொருட்கள், ஆய்வக உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் போன்றவை ஒரு முறை சரிபார்க்கப்படவேண்டும். பதிவேடுகளை ஆய்வு செய்த போது, 1982ஆம் ஆண்டு முதல் தனது நூலகத்திலுள்ள புத்தகங்கள் தொடர்பாக வருடாந்திர சரிபார்ப்பு செய்யவில்லை என்பதும் முதல் மற்றும் ஒரே முறை செய்யப்பட்ட புத்தக இருப்பு சரிபார்ப்பில் (டிசம்பர் 2012- ஜனவரி 2013) 32 ஆண்டு காலத்தில் ₹ 27.35 இலட்சம் மதிப்புடைய 14,216 புத்தகங்களை[47] இழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது. மேலும், நூலகத்திற்கான ஆட்சி மன்றத் துணைக்குழு, களவு போன புத்தகங்களுக்கு யார் மீதும் பொறுப்பை நிர்ணயிக்க இயலாததால் அந்த இழப்புகளைத் தள்ளுபடி செய்து விட பரிந்துரைக்க தனது கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியது (ஜூன் 2013).

2.3.14 உள்கட்டுப்பாடு, ஆய்வு மற்றும் கண்காணிப்பு

2.3.14.1 உள்கட்டுப்பாடு

எந்தவொரு நிறுவனத்திலும் திறமையான நிர்வாகத்திற்கு, குற்றங்குறைகள், கையாடல்கள், மோசடியான பணக் கொடுப்புகள் போன்றவற்றைத் தவிர்க்க/ குறைத்துக் கொள்ள ஏதுவாக அங்கு பயன் விளைவிக்கத்தக்க உள்கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருப்பது அவசியம். உள்கட்டுப்பாட்டின் ஓர் அங்கமாக, சட்டங்கள், விதிகள் மற்றும் விதிமுறைகளில் உள்ள வழிவகைகளுக்கு இணங்க செயல்படுவதை உறுதி செய்யும் முகமாக பல்கலைக்கழகத்தில் பயன் விளைவிக்கத்தக்க உள்தணிக்கைக்கான வழிமுறைஇருத்தல் வேண்டும். ஆயினும், பல்கலைக்கழகத்தில் உள்தணிக்கைக்கான பிரிவு ஏதும் அமைக்கப்படவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. உள்ளாட்சி நிதித் தணிக்கையால் உடன் நிகழ் தணிக்கை செய்யப்பட்டு விடுவதால் உள்தணிக்கைப் பிரிவு ஏதுமில்லை என நிதி அலுவலர் தெரிவித்தார் (செப்டம்பர் 2013).

2.3.14.2 சுயநிதிக் கல்லூரிகள் விவர அறிக்கைகளை அளிக்காமை

சட்ட வழிமுறைகளின்படி, ஒவ்வொரு இணைக்கப்பெற்ற கல்லூரியும் (i) ஒவ்வோராண்டும் 15 ஆகஸ்ட் மற்றும் 15 ஜனவரிக்கு முன்னதாக முறையே 1 ஆகஸ்ட் மற்றும் 1 ஜனவரி அன்றுள்ளவாறு, பணியாளர் குறித்த விவரங்களையும், பணியாளர்கள் மாற்றப்படும்போது, அத்தகைய மாற்றம் செய்யப்பட்ட உடனேயே அதற்கான விவரங்களையும், (ii) வகுப்புவாரியாக, பாடவாரியாக மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விவர அறிக்கை மற்றும் (iii) வருடாந்திர அறிக்கை மற்றும் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு விவர அறிக்கை ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். சுயநிதிக் கல்லூரிகளின் கணக்குகள் ஒவ்வோராண்டு இறுதியிலும் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலுள்ள பட்டயக் கணக்கர் ஒருவர் வாயிலாக தணிக்கை செய்யப்பட்டு, அந்தத் தணிக்கை அறிக்கையுடன் கூடிய அதன் வருடாந்திர கணக்குகளின் நகலை பல்கலைக்கழகத்திற்கும், தமிழ்நாடு அரசுக்கும் நிதியாண்டு முடிவடைந்த ஆறு மாதங்களுக்குள் ஆய்வுக்காக அனுப்பி வைக்கத் தவறும் பட்சத்தில் புதிய பாடப்பிரிவுகளுக்கான கூடுதல் மாணவர் எண்ணிக்கைக்கு இணைப்பாணை கோரி சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

2008-13 காலகட்டத்தில், தங்களது தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும் பிற குறித்துரைக்கப்பட்ட விவர அறிக்கைகளையும் 82 சுயநிதிக் கல்லூரிகள் சமர்ப்பித்திராத நிலையிலும், பல்கலைக்கழகம் சட்டவழிவகைகளுக்கு முரணாக, வழக்கமான விஷயமாகக் கருதி இணைப்பாணை கோரும் அவற்றின் விண்ணப்பங்களைப் பரிசீலித்தது. அனைத்து சுயநிதிக் கல்லூரிகளும் தங்களது

47 நூலகத்திலுள்ள மொத்தப் புத்தகங்களின் எண்ணிக்கை : 1,47,350.

வருடாந்திரக் கணக்குகளை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், அவற்றின் கணக்குகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பல்கலைக்கழகம் தெரிவித்தது (செப்டம்பர் 2013).

2.3.14.3 இணைக்கப் பெற்ற கல்லூரிகளில் காலமுறையிலான ஆய்வு

ஆட்சிமன்றக் குழுவால் நியமிக்கப்படும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களாலோ ஒவ்வொரு கல்லூரியும் பல்கலைக்கழகத்தால் அவ்வப்போது (குறைந்த பட்சம் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறையேனும்) ஆய்வு செய்யப்பட்டு, அது குறித்த அறிக்கை ஆட்சிமன்றக் குழுவிடம் அளிக்கவேண்டும் என சட்டம் வகுத்துரைக்கிறது. தணிக்கை ஆய்வில், பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்ற 108 கல்லூரிகளில், முதன்முறை இணைப்பாணை வழங்கும் சமயத்தில் செய்யப்பட்ட முதற்கட்ட ஆய்வு தவிர, காலமுறையிலான வேறு எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என்பது தெரியவந்தது. இதன் விளைவாக, இணைப்பாணை பெற்ற கல்லூரிகளில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டது, பாடத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது மற்றும் அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது போன்றவற்றையடுத்து இக்கல்லூரிகளில் வசூலிக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணம், தேவைக்கேற்ப உள்கட்டமைப்பு வசதிகள் (ஆய்வகங்கள், தளவாடங்கள், வசதிகள் உள்ளிட்டவை) ஆகியவை தொடர்பான விவகாரங்களை பல்கலைக்கழகம் கண்காணிக்கவில்லை.

இதே போன்று, தொலைதூரக்கல்விப் பிரிவின் பயிற்சி மையங்களைப் பொறுத்தவரை, துணை வேந்தரால் நியமிக்கப்பட்ட ஒரு நிபுணர் குழு இரண்டாண்டுக்கு ஒரு முறையேனும் அவற்றை ஆய்வு செய்ய வேண்டுமென தொலைதூரக்கல்விக் மன்ற வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ளது. தொலைதூரக்கல்விப் பிரிவின் 274 பயிற்சி மையங்கள் எவற்றிலும் 2008-13 காலகட்டத்தில், காலமுறையிலான ஆய்வு ஏதும் நடத்தப்படவில்லையென பல்கலைக்கழகம் பதிலளித்தது (செப்டம்பர் 2013).

2.3.14.4 உள்ளாட்சி நிதித் தணிக்கைப் பத்திகளை தீர்வு செய்வதில் தாமதம்

உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநரே பல்கலைக்கழகத்தின் சட்டப்படியான தணிக்கையாளர் ஆவார். 2008-11 காலகட்டத்தில் ஒவ்வோராண்டு இறுதியிலும் தீர்க்கப்படாமல் நிலுவையிலிருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கையின் குறிப்புகள் **அட்டவணை 2.29**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.29: ஆண்டுவாரியாக நிலுவையிலுள்ள தணிக்கைக் குறிப்புகள்

ஆண்டு	தணிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை
2008-09	56
2009-10	42
2010-11	83
மொத்தம்	**181**

(ஆதாரம்: குறித்த ஆண்டுகளுக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கைகள்)

மேற்கூறிய 181 தணிக்கைக் குறிப்புகள் தவிர, 1983-84 முதல் 2007-08 வரையிலான காலகட்டத்திற்குரிய 593 தணிக்கைக் குறிப்புகளும் தீர்க்கப்படாமல் நிலுவையாக இருந்தன. தணிக்கைக் குறிப்புகளின் நீண்டகால நிலுவைநிலை என்பது கவலையளிக்கக் கூடிய விஷயமும் கவனத்திற்குரியதுமாகும்.

1996-97 ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள தணிக்கைக் குறிப்புகளுள் 2010-11 நிலவரப்படி, ஊழியர்களுக்கு தவறான சம்பள நிர்ணயம்/பணி வழி முன்னேற்றம் தொடர்பான ₹ 15.49 கோடி பெறுமான தணிக்கைக் குறிப்புகள் காணப்பட்டன. பணியாளர்களின் சம்பளத்தை மறுநிர்ணயம் செய்து கூடுதலாக வழங்கப்பட்ட

தொகையை அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு மாறாக, ஒவ்வோராண்டும் அரசிடமிருது பெறும் தொகுப்பு மானியங்களுக்கான கோரிக்கைகளில் கூடுதல் தொகையை சரிகட்டி வந்ததையடுத்து, வருடாந்திர மானியங்களில் குறைவினம் ஏற்பட்டது. சரியல்லாத பணி வழி முன்னேற்றம்/சரியல்லாத சம்பள நிர்ணயம் காரணமாக வழங்கப்பட்ட கூடுதல் தொகையை பிடித்தம் செய்யவும் சம்பந்தப்பட்ட பணியாளர்களை அதற்கு பொறுப்பேற்கச் செய்யவும் அரசு வழங்கிய அறிவுறுத்தல்கள் (செப்டம்பர் 2013) பரிசீலனையில் இருப்பதாக பல்கலைக்கழகம் தெரிவித்தது (டிசம்பர் 2013).

2.3.15 முடிவுரை

சுயநிதிக் கல்லூரிகளில் வழங்கப்படும் சமூகத்தின் தேவைகளுக்குப் பொருந்தக்கூடிய, பொதுமக்களிடையே வரவேற்பு மிகுந்த இளநிலை/முதுநிலை பாடப்பிரிவுகள் எதுவும் பல்கலைக்கழகத்தின் உறுப்பு மற்றும் அதனுடன் இணைக்கப் பெற்ற கல்லூரிகளில் வழங்கப்படவில்லை. தொலைதூரக்கல்விப் பிரிவில், மாணவர்கள் தாங்களாகவே கற்கும் வகையில் அமைந்த பயிற்சி பாடப்புத்தகங்களைத் தயார் செய்வதற்குப் போதுமான கல்வியியல் ஊழியர்கள் இல்லை. மொத்தமுள்ள 135 ஆராய்ச்சித் திட்டங்களில் 33 ஆராய்ச்சித் திட்டங்கள் அவை நிறைவடைய நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விட 5 முதல் 36 மாதங்கள் கடந்த பின்னும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தொலைதூரக்கல்விப் பிரிவு நிதிக்கணக்கில் உபரியிலிருந்து ₹ 55.25 கோடி, குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு கூடுதலாக பொதுநிதிக்கு மாற்றம் செய்யப்பட்டது. மிகை நிதியை முதலீடு செய்வதற்காக நிதிக் கணக்குகளின் வங்கி இருப்புகள் காலமுறை தோறும் ஆய்வு செய்யப்படவில்லை. 43 அறக்கட்டளை கணக்குகளுள், 17 கணக்குகளின் கீழ் ஈட்டப்பட்ட வட்டி மாணவர்களுக்குப் பரிசுகள் அல்லது படிப்புதவித் தொகைகள் வழங்குவதற்கு பயன்படுத்தப்படவில்லை. பல்கலைக்கழக விடுதிகளில் 619 மாணவர்களும் 602 மாணவியர்களும் தங்குவதற்குரிய இடவசதிக்கெதிராக 2008-13 காலகட்டத்தில் வருடாந்தரச் சேர்க்கை முறையே 868 மாணவர்கள் மற்றும் 1,020 மாணவியர்கள் என்றிருந்தது. தனது இணைப்புக் கல்லூரிகளிடமிருந்து தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை பெறத் தவறிய பல்கலைக்கழகம், தவிர்க்கலாகாத களஆய்வுகளையும் நடத்தவில்லை.

2.3.16 பரிந்துரைகள்

- பிறர் ஆதரவுடனான ஆராய்ச்சி திட்டங்களில் முன்னேற்றம் கூர்ந்து கண்காணிக்கப்படவேண்டும்.
- பல்கலைக்கழகத்திடம் உபரியாக உள்ள நிதி அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு அதனை முதலீடு செய்வது பற்றிய தகுந்த முடிவுகள் எடுக்கப்படவேண்டும்.
- மாணவர்களுக்குப் போதிய தங்கும் விடுதி வசதிகள் ஏற்படுத்தித் தரப்படவேண்டும்.
- இணைப்பாணை பெற்ற கல்லூரிகளின் மீதான ஆய்வுகளும் இணைப்பாணை வழங்குவதற்கான வழிமுறைகளும் வலுவூட்டப் படவேண்டும்.

மேற்கூறிய குறிப்புகள் அரசின் பார்வைக்கு நவம்பர் 2013ல் கொண்டு செல்லப்பட்டன; இதற்கான மறுமொழி இன்னும் பெறப்படவில்லை (டிசம்பர் 2013).

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

2.4 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மின்னாட்சி முயற்சிகளின் செயலாக்கம்

தணிக்கைக் குறிப்புகளின் சுருக்கம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் (CMDA) கட்டுப்பாட்டுச் செயல்பாடுகளுக்கான மின்னாட்சி முறையை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது (2006). திட்ட அனுமதி விண்ணப்பம் (PPA) ஒப்புதல் வழங்குவதற்கான நேரத்தினை குறைப்பது, CMDA வின் அன்றாட செயல்பாடுகளில் ஒளிவுமறைவுத் தன்மையை மேம்படுத்துவது, மற்றும் அமைப்பு முறை மற்றும் இணையவழி மூலம் செயல்படுத்தப்பட்ட தொடர்புகள் ஆகியவற்றை சிறப்புறக் கண்காணிப்பது இந்த மின்னாட்சிப் பயன்பாட்டின் நோக்கங்களாகும். முக்கிய அங்கமான கட்டட திட்டங்களை சரிபார்ப்பதை மின்னணுவியல் ரீதியாக தானியக்கியாகக் கட்டுப்படுத்துவது உட்பட மேம்பட்ட மின்னணு பணியோட்டத்தினை அறிமுகப்படுத்தி கணினிமயமாக்குதலை எளிதாக்கும் வகையில் ஒரு அலுவல் நடைமுறைப் புத்தாக்க (Business Process Re-engineering) நடவடிக்கையை அரசு மேற்கொண்டது. CMDA வின் மின்னாட்சி முயற்சிகளின் செயலாக்கத்தின் மீது செய்யப்பட்ட செயலாக்க தணிக்கை பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது.

மின்னாட்சி முறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னரும், PPA பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கால அளவில் எவ்வித முன்னேற்றமும் இல்லை மற்றும் குடிமக்கள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள காலவரையறை பின்பற்றப்படவில்லை. தானியங்கி பணியோட்ட அமைப்பில் ஏற்பட்ட தடையின் காரணமாக தொகுதிச் செயல்முறை கடைபிடிக்கப்பட்டதால் பொதுமக்கள் தங்கள் விண்ணப்பங்களின் நிலையை இணையதளம் மூலமாக சரிபார்க்கக்கூடிய வசதியை இழக்க நேரிட்டது. இதனால், CMDA வின் அன்றாட செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கம் நிறைவேறவில்லை.

மின்னாட்சி அமைப்புடன் ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்ட கட்டடத் திட்ட மீளாய்விற்கான முக்கிய மென்பொருளான தானியங்கி திட்ட அனுமதி பயன்பாட்டு மென்பொருள் (APPAS), மின்னாட்சி அமைப்பு முறை முழுமையற்ற/ பகுதியாக செயல்படுத்தப்பட்டதன் காரணமாக ஒருங்கிணைக்கப்படவில்லை. APPAS தரவுத்தள வடிவமைப்பிலும் குறைபாடுகள் இருந்தன.

₹ 1.01 கோடி செலவு செய்து மின்னாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும் CMDA வால் திட்டமிட்ட நோக்கங்களை எய்த இயலவில்லை .

2.4.1 முன்னுரை

1971 ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் சட்டபூர்வ அமைப்பாக அமைக்கப்பட்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA), கட்டடத் திட்ட அனுமதி வழங்குதல், சென்னைப் பெருநகர் பகுதி (CMA) எல்லைக்குள் உள்ள கட்டுமான வேலைகளுக்கான மனைப்பிரிவு மற்றும் துணைப்பிரிவிற்கான அனுமதியை பொது மக்கள் மற்றும் கட்டுநர்களுக்கு வழங்குதல் ஆகியவைகளுக்கு பொறுப்பாகும். CMDA, நிர்வாக தலைவராக உள்ள ஒரு

உறுப்பினர் செயலாளரை (Member Secretary) தலைவராகக் கொண்டு, ஒரு சிறப்புத் திட்ட அதிகாரி, ஒரு தலைமைத் திட்ட அதிகாரி, துணைத் திட்ட அதிகாரிகள் மற்றும் உதவித் திட்ட அதிகாரிகள் ஆகியோரின் உதவியுடன் செயல்படுகிறது. சாதாரணக் கட்டடங்கள், சிறப்புக் கட்டடங்கள், தொகுப்பு மனைப் பிரிவுகள் மற்றும் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் ஆகியவற்றிற்கான திட்ட அனுமதியை (PP) CMDA வழங்குகிறது.

2.4.2 கணினிமயமாக்கல் மற்றும் அதன் குறிக்கோள்கள்

திட்ட அனுமதி விண்ணப்பங்களுக்கான (PPA) ஒப்புதல் வழங்கிடும் நேரத்தை குறைத்தல் அன்றாட செயல்பாடுகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல், அமைப்புமுறையை சிறப்புறக் கண்காணித்தல் மற்றும் இணையதளம் மூலம் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் செயல்பாட்டு மேலாண்மை மற்றும் எல்லா பிரிவுகளுக்கும் அதன் பணிச்சீரோட்டத்தைச் சீராக்குவதற்காக CMDAவின் கட்டுப்பாட்டுச் செயல்பாடுகளுக்கான மின்னாட்சி முறையை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது (2006). CMDAவின் விண்ணப்ப முறையை எளிமைப்படுத்துவதற்காக அலுவல் நடைமுறைப் புத்தாக்க நடவடிக்கையை பரிந்துரைப்பதற்கும், ஒப்புதல் வழங்குவதற்குமான நேரத்தினை குறைப்பதற்கும் பொதுமக்கள் CMDAவிற்கு அடிக்கடி வருவதைத் தவிர்க்கவும் ஒரு அடிப்படைக்குழு[48] (Core Group – (CG)) உருவாக்கப்பட்டது. CG தனது அறிக்கையை ஜூலை 2006ல் சமர்ப்பித்தது. மென்பொருளை உருவாக்கும் தேசிய தகவலியல் மையம் (NIC), CGயின் அறிக்கையைப் பரிசீலித்த பின்னர் வன்பொருள் தேவைகள், கால அட்டவணை மற்றும் மின்னாட்சியைச் செயல்படுத்துவதற்கு தேவையான விலை ஆகியவற்றை உள்ளடக்கி ₹ 240 இலட்சத்திற்கு[49] தனது விரிவான திட்ட அறிக்கையை (DPR) CMDAவிற்கு சமர்ப்பித்தது (செப்டம்பர் 2006). CMDA, DPRக்கு செப்டம்பர் 2006ல் ஒப்புதல் அளித்தது. 2005ம் ஆண்டு அமலுக்கு வந்த CMDAவின் குடிமக்கள் சாசனம், சாதாரண/சிறப்புக் கட்டடங்கள் மற்றும் அடுக்கு மாடிக் கட்டடங்களுக்கான[50] PPAக்களை தீர்வு செய்வதற்கான காலவரையறையை முறையே 45 நாட்கள் மற்றும் 75 நாட்கள் என்று நிர்ணயித்திருந்தது. எனினும், CG தனது அறிக்கையில் இந்தக் குறிப்பிட்ட காலவரையறையை கருத்தில் கொள்ளாமல் "PPAக்கள் ஒப்புதல் வழங்குவதற்கான நேரத்தைக் குறைத்தல்" என்ற பொதுவான நோக்கத்தை வரையறுத்தது.

---

48 CMDA, தேசிய தகவலியல் மையம் (NIC) மற்றும் கட்டுமான நிறுவனங்களின் சங்கங்கள், வரைகலை நிபுணர்களின் சங்கங்கள், உரிமம் பெற்ற அளவர்கள் போன்றவர்களை உள்ளடக்கியது

49 கட்டம் I – ₹ 115 இலட்சம் (சாதாரண கட்டடம், சிறப்புக் கட்டடம், அடுக்கு மாடிக் கட்டடம், நிறுவனங்கள்/தொழிற்சாலைகள், மனைப்பகுதிகள் மற்றும் மறுவகைப்பாடு); கட்டம் II – ₹ 75 இலட்சம் (விதிகளை அமல்படுத்துதல், சட்ட பூர்வ வழக்குகள், மேல்முறையீடு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துதல்); கட்டம் III – ₹ 36 இலட்சம் (நிர்வாகம், கணக்குகள், திட்டங்கள் மற்றும் பிற பிரிவுகள்) மற்றும் ₹ 14 இலட்சம் (தளத் தயாரிப்பு மற்றும் தளவாடங்கள்)

50 (i) சாதாரண கட்டடங்கள் - 300 சதுரமீட்டரை விடக் குறைவான தரைத்தளம் மற்றும் உயரத்தில் தரை மற்றும் முதல் மாடியைக் கொண்ட கட்டடங்கள் (ii) சிறப்புக் கட்டடங்கள் - இரண்டு அடுக்குகளுக்கு மேல் உள்ள குடியிருப்பு அல்லது வணிகக் கட்டடங்கள் அல்லது ஆறு வாசஸ்தலங்களை விட அதிகமாக இருக்கும் குடியிருப்புக் கட்டடங்கள் அல்லது 300 சதுரமீட்டர்களை விட அதிக பரப்பளவைக் கொண்ட வணிகக் கட்டடங்கள்; (iii)நான்கை விட அதிக மாடிகளையும் 15-25 மீட்டரை விட அதிக உயரம் கொண்ட அடுக்கு மாடிக் கட்டடங்கள்

மின்னாட்சி நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு "பணியோட்டம் (workflow) அடிப்படையிலான அமைப்பின்" மூலம் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட கருதப்பட்டது. அகஇணைய (Intranet) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முதல் கட்டம் ஜனவரி 2007லும் இரண்டாம் கட்டம் ஜூன் 2007லும் முடிக்க காலஅளவு நிர்ணயிக்கப்பட்டது. மூன்றாம் கட்டத்திற்கு எந்தக் காலஅளவும் நிர்ணயிக்கப்படவில்லை. கட்டடத் திட்ட அனுமதி வழங்குவதற்கான CMDAவின் செயல்பாடுகள் அதாவது விண்ணப்பங்களை பெறுவது முதல் அனுமதி வழங்குவது வரை முதல் செயல்பிரிவுக் கட்டத்தில் திட்டமிடப்பட்டது. வழங்கப்பட்ட திட்ட அனுமதியின்படி கட்டடக் கட்டுமானங்கள் இருப்பதைச் சரிபார்த்தல், சட்ட பூர்வ வழக்குகள், மேல்முறையீடுகள், ஒழுங்குமுறைப்படுத்தல் போன்ற திட்ட அனுமதியுடன் தொடர்புடைய பிற செயல்பாடுகள் இரண்டாம் கட்டத்தில் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டன. CMDAவின் நிர்வாகச் செயல்பாடுகளை கணினிமயமாக்குதலுக்கு மூன்றாம் கட்டத்தில் வகைசெய்யப்பட்டிருந்தது. முதற் கட்டத்திற்கான 18 மென்பொருள் தொகுதிகள்[51] மற்றும் அவற்றுடன் தரவு அகராதி, பயன்படுத்துவோர் கையேடு மற்றும் திட்டக் கருத்துரு (பயன்படுத்துவோர் தேவைக் குறிப்பீடுகளும் (URS) கணினி அமைப்பு தேவைக் குறியீடுகளும் (SRS)) ஆகியவை அடங்கிய முழுமையான மின்னாட்சி தானியங்கி பணிச்சீரோட்ட மென்பொருளை NIC, CMDAவிடம் ஒப்படைத்தது. தரவுத் தளத்தின் பின்தளம் PostgreSQL[52]ல் உருவாக்கப்பட்டிருந்தது. CMDAல் மின்னாட்சித் திட்டம் 1 அக்டோபர் 2007அன்று தொடங்கப்பட்டது. 2006-13 காலத்தில், வன்பொருள் மற்றும் மென்பொருள் கொள்முதலுக்கும் DEO சம்பளத்திற்கும் ₹ 101.33 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

முன்னர் இருந்த கைவழிப் பதிவுமுறை மற்றும் மின்னாட்சிப் பணிச் சீரோட்டம்

முன்னர் இருந்த கைவழிப் பதிவுமுறையில் பின்பற்றப்பட்ட முறையும், புத்தாக்கத்திற்குப் பிறகு எதிர்பார்க்கப்பட்ட தானியங்கி பணிச்சீரோட்ட முறையும் சீரோட்ட வரைபடங்கள் **2.1** மற்றும் **2.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன**.**

சீரோட்ட வரைபடம் 2.1: முன்னர் இருந்த கைவழிப் பதிவுமுறை



51 உள்நுழைவு மற்றும் பட்டியல்கள், முகப்பு, நில உபயோகப் பதிவு, ஆரம்பக் கூர்ந்தாய்வு, உரிய சானல் (SB), ஆய்வு, Form - B பதிவு, ஆவணங்களின் கூர்ந்தாய்வு, ஆவணங்களின் கூர்ந்தாய்வு சரிபார்த்தல், திட்டக் கூர்ந்தாய்வு, திட்டக் கூர்ந்தாய்வு சரிபார்த்தல், உறுப்பினர் செயலாளர் ஒப்புதல், OSR, CRZ, வளர்ச்சிக் கட்டணங்கள், ஒப்புதல், திருப்பியனுப்புதல் மற்றும் மறுப்பு.

52 PostgreSQL என்பது இலவச/திறந்த அமைப்புடன் கூடிய ORDBMS

சீரோட்ட வரைபடம் 2.2: முதலில் எதிர்பார்க்கப்பட்டவாறு இருந்த கணினி வழி பணிச் சீரோட்டம்



2.4.3 தணிக்கைப் பரப்பு மற்றும் குறிக்கோள்கள்

தணிக்கைப் பரப்பானது, CMDA எஞ்சிய இரு கட்டங்களை செயற்படுத்தாத காரணத்தால் அதன் முதற்கட்டம் என்ற அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. முதற்கட்டத்தின்கீழ் கணினிமயமாக்கலின் குறிக்கோள்களை CMDAவால் எந்த அளவுக்கு எட்ட இயன்றது என்பதையும், அதில் குறைவினம் ஏதேனும் இருந்தால் அதனையும் மதிப்பிடும் நோக்கத்துடன் இத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- (i) விண்ணப்பதாரர்களுக்கு திட்டஅனுமதி வழங்குவதற்கு ஆகும் காலத்தைக் குறைத்தல் மற்றும் குடிமக்கள் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள காலவரையறையைப் பின்பற்றுதல்
- CMDAவின் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல்
- பணிச் சீரோட்டம் சார்ந்த அமைப்பை அறிமுகப்படுத்துதல்

ஆகிய குறிக்கோள்களை, செயல்படுத்தப்பட்ட மின்னாட்சி முறை எட்டியதா என்பதை மதிப்பிடுவதும்

(ii) அனைத்துத் தேவைப்பாடுகள்/விதிகள் தகவல் தொழில்நுட்ப அமைப்பில், அவற்றுக்குத் தேவையான கட்டுப்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டனவா என்பதை மதிப்பிடுவதும்

(iii) குறிக்கோள்களை எட்டுவதில் குறைபாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை ஆய்வு செய்வதும்

தணிக்கைக் குறிக்கோள்கள் ஆகும்.

2.4.4 தணிக்கை அளவுகோல்கள்

தணிக்கை சார்ந்திருந்த அளவுகோல்களாவன -

- சென்னைப் பெருநகரின் இரண்டாம் பெருந்திட்டம் 2008ன் கீழ் CMDAவின் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள்
- அமைப்பு முறை வளர்ச்சியில் சீரிய நடவடிக்கைகள்

2.4.5 தணிக்கை முறைமை

பிப்ரவரி மற்றும் மார்ச் 2013ல் சென்னையிலுள்ள CMDAவில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மின்னாட்சி முயற்சிகள் செயல்படுத்தப்பட்டது மற்றும் தானியங்கி திட்ட அனுமதி பயன்பாட்டு மென்பொருள் (APPAS) ஆகியவை தொடர்பான கோப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. மின்னாட்சி முறைக்கு

PostgreSQL எனப்படும் தரவுத்தள மேலாண்மை அமைப்பிலும் APPASக்கு MS-Accessஇலும் பராமரிக்கப்படும் தரவுத்தளங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டு, CAATs[53]ஐ பயன்படுத்தி ஆய்வு செய்யப்பட்டன. மின்னாட்சி முறையின் கீழ் கணினிமயமாக்கல் என்பது அக்டோபர் 2007ல் அறிமுகப்படுத்தப்பட்டாலும் கூட, அதற்கும் முந்தைய காலகட்டத்திற்குரிய பழைய தகவல்களும் இந்த அமைப்பில் புகுத்தப்பட்டிருந்தன. எனவே, மின்னாட்சி முறையின் கீழ் தணிக்கை ஆய்வுக்கு ஏப்ரல் 2005 முதல் மார்ச் 2013 வரையிலான காலம் உட்படுத்தப்பட்டது. பயன்பாட்டு மென்பொருளில் உள்ள வழிவகைகளும், கட்டுப்பாடுகளும் தரவுத் தளத்தை ஆய்வு செய்வதன் வாயிலாகவும் அசாதாரண தரவுகள் பற்றிய அறிக்கை அளிப்பதன் வாயிலாகவும் அறுதி செய்து கொள்ளப்பட்டன. பிப்ரவரி 2013ல் CMDAவின் உறுப்பினர் செயலருடன் நடத்தப்பட்ட தணிக்கைக்கு முந்தைய கலந்தாய்வின் போது தணிக்கைக் குறிக்கோள்கள் மற்றும் தணிக்கைப் பரப்பு ஆகியவை விவரிக்கப்பட்டன. ஜனவரி 2014ல் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அரசுப் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட தணிக்கைக்குப் பிந்தையக் கலந்தாய்வில் தணிக்கைக் குறிப்புகள் விவாதிக்கப்பட்டன. தணிக்கைக் குறிப்புகளுக்கு CMDA அளித்த மறுமொழிகள், அறிக்கையில் உரிய இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

2.4.6 தணிக்கைக் குறிப்புகள்

2.4.6.1 திட்ட அனுமதி விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்காகும் காலஅளவு குறையாமை

திட்ட அனுமதி வழங்குவதற்கான காலஅளவைக் குறைப்பதே, CMDA தனது ஒழுங்குமுறை செயல்பாடுகளில் மின்னாட்சி முறையை 2007ல் அறிமுகப் படுத்துவதற்கான குறிக்கோள்களுள் தலையானதாக இருந்தது. CMDAவின் குடிமக்கள் சாசனத்தில் கூறப்பட்டுள்ளவாறு, சாதாரணக் கட்டடம் மற்றும் சிறப்புக் கட்டடம் எனில் 45 நாட்களுக்குள்ளும், அடுக்குமாடிக் கட்டடம் எனில் 75 நாட்களுக்குள்ளும் திட்ட அனுமதிக்கான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவேண்டும்.

CMDAவின் குடிமக்கள் சாசனத்தில் கூறியுள்ளவாறு, வெவ்வேறு வகையான கட்டடங்களுக்கு திட்ட அனுமதி வழங்குவதில் மின்னாட்சி செயல்படுத்தப் பட்டதற்கு முன்பும் பின்பும் CMDAவின் செயலாக்கத்தை ஆய்வு செய்யும் பொருட்டு, மின்னாட்சிக்கு முந்தைய ஓராண்டும் மின்னாட்சிக்குப் பிந்தைய ஓராண்டும் தணிக்கைக்கு தெரிவு செய்யப்பட்டன. இதற்காக, 2006ல் கைவழி வாயிலாக வழங்கப்பட்ட திட்ட அனுமதிகளும், மின்னாட்சி முறை அறிமுகப் படுத்தப்பட்டபின், 2008ல் வழங்கப்பட்ட அனுமதிகளும், கணிப்பொறியமைவில் உள்ள விவரங்களை, தொடர்புடைய கைமுறைப் பதிவேடுகளுடன் ஒப்பீடு செய்ததன் மூலம் சோதனை செய்யப்பட்டன. திட்ட அனுமதி வழங்குவதைப் பொறுத்தமட்டில், மின்னாட்சி முறைக்கு முன்பும் பின்பும் செயலாக்கத்தின் காலஅளவு **வரைபடம் 2.3** மற்றும் **இணைப்பு 2.8**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

[53] கணினி உதவியுடனான தணிக்கைத் தொழில்நுட்பங்கள்

வரைபடம் **2.3:** மின்னாட்சி முறைக்கு முன்பும் பின்பும் எடுத்துக்கொண்ட காலஅளவு



சாதாரணக் கட்டடங்களைப் பொறுத்தமட்டில், மின்னாட்சி முறைக்குப் பின் காலஅளவில் சற்றே முன்னேற்றமிருந்தாலும் 84 சதவீத நேர்வுகளில் 45 நாட்களுக்கும் கூடுதலாக ஆனது. சிறப்புக் கட்டடங்களைப் பொறுத்தமட்டில், 94 சதவீத நேர்வுகளில் 45 நாட்களுக்குக் கூடுதலாக இருந்ததால் எவ்வித முன்னேற்றமுமில்லை. இதே போன்று, அடுக்கு மாடிக் கட்டடங்களைப் பொறுத்தமட்டில், 59 சதவீத நேர்வுகளில் 75 நாட்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மேலும், திட்ட அனுமதி விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்குவதற்காகும் காலஅளவின் தற்போதைய போக்கினை ஆய்வு செய்ய, 2013ம் ஆண்டில், 335 சிறப்புக் கட்டடங்கள் மற்றும் 49 அடுக்குமாடிக் கட்டடங்களிலிருந்து 20 நேர்வுகள் (10 சிறப்புக் கட்டடங்களும் 10 அடுக்குமாடிக் கட்டடங்களும்) random முறையில் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. இதன் முடிவுகள், **இணைப்பு 2.9**ல் அளிக்கப்பட்டுள்ளன. அடுக்குமாடிக் கட்டடங்களைப் பொறுத்தவரை, தாமதத்திற்கு விண்ணப்பதாரரும் வேறு துறைகளும் கூடக் காரணமாக இருந்தது தெரியவந்தது. எனினும், சிறப்புக் கட்டடங்களைப் பொறுத்தவரை, பரிசீலனையின் பல்வேறு கட்டங்களிலும் தாமதத்திற்கு CMDA காரணமாக இருந்ததுடன், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நேர்வு ஒன்றில் கூட திட்ட அனுமதி குறித்த காலத்திற்குள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நேர்வுகளை தீர்வு செய்வதற்கு குடிமக்கள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள காலஅளவு, அதாவது, சிறப்புக் கட்டடங்களுக்கு 45 நாட்கள் மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்களுக்கு 75 நாட்கள் என்பது CMDAவால் பின்பற்றப்படவில்லை என்பதுடன் மின்னாட்சி முறையை அறிமுகப்படுத்தியதற்கான குறிக்கோள்களுள் ஒன்றான "திட்ட அனுமதி விண்ணப்பங்களை விரைந்து தீர்வு செய்தல்" எனும் குறிக்கோளும் எட்டப்படாமலேயே போனது.

2.4.6.2 வெளிப்படைத்தன்மையையும் இணையம் சார்ந்த தொடர்பையும் எட்டத் தவறியமை

பணிச் சீரோட்டம் சார்ந்த அமைப்பில், அதன் ஒவ்வொரு மட்டத்திலும் கோப்புகள் ஆய்வு செய்யப்படும் போது அவற்றின் நிலையை திறம்படக் கண்காணிக்க அது வழிவகுக்கும் என CMDAவுக்கும் NICக்குமிடையே ஒப்புக்கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்ட திட்டக் கருத்துருவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், CMDA செயல்பாட்டின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் பொருட்டு கோப்பின் நிலையை அதன் எந்த கட்டத்திலும் CMDAக்குள்ளேயே கட்டளைக்கணைகள் (queries) மூலம் அறிந்து கொள்ளவும், விண்ணப்பதாரர்கள் இணையதளம் வாயிலாக அறிந்து கொள்ளவும் திட்டக் கருத்துருவில் கூறப்பட்டிருந்தது.

மின்னாட்சி பணிச் சீரோட்ட தானியங்கி அமைப்புக்காக CMDAவுடன் கலந்தாலோசித்து NICயால் உருவாக்கப்பட்ட 18 தொகுதிகளில் ஒன்றான "ஆவணக் கூர்ந்தாய்வு" என்பது நிலஉரிமை தொடர்பான தகவல்களை சேகரிக்க உருவாக்கப்பட்டதாகும். எனினும், செயல்படுத்தும் கட்டத்தில், இந்த விவரங்களை ஆவணக் கூர்ந்தாய்வு தொகுதியிலும் பணிச் சீரோட்ட அமைப்பின் அடுத்தடுத்த கட்டங்களிலும் சேகரிக்க CMDA தவறிவிட்டது. மாறாக, இந்த முக்கிய விவரங்களை திட்ட அனுமதியை தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு வழங்கியபின், தொகுப்பு செயல்முறை (batch process) மூலம் CMDA சேகரித்தது.

திட்டமிடப்பட்ட குறிக்கோள்களுக்கு முரணாக, பணிச் சீரோட்டத்தில் உண்டான தடையும் திட்ட அனுமதி வழங்கிய பிறகு முக்கியமான விவரங்களை சேகரிக்க தொகுப்பு செயல்முறையைப் பின்பற்றியதும், பொதுமக்களுக்கு தங்களது விண்ணப்பங்களின் நிலையை இணையதளம் வாயிலாக அறிந்து கொள்ளும் வசதியை வழங்க மறுத்ததுடன், CMDAவின் அன்றாடச் செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவது என்ற குறிக்கோளும் நிறைவேறவில்லை.

மின்னாட்சியின் ஒட்டுமொத்தச் செயல்பாடு பற்றி கேட்டதற்கு, இந்த நடைமுறையானது எளிதானது அல்ல என்பதால் அதில் எதிர்கொள்ளப்பட்ட சிக்கல்கள் களையப்பட்டு வருவதாகவும் வருங்காலத்தில் இந்த அமைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் CMDA பதிலளித்தது (ஏப்ரல் 2013). ஆனால், CMDAவின் அலுவல் நடைமுறைப் புத்தாக்க நடவடிக்கை இந்தப் பிரச்சனையைக் களைந்திருக்கவேண்டும்.

2.4.6.3 மின்னாட்சி தானியங்கி பணிச் சீரோட்ட நடைமுறை

திட்ட அனுமதி விண்ணப்பம் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் அதாவது "விண்ணப்பம் பெற்றதற்கான சான்று வழங்குதல்" முதல் "திட்ட அனுமதி" வழங்குதல் வரை, கணினி வாயிலாக சேகரிக்க, **படம் 2.2**ல் காட்டப்பட்டுள்ளவாறு, NIC உருவாக்கிய மென்பொருளில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், "கள ஆய்வு" கட்டம் வரை மட்டுமே அனைத்து திட்ட அனுமதி விண்ணப்பங்களையும் CMDA கணினி வாயிலாக பரிசீலனை செய்தது. இது பற்றி தணிக்கையில் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு, ஆரம்பத்தில் பெரியஅளவிலான விவரங்களை சேகரிப்பது தொடர்பாக NICயுடன் கலந்தாலோசிக்கப்பட்டது என்றும், இதற்கு அதிக காலம் பிடிக்கும் என்றாலும் கூட காகிதப் பயன்பாடற்ற அலுவலகமாக CMDAவை மாற்றுவதற்கு இதனைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டது என்றும் CMDA பதிலளித்தது (ஏப்ரல் மற்றும் அக்டோபர் 2013). இரண்டாம் பெருந்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, மென்பொருளில் சில மாறுதல்கள் செய்யத் தேவை ஏற்பட்டதையடுத்து இந்த நடைமுறையில் தொய்வு ஏற்பட்டது. மேலும், இந்த திரையில் மிகப் பெரிய அளவிலான தரவு விவரங்களைப் புகுத்துவதற்கு திட்ட உதவியாளர்

சிரமப்பட்டதால் இந்நடைமுறை அந்த மட்டோடு நிறுத்தப்பட்டது என்றும் கூறியது.

CMDA தெரிவித்த இந்த காரணத்தால், 'ஆவணக் கூர்ந்தாய்வு' கட்டத்திலிருந்து மென்பொருள் பயன்படுத்தப்படாமல், மின்னாட்சி செயல்பாடும் நிறுத்தப்பட்டது. இந்த கட்டத்தில் மிகப் பெரியஅளவில் தகவல்களைப் புகுத்தவேண்டும் என்பது CMDA அறிந்த விஷயம் தான் என்பதால், இந்த அமைப்பு வடிவமைக்கப்படும் போதே, இதனை NICயுடன் தொடர்பு கொண்டு சரி செய்திருக்கலாம். மென்பொருளை சோதனை செய்யும் போதும், இதையடுத்து தகவல் சேகரிப்பு நடைமுறை எளிமைப்படுத்தப்பட்ட போதும் இப்பிரச்சனையை எழுப்பியிருக்கலாம். மாறாக, தொகுப்பு முறை வாயிலாக தரவுத் தளத்தில் நடைபாடுகளை பதிவு செய்யும் பொருட்டு அனுமதியளிக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பங்கள் தொடர்பான விடுபட்ட தரவுகளை மின்னாட்சி முறையில் பதிவு செய்வதற்கு NIC மூலம் மற்றொரு மென்பொருள் தொகுதியை CMDA உருவாக்கியது. விடுபட்ட விவரங்களை பதிவு செய்ய இரண்டு தரவுப் பதிவர்களை CMDA நியமித்தாலும், நெருக்கடியான சமயத்தில் விவரங்களைப் பதிவு செய்ய அவர்களைப் பயன்படுத்தாதது ஏன் என்பதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. மாநில அரசின் பத்திரப்பதிவு மற்றும் நிலவருவாய் துறைகளில் நில உரிமைப்பாடு, புல எண், கிரையப் பத்திரங்களின் ஒளி அச்சு நகல், ஆவண எண் ஆகிய விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இத்துறைகளை அணுகி, அவர்களது online தரவுத் தளங்களிலிருந்து விவரங்களைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயவும் CMDA தவறியது. தேவைப்படும் விவரங்கள் பிற துறைகளிடம் இல்லை என CMDA தெரிவித்தது. எனினும், 2001 மற்றும் 2003ல் இத்துறைகள் தரவுகளை கணினிபடுத்தும் நடைமுறையை நிறைவு செய்து விட்டன என்பதே உண்மை.

இது தொடர்பான குறிப்புகள் பின்வருமாறு:

- ஒரு விண்ணப்பதாரரின் திட்ட அனுமதிக் கோப்பில் நிலஉரிமைப்பாடு தொடர்பான தகவல் கையால் பதியப்பட்டு அந்த நடைப்பாடு நிறைவடையும் பொழுது, இத்தகவல் மின்னணு முறையில் பதியப்படவேண்டியதன் தேவையை உணர இயலாது. எனவே, அதன் அடிப்படையில் பணிச் சீரோட்டத்தைக் கைவிடச் செய்ததில் எவ்வித நியாயமுமில்லை.

- மேலும், இப்பிரச்சனையைக் களைவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு தானியங்கி பணிச் சீரோட்ட நடைமுறையுடன் தொடர்ந்து முன்னேறாமல் ஒரு கட்டடத்தின் திட்டம், மேம்பாட்டு ஒழுங்குமுறைகளுக்கு இணக்கமாக உள்ளதா எனும் முக்கியமான ஆய்வு ஒரு தனிப்பட்ட கணிப்பொறி அமைப்பு, APPAS மூலம் செய்யப்படும் கைமுறை சார்ந்த அனுமதி நடைமுறையைத் தொடர CMDA முடிவு செய்தது. இதன் விளைவாக, காலதாமதங்கள் ஏற்பட்டதுடன் வெளிப்படையற்றதன்மையில் கணினி-மயமாக்கலின் குறிக்கோள்கள் எட்டப்படவில்லை.

சிக்கல்களைக் களைய NICயுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கத் தவறிய CMDA, மின்னாட்சி தானியங்கி பணிச் சீரோட்ட நடைமுறையை முழுமையாக செயல்படுத்தவில்லை. உறுதியான நடவடிக்கைகளை CMDA எடுக்கத் தவறிய காரணத்தால் மின்னாட்சி முறை பெருமளவு முழுமை பெறாமலேயே இருந்தது.

NICஉடன் கலந்தாலோசித்து பணிச் சீரோட்டம் சார்ந்த அமைப்பை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக

தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வின் போது (ஜனவரி 2014) CMDAவின் தலைமைத் திட்ட அதிகாரி தெரிவித்தார்.

2.4.6.4 விதிகளை உருமாற்றல் மற்றும் உள்ளீட்டுக் கட்டுப்பாடுகள்

(i) மின்னாட்சி அமைப்புடன் தானியங்கி திட்ட அனுமதி பயன்பாட்டு மென்பொருளை இணைக்காமை

திட்ட ஆய்வுக்கான செயல்பாட்டு மென்பொருளை உருவாக்குவதற்கு ஏற்கனவே CMDAக்கு NICயால் சமர்ப்பிக்கப்பட்ட (செப்டம்பர் 2006) மின்னாட்சி திட்டக் கருத்துருவில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. திட்டக் கூர்ந்தாய்வு மின்னாட்சிப் பணிச் சீரோட்ட நடைமுறையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தபோதிலும் இதனை தானியங்கி நடைமுறையில் அமைக்க மூன்றாண்டுகளுக்குப் பிறகு தான் CMDA முடிவெடுத்தது (ஜனவரி 2009). ஒப்பந்தப்புள்ளி முறையில் தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ₹ ஆறு இலட்சம் செலவில் செயல்பாட்டு மென்பொருள் உருவாக்கம் ஒப்படைக்கப்பட்டது (பிப்ரவரி 2010). இரண்டாம் பெருந்திட்டம் 2008ல் கூறப்பட்டுள்ள அளவுகோல்களை கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு அந்நிறுவனம் CMDAக்கு தேவையான APPAS ஒன்றை உருவாக்கியது. 1 ஜூன் 2012 முதல் விண்ணப்பதாரர்களால் குறுந்தகட்டில் (AutoCAD format) சமர்ப்பிக்கப்படும் திட்ட வரைபடங்கள் ஆரம்ப சரிபார்ப்புக்கும் விரிவான ஆய்வுக்கும் உட்படுத்தப்படும். மென்பொருள், பல சோதனை ஓட்டங்களுக்குப் பின்னர், நவம்பர் 2012 முதல் உபயோகத்திற்கு உட்படுத்தப்பட்டது.

வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளுக்கிணங்க மென்பொருள் மூலம் விதிகள் செயல்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன என்பது APPAS மென்பொருளின் செயல்பாட்டை பரிசோதித்ததில் தெரியவந்தது. ஆனால், மின்னாட்சி அமைப்பின் பகுதியளவு செயலாக்கத்தால் மின்னாட்சி முயற்சிகளில் ஏற்கனவே வழிவகை செய்யப்பட்டவாறு APPAS மென்பொருள் மின்னாட்சி அமைப்புடன் இணைக்கப்படாமல் தனித்தே இயங்கியது (செப்டம்பர் 2013).

ஏற்கனவேயுள்ள மின்னாட்சி மென்பொருளில் சில திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளதால் APPAS மென்பொருளை மின்னாட்சி அமைப்புடன் இந்தக் கட்டத்தில் இணைக்க முடியவில்லை என்று CMDA பதிலளித்தது (செப்டம்பர் 2013).

(ii) சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள் இல்லாததால் மின்னாட்சி தரவுத்தளத்திலுள்ள குறைபாடுகள்

பத்தி 2.4.6.3ல் கூறியுள்ளவாறு, அனைத்து திட்ட அனுமதி விண்ணப்பங்களும் (PPA) CMDAவால் 'களஆய்வு' நிலை வரை மட்டுமே தானியங்கி பணிச் சீரோட்ட நடைமுறையில் செயல்படுத்தப்பட்டதால் மின்னாட்சி தரவுத்தளம் முழுமை பெற்றதாக இல்லை. இந்நிலையை ஓரளவிற்கு சரி செய்யும் பொருட்டு கணினி அமைப்பிலுள்ள ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பப் படிவங்கள் தொடர்பான முக்கிய தரவுகளை எடுத்து மின்னாட்சி தரவுத்தளத்தை அன்றைய தேதி வரை உள்ள நிலைக்கு (update) கொண்டு வந்து அதன் மூலம் அறிக்கைகளை தயார் செய்ய CMDA இரு தரவுப் பதிவர்களை நியமித்தது (அக்டோபர் 2009).

மின்னாட்சி தரவுத் தளத்தில் ஏற்றப்படாமல் நிலுவையிலுள்ள விவரங்களை கணினியின் முன்திரை (front end) மூலம் பதிவு செய்வதற்கான தனித்த மென்பொருள் தொகுதி ஒன்றை உருவாக்குவதற்கு NICயின் உதவி கோரப்பட்டது. "Public_approved_Applications" மற்றும் "Public_approved_ Payments" என்ற இரு முக்கிய அட்டவணைகளில் நிலுவையிலுள்ள ஏற்றப்படாத

தரவு ஏற்றப்பட்டு சேமிக்கப்பட்டு அவை CMDAவால் பல்வேறு நிர்வாக தகவல் முறை (MIS) அறிக்கைகள் தயார் செய்ய அடிப்படையாக அமைகின்றன. இந்த இரு அட்டவணைகளை பரிசோதித்ததில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன -

- 1,729 அனுமதி கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களில், 66 நேர்வுகளில் அனுமதி கொடுக்கப்பட்ட நாள், விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நாளுக்கு முன் இருந்தது.
- 112 அனுமதி கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தமான 'வளர்ச்சிக் கட்டணம்' செலுத்திய விவரங்கள் கணினி அமைப்பில் பதியப்படவில்லை.
- **அட்டவணை 2.30**ல் கொடுக்கப்பட்டுள்ளவாறு, முக்கிய தகவல்களுக்கான இடம் நிரப்பப்படாமல் காலியாக இருந்தது.

அட்டவணை 2.30: இரு முக்கிய தரவுத்தள அட்டவணைகளில் முக்கிய தகவல்கள் நிரப்பப்படாமல் காலியாக இருந்தவை

அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் (மொத்தப் பதிவேடுகள்: 27,437)		அனுமதிக்கப்பட்ட செலுத்துத் தொகை (மொத்தப் பதிவேடுகள்: 70,771)	
தகவல் விவரம்	காலியாக இருந்த பதிவேடுகள்	தகவல் விவரம்	காலியாக இருந்த பதிவேடுகள்
அனுமதி தரவு	579	SBC நம்பர்	33,036
SBC நம்பர்	13,072	செலுத்தும் வகை குறியீடு	3
சமர்ப்பிக்கப்பட்ட நாள்	10,758	செலுத்திய தொகை	15
PP பதிவு எண்	2,406	செலுத்திய விதம்	57,239
சேனல்	247	செலுத்திய தேதி	11,224
விண்ணப்பதாரர் பெயர்	569	-	-
விண்ணப்பதாரர் முகவரி	20,845	-	-
அமைவிட முகவரி	316	-	-
கருத்துரு சுருக்கம்	31	-	-
தரைப்பரப்புக் குறியீடு (FSI)/ Non-FSI /திறந்தவெளி நிலப் பரப்பு ஒதுக்கீடு (OSR) பகுதி	27,148	-	-

பதிவு செய்யப்பட்ட தகவல் சரியானதாக, துல்லியமாக, முழுமை பெற்றதாக இருப்பதை உறுதி செய்வதற்கு பயன்பாட்டு மென்பொருள் தகுந்த உள்ளீட்டுக் கட்டுப்பாடுகளை பெற்றிருக்கவேண்டும். மென்பொருள் போதுமான உள்ளீட்டுக் கட்டுப்பாடுகளை பெற்றிருக்கவில்லை என்பதை மேற்கண்ட குறைபாடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வனைத்து நேர்வுகளிலும் கணினி அமைப்பிலிருந்து தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் முழுமையானதாக இருக்காது.

(iii) APPAS தரவுத்தளத்திலிருந்த குறைபாடுகள்

மென்பொருள் உருவாக்குபவரால் தயாரிக்கப்பட்டு CMDAவால் ஒப்பளிக்கப்பெற்ற கணினி அமைப்புக்குத் தேவையான குறிப்பீடுகள் (System Requirement Specifications-SRS) பின்வருவனவற்றிற்கு வகை செய்தன.

- பணிச் சீரோட்ட மாதிரியுடன் ஒரு client-server தொழில்நுட்பம்
- APPAS மென்பொருளுக்கு தரம் வாய்ந்த தொடர்புடன் கூடிய தரவுத்தள மேலாண்மை திட்டத்தை (RDBMS) உருவாக்குதல்

- மென்பொருளை உருவாக்கும்போதே மூல அட்டவணைகளை உருவாக்குதல்
- பயன்படுத்துவோருக்கு பாதுகாப்பான சங்கேத கடவுச்சொற்களை அளித்தல்
- பதிவுக் கோப்புகளை (log files) உருவாக்குதல்
- நம்பிக்கையுள்ள backup நடைமுறை

இருந்தபோதிலும், மென்பொருளை உருவாக்குபவர் SRSல் ஒப்புக் கொண்டவற்றை உறுதி செய்ய CMDA தவறியதால் APPAS மென்பொருளில் கீழ்க்கண்ட குறைபாடுகள் காணப்பட்டன:

- போதுமான கட்டுப்பாடுகள் இல்லாத தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்யாத MS-Access (a semi RDBMS)ல் தரவுத்தளம் உருவாக்கப் பட்டிருந்தது.
- Client-server தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதற்கு பதிலாக தனித்தனியான மூன்று கணினிகள் வழியாக APPAS மென்பொருள் இயக்கப்பட்டு மூன்று கணினிகளிலும் தரவுகள் சேமிக்கப்படுவதால் அதிகாரம் வழங்கப்படாத நபர்களால் தரவுகள் அணுகப்படும் அபாயம் உள்ளது.
- மூல அட்டவணைகளை உருவாக்குவதற்கு பதிலாக, மென்பொருள் உருவாக்குபவர் எல்லா அளவுகோல்களையும் பயன்பாட்டு மென்பொருளின் குறியீட்டாக்கத்தில் (coding) சேர்த்துவிட்டார். மென்பொருள் உருவாக்கியவர்தான் அளவுகோல்களில் மாற்றம் எதனையும் செய்யமுடியும். ஆதலால், அளவுகோல்களை மாற்ற CMDA மென்பொருள் உருவாக்கியவரையே சார்ந்திருக்க வேண்டியிருந்தது.
- விண்ணப்பதாரர் ஒவ்வொருவருக்கும் கோப்பு பெயரைக் குறிக்கும் தனித்துவ தளத்திற்கு (unique field) வகைசெய்யப்படவில்லை. ஒரே விண்ணப்பதாரருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட கோப்பு எண்கள் வழங்கப்பட்டன. கோப்பு எண்களுக்கு பெயரிடும் வழக்கம் பின்பற்றப்படவில்லை. தனித்துவ தளம் இல்லாததால் மின்னாட்சி தரவுத்தளத்தை APPAS மென்பொருளுடன் இணைப்பது கடினமானது.
- AutoCAD குறுந்தகட்டை இயக்கிய தேதியை தெரிந்து கொள்ள ஏதுவாக எந்தவொரு முக்கிய அட்டவணைகளிலும் தேதி பதிவு செய்யப்படவில்லை.
- பயன்படுத்துவோருக்கு நிர்வகிப்பவரால் சங்கேதக் கடவுச்சொற்கள் (password) அளிக்கப்படவில்லை. அட்டவணைகளில் ஒன்றில் கடவுச்சொற்கள் எல்லோராலும் படிக்க இயலும்படி பதியப்பட்டிருந்தது தணிக்கையில் கண்டறியப்பட்டது. அட்டவணைகளில் பதிவுக் கோப்புகள் உருவாக்கப்படவில்லை. மேற்கூறப்பட்ட பாதுகாப்புக் குறைபாடுகளால் அதிகாரம் வழங்கப்படாத நபர்கள் இயக்கத்தின் எந்தவொரு கட்டத்திலும் தரவுத்தளத்தில் நுழையும் அபாயம் உள்ளது.
- APPAS மென்பொருளுக்கு எவ்வித முறைப்படியான தகுந்த backup நடைமுறையும் பின்பற்றப்படவில்லை.

APPAS மென்பொருளிலுள்ள குறைபாடுகளை களைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூடிய விரைவில் இம்மென்பொருள் மின்னாட்சி மென்பொருளுடன் பயன்தரத்தக்க வகையில் இணைக்கப்பட்டுவிடும் என்றும்

தணிக்கைக்குப் பிந்தைய கலந்தாய்வில் (ஜனவரி 2014) CMDAவின் தலைமைத் திட்ட அதிகாரி தெரிவித்தார்.

2.4.7 முடிவுரை

மின்னாட்சி முறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னரும், PPA பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கால அளவில் எவ்வித முன்னேற்றமும் இல்லை மற்றும் குடிமக்கள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள காலவரையறை பின்பற்றப்படவில்லை. தானியங்கி பணியோட்ட அமைப்பில் ஏற்பட்ட தடையின் காரணமாக தொகுதிச் செயல்முறை கடைபிடிக்கப்பட்டதால் பொதுமக்கள் தங்கள் விண்ணப்பங்களின் நிலையை இணையதளம் மூலமாக சரிபார்க்கக்கூடிய வசதியை இழக்க நேரிட்டது. இதனால், CMDAவின் அன்றாட செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் நோக்கம் நிறைவேறவில்லை. மின்னாட்சி அமைப்புடன் ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்ட கட்டடத் திட்ட மீளாய்விற்கான முக்கிய மென்பொருளான APPAS, மின்னாட்சி அமைப்பு முறை முழுமையற்ற/ பகுதியாக செயல்படுத்தப்பட்டதன் காரணமாக ஒருங்கிணைக்கப்படவில்லை. APPAS தரவுத்தள வடிவமைப்பிலும் குறைபாடுகள் இருந்தன. ₹ 1.01 கோடி செலவு செய்து மின்னாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும் CMDAவால் திட்டமிட்ட நோக்கங்களை எய்த இயலவில்லை .

2.4.8 பரிந்துரைகள்

மின்னாட்சி அமைப்பை முழுமையாக செயல்பட வைக்க CMDA கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுக்கலாம்:

- APPAS மென்பொருளையும் கட்டடத்தின் சொந்தக்காரரின் விவரத்தையும் கைமுறையில் சரிபார்ப்பதையும் ஒருங்கிணைப்பதன் மூலம் பணியோட்ட நடைமுறையை மறுஅறிமுகம் செய்தல்.
- கண்டறியப்பட்ட கட்டுப்பாட்டு பலவீனங்களை நீக்குதல் மற்றும் தேவையான சரிபார்ப்பு நடவடிக்கைகளை மின்னாட்சி மென்பொருளில் சேர்த்தல்.
- தரவுப் பாதுகாப்பை மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த செயல்பாட்டை உறுதி செய்யவும் APPAS மென்பொருளை தற்போதுள்ள MS-Access தரவுத்தளத்திலிருந்து ஒரு முழுமை பெற்ற RDBMSஆக மாற்றுதல்.
- இரண்டாம் பெருந்திட்டம் 2008ல் கூறப்பட்டுள்ள அனைத்து அளவுகோல்களுக்கும் மூலஅட்டவணை உருவாக்குதல்.

அத்தியாயம் III

இணக்கத் தணிக்கை

அத்தியாயம் III

இணக்கத் தணிக்கை

அரசுத்துறைகள், அவற்றின் கள அமைப்புகள், தன்னாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் மீதான இணக்கத் தணிக்கை, அவற்றின் நிதி மேலாண்மையில் பல குறைபாடுகளையும் வரைமுறை, ஒழுங்குமுறை மற்றும் சிக்கனம் ஆகிய நெறிகளை கடைபிடிப்பதில் ஏற்பட்ட தவறுதல்களையும் வெளிப்படுத்தியது. பின்வரும் பத்திகளில் அவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வித் துறை

3.1 பொது நூலகங்களின் செயல்பாடுகள்

3.1.1 முன்னுரை

அறிவைப் பரவலாக்குவதில் பொது நூலகங்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. மாநிலத்தில் பொது நூலகங்கள் உருவாக்குவதற்கும், ஒருங்கிணைந்த ஊரக மற்றும் நகர்ப்புற நூலக சேவைகள் அமைவதற்கும் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 (சட்டம்) வழிவகை செய்கிறது. இந்தச் சட்டத்தின் கீழ்படியும், தமிழ்நாடு பொது நூலக விதிகள், 1950 (விதிகள்)ன் கீழ்படியும், மாநிலத்தில் 4,093 பொது நூலகங்கள்[1] நகர்ப்புற மற்றும் ஊர்ப்புற பகுதிகள் இரண்டிலும் தேவையான உள்கட்டமைப்புகளையும், நல்ல புத்தகங்களை வழங்குவதன் மூலமாக மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தும் குறிக்கோளுடன் உருவாக்கப்பட்டன (மார்ச் 2012ல் உள்ளவாறு). அரசிற்கு நூலகங்கள் சார்ந்த விஷயங்களில் அறிவுரை வழங்க மாநில நூலக ஆணைக்குழு அமைப்பதற்கும் பொது நூலகங்களை அமைத்து நிர்வகிப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும், சென்னை நகரில் ஒன்றுமாக மாவட்ட நூலக ஆணைக்குழு (LLA) அமைப்பதற்கும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

3.1.2 நிர்வாகக் கட்டமைப்பு

மாநிலத்திலுள்ள பொது நூலகங்கள் பொது நூலக இயக்குநரின் (DPL) கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன. இவர் பள்ளிக் கல்வித் துறையின் அரசுச் செயலரின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் வருகிறார். மாவட்ட அளவில், மாவட்ட நூலக அதிகாரிகள் (DLOs) LLAக்களின் பணிகளை மேற்கொள்கிறார்கள்.

3.1.3 தணிக்கைப் பரப்பு மற்றும் தணிக்கை நோக்கங்கள்

பொது நூலகங்களின் செயல்பாடுகள் குறித்த தணிக்கை சென்னை பொது நூலக இயக்குநரகத்திலும் மற்றும் 32 மாவட்டங்களில் எளிய தொடர்பற்ற மாதிரி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு[2] DLO அலுவலகங்களிலும் மே முதல் ஆகஸ்ட் 2013 வரை மேற்கொள்ளப்பட்டு, 2010-13 ஆண்டுகளுக்கான பதிவுருக்கள் சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்டன. மேலும், மாவட்ட மைய

[1] மாநில மைய நூலகங்கள்: 2, மாவட்ட மைய நூலகங்கள் : 32, கிளை நூலகங்கள் : 1,765, நடமாடும் நூலகங்கள்: 10, கிராமப்புற நூலகங்கள்: 1,885 மற்றும் பகுதி நேர நூலகங்கள்: 399

[2] சென்னை, கடலூர், மதுரை மற்றும் நாமக்கல்

நூலகங்கள் நான்கோடு, சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில் 45 இதர நூலகங்களும்[3] சென்னை கன்னிமாரா நூலகமும் (ஒரு மாநில மைய நூலகம்) சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்டன. நூலகங்களை நிர்வகிக்க சட்டமுறை ஆணைக்குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளனவா, உள்ளாட்சி அமைப்புகள் (LBs) செலுத்த வேண்டிய நூலக மேல் வரி வசூலிக்கப்பட்டு சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா, தேவையான உள்கட்டமைப்புகளும், வசதிகளும் வாசகர்களுக்கு செய்து தரப்பட்டுள்ளதா மற்றும் தேவையான மனிதவளங்கள் இருக்கின்றனவா என்பனவற்றை மதிப்பீடு செய்வதே தணிக்கையின் நோக்கங்களாகும். தணிக்கைக் குறிப்புகள் கீழ்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

3.1.4 நிதி மற்றும் செலவினங்கள்

பொது நூலகங்களுக்கான பராமரிப்பு மற்றும் நிர்வாகத்திற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினங்கள் யாவும் அரசு நிதி மற்றும் நூலக மேல்வரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. இச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் நூலக மேல்வரியை உள்ளாட்சி அமைப்புகள் சொத்து வரி/வீட்டு வரி வசூலிப்புடன் வசூலித்து DLOக்களுக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

3.1.4.1 வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவினங்கள்

ஏப்ரல் 1982க்கு முன்பு, நூலகத்துறை அலுவலர்களுக்கான செலவினங்கள் யாவும் மேல்வரி நிதி வசூலிப்புகள் மற்றும் அரசு வழங்கிய இணை உதவித் தொகைகள் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டன. ஏப்ரல் 1982லிருந்து LLAக்களின் அலுவலர்கள் அரசு ஊழியர்கள் ஆனார்கள். அதனால் இணை உதவித்தொகை வழங்குவதை அரசு நிறுத்தி விட்டது. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களுக்காக பணியமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு சம்பளம், படிகள், ஓய்வூதியம் மற்றும் பிற ஊதியத்திற்காக அரசு செலுத்திய தொகையானது LLAக்களால் அரசுக்குத் திரும்பச் செலுத்தப்படவேண்டும். நூலகத் துறையிலுள்ள மொத்தம் 2,325 அலுவலர்களில், ஆகஸ்ட் 2013ன் படி, 1,305 ஊழியர்களின் சம்பளம் மாநில நிதியிலிருந்தும், 1,020 ஊழியர்களின் சம்பளம் (இதில் 1,004 ஊழியர்கள் தரம் III) நூலகநிதியிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டது.

2010-13 காலகட்டத்தில் பொது நூலக இயக்குநரகம், மாநில மைய நூலகங்கள், மற்றும் பிற நூலகங்களின் அரசு நிதிகளின் மீதான நிர்வாக மற்றும் பிற செயல்பாடுகளுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவினங்களின் விவரங்கள் **அட்டவணை 3.1**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1: வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவினங்கள்

(₹ கோடியில்)

ஆண்டு	வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு	செலவினங்கள்
2010-11	85.50	97.02*
2011-12	49.74	51.35
2012-13	49.63	56.21

* அண்ணா நூற்றாண்டு நூலக உருவாக்கத்திற்காக DPLக்கு விடுவிக்கப்பட்ட கடனான ₹ 50 கோடியை உள்ளடக்கியது

(ஆதாரம்: நிதியொதுக்கக் கணக்குகள்)

[3] கிளை நூலகங்கள்: 35, கிராமப்புற நூலகங்கள்: 8 மற்றும் பகுதி நேர நூலகங்கள்: 2

3.1.4.2 வருவாய் திரட்டுகை

ஒவ்வொரு LLAவும் நூலக நிதியை பராமரிப்பதற்கு சட்டம் வழிவகை செய்கிறது. இதில் உள்ளாட்சி அமைப்புகளால் சொத்து வரிகள் அல்லது வீட்டு வரிகள் மீது மேல் வரியாக விதிக்கப்பட்ட நூலக மேல்வரியை செலுத்தவேண்டும். 1 ஏப்ரல் 1992லிருந்து சொத்து வரி அல்லது வீட்டு வரி வசூலித்ததிலிருந்து ஒவ்வொரு ஒரு ரூபாயிலும் பத்து பைசா நூலக மேல்வரியாக வசூலிக்கப்படுகிறது. நூலக மேல்வரி தவிர்த்து, பொது மக்களின் பங்களிப்பு, நன்கொடைகள், பொது நூலகங்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளை வருமானங்கள், குறிப்பிட்ட நோக்கத்திற்கான மானியங்கள், கட்டணங்கள், அபராதங்கள் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறைகளின் படி LLA வசூலிக்கும் வேறு தொகைகள் யாவும் நூலக நிதியில் வரவு வைக்கப்படுகின்றன. மாநிலத்தில் 2010-13 காலத்தில் மேல்வரிநிதியின் வசூல் ₹ 190.02 கோடியாகும். நூலக நிதியிலிருந்து, 3.88 இலட்சம்[4] தலைப்புக்களில்[5] புத்தகங்கள் 2010-13 காலத்தில் ₹ 127.45 கோடிக்கு கொள்முதல் செய்யப்பட்டன.

2010-13 காலகட்டத்தில், சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களின் வரவுகள் மற்றும் செலவினங்கள் **அட்டவணை 3.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.2: நூலக நிதியின் வரவுகள் மற்றும் செலவினங்களின் விவரங்கள்

(₹ கோடியில்)

மாவட்டத்தின் பெயர்	ஆரம்பக் கையிருப்பு	வரவுகள்	மொத்தம்	செலவுகள்	இறுதிக் கையிருப்பு
சென்னை	0.67	213.58	214.25	212.44	1.81
கடலூர்	0.21	8.41	8.62	8.13	0.49
நாமக்கல்	0.23	9.09	9.32	8.97	0.35
மதுரை	1.02	11.47	12.49	12.25	0.24
மொத்தம்	**2.13**	**242.55**	**244.68**	**241.79**	**2.89**

(ஆதாரம்: DLOக்களின் கணக்கு அறிக்கைகள்)

2010-13 ஆண்டுகளில் வரவான ₹ 242.55 கோடியில் ₹ 50.48 கோடி நூலக மேல்வரியாகப் பெறப்பட்டது.

பொதுமக்களுக்கு உயர்ந்த நூலக சேவை வழங்குவதற்காக பொது நூலகங்களுக்கான நிதி வளங்களை மேம்படுத்துவது துறையின் ஒரு குறிக்கோளாக துறையின் கொள்கை விளக்க ஆவணங்களில் கூறப்பட்டிருந்தது. LBக்களின் கணக்குகளின் மீதான தணிக்கை முடிக்கப்பட்டவுடன் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநர் (DLFA) LBக்கள் LLAக்களுக்கு மாற்றம் செய்ய வேண்டிய நூலக மேல்வரியை சான்றளிக்கவேண்டும். LBக்கள் மாற்றம் செய்ய வேண்டிய நூலக மேல்வரியின் சரியான தொகை LLAகளுக்கு தெரியாத காரணத்தால், அவை கடந்த ஆண்டு நூலக மேல்வரியின் கேட்பிற்கு 10 சதவீதம் உயர்த்தி நூலக மேல்வரி கேட்பு அனுப்பின. அவ்வப்போது வசூலிக்கப்பட்ட வரியை மாற்றம் செய்ய LBக்கள் தவறியதும், நூலக மேல்வரியை செலுத்தாமல் நிலுவையில் இருப்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. மார்ச் 2013ன்படி,

---

4 2010-11ல் ₹ 89.61 கோடியில் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு (புதிதாய் தோற்றுவிக்கப்பட்ட நூலகம்) 3.79 இலட்சம் தலைப்புகளிலான புத்தகங்கள் வாங்கியது அடக்கம்

5 ஒவ்வொரு தலைப்பிலும் பிரதிகள் ஒன்றும் அதற்கு மேற்பட்டும் இருக்கும்

LBக்கள் செலுத்த வேண்டிய மேல்வரியானது ₹ 146.64 கோடி என DPL தெரிவித்தது.

மேலும், சொத்து வரி/வீட்டு வரி வசூலித்ததில் ஒவ்வொரு ஒரு ரூபாய்க்கும் நூலக மேல்வரியின் விகிதத்தை 10 பைசாவிலிருந்து 15 பைசாவாக உயர்த்தி, அதோடு வரிகளை சரியாக மாற்றம் செய்திட LBக்கள் ஒரு செலுத்தும் கணக்கை துவக்கவும் அறிவுறுத்தி DPL ஒரு கருத்துருவை அரசிற்கு வழங்கியது (டிசம்பர் 2010). அது, ஒப்புதலுக்காக நிலுவையிலுள்ளது.

வசூலிக்கப்பட்ட வரியை LBக்கள் செலுத்தாததாலும், மேல்வரி வீதத்தை அரசு மாற்றியமைக்காததாலும், பத்தி 3.1.4.4ல் விவரிக்கப்பட்டபடி, சம்பளம் மற்றும் இதர செலவினங்களுக்காக அரசு நிதியிலிருந்து முதலில் பெறப்பட்ட நிதிகளை LLAகளால் அரசிற்குத் திரும்பச் செலுத்த இயலவில்லை.

சொத்து வரி வசூலிலிருந்து பெறப்பட்ட நூலக மேல்வரி வரவுகளின் சரியானதன்மையை உறுதி செய்யவும் ஒத்திசைவு செய்வதற்கு மேல்வரி வசூல் விவரங்களை அறிந்திடவும் LBக்களின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை கேட்டுப் பெற அனைத்து DLOக்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (அக்டோபர் 2013).

3.1.4.3 நூலக மேல்வரி குறைவாக வசூலித்தமை

விதிக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாய் சொத்துவரிக்கும், நூலக மேல்வரியை 10 பைசாவாக அரசு உயர்த்திய போதும் (ஏப்ரல் 1992), சென்னை மாநகராட்சி ஐந்து பைசா வீதத்தில் வரி விதிப்பை தொடர்ந்து செய்தது. நிர்வாகக் காரணங்களைக் குறிப்பிட்டு வரியினை தொடர்ந்து ஐந்து பைசாவாக வசூலிப்பதற்கான மாநகராட்சியின் கோரிக்கையை அரசு 2000ல் நிராகரித்தது. DPL இதைச் சுட்டிக்காட்ட, 1 ஏப்ரல் 2008லிருந்து மேற்கொள்ளப்படவேண்டிய சொத்து வரியின் சீரமைப்பின்போது, நூலக மேல்வரியின் விகிதத்தை ஐந்து பைசாவிலிருந்து 10 பைசாவாக சென்னை மாநகராட்சி உயர்த்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டது (ஏப்ரல் 2008). இருப்பினும், ஏப்ரல் 2008க்கு முன் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு சொத்துவரி மறுசீரமைப்பு செய்யப்படாததோடு, நூலக மேல்வரி தொடர்ந்து, பழைய சொத்துவரி மதிப்பீடுகளுக்கு ஐந்து பைசாவாகவும், ஏப்ரல் 2008ற்கு பிறகான புதிய மதிப்பீடுகளுக்கு 10 பைசாவாகவும் விதிக்கப்பட்டது. 2008-09 முதல் 2012-13 (நவம்பர் 2012 வரை) ஐந்து பைசா வீதத்தில் வசூலிக்கப்பட்ட மேல்வரி ₹ 53.43 கோடி ஆகும். ஆக, ₹ 53.43 கோடி வரியினை சென்னை மாநகராட்சி மேற்கூறிய காலகட்டத்தில் வசூலிக்காததோடு சென்னை DLOவிடம் செலுத்தவில்லை.

மாநகராட்சி மேல்வரி வசூலை உயர்த்திய விகிதத்தில் செய்ய முக்கியத்துவம் தரப்படும் என அரசு பதிலளித்தது (அக்டோபர் 2013).

3.1.4.4 சம்பளம் மற்றும் இதர செலவினங்களை அரசுக்கு திரும்பச் செலுத்தாமை

ஒவ்வொரு LLAவிலும் குறிப்பிட்ட பதவிகளில் பணியமர்த்தப்பட்ட அனைத்து அலுவலர்களும் 1 ஏப்ரல் 1982 முதல் முழுநேர அரசு ஊழியர்களாவார்கள் என்று அரசு உத்தரவிட்டது (மே 1982). குறிப்பிட்ட பதவிகளில் பணியமர்த்தப்பட்ட நபர்களுக்கு அரசு முதலில் வழங்கிய சம்பளம், படிகள், ஓய்வூதியம் மற்றும் பிற ஊதியங்களை திரும்பச் செலுத்த வழிவகை செய்யும் வகையில் சட்டம் உரிய முறையில் திருத்தம் செய்யப்பட்டது (2001). மேலும், ஒரு LLA தொகை திரும்பச்

செலுத்த இயலாத நிலை அடைந்ததை அரசு அறுதி செய்யும் பட்சத்தில், அரசு தனது உத்தரவின் கீழ் அந்த LLA திரும்ப செலுத்த வேண்டிய தொகையை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ, விலக்கு அளிப்பதற்கு சட்டம் மேலும் வழிவகுக்கிறது. DPLயிடமிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து (செப்டம்பர் 2013), ஏப்ரல் 1982 முதல் ஜூன் 2013 வரையான காலகட்டத்தில் மொத்தமுள்ள 31 LLAக்களால்[6] திரும்பச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம் மற்றும் படிகளின் மொத்தத்தொகையான ₹ 431.76 கோடியில் ₹ 14.35 கோடி மட்டும் பகுதித் தொகையாக 22 LLAக்கள் திரும்பச் செலுத்தியதும் ஒன்பது LLAக்கள் தொகையைச் செலுத்தவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. 31 LLAக்களால் அரசுக்குத் திரும்பச் செலுத்தப்பட வேண்டிய தொகை ₹ 417.41 கோடியாகும்.

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் சம்பளம் மற்றும் படிகள் தொகையை அரசு ஏற்றதும், அரசுக்கு LLAக்கள் திரும்பச் செலுத்திய தொகையின் நிலைமையும் **அட்டவணை 3.3**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.3: சம்பளம் மற்றும் படிகளை திரும்பச் செலுத்திய சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட LLAக்கள்

(₹ கோடியில்)

மாவட்டத்தின் பெயர்	அரசு நிதியிலிருந்து பெறப்பட்ட சம்பளம் மற்றும் படிகள்	அரசுக்கு DLOக்கள் திரும்பச் செலுத்திய தொகை	திரும்பச் செலுத்த வேண்டிய மீதத்தொகை
சென்னை	36.71	இல்லை	36.71
கடலூர்	18.97	0.33	18.64
நாமக்கல்	10.46	0.54	9.92
மதுரை	22.65	0.32	22.33
மொத்தம்	**88.79**	**1.19**	**87.60**

(ஆதாரம்: DPL வழங்கிய விவரங்கள்)

நூலகக் கட்டடங்களின் கட்டுமானம்/பராமரிப்பு, புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்களின் கொள்முதல், LLA ஊழியர்களுக்கான கொடுப்புகள் முதலிய செலவினங்கள் யாவும் LLAக்களின் ஒரே வரவு ஆதாரமான நூலக மேல்வரியைக் கொண்டே மேற்கொள்ளப்படுவதாக அரசு பதிலளித்தது (அக்டோபர் 2013). LLA ஊழியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களான பிறகு LLAக்கான இணை உதவித்தொகை ஒப்பளிப்பு விலக்கப்பட்டதாகவும் அது மேலும் தெரிவித்தது. அதனால், LLAக்கள் அரசிற்கு சம்பளம் மற்றும் படிகளைத் திரும்பச் செலுத்த இயலாத நிலையில் இருந்தன. சம்பளம் மற்றும் படிகளாக ₹ 42.22 கோடியை திரும்பச் செலுத்த வேண்டிய 13 LLAக்களுக்கு விலக்கு அளிக்குமாறு DPL அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார் என்றும் அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும் அரசு மேலும் கூறியது.

3.1.4.5 கடன்கள் திருப்பிச் செலுத்தாமை

இந்திய அரசின் கலை மற்றும் பண்பாட்டுத் துறையிடமிருந்து மானியத்தை எதிர்பார்த்திருந்த DPL, தமிழ்நாடு அரசிடம் அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்கிட கடன் ஒப்பளிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார் (ஜூலை 2010). அதன்படி, தமிழ்நாடு அரசு ₹ 50 கோடியை ஆண்டுக்கு 12 சதவீத

[6] விவரம் அளிக்காத சேலம் மாவட்டத்தைத் தவிர்த்து, மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களும்

வட்டியுடன், ஆறு மாதங்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டும் என்றும், குறிப்பிட்ட நாட்களுக்குள் அசல் மற்றும் வட்டி கட்டத் தவறும் பட்சத்தில், கூடுதலாக 2.5 சதவீதம் அபராத வட்டி வசூலிக்கப்படும் எனவும் கூறி ஒப்புதல் அளித்தது (செப்டம்பர் 2010). GoIயிடமிருந்து எதிர்பார்த்திருந்த மானியம் கிடைக்கப்பெறாததால், அக்டோபர் 2013 வரை, GoTNக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை, DPL திரும்பச் செலுத்தவில்லை. கடன் மற்றும் வட்டியைத் திரும்பச் செலுத்தும் நிலையில் DPL இல்லாததாலும் மேலும் அரசிற்கு கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு, LBக்களிடமிருந்து நிலுவையிலுள்ள நூலக மேல்வரி வசூலிக்கும் வழிமுறைகளை துரிதப்படுத்தும் செயல்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்தது (அக்டோபர் 2013).

3.1.5 சட்டமுறை ஆணைக்குழு மற்றும் ஆணையங்கள்

பொது நூலகங்களின் செயல்பாடுகள் குறித்து பல்வேறு விஷயங்களில் அரசிற்கு ஆலோசனை வழங்க, சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள், மூன்றாண்டுகள் பதவிக்காலம் கொண்ட ஒரு மாநில நூலக ஆணைக்குழு (SLC) உருவாக வழிவகுக்கின்றன. மொத்தமுள்ள 18 உறுப்பினர்களில், சென்னை நகர LLA உறுப்பினர்களிலிருந்து ஒருவரும், மாவட்ட LLAக்களிலிருந்து நான்கு உறுப்பினர்களும் நியமிக்கப்படவேண்டும். எனினும், அக்டோபர் 2001 முதல் டிசம்பர் 2003 வரையிலும், பின் பிப்ரவரி 2007 முதலும் அரசு SLCஐ மறுஉருவாக்கம் செய்யப்படவில்லை என்பது தெரியவந்தது.

நூலகங்களின் அலுவலக பொறுப்பாளர்கள், பள்ளி/கல்லூரிகளின் தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகியோர்களை உள்ளடக்கிய 10 நியமன உறுப்பினர்களைக் கொண்ட LLA, ஒவ்வொரு மாவட்டத்திலும், சென்னை நகரிலும் உருவாக்க சட்டம் வழிவகை செய்கிறது. இருப்பினும், சென்னைக்கான LLA, ஆகஸ்ட் 2001 முதல் டிசம்பர் 2006 வரையிலும் பின்னர் ஜூன் 2011 முதலும் மறுஉருவாக்கம் செய்யப்படவில்லை. பிற மாவட்டங்களில் 1974 முதல் அவை உருவாக்கப் படவில்லை.

தேசிய அறிவுக்குழு (National Knowledge Commission) தனது அறிக்கையில் (மார்ச் 2009), நூலகங்களுக்கான நிர்வாக முடிவெடுக்கும் செயல்முறைகளில் பல்வேறு பங்களிப்பு கொண்டவர்களும், பயனாளர்களும் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியது. மேலும், பயனாளர் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் குழுக்கள் மூலம் நூலகங்கள் நடத்தப்படவும் பரிந்துரை செய்தது. பள்ளிக் கல்வி துறை தனது கொள்கை விளக்க ஆவணங்களில் நூலக இயக்கமானது மக்கள் இயக்கமாக பிரபலமடைய செய்யப்படும் என்று தெரிவித்திருந்தது.

LLAக்கள் இல்லாததால், நூலகங்கள் யாவும் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/கல்லூரி முதல்வர்கள் ஆகியோரின் பங்களிப்பின்றி DPLன் மாவட்ட அளவிலான அதிகாரிகளான DLOக்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது தணிக்கையில் காணப்பட்டது. புதிய நூலகங்கள் துவங்க/இருக்கும் நூலகங்களின் தரம் உயர்த்த, நூலகங்களுக்கான கட்டடங்கள் கட்ட, உள்கட்டமைப்புகள் வழங்க, புத்தகங்கள் வாங்க மற்றும் பணியாளர் நியமனம் ஆகியவற்றுக்கான ஒப்புதல் அல்லது அனுமதி வழங்கல் மற்றும் அனைத்து முடிவுகள் எடுத்தல் ஆகியவை மாநில அளவில் DPL மற்றும் அரசால் எடுக்கப்பட்டன. சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட நூலகங்களின் உள்கட்டமைப்புகளில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் பத்தி 3.1.8ல் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில், LLA மறுஉருவாக்கம் செய்யவும், மற்ற மாவட்டங்களில் LLAக்களின் உருவாக்கத்திற்கு தேவையான சட்ட திருத்தம் செய்யவும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (அக்டோபர் 2013).

3.1.6 உறுப்பினர்களின் சேர்க்கை மற்றும் வாசகர்கள் எண்ணிக்கை

ஒவ்வொரு நூலகமும் காப்புத் தொகையையும் சேர்த்து உறுப்பினர் கட்டணம் (எடுக்க அனுமதிக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி ₹ 30 முதல் ₹ 60 வரை) வசூலிக்கின்றது. உறுப்பினர்கள் நூலகங்களிலிருந்து புத்தகங்கள் இரவல் பெற்று எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். நூலகத்திற்கு வரும் பொது வாசகர்கள் அங்கேயே இருந்து படித்துச் செல்கிறார்கள். 2010-13 காலகட்டத்தில் மாநிலத்தில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் ஒரு நாளின் சராசரி வாசகர்களின் எண்ணிக்கையின் போக்கு **அட்டவணை 3.4**ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.4: மாநிலத்தில் உறுப்பினர்கள் மற்றும் வாசகர்கள் எண்ணிக்கையின் போக்கு

ஆண்டு	நூலகங்களின் எண்ணிக்கை	புத்தகங்கள்	உறுப்பினர்கள்	வாசகர்கள்	ஒருநாளில் வாசகர்களின் சராசரி (வாசகர்கள் எண்ணிக்கை ÷300)*
		இலக்கங்கள் இலட்சத்தில்			
2010-11	4,041	535	52	650	2.17
2011-12	4,056	553	53	669	2.23
2012-13	4,093	575	55	649	2.16

* ஒரு ஆண்டின் 300 நாட்கள் அடிப்படையில் வாசகர்களின் சராசரி கணக்கிடப்பட்டுள்ளது

(ஆதாரம்: DPLலின் ஆண்டு அறிக்கைகள்)

2010-13 காலகட்டத்தில் வாசகர்களின் தினசரி சராசரி கிட்டத்தட்ட ஒரே நிலையில் இருந்தது காணப்பட்டது.

மாவட்டவாரியான நூலக உறுப்பினர்களுக்கும் அம்மாவட்டத்திலுள்ள எழுத்தறிவு பெற்றவர்களுக்கும் ஒப்பீடு செய்ததில், மாவட்டத்திலுள்ள நூலகங்களில் பதிந்த மொத்த உறுப்பினர்களுக்கும், மாவட்டத்திலுள்ள மொத்த எழுத்தறிவு பெற்றவர்களுக்குமான சதவீதம் 5லிருந்து 24க்குள் இடைப்பட்டிருந்தது தெரியவந்தது. அரியலூர், கடலூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, மதுரை, புதுக்கோட்டை, திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் இந்த சதவீதம் 10க்கும் குறைவாக இருந்தது. இவை **இணைப்பு 3.1**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

2010-13 காலகட்டத்தில், சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் நூலக உறுப்பினர்கள் மற்றும் ஒரு நாளின் சராசரி வாசகர்களின் எண்ணிக்கையின் போக்கு **அட்டவணை 3.5**ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.5: சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில் உறுப்பினர்கள் மற்றும் வாசகர்கள் எண்ணிக்கை

ஆண்டு	நூலகங்களின் எண்ணிக்கை	புத்தகங்கள்	உறுப்பினர்கள்	வாசகர்கள்	ஒருநாளில் வாசகர்களின் சராசரி (வாசகர்கள் எண்ணிக்கை ÷300)
		இலக்கங்கள் இலட்சத்தில்			
2010-11	563	119	8	96	0.32
2011-12	554	122	8	101	0.34
2012-13	567	124	8	101	0.34

(ஆதாரம்: DPLன் ஆண்டு அறிக்கைகள்)

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில் நூலகங்களின் எண்ணிக்கை, புத்தகங்கள், உறுப்பினர்கள் மற்றும் தினசரி சராசரி எண்ணிக்கையிலான வாசகர்கள் இவற்றில் குறிப்பிடத்தக்க உயர்வு இல்லை என்பது காணப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும், புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (அக்டோபர் 2013). இருப்பினும், 2010-13 காலகட்டத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எவ்விதக் கணிசமான உயர்வும் ஏற்படவில்லை.

3.1.7 நடமாடும் நூலகங்கள் செயல்படாமை

உறுப்பினர்களுக்கு புத்தகங்களை இரவல் வழங்குவதற்கு குறிப்பிடப்பட்ட பகுதிகளில் நடமாடும் நூலகங்கள் இயக்கப்படுகின்றன. மாநிலத்திலுள்ள 10 நடமாடும் நூலகங்களில், ஆறு நூலகங்கள் இயக்கப்படாமல் இருந்தன. ஏற்கனவேயுள்ள வாகனங்கள் இயக்க முடியாமல் இருந்ததாலும், புதிய வாகனங்களின் தேவை இருந்ததாலும், அவற்றில் ஐந்து[7] நூலகங்கள் இயங்காமல் இருந்தன. தஞ்சாவூர் (ஊரகப்பகுதி) நடமாடும் நூலகத்தில், ஓட்டுநரின் காலிப் பணியிடம் பிப்ரவரி 2011 முதல் நிரப்பப்படாமல் இருந்தது.

மதுரை மாவட்டத்தில், ஆகஸ்ட் 2000 முதல் மதுரை (ஊரகப் பகுதி) நடமாடும் நூலகம் செயல்படாமல் இருந்தபோதும், மார்ச் 2001 முதல் பிப்ரவரி 2008 வரை 2,548 புத்தகங்கள் அந்நூலகத்திற்கு வழங்கப்பட்டது. நடமாடும் நூலகத் திற்கான 28,280 புத்தகங்கள் மாவட்ட மைய நூலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

2014-15 ஆண்டிலிருந்து நடமாடும் நூலகங்களின் சேவை புதுப்பிக்கப்படும் என்றும் மதுரை மாவட்டத்தில் நடமாடும் நூலகங்களுக்காக வழங்கப்பட்ட புத்தகங்கள் தற்காலிக நடவடிக்கையாக மதுரை மாவட்ட மைய நூலகத்தில் பயன்படுத்தப்படுவதாகவும் அரசு பதிலளித்தது (அக்டோபர் 2013).

3.1.8 உள்கட்டமைப்பு

3.1.8.1 சேதமடைந்த கட்டடங்களில் இயங்கும் நூலகங்கள்

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட 35 கிளை நூலகங்களில் மூன்றில்[8], நூலகக் கட்டடங்கள் பாழடைந்த நிலையில் நூலகப் பணியாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் இருந்தது காணப்பட்டது. அவை **படங்கள் 3.1 முதல் 3.3 வரை** காட்டப்பட்டுள்ளன.

படம் **3.1:** கிளை நூலகம், எலச்சிப்பாளையம் (நாமக்கல் மாவட்டம்)

படம் **3.2:** கிளை நூலகம், திருமங்கலம் (மதுரை மாவட்டம்)

படம் **3.3:** கிளை நூலகம், மேலூர் (மதுரை மாவட்டம்)

7 (i) கோயம்புத்தூர் I: மே 1994ல் வாகனம் பழுதடைந்தது, (ii) கோயம்புத்தூர் II: ஜனவரி 1994ல் வாகனம் பழுதடைந்தது, (iii) மதுரை (ஊரகப்பகுதி): ஆகஸ்ட் 2000 முதல் வாகனம் வேலை செய்யவில்லை, (iv) காஞ்சிபுரம் (ஊரகப்பகுதி): ஜூன் 2010 முதல் வாகனம் வேலை செய்யவில்லை மற்றும் (v) திருப்பூர் (ஊரகப்பகுதி)

8 எலச்சிப்பாளையம் (நாமக்கல் மாவட்டம்) மற்றும் திருமங்கலம் மற்றும் மேலூர் (மதுரை மாவட்டம்)

எலச்சிப்பாளையம் கிளை நூலகத்தின் நூலகர், எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரிடம் ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்தோ அல்லது வேறு நிதியிலிருந்தோ, நூலகக் கட்டடங்களைப் பழுது பார்க்க கோரிக்கை வைத்தார் (செப்டம்பர் 2013). இருப்பினும், தேவையான நிதியை வட்டார வளர்ச்சி அலுவலர் வழங்கவில்லை (டிசம்பர் 20013).

3.1.8.2 இடப்பற்றாக்குறை

தணிக்கையின் கேள்விப்பட்டியலுக்கு பதிலுரைக்கையில், சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட 50 நூலகங்களில், 32 நூலகர்கள், நூலகத்திலுள்ள அலமாரி அடுக்குகள் புத்தகங்களை வைப்பதற்கு போதுமானதாக இல்லை என்றும் ஆகவே புத்தகங்கள் கட்டப்பட்டு கட்டடங்களின் பரணிலும், தரையிலும் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். புகைப்பட மாதிரிகள் **படங்கள் 3.4** மற்றும் **3.5**ல் தரப்பட்டுள்ளன.

படம் **3.4:** கிளை நூலகம், சுப்ரமணியபுரம் (மதுரை மாவட்டம்)

படம் **3.5:** கிளை நூலகம், திருச்செங்கோடு, (நாமக்கல் மாவட்டம்)

3.1.8.3 கழிப்பிட வசதிகள்

சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட 50 நூலகங்களில், 23 நூலகர்கள் வழங்கிய விவரங்களிலிருந்து, பணியாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு நூலகக் கட்டடங்களில் கழிப்பிட வசதிகள் செய்து தரப்படவில்லை என்பது அறியப்பட்டது.

3.1.9 பணியாளர்கள் பற்றாக்குறை

(i) பொது நூலகங்களின் இயக்குநர் பதவியானது மே 2012லிருந்து காலியாக இருந்ததை அரசு நிரப்பவில்லை (டிசம்பர் 2013). மாநில அளவில் முக்கியப் பதவிகளில் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள், நிரப்பப்பட்ட மற்றும் காலியாக இருக்கும் பணியிடங்களின் விவரங்கள் **அட்டவணை 3.6**ல் அளிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை **3.6:** மாநிலத்தில் ஒப்பளிக்கப்பட்ட மற்றும் நிரப்பப்பட்ட பணியிடங்களின் விவரங்கள்

பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்டது	இருக்கும் பணியாளர்கள் நிலைமை	காலிப் பணியிடங்கள்
மாவட்ட நூலக அலுவலர்	32	16	16
நூலகர் - தரம் I	41	24	17
நூலகர் - தரம் II	197	162	35
நூலகர் - தரம் III	1,889	1,717	172
நூலக ஆய்வாளர்	17	6	11
இருப்புச் சரிபார்ப்பு அதிகாரி	16	16	இல்லை
பதிவு எழுத்தர்	292	149	143
காவலாளி	142	9	133

(ஆதாரம்: DPLயிடமிருந்து பெற்ற விவரங்கள்)

மாவட்டங்களில் பதினாறு DLO பணியிடங்கள் காலியாக இருந்தன. அந்த மாவட்டங்களிலுள்ள நூலகங்களின் நிர்வாகங்கள் யாவும் அண்டை மாவட்டத்து DLOக்களால் கவனிக்கப்பட்டன. நூலகர், பதிவு எழுத்தர் மற்றும் காவலாளி ஆகிய பணியிடங்கள் பெரிய அளவில் காலியாக இருந்தன.

DPL பணியிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அரசு தெரிவித்தது (அக்டோபர் 2013). மேலும், நீதி மன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருப்பதால் சில பணியிடங்கள் நிரப்ப இயலாமல் இருப்பதாகவும், வேறு பணியிடங்களுக்கான காலியிடங்கள் நிரப்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

(ii) சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில் காலிப் பணியிடங்களின் விவரங்கள் **அட்டவணை 3.7**ல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.7: சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒப்பளிக்கப்பட்ட மற்றும் நிரப்பப்பட்ட பணியிடங்களின் விவரங்கள்

பதவியின் பெயர்	ஒப்பளிக்கப்பட்டது	பணியாளர் இருக்கும் நிலைமை	காலிப் பணியிடங்கள்
மாவட்ட நூலக அலுவலர்	4	2	2
நூலகர் - தரம் I	10	4	6
நூலகர் - தரம் II	38	36	2
நூலகர் - தரம் III	316	274	42
நூலக ஆய்வாளர்	4	2	2
இருப்புச் சரிபார்ப்பு அதிகாரி	3	3	இல்லை
பதிவு எழுத்தர்	73	38	35
காவலாளி	19	4	15

(ஆதாரம்: DPLயிடமிருந்து பெற்ற விவரங்கள்)

கடலூர் DLO பணியிடம் மூன்றாண்டுகளாக காலியாக இருந்தது. அதற்கு அரியலூர் மாவட்ட DLO கூடுதல் பொறுப்பு வகித்தது காணப்பட்டது. மேலும், கடலூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் நூலக ஆய்வாளர் பணியிடம் நிரப்பப்படாமல் இருந்தது.

3.1.10 முடிவுரை

மாவட்டங்களில் பயனாளர் குழுக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட நூலக ஆணைக்குழுவை (LLAs) அரசு அமைக்கவில்லை. LLAக்கள் இல்லாத காரணத்தால், திட்டமிடுதல் மற்றும் முடிவெடுத்தல் ஆகிய பணிகளை மாவட்ட நூலக அதிகாரிகளே மேற்கொண்டனர். நூலகங்களை சரிவர பராமரிப்பதற்கு முக்கிய வருவாய் வரவான நூலக மேல்வரியின் வசூல் நிலுவையில் இருந்தது. மாநில நிதியிலிருந்து ஆரம்பத்தில் அரசு வழங்கிய பணியாளர் தொகையினை LLAக்களால் திரும்ப செலுத்த இயலவில்லை. மாநிலத்திலுள்ள 32 மாவட்டங்களுள் 10 மாவட்டங்களிலுள்ள எழுத்தறிவு பெற்றவர்களில் 10 சதவீதத்தினர் கூட நூலகங்களில் உறுப்பினர்களாகச் சேரவில்லை. சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட மாவட்டங்களில், நூலகக் கட்டடங்கள் பழுதடைந்த நிலையிலிருந்தன. மேலும், உள்கட்டமைப்பு வசதிகளான புத்தகங்களை அடுக்கி வைப்பதற்கான அலமாரி அடுக்குகள், ஊழியர்கள் மற்றும் வாசகர்களுக்கான கழிப்பிட வசதிகள் ஆகியவற்றில் பற்றாக்குறைகள் இருந்தன. மாவட்ட நூலக அலுவலர், நூலகர், பதிவு எழுத்தர் மற்றும் காவலாளி ஆகிய பணியிடங்கள் பெரிய அளவில் காலியாக இருந்தது காணப்பட்டது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

3.2 மருத்துவ சாதனங்களின் கொள்முதல் மற்றும் அவற்றை உபயோகித்தல்

3.2.1 அறிமுகம்

மருத்துவ சாதனங்கள் ஒரு மருத்துவ அமைப்பின் உள்கட்டமைப்பில் ஒன்றிணைந்த ஒரு பகுதியாகும். மக்களுக்கு பலதரப்பட்ட நோய் கண்டறிதல் மற்றும் நோய் தீர்த்தல் பணிகளை வழங்குவதற்கு முக்கிய வழிவகையாக அவை இருக்கின்றன. சரியான நேரத்தில் நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தலுக்கு வகை செய்வது, தேவையற்று பெரிய மருத்துவமனைகளுக்கு நோயாளிகளை சிகிச்சைக்கு அனுப்புவதை தவிர்ப்பது இவற்றின் மூலம் மருத்துவ வசதிகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு மருத்துவமனைகளில் மருத்துவ சாதனங்களின் இருப்பும் அவற்றின் அனுகூலமான உபயோகித்தலும் முக்கியமாகும். உலக வங்கி உதவி பெற்ற தமிழ்நாடு சுகாதாரத்திட்டம் (TNHSP) தமிழ்நாட்டில் தரமான மருத்துவப்பணிகளை பெறுவதிலும் உபயோகப்படுத்துவதிலும் தற்போதுள்ள தடைகளை போக்கும் நோக்கத்தைக் கொண்டது. TNHSP, மாநிலத்தில் ஜனவரி 2005 முதல் செயல்படுத்தப்பட்டு செப்டம்பர் 2010ல் முடிவுக்கு வந்திருந்தாலும், இத்திட்டம் தமிழ்நாடு சுகாதாரக் கூடுதல் நிதியுதவித் திட்டமாக[9] (திட்டம்) உலக வங்கி உதவியுடன் 1 ஜூலை 2010 முதல் செயல்படுத்தப்படுகிறது. 30 செப்டம்பர் 2013உடன் முடிய இருந்த இத்திட்டம் செப்டம்பர் 2014 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த நிதியளிப்பான ₹ 627.72 கோடியில் உலக வங்கியின் உதவி ₹ 564.95 கோடியாகும்; மற்றும் மாநிலத்தின் பங்கு ₹ 62.77 கோடியாகும்.

3.2.2 நிறுவன அமைப்பு முறை

அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலரின் கீழ் செயல்படும் திட்ட இயக்குநர் (PD), TNHSP மாநில அளவில் இத்திட்டச் செயலாக்கத்திற்கு பொறுப்புடையவர் ஆவார். திட்ட இயக்குநரால் தயாரிக்கப்பட்ட கொள்முதல் திட்டத்திற்கு மாநில அதிகாரம் பெற்ற குழு மற்றும் உலகவங்கி இவற்றின் ஒப்புதலுக்குப் பிறகு அரசிடமிருந்து நிர்வாக ஒப்பந்தமும் நிதிசார் ஒப்பளிப்பும் பெறப்பட்டன. மருத்துவ சாதனங்களைக் கொள்முதல் செய்ய மாநில அரசால் ஒப்பளிக்கப்பட்ட நிதி தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு (TNMSC) விடுவிக்கப்பட்டது. சாதனங்களை கொள்முதல் செய்தல், ஆய்வு செய்தல், அவற்றை அரசு மருத்துவமனைகளில் நிறுவி தொடங்கி வைத்தல் ஆகியவை TNMSCயின் பொறுப்புகளாகும்.

3.2.3 தணிக்கையின் பரப்பு மற்றும் குறிக்கோள்கள்

இயந்திரத் தொகுதி, மருத்துவ சாதனங்கள் மற்றும் பயன்படு பொருட்கள் ₹ 238.97 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட திட்டக் கருத்துருவில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. திட்ட இயக்குநர் அலுவலகம், TNMSC மற்றும் மாநிலத்திலுள்ள 285[10] அரசு மருத்துவமனைகளில் நான்கு மாவட்டங்

[9] திட்டத்தின் தற்போதைய வெற்றிகரமான நடவடிக்கைகளைத் தொடரவும் மாநிலம் முழுவதும் பல்வேறு திட்ட நடவடிக்கைகளை மேம்படுத்தவும் கூடுதல் நிதியுதவி பயன்படுத்தப்படும்

[10] 18 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 267 அரசு பொது மருத்துவமனைகள்

களிலிருந்து[11], எளிய தொடர்பற்ற மாதிரி முறை மூலம் தேர்வு செய்யப்பட்ட 20[12] மருத்துவமனைகளில் 2010-11 முதல் 2012-13 வரையிலான காலத்தில் ₹ 134.28 கோடி மதிப்பிற்கு மருத்துவ சாதனங்கள் கொள்முதல் செய்ய அளிக்கப்பட்ட ஒப்பளிப்புகளுக்குத் தொடர்புடைய பதிவேடுகள்/ஆவணங்கள் ஜூலை முதல் நவம்பர் 2013 வரை தணிக்கையில் சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்டன. (i) விடுவிக்கப்பட்ட நிதி சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டதா, (ii) கொள்முதல்கள் தேவை அடிப்படையிலும் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்முதல் திட்டப்படியும் இருந்தனவா, (iii) வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நடைமுறை பின்பற்றப்பட்டதா மற்றும் (iv) கொள்முதல் செய்யப்பட்ட மருத்துவ சாதனங்கள் செம்மையாக பயன்படுத்தப்பட்டனவா என்பதை சரிபார்ப்பதே தணிக்கையின் குறிக்கோள்களாகும். பின்வரும் பத்திகளில் தணிக்கைக் குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

தணிக்கைக் குறிப்புகள்

3.2.4 நிதி விடுவிப்பு மற்றும் பயன்படுத்தியமை

தமிழக அரசால் ஒப்பளிக்கப்பட்டு TNHSP திட்ட இயக்குநரால் TNMSCக்கு விடுவிக்கப்பட்ட நிதி விவரங்கள் மற்றும் ஜூன் 2013 வரை பயன்படுத்தப்பட்ட நிதி விவரங்கள் **இணைப்பு 3.2**ல் கொடுக்கப்பட்டுள்ளன. மருத்துவ சாதனங்கள் வாங்க ஏப்ரல் 2010 முதல் மார்ச் 2013 வரை TNMSCக்கு விடுவிக்கப்பட்ட ₹ 129.06 கோடியில் ₹ 55.60 கோடி (43.08 சதவீதம்) 30 ஜூன் 2013 அன்று பயன்படுத்தப்படாமல் இருந்தது. இதில், ₹ 46.26 கோடி TNMSCக்கு நிதி விடுவிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் இருந்தது. TNHSPயின் குறைபாட்டுடன் கூடிய திட்டமிடலாலும், TNMSCயின் கொள்முதல் நடைமுறையில் காணப்பட்ட குறைபாடுகளாலும் மற்றத் திட்டக் கொள்முதல் விவரங்களை கணக்கில் கொள்ளாமலும் TNMSCயால் பகுதியளவே நிதி பயன்படுத்தப்பட்டது. கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்ட சில மருத்துவ சாதனங்கள் ஒப்பளிப்புக்குப் பிறகு கைவிடப்பட்டன அல்லது **இணைப்பு 3.3**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, கொள்முதல்களின் பல்வேறு கட்டங்களில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக கொள்முதல்கள் முழுமைப் பெறாமல் இருந்தன.

3.2.5 கொள்முதலின் பல்வேறு கட்டங்களில் ஏற்பட்ட காலதாமதம்

மருத்துவ சாதனங்களின் கொள்முதல் தொடர்புடைய பதிவேடுகளை ஆய்வு செய்ததில் பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

3.2.5.1 ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்வதிலும் ஒப்பந்தம் வழங்குவதிலும் காலதாமதம்

உலக வங்கி காலதாமதத்தைக் குறைக்க கொள்முதலின் ஒவ்வொரு கட்டத்திற்கும் காலஅளவை நிர்ணயித்துள்ளது. உலகவங்கி ஒப்புதல் பெற்ற கொள்முதல் திட்டப்படி, கொள்முதல் நடைமுறை ஆறு முதல் ஒன்பது மாத காலத்திற்குள் முடிக்கப்படவேண்டும். ஆயினும், **இணைப்பு 3.4**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட சிப்பங்களில் (நேர்வுகளில்) குறிப்பிட்ட காலவரையறைக்குள் கொள்முதல் முடிக்கப்படவில்லை. ஐந்து நேர்வுகளில் இரண்டாண்டுகளுக்கும் மேலாக காலதாமதம் காணப்பட்டது.

---

11 காஞ்சிபுரம், கன்னியாகுமரி, திருவண்ணாமலை மற்றும் வேலூர்

12 நான்கு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் 16 அரசு பொது மருத்துவமனைகள்

VIA/VILI[13] கருவிகலப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்ட நேர்வில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் வருடாந்திரப் பராமரிப்பு ஒப்பந்தம் பற்றிய நிபந்தனை ஒன்று, இத்தகைய துருபிடிக்காத எஃகினால் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை சாதனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு தேவையில்லை என்று TNMSCக்கு தெரிந்திருந்த போதிலும், தவறுதலாக TNMSCஆல் சேர்க்கப்பட்டிருந்ததை தணிக்கை கண்டறிந்தது. ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பிற்குப்பின் இத்தவறு தெரிய வந்ததால் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு உலக வங்கியின் கொள்முதல் நடைமுறையின்படி மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதனால், TNMSCக்கு நிதி விடுவிக்கப்பட்ட தேதியிலிருந்து 16 மாதங்களுக்கும் மேலாக காலதாமதம் ஏற்பட்டது. TNHSPன் திட்ட இயக்குநர் இது போன்ற நிகழ்வுகள் இனி தவிர்க்கப்படும் என்று பதில் கூறினார் (டிசம்பர் 2013).

3.2.5.2 தேவையைத் தவறாகக் கணக்கிடல்

கீழ்க்கண்ட நேர்வுகளில் TNHSP மருத்துவ சாதனங்களின் தேவையை தவறாகக் கணக்கிட்டது தணிக்கையின் சோதனை சரிபார்ப்பில் கண்டுபிடிக்கப்பட்டது.

(i) சமூகப் பொருளாதாரரீதியாக நலிவுற்ற மக்கள், ஆதிவாசிகள், நகர்ப்புற ஏழை மக்கள் ஆகியோர் பயனடையும் பொருட்டு தற்போதைய "108 - அவசரகால மருத்துவ ஊர்தி சேவையை" வலுவூட்டி விரிவு படுத்த ₹ 31.01 கோடி மதிப்பில் 200 வழக்கமான அளவு கொண்ட ஆம்புலன்ஸ் வாகனங்களைக் கொள்முதல் செய்ய TNHSPன் திட்ட இயக்குநர் திட்டமிட்டார் (ஆகஸ்ட் 2010). ஒப்பந்தப்புள்ளி, இறுதி செய்யப்பட்ட பிறகு தேவையான ஆம்புலன்ஸ் எண்ணிக்கை திருத்தம் செய்யப்பட்டு (ஆகஸ்ட் 2011) 170 வழக்கமான அளவு கொண்ட ஆம்புலன்ஸ் வாகனங்களும் 30 சிறிய அளவிலான ஆம்புலன்ஸ் வாகனங்களும் கொள்முதல் செய்ய உத்தேசித்து, ₹ 16.13 கோடி செலவில் 170 வழக்கமான அளவு கொண்ட ஆம்புலன்ஸ் வாகனங்களுக்கு மட்டும் வழங்காணை அளிக்கப்பட்டது. உலக வங்கியிடம் தடையின்மைச் சான்றிதழ் வாங்கிய பிறகு (அக்டோபர் 2012) சிறிய அளவிலான ஆம்புலன்ஸ் வாகனங்கள் கொள்முதல் செய்ய மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு (நவம்பர் 2012) ₹ 1.99 கோடிக்கு வழங்காணை அளிக்கப்பட்டதாக (ஜூன் 2013) TNHSPன் திட்ட இயக்குநர் தெரிவித்தார் (டிசம்பர் 2013). மலைப்பகுதிகளிலும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளிலும் இயங்கும் வகையிலான சிறிய அளவிலான ஆம்புலன்ஸ் வாகனங்களை முன்கூட்டியே முடிவு செய்யத் தவறியதால் அவ்வாகனங்களை வாங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு இன்னும் கொள்முதல் செய்யப்படாமல் இருந்தது (ஜனவரி 2014).

(ii) அரசால் ₹ 4.80 கோடி மதிப்புள்ள 32 மார்பகப் பரிசோதனை செய்யப் பயன்படும் சாதனங்களை நிறுவ வழங்கப்பட்ட (ஜனவரி 2011) ஒப்புதல், அரசு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்க முதலில் திட்டமிடப்பட்டதால் (2010) செயல்படுத்தப்படவில்லை. பல கலந்தாலோசனைகளுக்குப் பிறகு அடிப்படை ரக சாதனத்தை விட கூடுதல் பயன்தரவல்ல வழக்கமான X-ray கருவியுடன் கூடிய மார்பகப் பரிசோதனை சாதனம் கொள்முதல் செய்ய முடிவெடுக்கப்பட்டு, கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளதாக TNHSPன் திட்ட இயக்குநர் தெரிவித்தார் (டிசம்பர் 2013). இவ்வாறாக, இத்தகைய மருத்துவ சாதனத்தை உபயோகித்து பெண் நோயாளிகளுக்கு நோய் கண்டறிய

[13] கர்ப்பப்பை புற்றுநோயை கண்டறிவதற்கான அசிடிக் அமில காட்சி ஆய்வு (VIA) மற்றும் லூகோல்ஸ் அயோடின் காட்சி ஆய்வு (VILI)

திட்டமிடப்பட்ட வசதி மருத்துவமனைகளில் கிடைக்காமல் போனது (ஜனவரி 2014).

(iii) இரண்டாம் நிலை மருத்துவமனைகளுக்கும் சென்னை மாநகராட்சி சுகாதார நிலையங்களுக்கும் வழங்க ₹ 2.38 கோடி மதிப்பில் 298 கையால் இயக்கக்கூடிய கால்போஸ்கோப்ஸ் (Colposcopes) வாங்க அரசு ஒப்புதலளித்து (டிசம்பர் 2010) அதற்கான நிதியை TNMSCக்கு விடுவித்தது (ஜனவரி 2011). ₹ 3.68 கோடி மதிப்பில் 283 கால்போஸ்கோப்ஸ் கொள்முதல் செய்ய, ஆகஸ்ட் 2012க்குள் மருத்துவ சாதனங்கள் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன், வழங்காணை அளிக்கப்பட்டது (ஏப்ரல் 2012). அக்டோபர் 2012 முதல் மார்ச் 2013 வரையிலான இடைப்பட்ட காலத்தில் கொள்முதல் செய்யப்படவேண்டிய சாதனங்களின் எண்ணிக்கையில் 54 அலகுகளை (229 அலகுகளாக) மகளிர் நோய் மருத்துவர்கள்/பெண் மருத்துவ அதிகாரிகள் சில மருத்துவமனைகளில் இல்லை என்பதைக் காரணங்காட்டி, குறைத்து பின்னர் இறுதித் தேவை 255 அலகுகள் என்று திட்ட இயக்குநர் தீர்மானித்தார். இதற்கிடையே, சாதனத்தை வழங்கும் நிறுவனம் 270 அலகுகளை வழங்கிவிட்டது. 15 அலகுகளை திரும்ப எடுத்துச் செல்லவும் மீதமுள்ள 13 அலகுகளை இனி வழங்கவேண்டாம் என்றும் வலியுறுத்தப்பட்டதால் நிறுவனம் 15 அலகுகளை திரும்ப எடுத்துக் கொண்டது.

தேவையை சரிவரக் கணக்கிடாதது, கூடுதலாக 26 அலகுகள் கொள்முதல் செய்ததிலும் பின்னர் கூடுதலாக பெற்ற அலகுகள் இத்திட்டத்தின் கீழ் வராத மருத்துவமனைகளுக்கு அளித்திடவும் வழிவகுத்தது.

(iv) இரண்டாம் நிலை மருத்துவமனைகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட 30 டிஜிட்டல் X-rayக்களில் ஐந்து கருவிகள் இத்திட்டத்தில் சேராத ஐந்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டதால் இலக்கிடப்பட்ட 30 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் ஐந்து மருத்துவமனைகளுக்கு இந்த அதிநவீன வசதி கிடைக்காமல் போனது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இச்சாதன வசதி இல்லாததால் இவை திருப்பப்பட்டன என்று திட்ட இயக்குநர் தெரிவித்தார் (டிசம்பர் 2013). இவ்வாறான திருப்புகையால் இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் மருத்துவப்பணிகளை வலுவூட்டும் திட்ட நோக்கம் நிறைவேறாமல் போனது.

3.2.5.3 தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் செல்லுபடியாகும் காலம் 90 நாட்களாகும். கொள்முதல் ஆணை வழங்குவதில் ஆரம்ப ஒப்பந்தப்புள்ளி செல்லுபடியாகும் காலமுடிவிற்குப் பிறகு 56 நாட்களுக்கு மேல் காலதாமதம் ஏற்பட்டால் ஒப்பந்தப்படியான விலை வீதத்தின் மேல் அந்நிய நாணயத்தில் ஒப்பந்தப்புள்ளி விலை இருந்தால் ஆண்டுக்கு மூன்று சதவீதமும் இந்திய ரூபாயின் மதிப்பில் இருந்தால் 5.5 சதவீதமும் கூடுதலாக, ஆரம்ப ஒப்பந்தப்புள்ளி செல்லுபடியாகும் காலம் முடிவு தேதியிலிருந்து கொள்முதல் ஆணை வழங்கும் தேதி வரையிலான, ஒவ்வொரு வாரத்திற்கும் உயர்த்தி கொடுக்கப்படவேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்வதில் நேர்ந்த காலதாமதத்தால் நான்கு சிப்பங்களில் கொள்முதல் ஆணைகள் தாமதமாக வழங்கப்பட்டதும் அதன் காரணமாக **அட்டவணை 3.8**ல் காட்டப்பட்டவாறு, ₹ 48.35 இலட்சம் தவிர்த்திருக்கக்கூடிய செலவினம் ஏற்பட்டதும் பதிவேடுகளை ஆய்வு செய்ததில் தெரியவந்தது.

அட்டவணை 3.8: தாமதமாக வழங்கப்பட்ட கொள்முதல் ஆணைகளின் விவரம்

வரிசை எண்	சாதனத்தின் விவரம்	ஒப்பந்தப்புள்ளி செல்லுபடியாகும் கால முடிவிற்குப் பிறகு + 56 நாட்களுக்கும் மேலான தாமதம் (நாட்களில்)	தாமதத்திற்கு வழங்கப்பட்ட தொகை (₹)
1	ஆம்புலன்ஸ் அடிப்படை வாகனம்	104 நாட்கள்	15,38,180
2	ரிங் லென்ஸ்	84 நாட்கள்	1,68,942
3	க்ரையோதெராபி சாதனம்	112 நாட்கள்	1,13,054
4	டிஜிட்டல் X-ray, PACS, கேபிள்கள் மற்றும் மாட்யூல்கள்	89 நாட்கள்	30,14,758
	மொத்தம்		**48,34,934**

எவ்விதக் குறிப்பான பதிலையும் TNMSC அளிக்கவில்லை (செப்டம்பர் 2013).

3.2.5.4 ஒப்பளிப்பற்ற கொள்முதல்

தமிழக அரசு ₹ 21 கோடிக்கு 30 டிஜிட்டல் X-ray அலகுகளை கொள்முதல் செய்ய ஒப்பளிப்பு (செப்டம்பர் 2010) செய்ததற்கெதிராக மற்ற ஒப்பளிப்புகளில் செலவிடப்படாமல் மீதமிருந்த தொகைகளை பயன்படுத்தி ₹ 7.68 கோடி கூடுதல் செலவில் எக்ஸ்ரே கருவிகளுடன் 30 படமெடுத்து சேமித்து வைத்துத் தகவல் அளிக்கும் அமைப்பிற்கான சாதனங்களை (PACS) TNHSP வாங்கியது. மின்னணு மாற்றம் மூலம் X-ray படங்களை அனுப்பும் திறனை டிஜிட்டல் X-ray கருவிகள் பெற்றிருந்ததால் மருத்துவமனை தகவல் மேலாண்மை அமைப்புடன் (HMIS) இணைக்கும் பொருட்டு PACS டிஜிட்டல் X-ray கொள்முதலுடன் சேர்க்கப்பட்டு வாங்கப்பட்டதாக TNHSP கூறியது (செப்டம்பர் 2013). ஆனால், அரசின் குறிப்பிட்ட ஒப்புதலின்றி PACS சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட்டதாலும், அரசால் இக்கொள்முதலுக்கு பின்னேற்பு ஏதும் வழங்கப்படாததாலும் இப்பதில் ஏற்புடையதல்ல (டிசம்பர் 2013).

3.2.5.5 சாதனங்களை வழங்கல், நிறுவுதல் மற்றும் தொடங்கி வைத்தலில் காலதாமதம்

(i) சாதனங்களை நிறுவுவதற்கான இடவசதியின்மை, தேவையான கட்டடப்பணியை ஆரம்பிக்காமை (செப்டம்பர் 2013), மின்கம்பியிடலுக்கான ஒப்பந்தத்தை இறுதி செய்வதில் ஏற்பட்ட காலதாமதம் (டிசம்பர் 2013) போன்ற காரணங்களினால் கொள்முதல் ஆணை வழங்கி (ஏப்ரல் 2012) 18 மாதங்களுக்குப் பிறகும் 17 மருத்துவமனைகளுக்கு Reverse Osmosis Plant உடன் கூடிய 34 இரத்தம் சுத்திகரிக்கும் (Dialysis) சாதனங்கள் வழங்கப்படாதது பதிவேடுகளை ஆய்வு செய்ததில் தெரிய வந்தது. 2014 ஜனவரி மாத இறுதியில் அனைத்து மருத்துவமனைகளுக்கும் இச்சாதனங்கள் வழங்கப்பட்டு விடும் என்று TNHSPன் திட்டஇயக்குநர் தெரிவித்தார் (டிசம்பர் 2013). ஆனால், காலதாமதத்திற்கு எவ்வித காரணமும் தெரிவிக்கப்படவில்லை.

(ii) PACS உடன்கூடிய 30 டிஜிட்டல் X-ray சாதனங்களுக்கான கொள்முதல் ஆணை ஜனவரி 2012ல் வழங்கப்பட்டு சாதனங்கள் ஜூலை 2012 மற்றும் பிப்ரவரி 2013க்கு இடைப்பட்ட காலத்தில் தான் வழங்கப்பட்டிருந்தாலும், மார்ச் 2013லிருந்து தான் நிறுவுவதற்கான இடவசதி வழங்கப்பட்டதால் சாதனங்களை நிறுவி தொடங்கி வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டது என தணிக்கையில் கண்டறியப்பட்டது. 17 மாதங்களுக்குப் பிறகும் கூட இரண்டு அலகுகள் நிறுவப்படாமல் இருந்தன (டிசம்பர் 2013).

(iii) இரண்டாம் நிலை மருத்துவமனைகளுக்கும் சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளுக்கும் ₹ 30.54 இலட்சம் செலவில் 3,818 இரத்த அழுத்த சோதனைக் கருவிகள் (BP Apparatus) வழங்கிட அரசு அளித்த (செப்டம்பர் 2010

மற்றும் ஜனவரி 2011) ஒப்பளிப்புகளின் அடிப்படையில் மூன்றாவது ஒப்பந்தப்புள்ளி கோரலில் இறுதி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கொடுத்த நிறுவனத்திற்கு 2009 BP சோதனைக் கருவிகள் வாங்க கொள்முதல் ஆணையை TNMSC வழங்கியது (ஜனவரி 2012). ஒப்பந்த ஆவணத்தில் கையெழுத்திட 7 பிப்ரவரி 2012க்குள் நிறுவனம் முன்வராததோடு 30 ஏப்ரல் 2013 வரையிலான நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தம் செல்லுபடியாகும் காலத்திற்குரிய ஒப்பந்தம் நிறைவேற்று உத்திரவாதத்தையும் அளிக்கவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்ட கருவிகள் வழங்கும் காலம் (6 மே 2012) முடிவடைந்த பிறகு 16 மே 2012 அன்று ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டது. 18 அக்டோபர் 2012 அன்று வரை செல்லுபடியாகும் ஒப்பந்தம் நிறைவேற்று உத்திரவாதம் நிறுவனத்தால் வழங்கப்பட்டது. இதற்கிடையில், இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக நிறுவனம் சாதனங்கள் எதையும் தங்களிடமிருந்து பெறவில்லை என்று சாதனத்தை உற்பத்தி செய்யும் நிறுவனம் TNMSCக்கு தெரிவித்து (மார்ச் 2012) வழங்காணையை ரத்து செய்யுமாறு கோரியது. 460 BP சோதனைக்கருவிகள் மட்டுமே நிறுவனத்தால் வழங்கப்பட்டன. ஆனால், கொள்முதல் ஆணை தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகியும் இந்நிறுவனத்திற்கெதிராக ஒப்பந்தத்தில் கூறியுள்ளவாறான அபராதம் ஏதும் விதிக்கப்படவில்லை. மீதமுள்ள BP சோதனைக்கருவிகளை வழங்குமாறு இறுதி நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாக (ஜனவரி 2014) TNMSC கூறியது (ஜனவரி 2014). இவ்வாறாக, இத்திட்டத்தில் கூறியுள்ளபடியான நோய் கண்டறியும் சாதனம் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படாமல் இருந்தன.

3.2.5.6 மருத்துவ சாதனங்களை நேராய்வு செய்தல்

உலக வங்கி திட்ட ஆவணத்தின் ஆளுகை மற்றும் பொறுப்புடைமை திட்டத்தின் படி, இத்திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட சாதனங்கள் மற்றும் பொருட்களின் வழங்கலுக்குப் பிந்தைய களநேராய்வுக்கு TNMSCயும் TNHSPயும் பொறுப்பானவையாகும். கீழே கூறியுள்ளவாறு, சாதனங்களின் நேராய்வில் குறைபாடுகள் காணப்பட்ட சில நேர்வுகள் தணிக்கையில் கண்டறியப்பட்டன.

(i) 32 விஷமுறிவு மருத்துவ நிலையங்களுக்கு ₹ 19.20 இலட்சம் செலவில் 64 'L& T planet 10' மாடல் கார்டியாக் மானிட்டர்கள் வாங்க வழங்கப்பட்ட (ஏப்ரல் 2011) ஆணைக்கெதிராக இச்சாதனங்களை வழங்கிய ஒப்பந்ததாரர் வேறொரு உற்பத்தி நிறுவனத்தின் "LNT PLT X" என்ற சாதனத்தை வழங்கினார். வழங்கப்பட்ட சாதனங்கள் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் கூறப்பட்ட குறியீடுகளுக்கு மாறாக இருந்தபோதிலும், சரியான நேராய்வு செய்யப்படாமல் அவை ஒத்துக்கொள்ளப்பட்டு பொருத்தப்பட்டன. பின்னர் உயிரிமருத்துவப் பொறியாளரின் நேராய்வு அறிக்கையின் அடிப்படையில் நிறுவனம் இச்சாதனங்களின் மொத்த மதிப்பையும் அரசுக்குத் திருப்பிக் கட்டியது. இச்சாதனங்களை வழங்கிய நிறுவனத்திற்கெதிராக எவ்வித அபராத நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று TNHSPன் திட்ட இயக்குநர் தெரிவித்தார் (செப்டம்பர் 2013). மருத்துவமனை அதிகாரிகளுடன் தணிக்கை இரண்டு மருத்துவமனைகளை நேராய்வு செய்தபோது இச்சாதனங்கள் இன்னமும் விஷமுறிவு மருத்துவ நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்தது தெரியவந்தது (படம் 3.6).

படம் 3.6: வேலூர் மாவட்டம், குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட தவறான கார்டியாக் மானிட்டரின் மாடல்

படம் **3.7:** வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரிக்கப்படாமல் இருக்கும் PACSக்கான மடிக்கணினிகள்

(ii) PACSஉடன் கூடிய டிஜிட்டல் X-ray கருவிகளைப் பொறுத்தவரை மருத்துவத் தகவல் மேலாண்மை அமைப்புடன் (HMIS) இணைப்பதற்கான மென்பொருள் நிறுவனத்தால் வழங்கப்படவில்லை. TNHSP வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட ஆறு client personal கணினி களையும் வழங்கவில்லை. இச்சாதனங்கள் பொறுத்தப்பட்ட மருத்துவமனைகளில் இந்த அதிநவீன ஊடுகதிர் படிமெடுக்கும் கருவிகள் ஓரளவே பயன்படுத்தப்பட்டது தணிக்கையில் தெரிய வந்தது. டிஜிட்டல் X-ray கருவிகளை HMISஉடன் இணைக்கும் நோக்கமும் நிறைவேறவில்லை. இரண்டு மருத்துவமனைகளில்[14] மருத்துவமனை ஊழியர்களுடன் தணிக்கை நேராய்வு செய்தபோது (ஜூலை மற்றும் நவம்பர் 2013) வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இச்சாதனம் நிறுவப்படாமல் (**படம் 3.7**), சாதனம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து (26 செப்டம்பர் 2012) உபயோகப்படுத்தாமல் இருந்தது கண்டறியப்பட்டது. இரு மருத்துவமனைகளிலும் இயக்க அமைப்பு (operating system) மென்பொருள் அதற்கு தகுந்தாற்போல் இல்லாததால் HMISஉடன் PACSஐ இணைக்க முடியவில்லை. அதற்கான மென்பொருள் நிறுவுவது ஜனவரி 2014வாக்கில் முடிவடைந்து விடும் என்று பதிலில் கூறப்பட்டது.

வழங்கப்பட்ட மருத்துவ சாதனங்கள் தகுதியுடைய நபர்களால் நேராய்வு செய்யப்படாததும், பல நேர்வுகளில் நேராய்வும் நிறுவுதலும் முழுமை பெறாததும் தணிக்கையின் சோதனைச் சரிபார்ப்பில் தெரிய வந்தது. இத்தகைய விடுபாடுகளுக்கான காரணங்களை தெரிவிக்காமல், மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்ட சாதனங்களை நேராய்வு செய்யும்படி உயிரிமருத்துவப் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக TNHSPன் திட்ட இயக்குநர் பதிலளித்தார் (செப்டம்பர் 2013).

3.2.5.7 மருத்துவ சாதனங்களை உபயோகிக்காமை

கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு, மும்முனை மின்னிணைப்பு மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் இல்லாமையால் கொள்முதல் செய்யப்பட்ட சாதனங்கள் உபயோகிக்கப்படாமல் இருந்தது தெரியவந்தது.

படம் **3.8:** வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பயன்படுத்தப்படாமலிருந்த டிஜிட்டல் எக்ஸ்ரே சாதனம்

(i) வேலூர் மற்றும் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், சோதனை ஓட்டம் செய்த பிறகும் தேவையான மின் சக்தி வழங்கப்படாததால், ஓராண்டுக்கும் மேலாக PACSஉடன் கூடிய டிஜிட்டல் X-ray சாதனங்கள் (மதிப்பு : ₹ 2.20 கோடி) பயன்படுத்தப்படாமல் இருந்தது (**படம் 3.8**) தணிக்கையில் கண்டறியப்பட்டது.

14 வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட தலைமையிட மருத்துவமனை

(ii) 17 சோதனைச் சரிபார்ப்பு செய்யப்பட்ட அரசு மருத்துவமனைகளில் பயிற்சி பெற்ற மருத்துவர் இல்லாததால் ₹ 3.93 இலட்சம் செலவில் வாங்கப்பட்ட (பிப்ரவரி - ஜூன் 2012ல் 13 அலகுகள் மற்றும் ஜூன் 2013ல் நான்கு அலகுகள்) க்ரியோதெராபி அலகுகள் **(படம் 3.9)** பயன்படுத்தப்படவில்லை.

படம் **3.9:** அரசு மருத்துவமனையில் பயிற்சி பெற்ற மருத்துவர் இல்லாததால் பயன்படுத்தப்படாத க்ரியோதெராபி அலகு

இதனால் ₹ 2.24 கோடி செலவில் வாங்கிய விலை உயர்ந்த சாதனங்கள் பயன்படுத்தப்படாதது மட்டுமல்லாமல் கண்டறியும் சேவைகள் பொதுமக்களுக்கு போய் சேரவில்லை.

3.2.6 முடிவுரை

ஒப்பந்தப்புள்ளிகளை ஆய்வு செய்து இறுதி செய்ததிலும் ஒப்பந்தம் வழங்குவதிலும் ஏற்பட்ட காலதாமதம், காலதாமதத்தினால் ஏற்பட்ட தவிர்த்திருக்கக்கூடிய செலவினம், கொள்முதல் செய்யப்பட்ட மருத்துவ சாதனங்களை திட்டத்தில் சேராத வேறு மருத்துவமனைகளுக்கு வழங்கியமை, ஒப்புதலளிக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தில் சேர்க்கப்பட்ட சில சாதனங்களை கொள்முதல் செய்யாமை போன்ற குறைபாடுகள் தணிக்கையில் கண்டறியப்பட்டன. மேலும், கொள்முதல் செய்யப்பட்ட சாதனங்கள் இடவசதியில்லாததால் அவை மருத்துவமனைகளில் நிறுவப்படாமல் இருந்ததும், நிறுவப்பட்ட சாதனங்கள் மருத்துவமனைகளில் உபயோகப்படுத்தப்படாமல் இருந்ததும் உலக வங்கி உதவி பெற்ற இந்த கூடுதல் நிதியுதவித் திட்டத்தின் நோக்கங்கள் முழுமையாக நிறைவேறுவதை தாமதப்படுத்திவிட்டன.

இத்தணிக்கைக் குறிப்புகள் அரசுக்கு அக்டோபர் 2013ல் தெரிவிக்கப்பட்டன; அரசிடமிருந்து பதில் இன்னமும் பெறப்படவில்லை (டிசம்பர் 2013).

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

3.3 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்

3.3.1 முன்னுரை

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் (DMRMBS) வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களில் வாழும் கர்ப்பிணிப் பெண்களின் நலனிற்காக தமிழக அரசால் அமல்படுத்தப்பட்டது (செப்டம்பர் 2006). இத்திட்டத்தின் கீழ், ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்தான உணவை உட்கொண்டு எடை குறைவில்லாத குழந்தையை ஈன்றெடுக்கவும், பிரசவ காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடு செய்யும் வகையிலும் ₹ 6,000 பேறுகால நிதியுதவியாக வழங்கப்பட்டது. அரசு நல்வாழ்வு நிலையங்களில் பிரசவிக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கு 1 ஜூன் 2011 முதல் பேறுகால நிதியுதவி ₹ 6,000லிருந்து ₹ 12,000ஆக தமிழ்நாடு அரசால் உயர்த்தப்பட்டது. பண உதவி, நிபந்தனை அடிப்படையில் மூன்று தவணைகளில்[15] வழங்கப்பட்டு அவை இரண்டு பிரசவங்களுக்கு மட்டும் தரப்பட்டது.

15 பேறு காலத்தின் ஏழாவது மாதத்தில், மகப்பேற்றிற்குப் பிறகு மற்றும் குழந்தைக்கு மூன்று முறை தடுப்பூசி போடப்பட்ட பிறகு

3.3.2 நிறுவனக் கட்டமைப்பு

இத்திட்டம், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநரால் (DPH&PM) மாநில அளவில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாவட்ட அளவில், சுகாதாரப் பணி துணை இயக்குநர்கள் (DDHSs) திட்டத்தினை செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பாளர்கள் ஆவர். மாவட்டங்களில் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி, DDHSஆல் வட்டார மருத்துவ அலுவலர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களின் வட்டார மருத்துவ அலுவலர்கள் மற்றும் சென்னை மாநகராட்சியின் மண்டல மருத்துவ அலுவலர்கள் பயனாளிகளுக்கு நிதியுதவி ஒப்பளிப்பதற்கு அதிகாரம் பெற்றவர்கள் ஆவர்.

3.3.3 தணிக்கையின் பரப்பு மற்றும் தணிக்கைக் குறிக்கோள்கள்

தணிக்கையில் 43 சுகாதார மாவட்டங்களில் எளிய தொடர்பற்ற மாதிரி முறைகளின் அடிப்படையில் மூன்று[16] தேர்வு செய்யப்பட்டு, 2011-12 மற்றும் 2012-13 ஆண்டிற்கான திட்டச் செயல்பாடு தொடர்பான ஆவணங்கள் சோதனை ஆய்வு செய்யப்பட்டன. மேலும், ஈரோடு மற்றும் மதுரையிலுள்ள 27 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் எட்டு சென்னை மாநகராட்சியில் உள்ள ஏழு மண்டலங்களில் இரண்டு மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநரகம் ஆகியவற்றில் இத்திட்டம் தொடர்பான ஆவணங்கள் மே முதல் ஆகஸ்ட் 2013 வரை சோதனை ஆய்வு செய்யப்பட்டன.

திட்டத்தின் கீழ் யதார்த்தமான வருடாந்திர இலக்குகள் சரியாக நிர்ணயிக்கப்பட்டதா, இலக்கிடப்பட்ட பயனாளிகள் சரியான முறையில் அடையாளம் காணப்பட்டனரா, வழங்கப்பட்ட நிதி திறம்பட பயன்படுத்தப்பட்டதா, உரிய நேரத்தில் பயனாளிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டதா மற்றும் திட்டச் செயல்பாடு கண்காணிப்பு பயனுள்ளதாக இருந்தனவா போன்றவை குறித்து மதிப்பாய்வு செய்வதே தணிக்கையின் நோக்கங்களாகும். தணிக்கையில் கண்டறிந்தவை பின்வரும் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

தணிக்கையில் கண்டறிந்தவை

3.3.4 நிதிச் செயல்திறன்

(i) மாநில அளவில் DMRMBSன்கீழ் 2011-13 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு விவரங்கள் **அட்டவணை 3.9**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.9 : வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி மற்றும் செலவுகளின் விவரங்கள்

(₹ கோடியில்)

ஆண்டு	வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு			செலவினம்	மொத்த ஒதுக்கீட்டில் சேமிப்பு	மூல ஒதுக்கீட்டில் சேமிப்பு
	மூல ஒதுக்கீடு	துணை மானிய ஒதுக்கீடு	மொத்தம்			
(1)	(2)	(3)	(4)	(5)	(6) (4-5)	(7) (2 - 5)
2011-12	595.72	61.05	656.77	531.64	125.13 (19)	64.08
2012-13	720.00	11.00	731.00	642.57	88.43 (12)	77.43
மொத்தம்	**1,315.72**	**72.05**	**1,387.77**	**1,174.21**	**213.56**	**141.51**

மூல ஒதுக்கீட்டில் சேமிப்பின் சதவீதத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன
(ஆதாரம்: நிதியொதுக்க கணக்குகள்)

[16] சென்னை, ஈரோடு மற்றும் மதுரை

மூல ஒதுக்கீட்டில் முறையே ₹ 64.08 கோடி மற்றும் ₹ 77.43 கோடி சேமிப்பு இருந்ததால் 2011-12 மற்றும் 2012-13 ஆகிய ஆண்டுகளில் துணை மானிய ஒதுக்கீடான ₹ 61.05 கோடி மற்றும் ₹ 11 கோடி தேவையற்றதானது என்பது நிரூபணமானது. DPH&PM எய்தத்தக்கதல்லாத இலக்குகளை நிர்ணயித்தது மற்றும் கணிசமான பயனாளிகள் இரண்டு மற்றும் மூன்றாம் தவணைகளை பயன்படுத்தாதது ஆகியவையே இவ்விரண்டாண்டுகளில் பெரிய அளவில் மீதம் (₹ 125.13 கோடி மற்றும் ₹ 88.43 கோடி) ஏற்படுவதற்கு காரணமாகும் என்பதை பத்தி 3.3.5ல் விவரிக்கப்பட்டுள்ளது.

(ii) சோதனை ஆய்வு செய்யப்பட்ட சுகாதார மாவட்டங்களில் 2011-13 ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் விவரங்கள் **அட்டவணை 3.10**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.10 : சோதனை ஆய்வு செய்யப்பட்ட சுகாதார மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதி மற்றும் செலவுகளின் விவரங்கள்

(₹ கோடியில்)

ஆண்டு	மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்ட நிதி	செலவினம்	பயன்படுத்தப்படாத தொகை/சேமிப்பு
2011-12	79.77	63.85	15.92
2012-13	85.96	76.99	8.97
மொத்தம்	**165.73**	**140.84**	**24.89**

(ஆதாரம்: DDHS மற்றும் ZMOக்களால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

சோதனை ஆய்வு செய்யப்பட்ட சுகாதார மாவட்டங்களில் வழங்கப்பட்ட நிதி, 2011-13ல் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

(iii) தமிழ்நாடு நிதிவிதித் தொகுப்பு பிரிவுக் கூறு 94ன்படி, தேவைப்பாட்டிற்கு முன்கூட்டியே நிதி எடுக்கப்படக்கூடாது. கணினி மூலம் தயாரிக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு, பட்டிகள் சமர்ப்பித்து, தொகை எடுக்கப்பட்டு, பயனாளிகளின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் வரவு வைப்பதற்காக தொகை வங்கிகளுக்கு மாற்றம் செய்ய வட்டார மருத்துவ அலுவலர்களுக்கு உத்தரவு இடப்பட்டது (நவம்பர் 2011).

கர்ப்பம், இளம்சிரார் Cohort கண்காணிப்பு மதிப்பாய்வு முறை[17] (PICME) மூலம் பயனாளிகளின் பட்டியல் உருவாக்கப்பட்ட பின்னர், ECS மூலம் பயனாளிகளின் கணக்குகளுக்கு நிதி மாற்றம் செய்வதற்காக கருவூலத்தில் பட்டிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்றும் முன்பணம் எடுக்கப்படக்கூடாது என்றும் DPH&PM வலியுறுத்தினார் (ஏப்ரல் 2012).

இருப்பினும், சுகாதார துணை இயக்குநர், மதுரை, 2011-12 ஆண்டிற்கான மதுரை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி வழங்குவதற்காக, ₹ 2.56 கோடியை வங்கி கணக்கிலிருந்து முன்பணமாக எடுத்து அத்தொகையை மதுரை மாநகராட்சி ஆணையருக்கு விடுவித்தார் (3 ஏப்ரல் 2012). PICME எண்கள் வழங்குவதில் தாமதம் மற்றும் பயனாளிகளின் வங்கிக் கணக்குகள் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டதாலும் அத்தொகை

[17] தாய்மார்களை பேறு காலத்திற்கு பின்னரும், பிறந்த குழந்தைகளை ஓராண்டு வரையிலும் கண்காணிப்பதற்கென துறையால் பயன்படுத்தப்பட்ட ஒரு கணினி மென்பொருள்

மாநகராட்சியால் பயன்படுத்தப்படாமல் இருந்தது. DPH&PMன் உத்தரவின் பேரில், ஆணையர் மொத்தத் தொகையையும் அரசுக் கணக்கில் செலுத்தினார் (20 ஏப்ரல் 2012). ஆதலால், 2011-12ஆம் ஆண்டில், மதுரை சுகாதார மாவட்டத்திலுள்ள ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் இருந்தது.

3.3.5 செயல் இலக்கு செயல்திறன்

(i) மாநிலத்தில், இத்திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்களை உள்ளடக்கி DPH&PMஆல் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு மற்றும் அதற்கு எதிராக எய்தப்பட்ட விவரங்கள் **அட்டவணை 3.11**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.11 : மாநிலத்திற்கான இலக்குகள் மற்றும் எய்தப்பட்டவைகளின் விவரங்கள்

ஆண்டு	மதிப்பிடப் பட்ட கர்ப்பிணிப் பெண்கள் (பிறப்பிற்கு முந்தைய இலக்கு)	இலக்கிடப் பட்ட பயனாளிகள் (பேறு காலத்திற்கு முந்தைய இலக்கில் 60 சதவீதம்)	எய்தப் பட்டவை	முதல் தவணை	இரண்டாம் தவணை	மூன்றாம் தவணை
2011-12	11,97,960	7,18,776	6,73,093 (94)	கிடைக்கப்பெறவில்லை		
2012-13	11,88,878	7,13,325	6,64,469 (93)	6,64,469	4,22,577 (64)	2,90,621 (44)
மொத்தம்	**23,86,838**	**14,32,101**	**13,37,562**			

(அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் எய்தப்பட்டவையின் விகிதத்தை சுட்டிக்காட்டுகின்றன)
(ஆதாரம்: DPH&PMஆல் அளிக்கப்பட்ட விவரங்கள்)

ஒவ்வொரு ஆண்டும், மாநிலம் முழுவதிலுமுள்ள, வறுமைக்கோட்டிற்கு மேலேயுள்ள குடும்பங்களிலுள்ள கர்ப்பிணிப் பெண்கள் உட்பட, பிறப்பின் முந்தைய பாதுகாப்பிற்கு வரும் கர்ப்பிணிப் பெண்களின் இலக்கின் எண்ணிக்கையில் 60 சதவீத கர்ப்பிணிப் பெண்கள் அரசு சுகாதார நிலையங்களில் சுகாதாரச் சேவைகள் பெறவும் மற்றும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறவும் இலக்குகளாக எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

இத்திட்டத்தின் கீழ் அதிக அளவில் கர்ப்பிணிப் பெண்களை உட்கொணர்வதற்காக துணை அதிகாரிகளுக்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன என்று DPH&PM தெளிவு படுத்தினார்.

அட்டவணை 3.11ல் கண்டவாறு, 36 சதவீதம் பயனாளிகள் DMRMBSன் கீழ் முதல் தவணை வாங்கிய போதிலும், அரசு மருத்துவமனைகள் அல்லாத பிற மருத்துவமனைகளில் தங்கள் பிரசவத்தினை மேற்கொண்டுள்ளார்கள். எனவே, அடுத்தடுத்த தவணைகளில் உதவிகள் பெறவில்லை.

(ii) சோதனை ஆய்வு செய்யப்பட்ட சுகாதார மாவட்டங்களில் இலக்குகள் மற்றும் அதற்கெதிராக எய்தப்பட்டவை **அட்டவணை 3.12**ல் கொடுக்கப் பட்டுள்ளன.

அட்டவணை 3.12 : இலக்குகள் மற்றும் எய்தப்பட்டவை (சோதனை ஆய்வு செய்யப்பட்ட மாவட்டங்கள்)

ஆண்டு	இலக்கு	எய்தப்பட்டவை		
		முதல் தவணை	இரண்டாம் தவணை	மூன்றாம் தவணை
சென்னை				
2011-12	48,000	23,895 (50)	18,946 (79)	15,646 (65)
2012-13	43,800	27,957 (64)	22,074 (79)	19,883 (71)
மொத்தம்	**91,800**	**51,852 (56)**	**41,020 (79)**	**35,529 (69)**
ஈரோடு				
2011-12	19,554	11,216 (57)	7,184 (64)	4,755 (42)
2012-13	19,200	14,921 (78)	10,516 (70)	9,775 (66)
மொத்தம்	**38,754**	**26,137 (67)**	**17,700 (68)**	**14,530 (56)**
மதுரை				
2011-12	33,330	18,462 (55)	14,363 (78)	5,809 (31)
2012-13	33,300	17,630 (53)	16,130 (91)	14,647 (83)
மொத்தம்	**66,630**	**36,092 (54)**	**30,493 (84)**	**20,456 (57)**

(அடைப்புக்குறிக்குள் உள்ள இலக்கங்கள் எய்தப்பட்டவையின் விகிதத்தை சுட்டிக்காட்டுகின்றன)
(ஆதாரம்: சென்னை மாநகராட்சி, DDHS ஈரோடு மற்றும் மதுரை மாவட்டங்களால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

சோதனை ஆய்வு செய்யப்பட்ட மாவட்டங்களில், முதல் தவணைக்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளுக்கெதிராக எய்தப்பட்டவை 54 முதல் 67 சதவீதமாக இருந்தது. முதல் தவணை பெற்ற பயனாளிகளில், 68 முதல் 84 சதவீதம் பயனாளிகள் மட்டுமே இரண்டாம் தவணையைப் பெற்றனர் மற்றும் 56 முதல் 69 சதவீதம் பயனாளிகள் மூன்றாம் தவணையைப் பெற்றனர். அரசு மருத்துவமனைகள் அல்லாத பிற மருத்துவமனைகளில் சில கர்ப்பிணிப் பெண்கள் பிரசவித்ததால் இரண்டு மற்றும் மூன்றாம் தவணைகளின் வழங்கீட்டு நேர்வுகளின் எண்ணிக்கை குறைந்து காணப்பட்டது என்று சோதனை ஆய்வு செய்யப்பட்ட மாவட்டங்களின் சுகாதார பணி துணை இயக்குநர்கள் தெரிவித்தனர்.

3.3.6 நிதியுதவி வழங்குவதில் தாமதம்

ஏழை கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் உடல்நலனை மேம்படுத்த மற்றும் பண உதவிகள் உரிய நேரத்தில் அனைத்து தகுதியானவர்களுக்கும் சென்றடைய உறுதி செய்வது இத்திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். பேறு காலத்திற்கு முந்தைய சுகாதார சேவைகளை பயன்படுத்திக் கொண்ட ஒவ்வொரு கர்ப்பிணிப் பெண்ணிற்கும் முதல் தவணையான ₹ 4,000 கர்ப்ப காலத்தின் ஏழாம் மாதம் வழங்கப்படவேண்டும். இரண்டாம் தவணையான ₹ 4,000 அரசு சுகாதார நிறுவனங்களில் ஈன்றெடுத்த தாய்க்கு பிரசவத்திற்குப் பிறகும், மூன்றாம் தவணையான ₹ 4,000 மூன்றாம் முறையாக குழந்தைக்கு தடுப்பூசி போடப்பட்ட பின்னரும் வழங்கப்படவேண்டும்.

தணிக்கையில் சோதனை சரிபார்க்கப்பட்ட 8,368 நேர்வுகளில் (2011 மற்றும் 2012 ஆண்டுகளில் செப்டம்பர் முதல் நவம்பர் மாதத்தில் பிரசவம் நடந்த நேர்வுகள்) முதல் தவணை உதவி வழங்குவதில் 1 முதல் 26 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டது கண்டறியப்பட்டது. முதல் தவணை கர்ப்ப காலத்தின் ஏழாவது மாதத்தில் கொடுக்கப்படவேண்டும் என்று இருந்தபோதிலும் 7,965 பயனாளிகளுக்கு பிரவசத்திற்குப் பிறகே கொடுக்கப்பட்டது. இதே போல், இரண்டாம் தவணை பிரசவத்திற்கு பிறகு உடனடியாக கொடுக்கப்படவேண்டும் என்றாலும், 7,949 நேர்வுகளில் 1 முதல் 23 மாதங்கள் தாமதத்திற்குப் பிறகே வழங்கப்பட்டது கண்டறியப்பட்டது **அட்டவணை 3.13**ல் விவரிக்கப்பட்டுள்ளவாறு:

அட்டவணை 3.13: நிதியுதவி வழங்குவதில் காலதாமதத்தின் விவரங்கள்

மாவட்டம்	முதல் தவணை		இரண்டாம் தவணை	
	நேர்வுகளின் எண்ணிக்கை	தாமதம் மாதங்களில்	நேர்வுகளின் எண்ணிக்கை	தாமதம் மாதங்களில்
சென்னை	4,364	1 முதல் 25 வரை	4,227	1 முதல் 22 வரை
ஈரோடு	1,739	1 முதல் 26 வரை	1,580	1 முதல் 20 வரை
மதுரை	2,265	1 முதல் 26 வரை	2,142	1 முதல் 23 வரை
மொத்தம்	**8,368**		**7,949**	

(ஆதாரம் : PICMEயிடமிருந்து பெற்ற விவரங்கள்)

வட்டார மருத்துவ அதிகாரிகள்/மண்டல மருத்துவ அதிகாரிகளிடம் உதவித்தொகை வழங்குவதில் தாமதத்தின் காரணங்களை தணிக்கையில் கோரியபோது, 2011-12க்கான நிதி நவம்பர் 2011 மற்றும் ஜனவரி 2012ல் தான் கிடைக்கப் பெற்றது என்று அவர்கள் பதிலளித்தனர். இருப்பினும், 2012-13 ஆண்டிலும் தாமதம் காணப்பட்டது மற்றும் சில நேர்வுகளில் அத்தாமதம் இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் இருந்தது. உதவித் தொகை வழங்குவதில் இயல்பு மீறிய தாமதங்கள் ஏற்பட்டதால் பிரசவ காலத்தில் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்வது மற்றும் எடை குறைவான குழந்தையை பெற்றெடுப்பதைத் தவிர்க்கும் வண்ணம் ஊட்டச்சத்தான உணவு பெறுவதன் நோக்கமும் தோல்வியுற்றது.

3.3.7 நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள்

சோதனை ஆய்வு செய்யப்பட்ட இரண்டு[18] சுகாதார மாவட்டங்களில், 2010-11 ஆண்டில் 1,276 விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்தது என்றாலும், வட்டார மருத்துவ அதிகாரிகள்/மண்டல மருத்துவ அதிகாரிகள் பயன்படுத்தாத மொத்தத் தொகையான ₹ 25.83 இலட்சத்தைத் திரும்பச் செலுத்தினர். கூடுதல் நிதி வழங்கப்படாத காரணத்தால் டிசம்பர் 2013 வரை விண்ணப்பங்கள் நிலுவையில் இருந்தன.

3.3.8 உதவித்தொகைகளை பயனாளிகளின் கணக்குகளில் வரவு வைப்பதில் தாமதம்

சென்னை மாநகராட்சியிலுள்ள தேனாம்பேட்டை மண்டலத்தால், 2012-13 ஆண்டில் மின்னணு கணக்குத் தீர்வை மூலம் 10,968 பயனாளிகளுக்கு ₹ 4.39 கோடி உதவித்தொகை வங்கிக்கு விடுவிக்கப்பட்ட போதிலும், 1,183 பயனாளிகள் தொடர்பான ₹ 47.32 இலட்சம் பயனாளிகளின் கணக்கில் வரவு வைக்கப்படாமல் செப்டம்பர் 2013 நிலவரப்படி, வங்கியிடம் இருந்தது என்பது முதன்மை வங்கியிடமிருந்து பெற்ற (அக்டோபர் 2013) வங்கி அறிக்கைகள் மற்றும் தகவலைக் கூர்ந்தாய்வு செய்ததில் கண்டறியப்பட்டது. மண்டல அலுவலகத்தில் அளிக்கப்பட்ட விவரங்கள் முதன்மை வங்கியின் விவரங்களுடன் சரிபார்க்கப்படாதது தான் வரவு வைக்கப்படாததற்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. ஆக, 1,183 பயனாளிகளுக்கு மகப்பேறு உதவித்தொகை இத்திட்டத்தின் கீழ் சரியான நேரத்தில் அளிக்கப்படவில்லை.

மேலும், வங்கி, 660 பயனாளிகளுக்கு இரண்டு முறை வரவு வைத்ததன் காரணமாக ₹ 26.40 இலட்சம் கூடுதலாக மாற்றம் செய்தது. இதில், ₹ 14.69 இலட்சம் மீளப் பெறப்பட்டது. மீதத் தொகையான ₹ 11.71 இலட்சம் மீளப்

18 சென்னை மற்றும் ஈரோடு

பெறப்பட்டு இத்திட்டத்திற்கென மண்டலத்தால் வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.

3.3.9 கண்காணிப்பு

திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி, செக்டார் சுகாதார செவிலியர்/சமுதாய சுகாதார செவிலியர்கள் பயனாளிகளின் அனைத்து விவரங்களையும் சரி பார்க்க வேண்டும் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார மருத்துவ அதிகாரிகள்/மண்டல மருத்துவ அதிகாரிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சோதனை நடத்த வேண்டும். எனினும், அத்தகைய சோதனைகள் நடத்தப்பட்டது என்பதை சரிபார்ப்பதற்கான ஆவணங்களை சம்பந்தப்பட்ட வட்டார மருத்துவ அதிகாரிகள்/மண்டல மருத்துவ அதிகாரிகள் தணிக்கைக்கு அளிக்கவில்லை.

திட்டத்தின் பலன் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டதா என்று உறுதி செய்ய மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சுகாதாரப் பணி துணை இயக்குநர்கள் தணிக்கை மற்றும் ஆய்வு மேற்கொள்ளவேண்டும் என்று அரசு உத்தரவிட்டது (செப்டம்பர் 2006). மேலும், DPH&PM, நிதி ஒப்புதல் வழங்கும் போது, மாவட்ட தணிக்கைக்குழுக்கள் அனைத்து வட்டார ஆரம்ப சுகாதார மையங்களிலும் உள்ள கணக்கு முறையை இரு வாரங்களுக்கு ஒரு முறை முற்றிலும் சரிபார்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார். எனினும், சோதனை ஆய்வு செய்யப்பட்ட மாவட்டங்களில் தணிக்கைக் குழு அமைக்கப்படவில்லை என்று தணிக்கையில் தெரியவந்தது.

3.3.10 முடிவுரை

ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு பணஉதவி வழங்குவதற்கென அரசு 2011-13 காலத்தில் ₹ 1,174.21 கோடி செலவு செய்தது. செயல் இலக்குகள் இயல்பு மீறிய வகையில் நிர்ணயிக்கப்பட்டதால் வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கத்தில் பெரும் மீதங்கள் ஏற்பட்டன. DMRMBSன் கீழ் முதல் தவணை நிதியுதவி பெற்ற பயனாளிகளில் 36 சதவீதத்தினர் அரசு மருத்துவமனை அல்லாத பிற மருத்துவமனைகளில் குழந்தையை ஈன்றதால் அடுத்த தவணைகளை பெறவில்லை. பண உதவி அளிப்பதில் ஒரு மாதம் முதல் 26 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டது என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

மேற்கூறிய தணிக்கைக் குறிப்புகள் அரசுக்கு நவம்பர் 2013ல் தெரிவிக்கப்பட்டது; மறுமொழி ஏதும் பெறப்படவில்லை (டிசம்பர் 2013).

3.4 மிகைக் கொடுப்புகள்/வீணான மற்றும் பயனற்ற செலவினம்

வருவாய், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைகள்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்

3.4.1 தற்காலிகத் தங்குமிடங்கள் கட்டியதில் நேர்ந்த வீண் செலவினம்

குடிசைப்பகுதி குடும்பங்களை தங்க வைக்கும் பொருட்டு ₹ 1.83 கோடி செலவில் கட்டப்பட்ட தற்காலிகத் தங்குமிடங்கள் மூன்றாண்டுகளுக்கும் மேலாக யாரும் குடியேறாமல் இருந்து பின்னர் இடிக்கப்பட்டதால் கட்டுமானச் செலவினம் வீணானது.

சென்னை, மெரினாவில், கட்டுமானம் பலமிழந்தும் இடிந்து விழக் கூடிய நிலையிலும் இருந்த 2,862 குடிசைக் குடியிருப்புகளை இடித்து விட்டு, உலக வங்கி

உதவி பெற்ற அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின் (ETRP) கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ₹ 128.10 கோடியை ஒப்பளிப்பு செய்தது (டிசம்பர் 2006). மறுகட்டுமானம் நடைபெறும் காலத்தில் குடிசைப் பகுதி குடும்பங்களை தங்க வைப்பதற்காக 3,636 தற்காலிகத் தங்குமிடங்களைக் கட்டும் பொருட்டு, அரசு ₹ 12.84 கோடியையும் ஒப்பளிப்பு செய்தது (டிசம்பர் 2006 மற்றும் பிப்ரவரி 2008). தற்காலிகத் தங்குமிடங்களை ₹ 12.98 கோடி செலவில் கட்டுவதற்கான மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் (TNSCB) தலைமைப் பொறியாளர் தொழில்நுட்ப ஒப்பளிப்பை வழங்கினார் (மார்ச் 2008).

நான்கு வெவ்வேறு தலங்களில்[19], 2,159 தங்குமிடங்கள் (சிப்பம் I) கட்டுவதற்கான ₹ 12.46 கோடிக்கான[20] பணியாணை ஓர் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு (நவம்பர் 2008), ₹ 9.78 கோடி செலவில் 1,532 தங்குமிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன (மார்ச் 2010). பழைய குடியிருப்புகளில் வசித்து வந்தவர்கள் வீட்டு வசதி திட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் தற்காலிகத் தங்குமிடங்களுக்கு மாற மறுத்ததால், 1,532 தங்குமிடங்களில் 300 தங்குமிடங்கள், மார்ச் 2010 முதல் காலியாக இருந்தன.

TNSCB பதிவேடுகளை ஆய்வு செய்தபோது (ஏப்ரல் 2013), தற்காலிக தங்குமிடங்களுக்கு மாற்றப்படவேண்டிய குடும்பங்களை, அவர்களின் விருப்பத்தை எழுத்து பூர்வமாக பெற்றுக் கொண்டபின் அடையாளம் கண்டு, உள்ளபடியான தங்குமிடங்களின் எண்ணிக்கையை ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் சேர்க்குமாறு ETRPயின் திட்ட இயக்குநர் மற்றும் TNSCB ஆகியோரை உலக வங்கி வலியுறுத்தியிருப்பது (பிப்ரவரி மற்றும் செப்டம்பர் 2007) தெரிய வந்தது. ஒப்பந்தப்புள்ளி ஆவணம் பரிசீலிக்கப்படும் முன்னரே, பயனாளிகளின் முழுப்பட்டியலை அனுப்புமாறும், உலகவங்கி TNSCBஐ கேட்டுக் கொண்டது. எனினும், மறுகட்டமைப்புத் திட்டத்தை ஏற்பதில் பயனாளிகளின் ஒத்துழையாமை காரணமாக TNSCBயால் அவர்களது விருப்பத்தை எழுத்து பூர்வமாக பெற இயலவில்லை. பயனாளிகளின் பட்டியல் மட்டுமே இறுதி செய்யப்பட்டு ஆகஸ்ட் 2009ல் வெளியிடப்பட்ட அந்த நேரத்திலும், அதற்குப் பின்னரும் கூட, டுமிங்குப்பம் மற்றும் செல்வராஜபுரம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் பழைய குடியிருப்புகளை காலி செய்ய மறுத்தனர். எனவே, இவ்விரு பகுதிகளில் நிரந்தரக் குடியிருப்புகள் கட்டும் பணி ETRPயிலிருந்து நீக்கப்பட்டது (டிசம்பர் 2010). குடியேறாத தற்காலிகத் தங்குமிடங்கள் TNSCBயால் இடிக்கப்பட்டன (ஏப்ரல் 2013).

இவ்வாறாக, திட்டத்தை ஏற்பதற்கான தங்களது விருப்பத்தை, அங்கு குடியிருப்போர் எழுத்து பூர்வமாக அளிக்காத பட்சத்தில், மறுகட்டமைப்புத் திட்டம் இறுதி செய்யப்படும் முன்னரே தற்காலிகத் தங்குமிடங்கள் கட்டுவதற்கு TNSCB மேற்கொண்ட முன்கூட்டிய நடவடிக்கையானது மதிநுட்பம் வாய்ந்ததல்ல. அங்கு ₹ 1.83 கோடி[21] செலவில் கட்டப்பட்ட தங்குமிடங்கள் மூன்றாண்டுகளுக்கும் மேலாக யாரும் குடியேறாமல் இருந்து, பிறகு அவை இடிக்கப்பட்டதால் கட்டுமானத்திற்கு ஆன செலவினம் வீணானது.

இது குறித்து அரசின் பார்வைக்குக் கொண்டு சென்ற போது, நிரந்தரக் குடியிருப்புத் திட்டத்திற்கு அப்பகுதி மக்களை மனமொப்பச் செய்து அவர்களது விருப்பத்தைப்

---

19 நொச்சிக்குப்பம் மற்றும் நொச்சி நகர் (258 மற்றும் 1126 தங்குமிடங்கள்), செல்வராஜபுரம் மற்றும் டுமிங்குப்பம் (490 மற்றும் 285 தங்குமிடங்கள்)

20 2008-09 ஆண்டு விலைவீத அட்டவணை அடிப்படையிலான விலையுடன் ஒப்பந்தப்புள்ளிக்கு 29.35 சதவீதம் அதிகம்

21 300 தங்குமிடங்களுக்கான விகிதாச்சார செலவினம் (₹ 9.78 கோடி x 300/1532 = ₹ 1.92 கோடி - ₹ 0.09 கோடி- இடிக்கப்பட்ட பொருட்களை விற்றதனால் கிடைத்த வருவாய்)

பெற்று விடலாம் எனக் கருதி தற்காலிகத் தங்குமிடங்கள் கட்ட ஆரம்ப நிலையில் முன்மொழியப்பட்டு, அதற்கு, திட்டம் அடங்கிய பகுதிகளிலுள்ள மக்களின் வாய்மொழி ஒப்புதல்களும் ஆரம்ப நிலையில் பெறப்பட்டன என்று வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலர் தெரிவித்தார் (நவம்பர் 2013). ஆனால், தற்காலிகத் தங்குமிடங்களை குறுகிய காலத்திற்குள்ளாகவே கட்டி முடித்து விடலாம் என்பதால் நிரந்தரக் குடியிருப்புத் திட்டம் இறுதி செய்யப்படும் வரை தற்காலிகத் தங்குமிடங்களைக் கட்ட TNSCB காத்திருந்திருக்கலாம்.

3.5 தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்/கூடுதல் செலவினம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

3.5.1 தவிர்த்திருக்கக்கூடிய செலவினம்

மாநில மருத்துவ உதவி சங்கம், தேவையான ஆவணங்களை குறித்த காலத்தில் மத்திய அரசிடம் அளிக்கத் தவறியால் மத்திய அரசின் நிதியுதவியாக ₹ 12 கோடி பெறப்படாமல் போனதுடன் மாநில நிதியிலிருந்து ₹ 9.50 கோடி தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினமானது.

மாநில அளவில் ஒரு நிதியம் உருவாக்கப்படுவதன் மூலம் ஏழை மக்களும்[22] தீவிர நோய்களுக்குத் தனிச் சிறப்பு வாய்ந்த சிகிச்சை பெற ஏதுவாக அவர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் ஒன்றை மத்திய சுகாதரம் மற்றும் குடும்பநலத் துறை அறிமுகப்படுத்தியது (டிசம்பர் 1996). ஓராண்டில் மாநில அரசின் பங்களிப்புத் தொகையில் 50 சதவீதம் அளவுக்கு, அதிகபட்சமாக ₹ 5 கோடி வரை மாநிலங்களுக்கு மத்திய அரசு மானியமாக வழங்கப்படவேண்டும். தமிழ்நாடு மாநில மருத்துவ உதவி நிதியம் (நிதியம்) அமைத்த (மார்ச் 1997) தமிழ்நாடு அரசு, மாநில மருத்துவ உதவிச் சங்கம் (சங்கம்) எனும் அமைப்பையும் உருவாக்கியது (மார்ச் 1998). மத்திய அரசு தனது ஈடான பங்களிப்பை வழங்குவது (i) செயலாக்க அறிக்கை, (ii) பயன்பாட்டுச் சான்றிதழ்கள், (iii) தணிக்கைச் சான்றிதழ்கள், (iv) பயனாளிகளின் பட்டியலை மாநில அளவில் முன்னிலை வகிக்கும் செய்தித்தாளில் வெளியிடுவது மற்றும் மாநிலத்தின் பங்களிப்புத் தொகையை நிதியத்தில் செலுத்தியது ஆகியவற்றுக்கு ஆவணப்பூர்வமான சான்றுகள் அளிப்பதைப் பொறுத்து அமையும்.

பதிவேடுகளை ஆய்வு செய்த போது, 1998-2012 காலகட்டத்தில், மத்திய அரசின் பங்களிப்புத் தொகையாகப் பெற்றிருக்க வேண்டிய ₹ 24 கோடிக்கெதிராக (1998-2012 காலத்தில் மாநில அரசின் பங்களிப்பான ₹ 48 கோடியில் 50 சதவீதம்) தமிழ்நாடு அரசு ₹ 12 கோடியை மட்டுமே பெற்றது தெரியவந்தது. மத்திய அரசிடமிருந்து வந்திருக்க வேண்டிய மீதத்தொகையான ₹ 12 கோடியில் ₹ 9.50 கோடி[23], 2006-09 காலகட்டத்தில் மாநில அரசு பெற்றிருக்க வேண்டிய மத்திய அரசு பங்குத்தொகையாகும்.

மாநிலத்தின் பங்களிப்புக்கு ஈடான பங்குத் தொகையை மேற்கொண்டு வழங்குமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு கோரியபோது (மார்ச் 2007), திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ளவாறு ஆவணங்களைச் சமர்ப்பித்தால் மட்டுமே மேற்கொண்டு மானிய உதவி வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்தது. அரசு மருத்துவ அமைப்புகளுக்கு சுழல் நிதியாக நிதி வழங்கப்

22 வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களின் உறுப்பினர்கள்

23 2006-07 (₹ 9 கோடி), 2007-08 (₹ 5 கோடி) மற்றும் 2008-09 (₹ 5 கோடி) ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வழங்கிய பங்குத் தொகையான ₹ 19 கோடியில் 50 சதவீதம்

பட்டதாகவும், அவற்றால் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லையாதலால் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்ட பின்னர்தான் பயனாளிகளின் பட்டியலை அளிக்க முடியும் என்றும் மருத்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுப் பணிகள் இயக்குநர் (DMRHS) மத்திய அரசிடம் தெரிவித்தார் (பிப்ரவரி 2010). இது தவிர, நிதித் துறையால் இயக்கப்படும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மாற்றுகை செய்யப்பட்ட (மார்ச் 2005) சங்க நிதியான ₹ 6.02 கோடிக்கும் பயன்பாட்டுச் சான்றிதழ்கள் பெறப்படவில்லை. மத்திய அரசின் ஈடான பங்குத்தொகையைப் பெறுவதற்கு தேவைப்படும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால், 2006-09 ஆண்டுகளுக்கான பங்களிப்பு நிதி எதனையும் மத்திய அரசு வழங்கவில்லை. தமிழ்நாடு அரசின் முந்தைய பங்களிப்புகளுக்கு ஈடான தொகை வழங்குவது பற்றி பரிசீலிக்கவே இயலாது என மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவித்தது (ஜனவரி 2012).

ஆக, சுழல் நிதி குறித்த காலத்தில் பயன்படுத்தப்பட்டதையும், செய்தித்தாள்களில் பயனாளிகளின் விவரங்கள் வெளியிடப்படுவதையும், அரசு மருத்துவ அமைப்புகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பயன்பாட்டுச் சான்றிதழ்கள் பெறப்பட்டு, மத்திய அரசின் பங்களிப்பைக் கோருவதற்கு ஏதுவாக அவற்றைத் தொகுத்து, முழுமையான வடிவத்தில் குறித்த காலத்திற்குள் மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பதையும் கண்காணிக்க சங்கமும் துறையும் தவறியதன் விளைவாக, மத்திய அரசின் பங்களிப்பான ₹ 12 கோடியை பெற இயலாமல் போனது. இதன் காரணமாக, மாநில நிதியிலிருந்து ₹ 9.50 கோடி (2006-09 காலகட்டத்தில் மாநிலத்தின் பங்களிப்பான ₹ 19 கோடியில் 50 சதவீதம்) தவிர்த்திருக்கக்கூடிய கூடுதல் செலவினமானது.

இதனை தணிக்கையில் சுட்டிக்காட்டியபோது, மாநில அரசுக்கு வரவேண்டிய தொகையை வழங்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக (செப்டம்பர் மற்றும் டிசம்பர் 2012) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் செயலாளர் தெரிவித்தார் (ஜனவரி 2013). எனினும், தமிழ்நாடு அரசின் முந்தைய பங்களிப்புகளுக்கு ஈடான தொகையை வழங்க ஏற்கனவே மத்திய அரசு தனது இயலாமையைத் தெரிவித்து விட்டது (ஜனவரி மற்றும் ஆகஸ்ட் 2012) என்பதே உண்மைநிலை.

உயர் கல்வித் துறை

3.5.2 குறைபாட்டுடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளால் நேரிட்ட கூடுதல் செலவினம்

மதுரையிலுள்ள தொழில்நுட்பக் கல்விக் கோட்டச் செயற்பொறியாளர், சிறப்பு பணியினத்திற்கு, குறித்துரைக்கப்பட்ட தரவுகளைத் (observed data) தயார் செய்து, அதனைப் பின்பற்றி மதிப்பீடு தயார் செய்யத் தவறியதால், பணிகளின் மதிப்பீட்டுத் தொகை மிகைப்படுத்திக் காட்டப்பட்டதுடன் கூடுதலாக ₹ 1.36 கோடியும் செலவானது.

பொதுப்பணித்துறையானது (PWD), மதிப்பீட்டில் சேர்க்கப்படும் பல்வேறு பணியினங்களுக்கான விலை வீதங்களை, PWDன் நிலைத் தரவுக் கையேட்டின் (Standard Data Book) மற்றும் விலைவீத அட்டவணையின் (Schedule of Rates) அடிப்படையில் படியான தரவுகள்[24] கணக்கிட்டு, விரிவான மதிப்பீடுகளைத் தயார் செய்கிறது. தரவுக் கையேட்டில் தரவு குறிப்பிடப்படாத சிறப்புப் பணியினத்திற்கு,

[24] முடிக்கப்பட்ட பணியின் ஒரு அலகுக்கான (சதுர மீட்டர்/கன மீட்டர்/தொடர் மீட்டர் அளவு) பொருட்கள் மற்றும் அதன் அளவுகள், செயல்திறன் வாய்ந்த/செயல் திறனல்லாத தொழிலாளர்களின் வகைப்பாடு மற்றும் அவர்களின் எண்ணிக்கை

சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளரின் ஒப்புதலுடன், குறித்துரைக்கப்பட்ட தரவு ஒன்றைத் தயார் செய்து, அந்த இனத்திற்கு அந்த விலைவீதத்தைப் பின்பற்ற வேண்டும்.

சாலைகள், பூங்காக்கள், பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் "சிமெண்ட் கான்கிரீட்டிலான பல்வடிவ பாளக்கற்களாலான தரை அமைக்கும்" 86 பணிகளை 2007-11 காலகட்டத்தில் மதுரை தொழில்நுட்பக் கல்விக் கோட்டச் செயற்பொறியாளர் மூலம் ₹ 5.65 கோடி செலவில் மேற்கொள்வதற்கான நிர்வாக ஒப்புதலை மதுரை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். பணிகளுக்கான மதிப்பீடுகளுக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கிய செயற்பொறியாளர், 2007-11 காலகட்டத்தில் ₹ 5.59 கோடி செலவில் அப்பணிகளை ஒப்பந்ததாரர்கள் வாயிலாக செயல்படுத்தினார்.

பதிவேடுகளை ஆய்வு செய்த போது (டிசம்பர் 2011), சிறப்புப் பணியினத்திற்கான குறித்துரைக்கப்பட்ட தரவைத் தயார் செய்து, ஒப்புதல் பெறப்பட்ட அத்தரவைக் கொண்டு விலைவீதத்தைக் கணக்கிடுவதற்கு மாறாக, 60 மிமீ திண்மை கொண்ட கான்கிரீட் பாளக்கல் தரை அமைப்புக்கு ஒரு சதுரமீட்டருக்கு ₹ 1,000 எனவும் 80 மிமீ திண்மை கொண்ட தரைக்கு ஒரு சதுரமீட்டருக்கு ₹ 1,200 எனவும் வெளிச்சந்தையிலிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகளை செயற்பொறியாளர் மதிப்பீடுகளில் பின்பற்றியிருப்பது தெரியவந்தது. செயற்பொறியாளர், 2007-11 காலகட்டத்தில் தான் தயாரித்து ஒப்புதலளித்த அனைத்து மதிப்பீடுகளிலும் முறையே சதுர மீட்டர் ஒன்றுக்கு ₹ 1,000/₹ 1,200 என்று விலைவீதத்தைப் பின்பற்றியிருந்தார். மாநில நெடுஞ்சாலைத்துறை இச்சிறப்புப் பணியினத்திற்கான ஒப்புதல் பெற்ற குறித்துரைக்கப்பட்ட தரவு ஒன்றை வைத்திருந்தது தணிக்கையில் கண்டறியப்பட்டது. 100 மிமீ திண்மை கொண்ட கான்கிரீட் பாளக்கல் தரை அமைப்புக்குரிய குறித்துரைக்கப்பட்ட தரவை பெற்றிருந்த மாநில நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து அத்தரவினைப் பெற செயற்பொறியாளர் தவறினார். மதுரை நெடுஞ்சாலைக் கோட்டம், 2011-12ன்போது, இப்பணியினத்திற்கு சதுர மீட்டர் ஒன்றுக்கு ₹ 874.50 எனும் விலைவீதத்தைப் பின்பற்றியிருந்தது. நெடுஞ்சாலைத் துறையின் தரவுகள் மற்றும் 2007-08 முதல் 2010-11 வரையிலான விலைவீத அட்டவணைகளில் 60 மிமீ மற்றும் 80 மிமீ திண்மை கொண்ட பாளக்கற்கள் பதித்த தரை அமைப்பிற்கு தரப்பட்டுள்ள விலைவீதங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகை, மதிப்பீடுகளில் பின்பற்றப்பட்டிருந்த வெளிச்சந்தை விலைவீதத்தைக் காட்டிலும் வெகு குறைவாக இருந்தது (60 மிமீ திண்மை கொண்ட பாளக்கற்கள் பதித்த தரை அமைப்புக்கு சதுரமீட்டர் ஒன்றுக்கு ₹ 664 முதல் ₹ 690 வரையிலும், 80 மிமீ திண்மை கொண்டவற்றுக்கு ₹ 735 முதல் ₹ 770 வரையிலும்). வெளிச்சந்தை விலையை செயற்பொறியாளர் பின்பற்றியதால் **இணைப்பு 3.5**ல் தரப்பட்டுள்ளவாறு, ₹ 1.31 கோடி அளவுக்கு பணிமதிப்பீடுகள் மிகைப்படுத்தப்பட்டன.

துறையின் மதிப்பீட்டிற்கு மேல் ஐந்து சதவீதம் வரையிலும் அதிகவிலைப்புள்ளியுடன் ₹ 10 இலட்சத்துக்கு மிகாமல், ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ள செயற்பொறியாளருக்கு அதிகாரமுள்ளது. 86 பணிகள் ஒவ்வொன்றின் மதிப்புமே ₹ 10 இலட்சமோ அதற்குக் குறைவாகவுமோ இருப்பது தணிக்கையில் தெரியவந்தது. எல்லாப் பணிகளுக்குமே கூடுதலாகக் கேட்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஐந்து சதவீதத்திற்குக் குறைவாக இருந்த நிலையில் அவை அனைத்தும் ஏற்கப்பட்டு பணி ஆணைகளும் வழங்கப்பட்டன. பாளக்கற்கள் பதித்த தரை அமைக்கப்பட்ட மொத்த அளவான 37,281 சதுரமீட்டருக்கு ஒப்பந்ததாரர்களுக்கு ₹ 4.06 கோடி வழங்கப்பட்டது. நெடுஞ்சாலைத்துறைத் தரவுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட விலைவீதத்தின்படி 86 பணிகளில் இப்பணியினத்திற்கான மதிப்பீடு ₹ 2.57 கோடி

மட்டுமே. ஒப்பந்ததாரர்களுக்கு, ஒப்புக் கொள்ளப்பட்ட விலைவீதத்தின்படி வழங்கப்பட்ட தொகையானது, இவ்வாறு கணக்கிடப்பட்ட விலைவீதத்தைக் காட்டிலும் 51 முதல் 71 சதவீதம் வரை கூடுதலாக இருந்ததுடன் கூடுதல் விலைப்புள்ளிகளின் சதவீதமும் செயற்பொறியாளரின் ஏற்கும் அதிகாரத்தைக் கடந்து இருந்தது.

மதிப்பீட்டில் உள்ள விலையை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ள செயற்பொறியாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அதிகபட்ச சதவீதத்தை (ஐந்து சதவீதம்), மதிப்பீட்டுத் தொகையான ₹ 2.57 கோடிக்கு (86 பணிகள்) கணக்கிட்டுப் பார்த்தால், பணியின் மொத்த மதிப்பு ₹ 2.70 கோடியாக மட்டுமே வரும். ஆக, கான்கிரீட் பாளக்கற்கள் பதித்த தரை அமைப்பதற்கு வெளிச்சந்தை விலையை மேற்கொண்டு குறைபாட்டுடனான மதிப்பீடுகளை தயார் செய்ததமையால் ₹ 1.36 கோடி கூடுதல் செலவானது (₹ 4.06 கோடி - ₹ 2.70 கோடி).

இத்தணிக்கைக் குறிப்பு அரசின் பார்வைக்கு ஜூலை 2013ல் கொண்டு செல்லப்பட்டது. மறுமொழி இன்னும் பெறப்படவில்லை (டிசம்பர் 2013).

3.6 ஒழுங்குமுறை விவகாரங்களும் மற்றவையும்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

3.6.1 தொலைமருத்துவ வசதிகள் பராமரிக்கப்படாமை

துறை ₹ 2.29 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்ட தொலைமருத்துவ வசதிகளை நடைமுறைப்படுத்தவும் பராமரிக்கவும் தவறியதால், மூன்றாண்டுகளுக்கு மேலாக சாதனங்களும் கருவிகளும் பயன்படுத்தப்படாமலே இருந்தன.

மத்திய அரசு ₹ 2.72 கோடி[25] செலவில் "தமிழ்நாட்டில் தொலைமருத்துவ[26] வசதிகள் அமைத்தல்" என்ற திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது (அக்டோபர் 2006). இத்திட்டத்தின் வாயிலாக சென்னை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையை தொலைவழி ஆலோசனைப் பணிகளுக்காக ஆறு மாவட்டத் தலைமையகங்களிலுள்ள மருத்துவமனைகளுடன்[27] இணைப்பது என திட்டமிடப்பட்டது. திட்டத்திற்கான மென்பொருள் வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு வழங்குதல் ஆகியவற்றுடன் சேர்த்து இதனை அமைத்து இயக்குவதற்கான பொறுப்பை, நவம்பர் 2009 வரையிலான காலத்திற்கு புனேவிலுள்ள "சென்டர் ஃபார் டெவலப்மெண்ட் ஆஃப் அட்வான்ஸ்ட் கம்ப்யூட்டிங்" (C-DAC) மற்றும் சென்னையிலுள்ள DCL சாஃப்ட்வேர் லிமிடெட் (DCLSL) ஆகிய நிறுவனங்களிடம் மத்திய அரசு ஒப்படைத்தது. மத்திய அரசின் ஒப்புதலுக்கான நிபந்தனைகளின்படி, திட்டக்காலம் முடிவடைந்த பிறகு உள்ள ஐந்து வருட காலத்திற்கு, இவ்வசதிகளை நடைமுறைப்படுத்தவும் பராமரிக்கவும் தமிழ்நாடு அரசு தனது ஆதரவை நல்க வேண்டும்.

C-DAC மற்றும் DCLSL நிறுவனங்களுக்கு ₹ 2.23 கோடியை மத்திய அரசு மானியமாக வழங்கியது (அக்டோபர் 2006 முதல் ஜூன் 2009 வரை).

---

[25] மத்திய அரசின் பங்களிப்பு ₹ 2.28 கோடி மற்றும் மாநிலத்தின் பங்களிப்பு ₹ 43.70 இலட்சம்

[26] நோயாளிகளின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படுத்தவோ, சீராகப் பேணவோ அல்லது உதவவோ, ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மின்னணு தகவல் தொடர்புகள் மூலம் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளும் வழிமுறையே தொலைமருத்துவம் ஆகும்.

[27] காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, இராமேஸ்வரம், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் உதகமண்டலம்

இத்திட்டத்திற்கு ₹ 2.29 கோடியை C-DAC மற்றும் DCLSL ஆகியவை செலவிட்டன. திட்டக்காலத்தின்போது, 650 தொலைவழி ஆலோசனை அமர்வுகள் நடத்தப்பட்டன. திட்டக்காலம் முடிவுற்றதும் சாதனங்களும் கருவிகளும் சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளிடம் DCLSL நிறுவனத்தால் ஒப்படைக்கப்பட்டன (டிசம்பர் 2009 மற்றும் மே 2010).

பதிவேடுகளை ஆய்வு செய்த போது (ஆகஸ்ட் 2012), தொலைமருத்துவ மையங்களை பராமரிப்பது தொடர்பான கருத்துருவை அரசுக்கு அனுப்புமாறு தமிழ்நாடு மின்னணு கழகத்தை (ELCOT) தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியது (நவம்பர் 2009) தெரியவந்தது. திட்டப் பராமரிப்புக்காக ஆண்டொன்றுக்கு ₹ 43.50 இலட்சம் எனும் ஒரு மதிப்பீட்டை ELCOT நிறுவனம் சமர்ப்பித்தது (ஜனவரி 2010). எனினும், ELCOT நிறுவனத்தின் கருத்துரு மீது விலை அனுகூலப் பகுப்பாய்வு மேற்கொள்ளுமாறு மருத்துவக் கல்வி இயக்குநரை (DME) தமிழ்நாடு அரசு பணித்தது (மே 2010). DMEயிடம் ஒரு விரிவான அறிக்கையை வழங்குமாறு தமிழ்நாடு அரசு, ELCOT நிறுவனத்தை வலியுறுத்தியபோதிலும் (அக்டோபர் 2011) ELCOT நிறுவனத்திடமிருந்து அப்படியோர் அறிக்கை DMEக்கு வந்து சேரவில்லை (ஜனவரி 2013).

திட்டக்காலத்தின் போது, DCLSL நிறுவனத்தின் ஊழியர்களைக் கொண்டே தொலைமருத்துவ மையங்கள் இயக்கப்பட்டு வந்ததும், திட்டக் காலத்திற்குப் பிறகு அவற்றை இயக்கி, பராமரிக்க வேண்டிய ஊழியர்களுக்கு அதற்கான பயிற்சி தரப்படவில்லை என்பதும் தணிக்கையின் போது காணப்பட்டது. ஆக, தகுதியுள்ள நபர்களை அடையாளங்கண்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்க, துறை தவறியதால் ₹ 2.29 கோடி செலவில் நிறைவேற்றப்பட்ட இத்திட்டம் பாதியிலேயே கைவிடப்படும் (டிசம்பர் 2009 முதல்) நிலைக்குள்ளானது.

இதனை தணிக்கையில் சுட்டிக்காட்டியபோது, ELCOT நிறுவனத்திடமிருந்து அறிக்கை பெறப்படாததாலும், நிதி ஒதுக்கீடு மற்றும் அரசின் ஒப்பளிப்புகளின் தேவைப்பாடு காரணமாகவும் திட்டம் பராமரிப்பு செய்யப்படவில்லை என்று இராயப்பேட்டை அரசு மருத்துவமனையின் கண்காணிப்பாளர் தெரிவித்தார் (ஆகஸ்ட் 2012). திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான பயிற்சி பெற்ற ஊழியர்கள் மருத்துவமனைகளில் இல்லை எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. திட்டத்தின் மறுசீரமைப்பிற்கு நிறைய காலம் பிடிக்கும் என்றும் அரசின் ஆணை பெறப்பட்டதும் திட்டத்தைத் தொடருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் DME தெரிவித்தார் (டிசம்பர் 2012). நவம்பர் 2009உடன் திட்டக்காலம் முடிவடைந்து விடும் என்றும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கு திட்டம் தொடருவது என்பது பயிற்சி பெற்ற மனித ஆற்றல் இருப்பைச் சார்ந்ததே என்றும் துறை நன்கு அறியும் என்பதால் இந்தப் பதில் ஏற்கத்தக்கதன்று.

இத்தணிக்கைக் குறிப்பு அரசின் பார்வைக்கு மே 2013ல் கொண்டு செல்லப்பட்டது. மறுமொழி இன்னும் பெறப்படவில்லை (டிசம்பர் 2013).

உயர் கல்வித் துறை

அண்ணா பல்கலைக்கழகம் - மண்டல மையம், கோயம்புத்தூர்

3.6.2 சரியான முறையில் ஆராயாது இயந்திரங்கள் வாங்கப்பட்டமையும் அவை நிறுவப்படாமையும்

ஆய்வகம் அமைப்பதற்காக அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ₹ 5.47 கோடி செலவில் வாங்கிய இயந்திரங்கள், அவற்றை நிறுவுவதற்குத் தேவையான இடம் இருப்பதை உறுதி செய்து கொள்ளாததால், மூன்றாண்டுகளாகியும் நிறுவப்படாமலே இருந்தன.

கோயம்புத்தூரிலுள்ள அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம்[28], (பல்கலைக்கழகம்) மாணவர்களுக்கு செயல்முறை வகுப்புகள் நடத்த ஏதுவாக கணிப்பொறி எண் சார்ந்த வகையில் கட்டுப்படுத்தத்தக்க (CNC) இயந்திரத் தொகுப்புடன் கூடிய இயந்திரவியல்/ஆக்கத் தொழிற்பட்டறை ஒன்றை அமைப்பதற்காக, பயன்படுத்தப்பட்ட நுட்பமான இயந்திரங்களை வழங்கி, நிறுவி, பராமரிப்பதற்கான ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரியது (நவம்பர் 2008). பன்னிரண்டு இயந்திரங்கள் அடங்கிய தொகுப்பை 13.30 இலட்சம் சிங்கப்பூர் டாலர்களுக்கு (தோராயமாக ₹ 4.44 கோடி) வழங்குவதற்கு கொள்முதல் ஆணை பெற்ற (நவம்பர் 2008) நிறுவனம், 12 இயந்திரங்களில் 11ஐ, ஜூன் 2009க்கும் மே 2010க்கும் இடைப்பட்ட காலத்தில் வழங்க, அந்நிறுவனத்திற்கு ₹ 4.42 கோடியை பல்கலைக்கழகம் கொடுத்தது. அந்நிறுவனம் ₹ 0.13 கோடி மதிப்பிலான ஓர் இயந்திரத்தை வழங்கவில்லை. சுங்கத்தீர்வை, வங்கிக் கட்டணங்கள் போன்றவற்றிற்கு மேலும் ₹ 1.05 கோடி பல்கலைகழகத்திற்குச் செலவானது. பெறப்பட்ட 11 இயந்திரங்கள் அடங்கிய தொகுப்பு அனைத்தும் இன்னமும் நிறுவப்படவில்லை (டிசம்பர் 2013).

பதிவேடுகளை ஆய்வு செய்தபோது (நவம்பர் 2010 மற்றும் மார்ச் 2013), இயந்திரத் தொகுப்பு வாங்குவதற்கான கருத்துரு (8 நவம்பர் 2008) பல்கலைக்கழகத் துணை வேந்தரால் ஏற்கப்பட்டு (9 நவம்பர் 2008) ஒப்பந்தப்புள்ளிகளுக்கான அழைப்பு 12 நவம்பர் 2008 அன்று விடுவிக்கப்பட்டது தெரியவந்தது. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை மூன்று நிறுவனங்கள் பல்கலைக்கழகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட போதிலும், ஒரு நிறுவனம் மட்டுமே இயந்திரத் தொகுப்புக்கான விலைப்புள்ளிகளை வழங்கியிருக்க அந்த விலைப்புள்ளி துணைவேந்தரால் ஏற்கப்பட்டு (29 நவம்பர் 2008) அன்றைய தினமே வழங்காணையும் கொடுக்கப்பட்டது. இயந்திரத் தொகுப்பு பெறப்படும் போது 70 சதவீதத் தொகையைக் கொடுக்க ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தாலும், இயந்திரத் தொகுப்பிலுள்ள 10 இயந்திரங்களுக்கான முழுத் தொகையும் இரண்டு இயந்திரங்களுக்கு 95 சதவீதத் தொகையும் கொடுக்கப்பட்டிருப்பது தணிக்கையின் போது கண்டறியப்பட்டது. வழங்காணை கொடுக்கும்முன், இயந்திரத் தொகுப்பை நிறுவுவதற்குத் தேவையான இடம் இருப்பதை பல்கலைக்கழகம் உறுதி செய்து கொள்ளாததும் கண்டறியப்பட்டது. இதன் விளைவாக, வழங்கப்பட்ட இயந்திரங்கள் பெட்டிகளில் பிரிக்கப்படாத நிலையிலேயே பல்கலைக்கழக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தன (டிசம்பர் 2013).

CNC ஆய்வகம் நிறுவப்படாததால், அருகிலுள்ள கல்வி நிலையங்களின் ஆய்வகங்களிலுள்ள வசதிகளுக்கேற்ப, மூன்றாமாண்டு இளநிலை இயந்திரப்

---

[28] இப்பல்கலைக் கழகம் சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு அண்ணா பல்கலைக்கழகம் - மண்டல மையம் (AU-RC) என 1 ஆகஸ்ட் 2012 முதல் இயங்கி வருகிறது

பொறியியல் பாடப்பிரிவிற்கான பாடத்திட்டத்தை மாற்றியமைத்த பல்கலைக்கழகம், 2007 மற்றும் 2008 தொகுதி மாணவர்களுக்கு அந்த கல்வி நிலையங்களில் செயல்முறை வகுப்புகளை, ₹ 2.56 இலட்சம் செலவில் நடத்தியது. இந்தப் பாடப்பிரிவு 2009ம் ஆண்டில் கைவிடப்பட்டது. பல்கலைக்கழகம் அனுப்பிய குறிப்பாணைகளுக்கு (ஜூலை 2010 முதல் ஜூலை 2012 வரை) எஞ்சிய ஓர் இயந்திரம் வழங்கப்பட்டுவிடும் என்று மறுமொழி அளித்த நிறுவனம், ஏற்கனவே வழங்கப்பட்ட இயந்திரங்கள் நிறுவுவதற்கான இடம், மின்வசதி மற்றும் இதர வசதிகளை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டது (ஜனவரி மற்றும் ஜூன் 2011 மற்றும் ஜூலை 2012). ஆனால், இயந்திரங்களை நிறுவுவதற்கு தேவையானவற்றை வழங்க பல்கலைக்கழகத்தால் இயலவில்லை (டிசம்பர் 2013).

இவ்வாறு, இடம் இருப்பதை உறுதி செய்து கொள்ளாமல், சரியான முறையில் ஆராயாது பல்கலைக்கழகம் இயந்திரங்களை வாங்கியதால், மூன்றாண்டுகளுக்கும் மேலாக அவை நிறுவப்படாமல் இருந்தன.

பெரும்பாலான இயந்திரங்கள், கனரகத் தயாரிப்பு வகையைச் சேர்ந்தவை என்பதால் அவை CNC துறை நிபுணர்களின் முன்னிலையில் தகுந்த அடித்தளம் அமைத்து நிறுவப்பட வேண்டும் என்ற தேவைப்பாடு உள்ளதால் இந்த நடவடிக்கைகளுக்கு சில மாதங்கள் பிடிக்கும் என்று அரசு பதிலளித்தது (டிசம்பர் 2013). இது தொடர்பான கண்காணிப்புக் குழு விசாரணை நிலுவையில் உள்ளதாகவும், இதன் மீதான மேல்நடவடிக்கை குறித்து தணிக்கைக்குத் தெரியப்படுத்தப்படும் என்று அரசு மேலும் தெரிவித்தது.

உள்துறை

3.6.3 மத்திய அரசு பொறுப்பேற்ற திட்டத்தைச் செயல்படுத்துவதில் காலதாமதம்

தீயணைப்பு மற்றும் அவசரகாலப் பணிகளை வலுப்படுத்தும் பொருட்டு ₹ 10.45 கோடியை மத்திய அரசு வழங்கியிருந்தாலும் கூட, அனுமதியளிக்கப்பட்ட ஒதுக்கீடான ₹ 13.06 கோடிக்கெதிராக தமிழ்நாடு அரசால் ₹ 4.26 கோடிக்கு மட்டுமே நிதிசார் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டமையால் மத்திய அரசு பொறுப்பேற்ற திட்டத்தின் நோக்கம் எட்டப்படாமல் போனது.

மாநில, மத்திய அரசுகளின் 75:25 என்ற விகிதாசார நிதியளிப்புடன் கூடிய, மத்திய அரசு பொறுப்பேற்ற திட்டமான "நாட்டில் தீயணைப்பு மற்றும் அவசரகாலப் பணிகளை வலுப்படுத்துதல்" எனும் ஒரு திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்தது (நவம்பர் 2009). 2009-12 காலகட்டத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்ட இத்திட்டம், தீயணைப்பு மற்றும் அவசரகாலப் பணிகளை வலுப்படுத்துவதையும் அவசரகாலச் சூழ்நிலைகளை எதிர்கொள்ளத்தக்க வகையில் தீயணைப்புத் துறையை பன்னிடர் கையாளும் படையாக மாற்றம் செய்வதையும் AWT எனப்படும் மேம்பட்ட நீர்தாங்கி வண்டிகள், QRV எனப்படும் விரைவு வாகனங்கள் மற்றும் HPP எனப்படும் உயர் அழுத்த விசைக்குழாய்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்துவதன் வாயிலாக, மாநிலங்களின் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சார்ந்த திறன்களில் உள்ள இடைவெளிகளை இட்டு நிரப்புவதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.

தமிழ்நாட்டிற்கு, 19 AWTக்கள், 30 QRVக்கள், 60 HPPக்கள் மற்றும் 60 சுயமுழுமை பெற்ற செயற் கூட்டுக் கருவிகளின் இணைகள் ஆகியவற்றை வாங்குவதற்கு ₹ 13.06 கோடி[29] ஒப்புதலளித்த (நவம்பர் 2009) மத்திய அரசு இந்த எண்ணிக்கையிலோ, வகுத்துரைக்கப்பட்ட தொழில்நுட்பக் குறிப்புகளிலோ எந்த மாறுதலும் செய்யக்கூடாது எனவும் தடை விதித்தது. மத்திய அரசு தனது பங்காக

[29] மத்திய அரசின் பங்கு : ₹ 10.45 கோடி மற்றும் தமிழ் நாடு அரசின் பங்கு : ₹ 2.61 கோடி

₹ 10.45 கோடி வழங்கிய (ஜனவரி 2010 முதல் மே 2011 வரை) நிலையில், தமிழ்நாடு அரசோ தனது பங்கான ₹ 2.61 கோடிக்கு (மத்திய அரசு பங்கில் 25 சதவீதம்) பதிலாக வெறும் ₹ 0.85 கோடி மட்டுமே வழங்கியது (ஏப்ரல் 2010 முதல் செப்டம்பர் 2011 வரை). தமிழ்நாடு அரசு ₹ 13.06 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியபோதிலும் (ஏப்ரல் 2010), ஜூலை 2013 வரை ₹ 4.61 கோடிக்கு, 19ல் ஒன்பது AWTக்கள், 30ல் எட்டு QRVக்கள், 60ல் எட்டு HPPக்கள் மற்றும் 60 சுயமுழுமை பெற்ற செயற் கூட்டுக் கருவிகளின் இணைகளில் 22க்கு மட்டுமே நிதி ஒப்பளிப்புகளை வழங்கியது. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட உருப்படிகளை ₹ 3.95 கோடி செலவில் வாங்கிய (ஏப்ரல் 2010 முதல் மார்ச் 2013 வரை) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் இயக்குநர் (DFRS), அவற்றை சில இலக்கு குறிக்கப்பெற்ற தீயணைப்பு நிலையங்கள்/மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்தார் (ஏப்ரல் 2013).

பதிவேடுகளை ஆய்வு செய்தபோது (ஏப்ரல் மற்றும் ஜூலை 2013), ஒன்பது AWTக்களுக்கு அடிச்சட்டம் (chassis) வாங்கப்பட்டு (ஏப்ரல் 2010), கூண்டு கட்டும் பணிக்காக கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு (TNSTC) அனுப்பப்பட்டும் (ஜூலை 2010), தமிழ்நாடு அரசின் நிதிசார் ஒப்பளிப்பு தாமதமாகப் பெறப்பட்டதையடுத்து (செப்டம்பர் 2011) DFRS காலதாமதமாக TNSTCக்கு பணம் வழங்கியதால் (அக்டோபர் 2011), TNSTC பணியை முடித்து ஒன்பது AWTக்களை மார்ச் 2013ல்தான் ஒப்படைத்தது. ஒப்பளிக்கப்பட்ட தொகைக்குள்ளாக செலவினத்தை வைத்திருக்கும் பொருட்டு, AWTக்களில் விளக்குக்களுடன் கூடிய தொலைநோக்கு வான்கம்பிக் கம்பங்களைப் பொருத்தவேண்டாம் என TNSTCக்கு DFRS அறிவுறுத்தினார். மேலும், ஏற்கனவே பெறப்பட்ட ஒன்பது AWTக்களுக்குத் தேவையான தவிர்க்கலாகாத நிலையான துணைப்பொருட்கள் (65 சாதனங்கள்) அடங்கிய ஓர் இணையையும் DFRS வாங்கவில்லை (ஜூலை 2013). ஆக, தமிழ்நாடு அரசால் போதிய நிதி வழங்கப்படாததால், மத்திய அரசால் நிதி வழங்கப்பட்டும் கூட, தற்போது பயனிலுள்ள ஒன்பது AWTக்களும்[30], குறைந்தபட்ச தொழில்நுட்பத் தேவைப்பாடுகளான விளக்குகளுடன் கூடிய தொலைநோக்கு வான்கம்பிக் கம்பங்கள் மற்றும் நிலையான துணைப்பொருட்கள் இன்றியே உள்ளன.

மத்திய அரசு, எஞ்சியுள்ள 10 AWTக்கள், 22 QRVக்கள், 52 HPPக்கள் மற்றும் 38 சுயமுழுமை பெற்ற செயற் கூட்டுக் கருவிகளின் இணைகள் வாங்குவதற்கு மூன்றாவது தவணையான ₹ 7.04 கோடியை தமிழ்நாடு அரசுக்கு வழங்கியது (மே 2011). மத்திய அரசின் மூன்றாவது தவணைப் பங்குத்தொகை வரவு வைக்கப்பட்டது குறித்து அரசு நிதித்துறைச் செயலரோ அல்லது உள்துறைச் செயலரோ DFRSக்குத் தெரிவிக்கவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. மே 2011லேயே மத்திய அரசின் பங்கு வழங்கப்பட்டது குறித்து மத்திய அரசிடமிருந்து தகவலறிந்த DFRS, எஞ்சிய சாதனங்களை ₹ 9.93 கோடி செலவில் வாங்குவதற்கான கருத்துருவை தமிழக அரசிடம் சமர்ப்பித்தபோது (அக்டோபர் 2012), சில தெளிவுறுத்தங்களையும் விரிவான அறிக்கையையும் அவரிடம் அரசு கோரியது (ஏப்ரல் 2013). தமிழ்நாடு அரசிடம் அளிக்கப்பட்ட ₹ 9.45 கோடிக்கான திருத்திய கருத்துரு (ஜூலை 2013), அரசின் பரிசீலனையில் இருந்தது (செப்டம்பர் 2013).

2009-12 காலகட்டத்தில், செயல்படுத்தியிருக்க வேண்டிய இத்திட்டம், இன்னமும் நிறைவடையாமல் (செப்டம்பர் 2013) இருந்ததுடன், மத்திய அரசின் பங்களிப்பு

---

30 (i) சென்னை (வடக்கு), (ii) கோயம்புத்தூர் (வடக்கு), (iii) கடலூர், (iv) ஈரோடு, (v) மதுரை, (vi) சேலம், (vii) திருச்சிராப்பள்ளி, (viii) திருநெல்வேலி மற்றும் (ix) வேலூர்

முழுமையாகப் பெறப்பட்டும் கூட, தமிழ்நாடு அரசு, ஒப்புதலளிக்கப்பட்ட ஒதுக்கீடான ₹ 13.06 கோடிக்கெதிராக ₹ 4.26 கோடிக்கு மட்டுமே நிதி சார் ஒப்பளிப்பு ஆணை வழங்கிய காரணத்தால், எஞ்சிய சாதனங்களும் துணைக் கருவிகளும் வாங்கப்படவில்லை. ஆக, மாநிலத்தின் தீயணைப்புத்துறையை பன்னிடர் கையாளும் படையாக மாற்றம் செய்யும் குறிக்கோள், திட்டக்காலம் முடிந்து 18 மாதங்கள் கடந்த பின்னரும், முழுமையாக எட்டப்படவில்லை.

இத்தணிக்கைக் குறிப்பு அரசின் பார்வைக்கு செப்டம்பர் 2013ல் கொண்டு செல்லப்பட்டது. மறுமொழி இன்னும் பெறப்படவில்லை (டிசம்பர் 2013).

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

3.6.4 நடமாடும் எடைமேடை பரிசோதனை வாகனங்கள் பயனற்று இருந்தமை

மத்திய அரசு இலவசமாக வழங்கிய நடமாடும் எடைமேடை பரிசோதனை வாகனங்களை இயக்குவதற்கான ஓட்டுநர் மற்றும் உதவியாளர் பணியிடங்களும், பராமரிப்புச் செலவினமும் ஒப்பளிப்பு செய்யப்படாத காரணத்தால் இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரையில், ₹ 1.78 கோடி பெறுமான மூன்று வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தன.

சட்டமூர்வ எடையளவு ஆய்வுச் சட்டம் 2009 (சட்டம்)ன் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட தமிழ்நாடு சட்டமூர்வ எடையளவு ஆய்வு (அமலாக்கம்) விதிகள், 2011ன் படி, எடைமேடைகள், அவற்றின் துல்லியத்தை உறுதி செய்யும் பொருட்டு, குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு ஒருமுறையேனும் பரிசோதிக்கப்பட்டு, பொறிப்படையாளம் இடப்படவேண்டும். மாநிலத்தில், 40 மெட்ரிக் டன் வரை எடையிடும் திறன் கொண்ட 2,875 எடைமேடைகள் உள்ளன.

எடைகள் மற்றும் அளவுகள் உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், எடை மேடைகளைப் பரிசோதித்து பொறிப்படையாளம் இடுவதற்கு ஆகும் காலஅளவைக் குறைக்கும் நோக்கிலும், தமிழ்நாட்டிற்கு ₹ 1.08 கோடி பெறுமான இரண்டு நடமாடும் எடைமேடைப் பரிசோதனை வாகனங்களை[31] (வாகனங்கள்) மத்திய அரசு வழங்கியது (ஆகஸ்ட் 2008). இவ்வாகனங்களைப் பேணிப் பராமரிக்கும் பொறுப்பு தமிழ்நாடு அரசுடையதாகும். திருவள்ளூர் மற்றும் கோயம்புத்தூர் தொழிலாளர் ஆய்வாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட (ஆகஸ்ட் 2008) இந்தப் பரிசோதனை வாகனங்கள் ஓட்டுநர்கள் பணியமர்த்தப்பட்ட பின்னர் ஜூன் 2009 முதல் பயன்படுத்தப்பட்டன. மத்திய அரசு ஜூலை 2010ல் வழங்கிய ₹ 1.24 கோடி பெறுமான குறைந்த திறன்[32] கொண்ட மேலும் இரு வாகனங்கள் திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடி தொழிலாளர் ஆய்வாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இரண்டு வாகனங்களின் இயக்கச் செலவுக்காக 2010-11 மற்றும் 2011-12 ஆண்டுகளுக்காக ₹ 12 இலட்சத்தையும் மத்திய அரசு வழங்கியது (டிசம்பர் 2010 மற்றும் மே 2011).

பதிவேடுகளை ஆய்வு செய்தபோது (ஆகஸ்ட் 2012), பணியிடங்களை உருவாக்கும் வரையில் இவ்வாகனங்களை இயக்குவதற்கான ஓட்டுநர்கள் மற்றும் உதவியாளர்களை நாட்கூலி அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ளுமாறு மத்திய

[31] ஒவ்வொரு வாகனத்திலும் 12.1 மெட்ரிக் டன்னுக்கான சோதனை எடையை உள்ளடக்கிய மொத்தத் திறன் 35 மெட்ரிக் டன்

[32] ஒவ்வொரு வாகனத்திலும் ஐந்து மெட்ரிக் டன்னுக்கான சோதனை எடையை உள்ளடக்கிய மொத்தத் திறன் 16 மெட்ரிக் டன்

அரசு ஆலோசனை வழங்கியிருப்பது (அக்டோபர் 2008) தெரியவந்தது. இரண்டு வாகனங்களுக்கான ஓட்டுநர் பணியிடங்கள் நிரப்பப்பட்ட (ஜூன் 2009) நிலையில், உதவியாளர் பணியிடங்கள் காலியானதிலிருந்து (ஜூன் 2011) அது நிரப்பப்படாமல், அந்த வாகனமும் ஜூன் 2011 முதல் பயன்படுத்தப்படாமலே இருந்தது.

ஜூலை 2010ல் வழங்கப்பட்ட இரு வாகனங்களைப் பொறுத்தவரை, ஓட்டுநர் மற்றும் உதவியாளர் பதவிகள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பணியிடங்களையும் பராமரிப்புச் செலவினத்தையும் ஒப்பளிப்பு செய்யுமாறு தொழிலாளர் ஆணையர் தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொண்டபோதிலும் (ஆகஸ்ட் 2010), ஒப்பளிப்பு செய்யப்படவில்லை. இதன் விளைவாக, ஜூலை 2010 முதல் திருச்சிராப்பள்ளி மற்றும் தூத்துக்குடியிலிருந்த இரண்டு வாகனங்கள் பயன்படுத்தப்படவில்லை. மேலும், இயக்கச் செலவிற்காக மத்திய அரசு உதவியாகக் கிடைத்த ₹ 12 இலட்சமும் பயன்படுத்தப்படவில்லை. ஓட்டுநர்கள்/உதவியாளர்களின் சம்பளம்/ கூலி, எரிபொருள் செலவு மற்றும் பராமரிப்புச் செலவிற்கு ஆண்டொன்றிற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகையான ₹ 21.37 இலட்சத்தை, தமிழ்நாடு அரசுக்குக் கூடுதல் சுமை ஏற்படாவண்ணம் துறையே தனது தோராய வருடாந்திர பயன்பாட்டாளர் கட்டண வசூல் தொகையான ₹ 57.50 இலட்சத்தைக்[33] கொண்டு சமாளிக்க முடியும் என்பது தணிக்கையில் காணப்பட்டது.

இவ்வாறு, ஓட்டுநர் மற்றும் உதவியாளர் பணியிடங்களையும் பராமரிப்புச் செலவினங்களையும் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு அரசு தவறியமையால் ₹ 1.78 கோடி பெறுமான இரண்டு நடமாடும் எடைமேடை பரிசோதனை வாகனங்கள் இரண்டு முதல் மூன்றாண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் போனதுடன், எடைமேடைகளின் துல்லியத்தை உறுதி செய்வது மற்றும் பரிசோதிப்பதில் ஆகும் காலதாமதத்தைக் குறைப்பது ஆகிய நோக்கங்களும் நிறைவேற்றப்படவில்லை.

இத்தணிக்கைக் குறிப்பு அரசின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, ஓட்டுநர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் மற்றும் எரிபொருள் செலவு பராமரிப்புக் கட்டணங்கள் ஆகியவற்றைக் கோரிய தொழிலாளர் ஆணையரின் கருத்துரு, அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளதாகவும், இப்பொருள் குறித்த ஆணைகள் கூடிய விரைவில் வெளியிடப்படும் என்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் செயலாளர் தெரிவித்தார் (நவம்பர் 2013).

திட்டமிடல், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

3.6.5 பயன்படுத்தப்படாத நிதி மற்றும் சரியற்ற செலவின அறிக்கையளிப்பு

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியான ₹ 68.40 கோடி பயன்படுத்தப்படாமல் அரசுக் கணக்கிற்கு வெளியே இருந்ததுடன் செலவினம் குறித்த சரியற்ற அறிக்கையளிப்பும் செய்யப்பட்டது.

நீலகிரியின் வளர்ச்சிக்காக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (HADP) கீழ் மத்திய அரசு மாநிலத்திற்கு, சிறப்பு மத்திய நிதியுதவி (மத்திய உதவி) வழங்கியது. தமிழ்நாடு அரசுக்கு இரண்டு தவணைகளில் வழங்கப்படும் மத்திய உதவியில், ஒரு நிதியாண்டில் செலவிடப்படாத நிதி, அடுத்து வரும் ஆண்டுக்கான நிதியுதவியின் இரண்டாம் தவணையில் கழித்துக் கொள்ளப்படவேண்டும். மலைப்பகுதி

33 ஒரு எடைமேடைக்கு வருடாந்திர பயன்பாட்டாளர் கட்டணமான ₹ 2000 வீதம் 2,875 எடைமேடைகளுக்கு

மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட இயக்குநர் உதவியுடன் உதகமண்டலம்[34] மாவட்ட ஆட்சியர், பல்வேறு செயலாக்க முகமைகள்[35] வாயிலாக இத்திட்டம் செயல்படுத்தப்படுவதற்குப் பொறுப்பாவார். பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது (2007-12), மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ₹ 211.48 கோடியில், செயலாக்க முகமைகளுக்கு விடுவிக்கப்பட்ட தொகையையும் சேர்த்து ₹ 183.01 கோடியை திட்ட இயக்குநர் செலவிட்டார்.

பதிவேடுகளை ஆய்வு செய்தபோது (ஜூன் 2013), செயலாக்க முகமைகளிடமிருந்து உள்ளபடியே அவை பயன்படுத்திய நிதி மற்றும் பயன்படுத்தப்படாமல் திட்ட இயக்குநரிடம் உள்ள நிதி ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் 2007-12 காலகட்டத்தில் வழங்கப்பட்ட முழுத்தொகையான ₹ 211.48 கோடிக்கும் பயன்பாட்டுச் சான்றிதழை திட்ட இயக்குநர் மத்திய அரசுக்கு அளித்திருப்பது தெரியவந்தது. 31 மே 2013 நிலவரப்படி, திட்ட இயக்குநர் மற்றும் செயலாக்க முகமைகளிடம் (41 முகமைகள்) வட்டி வருவாய் ₹ 5.26 கோடி உட்பட ₹ 68.40[36] கோடி இருப்பு இருந்தது தணிக்கையின் போது கண்டறியப்பட்டது. 2007-08க்கு முந்தைய காலகட்டத்தில் விடுவிக்கப்பட்டு செலவிடப்படாமல் சேர்ந்து குவிந்த தொகை மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்ட வட்டி ஆகியவை இந்த இருப்பில் அடங்கும். எனினும், இவை பற்றி மத்திய அரசிடம் 2007-12 காலகட்டத்தில் அளித்த பயன்பாட்டுச் சான்றிதழ்களில் தெரிவிக்கப்படவில்லை. நிலம் இல்லாமை, நிலத் தகராறுகள் போன்ற காரணங்களால் கடந்த காலத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட பணிகள் கைவிடப்பட்டதை, பயன்படாத பெருமளவுத் தொகைக்குக் காரணமாக இயக்குநர் சுட்டிக்காட்டினார் (ஜூன் 2013).

திட்ட இயக்குநர் அளித்த பயன்பாட்டுச் சான்றிதழ்களின் அடிப்படையில் மத்திய உதவி முழுவதையும், எல்லா ஆண்டுகளிலும், ஒப்புதலளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டப்படி மத்திய அரசு வழங்கியது. மாவட்டத்திற்கு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியை வழங்கவும், நிதி பயன்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும் பொறுப்பான திட்டமிடல், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நிதிப் பயன்பாட்டை சரிவர கண்காணிக்கத் தவறியது. ஆக, திட்ட இயக்குநரின் சரியற்ற அறிக்கையின் விளைவாக பயன்படுத்தப்படாத நிதி மற்றும் அதன் மீதான வட்டி வரவுகள் கழிக்கப்படாமல் மத்திய உதவி முழுதாக வழங்கப்பட்டதுடன், சேர்ந்து குவிந்த பயன்படுத்தப்படாத தொகையான ₹ 68.40 கோடி திட்ட இயக்குநர் மற்றும் செயலாக்க முகமைகளால் அரசுக் கணக்கிற்கு வெளியே வைக்கப்பட்டிருந்தது.

தணிக்கையில் இதனைச் சுட்டிக் காட்டியபோது, திட்டப்பணிகளில் காணப்பட்ட முன்னேற்றம் மற்றும் செயலாக்க முகமைகள் அளித்த வாய்மொழி வாக்குறுதிகளின் அடிப்படையில் மத்திய அரசுக்குப் பயன்பாட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்று துறையின் முதன்மைச் செயலர் தெரிவித்தார் (அக்டோபர் 2013). செலவிடப்படாத நிதியைப் பயன்படுத்துவதற்கு திட்டங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், கருத்துருக்கள் தயார் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். திட்டங்களைக் கண்காணிப்பதும், செயலாக்க முகமைகளிடமிருந்து உள்ளபடியேயான செலவினத்துக்குரிய பயன்பாட்டுச் சான்றிதழ்கள் பெறுவதும் திட்ட இயக்குநரின் பொறுப்பாகவும், அதனை உறுதி செய்து கொள்வது அரசின் பொறுப்பாகவும் உள்ள காரணத்தால் இம்மறுமொழி ஏற்கத்தக்கதல்ல.

---

[34] நீலகிரி மாவட்டத் தலைமையகம்

[35] 28 பிரிவுகளின் கீழுள்ள 48 செயலாக்க முகமைகள்

[36] PDயிடம் ₹ 54.39 கோடி மற்றும் செயலாக்க முகமைகளிடம் ₹ 14.01 கோடி

3.6.6 மலைப்பகுதி வள தகவல் அமைப்பு செயல்படுத்தப்படாமை

நீலகிரி மாவட்டத்திற்கான மலைப்பகுதி வள தகவல் அமைப்பை உருவாக்குவதற்காக திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு ₹ 1.45 கோடி வழங்கப்பட்ட போதிலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் திட்ட இயக்குநருக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையே ஒருங்கிணைப்பு மற்றும் உரிய கண்காணிப்பு இல்லாத காரணத்தால் இவ்வமைப்பு பயன்படுத்தப்படாமல் இருந்தது.

மத்திய அரசும் உதகமண்டலத்தின் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (HADP) திட்ட இயக்குநரும் பங்களித்து செயல்படுத்தக்கூடிய வகையில் ₹ 1.46 கோடி மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்திற்கான மலைப்பகுதி வள தகவல் அமைப்பு (HILARIS) எனும் ஒரு திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதலளித்தது (பிப்ரவரி 2008). மாவட்ட அதிகாரிகள் தங்களின் திட்டமிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தும் வகையில் பூகோளரீதியான தகவல் அமைப்பை[37] (GIS) வலை சார்ந்த இடமகன்ற உறுதிப்பாட்டுக்கான ஆதரவு அமைப்பிற்கான பணிச்சூழலை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஆகஸ்ட் 2009ல் நிறைவடைந்திருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்காக ஒப்புதலளிக்கப்பட்ட நிதி, மத்திய அரசாலும் (பிப்ரவரி மற்றும் டிசம்பர் 2008ல் ₹ 75.04 இலட்சம்), திட்ட இயக்குநராலும் (ஜூலை 2008க்கும் ஏப்ரல் 2011க்கும் இடையே ₹ 70 இலட்சம்), மத்திய அரசு தெரிவு செய்த செயலாக்க முகமையான பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட போதிலும், திட்ட இயக்குநரிடம் இறுதி விளைபொருளை பல்கலைக்கழகம் அளிக்கவில்லை (ஆகஸ்ட் 2013). மொத்தச் செலவினமான ₹ 1.45 கோடிக்கு பயன்பாட்டுச் சான்றிதழ்களை மட்டுமே மத்திய அரசிடமும் திட்ட இயக்குநரிடமும் பல்கலைக்கழகம் அளித்தது (ஜூலை 2013).

திட்ட இயக்குநர் மற்றும் பல்கலைக்கழகப் பதிவேடுகளை ஆய்வு செய்த போது (ஜூலை மற்றும் ஆகஸ்ட் 2013), திட்டம் நீடித்து நிலைத்திருப்பதை உறுதி செய்யும் முகமாக, திட்டத்தின் உடைமையுரிமை இறுதிப் பயன்பாட்டாளரிடம் இருப்பதை உறுதி செய்வதே திட்டத்தின் மூலநோக்கமாக இருந்தாலும், திட்டத்தின் ஒருபகுதியாக வாங்கப்பட்ட சொத்துக்களை (₹ 40.62 இலட்சம் மதிப்புடையவை), அவற்றில் பெரும்பாலானவை மத்திய அரசின் பங்களிப்பிலிருந்து வாங்கப்பட்டவையாதலால், திட்ட இயக்குநருக்கு மாற்றுகை செய்ய இயலாதென்று, மத்திய அரசு நிதியுதவி வழங்குகையில் விதித்திருந்த ஒரு பொதுவான நிபந்தனையைக் காரணம் காட்டி, அந்தச் சொத்துக்களை மாற்றுகை செய்வதற்கு மத்திய அரசின் ஒப்புதல் தேவையென பல்கலைக்கழகம் ஒரு நிலைப்பாட்டை எடுத்திருப்பது தெரிய வந்தது.

வலைதளத்துடன் ஒன்றிணைக்க உரிய மென்பொருள் வசதி மூலமாகத் தான் திட்டத்தைப் பயன்படுத்துவது சாத்தியமாகும் என்பதைப் பல்கலைக்கழகம் நன்கு உணர்ந்திருந்தாலும், தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியவாறு, அது 65 GIS படுகைகளைக் கொண்ட ஒரு குறுந்தகட்டை திட்ட இயக்குநரிடம் ஒப்படைத்தது (ஏப்ரல் 2013). மேலும், GIS பயன்பாடுகள் திறப்பதற்குரிய மென்பொருள் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படவில்லை. வன்பொருட்கள் கூடிய தரவுகள், கலன்கள் மற்றும் வலைதளத்தில் ஏற்றல் ஆகியவற்றை திட்ட அறிக்கையில்

[37] புவியியல் காட்சியையும் பூமியில் ஏற்படும் நிகழ்வுகளையும் படங்களில் குறிக்கவும் ஆய்வு செய்யவும் உள்ள ஒரு கணினி அடிப்படையிலான கருவி GIS ஆகும்.

குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுகை செய்தால் மட்டுமே, முழுத் திட்டமும் ஏற்றுக் கொள்ளப்படும் என பல்கலைக்கழகத்திடம் திட்ட இயக்குநர் தெரிவித்தார் (மே 2013).

இவ்வாறு, நிர்ணயிக்கப்பட்ட திட்டக் காலம் முடிவுறும் காலம் கடந்து நான்காண்டுகள் நிறைவடைந்த பின்னரும், திட்ட இயக்குநருக்கும் பல்கலைக்கழகத்திற்கும் இடையே ஒருங்கிணைப்பு மற்றும் உரிய கண்காணிப்பு இல்லாமை காரணமாக, திட்டத்தின் உடைமையுரிமை பல்கலைக்கழகத்தால் திட்ட இயக்குநருக்கு மாற்றுகை செய்யப்படவில்லை. இதன் விளைவாக, மாவட்டத்தில் HILARIS செயல்படுத்தப்படாமல், திட்டமிடல் நோக்கங்களுக்கு GIS பயன்பாடுகள், இறுதிப் பயன்பாட்டாளர்கள் பயன்படுத்துதல் என்ற குறிக்கோள் நிறைவேறாமல் போனது.

இது தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டபோது, திட்டத்தை வெற்றியடையச் செய்யவும், மத்திய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திடமிருந்து ஒப்புதல் பெற்று திட்டத்தின் சொத்துக்களை திட்ட இயக்குநருக்கு மாற்றுகை செய்யவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசு தெரிவித்தது (அக்டோபர் 2013). எனினும், திட்டமிடல் நோக்கங்களுக்கென உருவாக்கப்பட்ட மென்பொருள் செயற்பாடுகள் நான்காண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படவில்லை என்பதே உண்மை நிலை.

(கே. ஸ்ரீனிவாசன்)

சென்னை
நாள் 23 ஏப்ரல் 2014

முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை),
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி

மேற்கையொப்பமிடப்பட்டது

(ஷஷி காந்த் ஷர்மா)

புது தில்லி
நாள் 30 ஏப்ரல் 2014

இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர்

இணைப்புகள்

இணைப்பு 1.1
(பார்வை : பத்தி 1.5.2; பக்கம் 4)

நிலுவையிலுள்ள ஆய்வறிக்கைகள் மற்றும் தணிக்கைப் பத்திகளின் துறைவாரியான விவரங்கள்

வரிசை எண்	துறையின் பெயர்	நிலுவையின் எண்ணிக்கை	
		ஆய்வறிக்கைகள்	தணிக்கைப் பத்திகள்
1	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்	150	811
2	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம்	69	327
3	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	109	249
4	நிதி	15	31
5	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம்	749	3,410
6	உயர் கல்வி	384	1,481
7	உள்துறை	401	1,141
8	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி	94	309
9	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு	70	177
10	சட்டம்	11	30
11	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்	229	549
12	பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம்	6	14
13	பொது	27	89
14	வருவாய்	1,182	3,523
15	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி	51	223
16	பள்ளிக் கல்வி	614	1,838
17	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம்	272	834
18	சிறப்புத் திட்டச் செயலாக்கம்	19	92
19	தமிழ் வளர்ச்சி, எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் செய்தி	45	147
20	சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு, இந்து சமய அறநிலையங்கள்	33	75
21	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு	9	20
	மொத்தம்	**4,539**	**15,370**

இணைப்பு 2.1

(பார்வை : பத்தி 2.1.1; பக்கம் 12)

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் செயல்படுத்தும் நலத் திட்டங்கள்

வரிசை எண்	நிதியுதவியின் பெயர்	நிதியுதவியின் அளவு
1	பதிவு செய்யப்பட்ட தொழிலாளரின் இறப்பு/கை, கால், பார்வை போன்றவற்றின் இழப்புக்காக வழங்கப்படும் தனிநபர் விபத்து நிவாரண நிதி	₹ 1,00,000 வரை
2	(i) பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் 60 வயதை நிறைவு செய்தாலோ அல்லது உடல்நலிவு ஏற்பட்டு சாதாரண வேலையைக் கூட செய்ய இயலாமல் போனாலோ வழங்கப்படும் ஒய்வூதியம்	₹ 1,000 பிரதி மாதம்
	(ii) பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் இறந்தால் அவரது வாழ்க்கைத் துணைக்கு வழங்கப்படும் குடும்ப ஒய்வூதியம்	₹ 400 பிரதி மாதம்
3	இறுதிச் சடங்கு நிதியுதவி	₹ 2,000
4	இயற்கை மரண நிதியுதவி	₹ 15,000
5	பதிவு செய்யப்பட்ட தொழிலாளரின் மகன் அல்லது மகளின் கல்வி உதவித்தொகை	₹ 1,000 முதல் ₹ 8,000 வரை (பாடப்பிரிவுக்குத் தக்கவாறு)
6	பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினரின் திருமண உதவித்தொகை	₹ 5,000 வரை
7	பதிவு செய்யப்பட்ட பெண் தொழிலாளரின் மகப்பேறு அல்லது கர்ப்பம் தங்காமல் போவது அல்லது கருக்கலைப்பு ஆகியவற்றுக்கான நிதியுதவி	₹ 6,000 வரை
8	மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கான நிதியுதவி	₹ 500 வரை

இணைப்பு 2.2

(பார்வை : பத்தி 2.2.5; பக்கம் 36)

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள்

(i) அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள்

வரிசை எண்	கல்லூரியின் பெயர்	
1	டாக்டர் தர்மாம்பாள் அரசு பாலிடெக்னிக் கல்லூரி	சென்னை
2	தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி	மதுரை
3	அரசு பாலிடெக்னிக் கல்லூரி	அறந்தாங்கி
4	அரசு பாலிடெக்னிக் கல்லூரி (மகளிர்)	மதுரை
5	அரசு பாலிடெக்னிக் கல்லூரி (மகளிர்)	கோயம்புத்தூர்
6	அரசு பாலிடெக்னிக் கல்லூரி (கனியாளம்பட்டி)	கரூர்
7	அரசு பாலிடெக்னிக் கல்லூரி (அரகண்டநல்லூர்)	விழுப்புரம்
8	அரசு பாலிடெக்னிக் கல்லூரி (அம்பலக்காரன்பட்டி)	மேலூர்
9	இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனம்	சென்னை
10	தோல் தொழில்நுட்ப நிறுவனம்	சென்னை

(ii) அரசு உதவி பெறும் பாலிடெக்னிக் கல்லூரிகள்

வரிசை எண்	கல்லூரியின் பெயர்	
1	நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி	பொள்ளாச்சி
2	PSG பாலிடெக்னிக் கல்லூரி	கோயம்புத்தூர்
3	தியாகராஜா பாலிடெக்னிக் கல்லூரி	சேலம்
4	GRG பாலிடெக்னிக் கல்லூரி	கோயம்புத்தூர்
5	காமராஜ் பாலிடெக்னிக் கல்லூரி	கன்னியாகுமரி
6	அய்யா நாடார் ஜானகியம்மாள் பாலிடெக்னிக் கல்லூரி	விருதுநகர்
7	முத்தையா பாலிடெக்னிக் கல்லூரி	சிதம்பரம்
8	NPA நூற்றாண்டு பாலிடெக்னிக் கல்லூரி	கோத்தகிரி
9	பட்டுக்கோட்டை பாலிடெக்னிக் கல்லூரி	பட்டுக்கோட்டை

இணைப்பு 2.3

(பார்வை : பத்தி 2.2.7.1; பக்கம் 39)

பெறப்பட்டு பயன்படுத்தப்பட்ட தொகுப்பு மானியங்களின் விவரங்கள்

(₹ இலட்சத்தில்)

ஆண்டு	ஆரம்பக் கையிருப்பு	பெறப் பட்ட மானியம்	ஏனைய வரவுகள்*	மொத்த இருந்த நிதி	செலவினம்	முடிவுக் கையிருப்பு
மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை						
2009-10	41.52	612.91	4.21	658.64	481.80	176.84
2010-11	176.84	622.56	67.99	867.39	667.32	200.07
2011-12	200.07	810.20	0.00	1,010.27	644.14	366.13
2012-13	366.13	767.02	0.00	1,133.15	583.27	549.88
மொத்தம்		*2,812.69*	*72.20*		*2,376.53*	
தர்மாம்பாள் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை						
2009-10	**55.61**	368.97	3.65	428.23	330.67	97.56
2010-11	97.56	412.55	6.23	516.34	400.66	115.68
2011-12	115.68	431.11	7.80	554.59	428.83	125.76
2012-13	125.76	478.13	9.01	612.90	340.85	272.05
மொத்தம்		*1,690.76*	*26.69*		*1,501.01*	
தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை						
2009-10	**26.95**	313.55	35.86	376.36	254.53	121.83
2010-11	121.83	393.70	28.69	544.22	365.79	178.43
2011-12	178.43	446.97	10.38	635.78	384.37	251.41
2012-13	251.41	310.94	83.44	645.79	437.98	207.81
மொத்தம்		*1,465.16*	*158.37*		*1,442.67*	
பெரு மொத்தம்		**5,968.61**	**257.26**	**6,349.95#**	**5,320.21**	

* தொகுப்பு மானியங்களுக்கு சேமிப்பு வங்கிக் கணக்குகளில் ஈட்டப்பட்ட வட்டித்தொகை

2009-10ன் ஆரம்பக் கையிருப்பு (+) பெறப்பட்ட மொத்த மானியம் (+) மொத்த ஏனைய வரவுகள்

இணைப்பு 2.4

(பார்வை : பத்தி 2.2.7.3; பக்கம் 41)

அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் சிறப்புக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ஆகியவற்றின் பயன்பாடு

(₹ இலட்சத்தில்)

பாலிடெக்னிக் கல்லூரியின் பெயர்	நிதியின் பெயர்	இருந்த நிதி	2008-13 வரை செலவினம்	முடிவுக் கையிருப்பு 31.3.2013	பயன்பாட்டின் சதவீதம்
தர்மாம்பாள் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை	SF	112.25	71.30	40.95	64
	DF	75.12	46.92	28.20	62
இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை	SF	37.81	6.63	31.18	18
	DF	32.31	1.55	30.76	5
தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, மதுரை	SF	162.09	71.75	90.34	44
	DF	445.07	373.35	71.72	84
அரசு பாலிடெக்னிக் கல்லூரி (மகளிர்), மதுரை	SF	129.32	61.04	68.28	47
	DF	134.56	115.70	18.86	86
அரசு பாலிடெக்னிக் கல்லூரி (மகளிர்), கோயம்புத்தூர்	SF	75.69	42.17	33.52	56
	DF	70.91	39.82	31.09	56
அரசு பாலிடெக்னிக் கல்லூரி, அறந்தாங்கி	SF	70.88	23.02	47.86	32
	DF	87.72	56.05	31.67	64
அரசு பாலிடெக்னிக் கல்லூரி, விழுப்புரம்	SF	15.31	1.78	13.53	12
	DF	16.12	3.11	13.01	19
அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கரூர்	SF	18.61	12.02	6.59	65
	DF	19.85	16.05	3.80	81
அரசு பாலிடெக்னிக் கல்லூரி, மேலூர்	SF	23.85	13.32	10.53	56
	DF	21.12	7.65	13.47	36
தோல் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை	SF	26.52	4.23	22.29	16
	DF	19.80	6.22	13.58	31

SF : சிறப்புக் கட்டணம் DF : வளர்ச்சிக் கட்டணம்

(ஆதாரம்: பாலிடெக்னிக் கல்லூரிகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள்)

இணைப்பு 2.5

(பார்வை : பத்தி 2.2.11.2(i); பக்கம் 47)

தங்கும் விடுதிகள் கட்டுமான நிலவரம்

வரிசை எண்	பாலிடெக்னிக் கல்லூரியின் பெயர்	கட்டி முடிக்க நிர்ணயிக்கப் பட்ட மாதம்	குறிப்புகள்
1	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, அறந்தாங்கி	பிப்ரவரி 2013	இறுதிப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. நிதிப் பற்றாக்குறை காரணமாக பணிகள் தடைப்பட்டன
2	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி	அக்டோபர் 2011	
3	தர்மாம்பாள் அரசு பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை	ஏப்ரல் 2011	
4	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, நாகர்கோவில்	ஜனவரி 2012	முக்கியமான பணிகள் நிறைவடைந்துள்ளன. துணைப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்
5	அரசு பாலிடெக்னிக் கல்லூரி (மகளிர்), கோயம்புத்தூர்	தகவல் பெறப்படவில்லை	
6	மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை	ஜூலை 2011	
7	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, தூத்துக்குடி	ஜனவரி 2012	வாயில் மேற்கட்டை (lintel) உயரத்திற்கு கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது
8	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர்	தகவல் பெறப்படவில்லை	கூரை அடைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது
9	இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை	செப்டம்பர் 2012	பூச்சுவேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது
10	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, புரசைவாக்கம்	தகவல் பெறப்படவில்லை	கட்டட அடிப்படை தாங்கும் பதிகால் (pile) அமைக்கும் பணி நடந்து கொண்டிருந்தது
11	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, உதகமண்டலம்	தகவல் பெறப்படவில்லை	ஒப்பந்தப்புள்ளி கோருவது நடைமுறையில் இருந்தது

இணைப்பு 2.6

(பார்வை : பத்தி 2.2.11.3(ii); பக்கம் 48)

பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு செயல்முறை வகுப்புகள் நடத்தப்படாமை

வரிசை எண்	கல்வி நிறுவனத்தின் பெயர்	பாடத்திட்டம்/பாடப்பிரிவு	இரு பருவ முறையின் எண்	பாடம்	நடத்தப்பட வேண்டிய பரிசோதனைகளின் எண்ணிக்கை	நடத்தப்படாத பரிசோதனைகளின் எண்ணிக்கை	நடத்தப்படாத பரிசோதனைகளின் சதவீதம்
1	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, விழுப்புரம்	L-பாடத்திட்டம்/கட்டடப் பொறியியல் பட்டயப் படிப்பு	V	பொருள் பரிசோதனை ஆய்வகம் - II	14	5	36
			IV	சுற்றாய்வு செயல்முறை விளக்கம்	12	4	33
		L- பாடத்திட்டம் / இயந்திரப் பொறியியல் பட்டயப் படிப்பு	IV	எடையியல் மற்றும் எடையளவு மற்றும் இயந்திரக் கருவிகள் செயல்முறை விளக்கம்	18	3	17
			IV	மின் இயக்கிகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கான செயல்முறை விளக்கங்கள்	17	5	29
			III	நெகிழ்நீர்ம ஆற்றல் செயல்முறை விளக்கம்	17	2	12
		L- பாடத்திட்டம் / கணிப் பொறியியல் பட்டயப் படிப்பு	III	மின்னியல் மற்றும் மின்னணுவியல் செயல்முறை விளக்கம்	17	3	18
2	அரசு பாலிடெக்னிக் கல்லூரி, கரூர்	கட்டடப் பொறியியல் பட்டயப் படிப்பு	III	பொருள் பரிசோதனை ஆய்வகம் - I	17	4	24
		L- பாடத்திட்டம் / இயந்திரப் பொறியியல் பட்டயப் படிப்பு	III	நெகிழ்நீர்ம ஆற்றல் செயல்முறை விளக்கம்	17	2	12
3	இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை	L- பாடத்திட்டம் / வேதியியல் தொழில்நுட்ப பட்டயப் படிப்பு	III	இயந்திரப் பொறியியல் செயல்முறை விளக்கம்	10	3	30
			IV	இயந்திரவியல் செயற்பாடுகள்	10	1	10
			IV	நெகிழ்நீர்ம இயக்கவியல்	10	1	10
		K- பாடத்திட்டம் / வேதியியல் தொழில்நுட்பம்	IV	வேதியியல் நடைமுறை - அளவு மற்றும் கட்டுப்பாடு	10	7	70
			IV	வெப்பம் மற்றும் நிறை மாற்று ஆய்வகம்	12	3	25
		K- பாடத்திட்டம் / மீச்சேர்ம தொழில்நுட்ப பட்டயப் படிப்பு	IV	மீச்சேர்ம அறிவியல் ஆய்வகம்	9	3	33
			V	மீச்சேர்ம பதன ஆய்வகம்	15	7	47
			VI	மீச்சேர்ம ஆய்வு	12	6	50
			VI	இரப்பர் மரப்பால் ஆய்வு	5	2	40
			VI	இரப்பர் ஆய்வு	3	2	67

இணைப்பு 2.7

(பார்வை : பத்தி 2.2.12.1; பக்கம் 50)

ஆசிரியப் பணியிடங்களில் காலியிடங்கள் - அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள்

நிலவரம்*		பதவியின் பெயர் மற்றும் பணியிடங்களின் எண்ணிக்கை					
		கல்லூரி முதல்வர்	துறைத் தலைவர்	முதுநிலை விரிவுரையாளர்**	விரிவுரையாளர்	பயிற்றுநர்	மொத்தம்
ஆகஸ்ட் 2009	ஒப்பளித்தது	விவரங்கள் பெறப் படவில்லை	81	191	272	430	974
	நிரப்பியது		24	75	159	189	447
	காலியிடம்		57	116	113	241	527
	காலியிடம் (சதவீதத்தில்)		70	61	42	56	54
ஆகஸ்ட் 2010	ஒப்பளித்தது	22	82	158	393	282	937
	நிரப்பியது	3	19	69	184	86	361
	காலியிடம்	19	63	89	209	196	576
	காலியிடம் (சதவீதத்தில்)	86	77	56	53	70	61
ஆகஸ்ட் 2011	ஒப்பளித்தது	30	82	194	443	266	1,015
	நிரப்பியது	8	10	74	185	75	352
	காலியிடம்	22	72	120	258	191	663
	காலியிடம் (சதவீதத்தில்)	73	88	62	58	72	65
ஆகஸ்ட் 2012	ஒப்பளித்தது	30	119	187	595	325	1,256
	நிரப்பியது	8	27	78	155	78	346
	காலியிடம்	22	92	109	440	247	910
	காலியிடம் (சதவீதத்தில்)	73	77	58	74	76	72
ஆகஸ்ட் 2013	ஒப்பளித்தது	30	126		1,085	120	1,361
	நிரப்பியது	24	8		394	11	437
	காலியிடம்	6	118		691	109	924
	காலியிடம் (சதவீதத்தில்)	20	94		64	91	68

* ஒவ்வோராண்டும் ஆகஸ்ட் மாதத்தில் CTE கல்லூரிகளிலுள்ள மனிதவளம் குறித்த தகவல்களைப் பெறுவதால் அதே மாதம் இங்கும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது

** பணிப்பிரிவுகள் சீரமைப்பின் ஒரு பகுதியாக ஏப்ரல் 2013ல் முதுநிலை விரிவுரையாளர் பணிப்பிரிவு, விரிவுரையாளர் பணிப்பிரிவுடன் இணைக்கப்பட்டது

இணைப்பு 2.8

(பார்வை : பத்தி 2.4.6.1; பக்கம் 82)

திட்ட அனுமதி வழங்குவதில் மின்னாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கு முன்னரும் பின்னரும் காணப்பட்ட செயலாக்கம்

கட்டட வகை	காலஅளவு (நாட்களில்)	மின்னாட்சி முறைக்கு முன்பு (2006)		மின்னாட்சி முறைக்குப் பின்பு (2008)		குறிப்புகள்
		அனுமதி வழங்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை	அனுமதி வழங்குவதில் எட்டப்பட்ட சதவீதம்	அனுமதி வழங்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை	அனுமதி வழங்குவதில் எட்டப்பட்ட சதவீதம்	
சாதாரணக் கட்டடம்	0 முதல் 45 வரை	11	4	13	16	மின்னாட்சி முறைக்குப் பின்பு, சிறிதளவே முன்னேற்றம் காணப்பட்டது. ஆயினும், 84 சதவீத நேர்வுகளுக்கு 45 நாட்களுக்கு மேல் ஆனது.
	45 முதல் 90 வரை	45	14	25	31	
	90 முதல் வரை	150	47	30	37	
	180க்கு மேல்	110	35	13	16	
மொத்தம்		***316**		***81**		
சிறப்புக் கட்டடம்	0 முதல் 45	25	5	18	6	காலஅளவில் எவ்வித முன்னேற்றமுமில்லை. மின்னாட்சி முறைக்குப் பிறகு 94 சதவீத நேர்வுகளுக்கு 45 நாட்களுக்கும் மேல் ஆனது
	45 முதல் 90 வரை	82	16	30	11	
	90 முதல் வரை	198	39	59	21	
	180க்கு மேல்	199	40	179	62	
மொத்தம்		****504**		****286**		
அடுக்கு மாடிக் கட்டடம்	0 முதல் 75 வரை	32	57	12	41	காலஅளவில் எவ்வித முன்னேற்றமுமில்லை. மின்னாட்சி முறைக்குப் பிறகு 59 சதவீத நேர்வுகளுக்கு 75 நாட்களுக்கு மேல் ஆனது
	75 to 150 வரை	14	25	6	21	
	150 to 225 வரை	4	7	3	10	
	225 க்கு மேல்	6	6	8	28	
மொத்தம்		*****56**		*****29**		

* 2006 மற்றும் 2008 ஆண்டுகளில் முறையே அனுமதிக்கப்பட்ட 661 மற்றும் 209 சாதாரணக் கட்டடங்களில் 316 மற்றும் 81 நேர்வுகளில் மட்டுமே "சமர்ப்பித்த நாள்" எனும் தகவல் கணிப்பொறி அமைப்பில் காணப்பட்டது.

** 2006 மற்றும் 2008 ஆண்டுகளில் முறையே அனுமதிக்கப்பட்ட 519 மற்றும் 290 சிறப்புக் கட்டடங்களில் 504 மற்றும் 286 நேர்வுகளில் மட்டுமே "சமர்ப்பித்த நாள்" எனும் தகவல் கணிப்பொறி அமைப்பில் காணப்பட்டது.

*** 2006 மற்றும் 2008 ஆண்டுகளில் முறையே அனுமதிக்கப்பட்ட 65 மற்றும் 42 அடுக்கு மாடிக் கட்டடங்களில் 56 மற்றும் 29 நேர்வுகளில் "கூர்ந்தாய்வுக் கட்டணம் செலுத்தப்பட்ட தேதியே சமர்ப்பித்த தேதி" எனும் தகவல் காணப்பட்டது.

இணைப்பு 2.9

(பார்வை : பத்தி 2.4.6.1; பக்கம் 83)

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நேர்வுகளில் 2013ஆம் ஆண்டில் திட்ட அனுமதி வழங்குவதில் ஏற்பட்ட காலஅளவின் போக்குநிலை மீதான பகுப்பாய்வு

நிகழ்வு	கால தாமதத்திற்குப் பொறுப்பு	நேர்வுகளின் எண்ணிக்கை	நாட்கணக்கில் காலஅளவு
சிறப்புக் கட்டடங்கள் (ஒன்றுக்கொன்று தொடர்பின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக தெரிவு செய்யப்பட்ட 10 நேர்வுகளில், ஒன்று திட்ட அனுமதியை புதுப்பிக்கக் கோரியதும் மற்றொன்று தணிக்கை ஆய்வுக்கு வழங்கப்படாததும் ஆகும்)			
அத்தாட்சிச் சான்று வழங்கியதிலிருந்து வளர்ச்சிக் கட்டணம் செலுத்தக் கோரும் கடிதம் வரை	CMDA	8	31 முதல் 490 வரை
வளர்ச்சிக் கட்டணம் செலுத்தக் கோரும் கடிதம் அனுப்பியதிலிருந்து கட்டணம் செலுத்துதல் வரை	விண்ணப்பதாரர்	8	0 முதல் 124 வரை
வளர்ச்சிக் கட்டணம் செலுத்தியது முதல் திருத்திய வரைபடம் கோருதல் வரை	CMDA	8	36 முதல் 258 வரை
திருத்திய வரைபடம் கோரியதிலிருந்து திருத்திய வரைபடம் சமர்ப்பித்தது வரை	விண்ணப்பதாரர்	3	10 முதல் 17 வரை
திருத்திய வரைபடம் சமர்ப்பித்தது முதல் திட்ட அனுமதி வழங்கியது வரை	CMDA	3	10 முதல் 145 வரை
வளர்ச்சிக் கட்டணம் செலுத்தியது முதல் திட்ட அனுமதி வரை	CMDA	8	3 முதல் 39 வரை
அடுக்கு மாடிக் கட்டடங்கள் (10 நேர்வுகள்)			
போக்குவரத்து உதவி ஆணையரிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ்	போக்குவரத்துத் துறை	10	40 முதல் 192 வரை
திருத்திய வரைபடம் சமர்ப்பித்தல்	CMDA	10	3 முதல் 187 வரை
அரசிடமிருந்து அனுமதி	அரசு அலுவலகம்	10	23 முதல் 56 வரை
சார் பதிவாளரிடமிருந்து வழிகாட்டு மதிப்பு கோரும் கடிதம்	சார் பதிவாளர் அலுவலகம்	10	1 முதல் 61 வரை
வளர்ச்சிக் கட்டணம் செலுத்துதல்	CMDA	10	2 முதல் 273 வரை
இறுதித் திட்ட அனுமதி	CMDA	10	3 முதல் 145 வரை

இணைப்பு 3.1

(பார்வை : பத்தி 3.1.6; பக்கம் 97)

மாவட்ட வாரியாக எழுத்தறிவு பெற்றோர் மற்றும் நூலக உறுப்பினர்கள்

வரிசை எண்	மாவட்டத்தின் பெயர்	மாவட்டத்தில் கல்வியறிவு உடையோர்	நூலகங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை	எழுத்தறிவு பெற்றோரில் உறுப்பினர்களின் சதவீதம்
1	சென்னை	38,50,472	160	3,80,491	10
2	அரியலூர்	4,86,446	39	43,197	9
3	கோயம்புத்தூர்	26,78,637	232	3,95,907	15
4	கடலூர்	18,49,805	135	1,50,446	8
5	தர்மபுரி	8,67,631	121	1,20,422	14
6	திண்டுக்கல்	15,07,310	152	1,74,967	12
7	ஈரோடு	15,16,380	197	2,71,967	18
8	காஞ்சிபுரம்	30,65,799	154	2,15,937	7
9	கன்னியாகுமரி	15,67,580	131	85,098	5
10	கரூர்	7,41,610	88	1,00,298	14
11	கிருஷ்ணகிரி	12,16,436	116	1,23,099	10
12	மதுரை	22,48,749	132	2,05,704	9
13	நாகப்பட்டினம்	12,27,311	98	1,26,565	10
14	நாமக்கல்	11,84,344	142	1,91,282	16
15	பெரம்பலூர்	3,79,797	51	52,357	14
16	புதுக்கோட்டை	11,26,580	75	86,433	8
17	இராமநாதபுரம்	9,86,038	83	1,06,693	11
18	சேலம்	23,11,715	160	2,94,402	13
19	சிவகங்கை	9,76,384	118	1,16,291	12
20	தஞ்சாவூர்	18,02,291	107	1,90,120	11
21	நீலகிரி	5,76,799	80	1,38,508	24
22	தேனி	8,79,259	132	1,28,384	15
23	திருச்சிராப்பள்ளி	20,55,742	129	2,50,645	12
24	திருவள்ளூர்	28,12,839	130	2,01,806	7
25	திருவாரூர்	9,60,036	86	1,10,518	12
26	திருப்பூர்	17,79,379	138	2,11,986	12
27	திருவண்ணாமலை	16,53,284	139	1,33,836	8
28	திருநெல்வேலி	22,98,262	188	2,66,449	12
29	தூத்துக்குடி	13,56,564	123	1,29,422	10
30	வேலூர்	28,04,762	148	1,99,638	7
31	விருதுநகர்	14,21,270	157	1,90,467	13
32	விழுப்புரம்	22,23,605	152	1,30,426	6
	மொத்தம்	**5,24,13,116**		**55,23,761**	**11**

(ஆதாரம்: 2011ம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பு மற்றும் பொதுநூலகத் துறை இயக்குநரின் ஆண்டு அறிக்கை)

இணைப்பு 3.2

(பார்வை : பத்தி 3.2.4; பக்கம் 102)

தமிழ்நாடு சுகாதாரக் கூடுதல் நிதியுதவித் திட்டத்தின் கீழ் TNMSCக்கு தமிழ்நாடு ஒப்பளித்த மற்றும் விடுவித்த நிதி

வரிசை எண்	கருவியின் விவரங்கள்	அரசாணை எண் மற்றும் நாள்	தொகை (₹ in கோடி)			
			ஒப்பளிக்கப் பட்டது	TNMSCயிடம் வைப்பீடு செய்யப்பட்டது	பயன்படுத்தப் பட்டது (ஜூன் 2013)	பயன்படுத்தப் படாதது
1	32 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் விஷமுறிவு சிகிச்சை மையங் களுக்கான கருவிகள் (ஆக்கக் கூறு IV - துணை ஆக்கக்கூறு A)	(2D) 92 17/8/2010	3.86*	3.86	3.61	0.25
2	நடமாடும் ஊர்திகள் (ஆக்கக் கூறு I - துணை ஆக்கக்கூறு B)	(2D) 93 17/8/2010	0.68	0.68	0.50	0.18
3	TNMSCயில் வசதிகளை அதிகரித்தல் (ஆக்கக் கூறு IV - துணை ஆக்கக்கூறு A)	(2D) 103 20/9/2010	8.87	8.87	..	8.87
4	அவசர மருத்துவ ஊர்தி - அடித்தள வாகனம் - ₹ 14 கோடி (ஆக்கக்கூறு I - துணை ஆக்கக்கூறு C)	(2D) 104 17/9/2010	31.02*	31.00	18.65	12.35
5	அவசர மருத்துவ ஊர்தி - கட்டுமானம் - ₹ 7 கோடி (ஆக்கக்கூறு I - துணை ஆக்கக்கூறு C)					
6	அவசர மருத்துவ ஊர்தி - கருவிகலத் தொகுதி - ₹ 10 கோடி (ஆக்கக்கூறு I - துணை ஆக்கக்கூறு C)					
7	இரண்டாம் நிலை மருத்துக மனைகளை வலுவூட்டுவதற்கான கருவிகள் - ₹ 45.90 கோடி (ஆக்கக்கூறு IV - துணை ஆக்கக்கூறு A)	(2D) 105 20/9/2010	70.71	70.31	48.55	21.76
8	இருதய நாள நோய் திட்டத்திற்கான கருவிகள் - ₹ 13.89 கோடி					
9	கழுத்துப் பகுதி சார்ந்த புற்று நோய் சிகிச்சைக்கான கருவிகள் - ₹ 10.92 கோடி					
10	38 இரண்டாம் நிலை மருத்துக மனைகளில் ஒருமுகப்படுத்தப் பட்ட பிராணவாயு வழங்கும் அமைப்பு (ஆக்கக்கூறு IV - துணை ஆக்கக்கூறு A)	(2D) 112 5/10/2010	2.85	2.85	..	2.85
11	க்ரியோதெராபி பிரிவுகள் (ஆக்கக்கூறு II - துணை ஆக்கக்கூறுகள் A மற்றும் B)	(2D) 4 3/1/11	0.72	0.72	0.57	0.15

வரிசை எண்	கருவியின் விவரங்கள்	அரசாணை எண் மற்றும் நாள்	தொகை (₹ in கோடி)			
			ஒப்பளிக்கப் பட்டது	TNMSCயிடம் வைப்பீடு செய்யப்பட்டது	பயன்படுத்தப் பட்டது (ஜூன் 2013)	பயன்படுத்தப் படாதது
12	நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கான கருவிகள் (ஆக்கக்கூறு II - துணை ஆக்கக்கூறுள் A மற்றும் B)	(2D) 5 3/1/11	1.77	1.77	0.37	1.40
13	சுழற்கடைவு (centrifuge) இயந்திரங்கள் (ஆக்கக்கூறு II - துணை ஆக்கக்கூறுகள் A மற்றும் B)	(2D) 6 3/1/2011	0.90	0.90	0.89	0.01
14	மார்பக ஊடுகதிர் படப்பதிவு பிரிவுகள் அமைப்பதற்கான கருவிகள் (ஆக்கக்கூறு II - துணை ஆக்கக்கூறு B)	(2D) 8 4/1/2011	4.80	..	..	..
15	எட்டு அரசு நல்வாழ்வு மையங் களில் விரிவான அவசரகால தாய்மை நலம் மற்றும பிறந்த குழந்தைகளின் மருத்துவ சேவைகளுக்கான கருவிகள் (ஆக்கக்கூறு I - துணை ஆக்கக்கூறு A)	(2D) 17 24/1/2012	8.10*	8.10	0.32	7.78
	மொத்தம்		134.28	129.06	73.46	55.60

* ₹ 0.135 கோடி விளம்பரக் கட்டணம் சேர்த்து

இணைப்பு 3.3

(பார்வை : பத்தி 3.2.4; பக்கம் 102)

கைவிடப்பட்ட மற்றும் முழுமை பெறாத கொள்முதல்கள்

வரிசை எண்	சாதனங்களின் பெயர்	ஒப்பளிப்பு விவரங்கள்				கொள்முதல் கைவிடப்பட்டது / முழுமை பெறாததற்கான காரணங்கள்	தற்போதைய நிலை
		அரசாணை எண்	நாள்	அளவு (எண்ணிக்கையில்)	தொகை (₹ கோடியில)		
	கொள்முதல் கைவிடப்பட்ட சாதனங்கள்						
1	ABG அனலைசர்	(2D) 105	20/9/2010	30	0.60	மருததுவக் கல்லூரி மருத்துவமனைகளில் இக்கருவி ஒரளவே பயன்படுத்தப்பட்டது	"ஆய்வக சேவைகளை வலுப்படுத்துதல்" எனும் திட்டத்தின் கீழ் இக்கருவியை கொள்முதல் செய்வதற்கு தற்போது (செப்டம்பர் 2013) திட்டமிடப்பட்டுள்ளது
2	பழைய/பாதுகாப்பற்ற X-ray கருவிகளை மாற்றீடு செய்தல்	(2D) 105	20/9/2010	45	4.50	வேறொரு முகமையால் (தேசிய ஊரக சுகாதாரத் திட்டம்) கொள்முதல் செய்யப்பட்ட 41 நடமாடும் X-ray பிரிவுகள் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை (tertiary) நலவாழ்வு மையங்களுக்கு வழங்கப்பட்டன	கூடுதலாக வழங்கப்பட்ட X-ray பிரிவுகளை, AF திட்டத்தின்கீழ் வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மருத்துவமனைகளில் பயன்படுத்த மருத்துவ மனைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன
3	ஒருமுகப்படுத்தப்பட்ட பிராணவாயு வழங்கு அமைப்பு	(2D) 112	5/10/2010	38	2.85	இதே போன்ற அமைப்புகளை DMRHS வாங்கி விட்டார். எனினும், DMRHS வாங்கி வழங்கப்பட்ட மருத்துவமனைகளுள் AF திட்டத்தின் கீழ் சேர்க்கத் திட்டமிடப்பட்ட எட்டு மருத்துவமனைகள் சேர்க்கப்படவில்லை.	துறையிடமிருந்து குறிப்பிடத்தக்க பதில் ஏதுமில்லை.
	மொத்தம்				**7.95**		
	கொள்முதல் முழுமையடையாத சாதனங்கள்						
4	அவசர மருத்துவ ஊர்தி (அடித்தளம், கட்டுமானம் மற்றும் கருவிக் கலத் தொகுதி)	(2D) 104	17/9/2010	30	4.65	ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டபின், வடிவம் திருத்தப்பட்டதுடன் மலை மற்றும் அணுகுவதற்கு கடினமான பகுதிகளில் இயக்குவதற்கு ஏற்ற வகையில் சிறிய அளவிலான வண்டிகள் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டது.	மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வழங்காணைகள் முன்வைக்கப்பட்டன (ஜூன் 2013). வழங்கல் நடைபெற்றுக் கொண்டிருந்தன.
5	பன்னோக்கு துறை எச்சரிப்புக் கருவிகள்	(2D) 105	20/9/2010	30	3.65	TNMSC குறைபாடுகளுடைய ஒரு விலைப்புள்ளியை இறுதி செய்ததால் உலக வங்கி அறிவுறுத்தல்களின்படி மறுஒப்பந்தப்புள்ளி கோரியதையடுத்து இரண்டு ஆண்டுகள் காலதாமதம் ஏற்பட்டது	கொள்முதல் செய்வதற்கான ஆணைகள் வழங்குவது நிலுவையிலிருந்தது
6	மார்பக ஊடுகதிர் படப்பதிவுப் பிரிவுகள்	(2D) 8	4/1/2011	32	4.80	இந்தச் சேவையை அரசு காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கத் திட்டமிடப்பட்டது	இக்கருவிகளை கொள்முதல் செய்ய தற்போது திட்டமிடப்பட்டு (செப்டம்பர் 2013), விலைப்புள்ளிகள் கோரப்பட்டு TNMSCயின் பரிசீலனையில் இருந்தன
7	எட்டு அரசு நல்வாழ்வு மையங்களில் CEmONC சேவைகளுக்கான சாதனங்கள்	(2D) 17	24/1/2012	8	8.10	தேவைகளைக் கணக்கிடவும் தொழில்நுட்பக் குறிப்புகளை இறுதி செய்யவும் எடுத்துக் கொள்ளப்பட்ட காலஅளவு சாதனங்களை கொள்முதல் செய்வதில் காலதாமதத்தை ஏற்படுத்தியது	மொத்தமுள்ள 29 சிப்பங்களில் 16க்கு ஆணைகள் வழங்கப்பட்டு அச்சாதனங்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன
	மொத்தம்				**21.20**		

இணைப்பு 3.4

(பார்வை : பத்தி 3.2.5.1; பக்கம் 102)

கொள்முதல்களில் ஏற்பட்ட காலதாமதம் குறித்த விவரங்கள்

Sl. No.	கருவியின் பெயர்	விலைப்புள்ளிகள் திறக்கப்படுதல்			ஒப்பந்தம் கையெழுத்திடல்			கொள்முதல் முடிவுறுதல்		
		திட்டமிட்ட படியான நாள்	திறக்கப் பட்ட நாள்	தாமதம் (நாட் களில்)	திட்டமிட்ட படியான நாள்	கையெழுத்-தான நாள்	தாமதம் (நாட் களில்)	திட்டமிட்ட படியான நாள்	முடிவுற்ற நாள்	தாமதம் (நாட் களில்)
1	PACSஉடன் கூடிய டிஜிட்டல் X-ray	24/12/10	14/6/11	172	24/3/11	11/1/12	293	22/7/11	முடிவுற வில்லை	801
2	எக்கோ கார்டியோ கிராம்	27/1/11	20/4/11	83	27/4/11	12/8/11	107	25/8/11	10/12/11	107
3	அவசர மருத்துவ ஊர்தி - அடித்தளம்	23/12/10	28/1/11	36	23/3/11	10/8/11	140	21/7/11	8/12/11	140
4	அவசர மருத்துவ ஊர்தி - கட்டுமானம்	29/9/11	29/9/11	..	17/11/11	28/12/11	41	16/3/12	16/3/12	..
5	RO அமைப்புடன் கூடிய இரத்த சுத்திகரிப்பு இயந்திரம்	29/3/11	23/1/12	300	28/4/11	12/4/12	350	26/8/11	முடிவுற வில்லை	766
6	இரத்தக் கொதிப்பு அறியும் கருவி	27/1/11	23/11/11	300	23/3/11	18/1/12	201	21/6/11	முடிவுற வில்லை	832
7	கைமுறையிலான கால்பாஸ்கோப்	26/1/11	11/11/11	289	22/3/11	5/10/12	563	20/6/11	முடிவுற வில்லை	833
8	AED அதிர்வுக் கருவி	27/1/11	11/11/11	287	27/4/11	12/3/12	320	25/8/11	முடிவு பெற்றது	767
9	வட்டவடிவ லென்ஸ்	28/1/11	29/4/11	91	28/4/11	19/10/11	172	26/8/11	19/2/12	177
10	இருதயத் துடிப்பு கண்காணிப்புக் கருவி	19/10/10	19/10/10	..	13/12/10	25/4/11	133	13/3/11	25/7/11	134

இணைப்பு 3.5

(பார்வை : பத்தி 3.5.2 ; பக்கம் 118)

பணி மதிப்பீடு அதிகரித்துக் காட்டப்பட்டமை

ஆண்டு	பணிகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டுத் தொகை (₹)	செலவினம் (₹)	கான்கிரீட் பாளக் கற்கள் பதிக்கப்பட்ட தரை அமைப்பு							
				தரையின் திண்மை (மிமீ)	அளவு மதிப்பீடு (சமீ)	சமீ ஒன்றுக்கு மதிப்பீட்டில் பின் பற்றிய விலைவீதம் (₹)	வேலை இனத்திற்கு மதிப்பீட்டு விலை (₹)	ஒப்புக் கொள்ளப் பட்ட தொகை (₹)	நெடுஞ் சாலைத் துறையின் தரவுகளின் அடிப் படையில் சமீ ஒன்றுக்கு கணக்கிடப் பட்ட விலைவீதம் (₹)	கணக்கிடப் பட்ட விலை வீதத்தின்படி மதிப்பீட்டு விலை (₹)	அதிகரித்துக் காட்டப்பட்ட விலை மதிப்பு (₹)
2007-08	21	1,10,80,000	1,09,51,195	60	8,793.00	1,000	87,93,000	92,03,038	664	58,38,552	29,54,448
	5	24,00,000	23,97,056	80	1,243.00	1,200	14,91,600	15,57,707	735	9,13,605	5,77,995
2008-09	22	1,12,00,000	1,10,09,277	60	7,277.00	1,000	72,77,000	75,69,273	674	49,04,698	23,72,302
2009-10	13	1,07,00,000	1,06,06,977	60	8,869.21	1,000	88,69,210	92,77,933	674	59,77,848	28,91,362
	9	80,00,000	79,25,875	80	4,411.00	1,200	52,93,200	55,32,149	748	32,99,428	19,93,772
2010-11	13	1,02,00,000	99,87,638	60	4,466.83	1,000	44,66,830	46,83,243	690	30,82,113	13,84,717
	3	30,00,000	29,89,056	80	2,221.10	1,200	26,65,320	27,95,921	770	17,10,247	9,55,073
மொத்தம்	**86**	**5,65,80,000**	**5,58,67,074**		**37,281.14**		**3,88,56,160**	**4,06,19,264**		**2,57,26,491**	**1,31,29,669**

சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டு

சுருக்கச் சொற்றொடர்கள்	சொற்றொடர்களின் விளக்கம்
AICTE	அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம்
APPAS	தானியங்கி திட்ட அனுமதி பயன்பாட்டு மென்பொருள்
AWTs	மேம்பட்ட நீர்தாங்கி வண்டிகள்
BP	இரத்த அழுத்தம்
C-DAC	சென்டர் ஃபார் டெவலப்மெண்ட் ஆஃப் அட்வான்ஸ்ட் கம்ப்யூட்டிங்
CMA	சென்னைப் பெருநகர் பகுதி
CMDA	சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்
CMRL	சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட்
CNC	எண் சார்ந்த வகையில் கட்டுப்படுத்தத்தக்க கணிப்பொறி
CTE	தொழில்நுட்பக் கல்வி ஆணையர்
DCLSL	DCL சாஃப்ட்வேர் லிமிடெட்
DDHS	சுகாதாரப் பணி துணை இயக்குநர்
DFRS	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் இயக்குநர்
DLFA	உள்ளாட்சி நிதித் தணிக்கையின் இயக்குநர்
DLO	மாவட்ட நூலக அதிகாரி
DME	மருத்துவக் கல்வி இயக்குநர்
DMRHS	மருத்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுப் பணிகள் இயக்குநர்
DMRMBS	டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்
DPH&PM	பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநர்
DPL	பொது நூலக இயக்குநர்
DPR	திட்ட அறிக்கை
DRDO	பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
ELCOT	தமிழ்நாடு மின்னணு கழகம்
ETRP	அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம்
FSI	தரைப்பரப்புக் குறியீடு
GIS	பூகோளரீதியான தகவல் அமைப்பு
GoI	இந்திய அரசு
GoTN	தமிழ்நாடு அரசு
HADP	மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்
HILARIS	மலைப்பகுதி வள தகவல் அமைப்பு
HMIS	மருத்துவமனை தகவல் மேலாண்மை அமைப்பு

சுருக்கச் சொற்றொடர்கள்	சொற்றொடர்களின் விளக்கம்
HPPs	உயர் அழுத்த விசைக்குழாய்கள்
ICT	இரசாயனத் தொழில்நுட்ப நிறுவனம்
ITIs	தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
LBs	உள்ளாட்சி அமைப்புகள்
LLA	மாவட்ட நூலக ஆணைக்குழு
LO (SSS)	தொழிலாளர் அலுவலர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்)
MIS	நிர்வாக தகவல் முறை
NIC	தேசிய தகவலியல் மையம்
NITTTR	தேசிய தொழில்நுட்ப ஆசிரியர்கள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
NLC	நெய்வேலி நிலக்கரி நிறுவனம்
PACS	படமெடுத்து தகவல் அளிக்கும் அமைப்பிற்கான சாதனம்
PD	திட்ட இயக்குநர்
PICME	கர்ப்பம், இளம்சிறார் Cohort கண்காணிப்பு மதிப்பாய்வு முறை
PP	திட்ட அனுமதி விண்ணப்பங்கள்
PPA	திட்ட அனுமதி
PWD	பொதுப்பணித்துறை
QRVs	விரைவு வாகனங்கள்
RDBMS	தரவுத்தள மேலாண்மை திட்டம்
SBTET	மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியம்
SICE	வணிகக் கல்விக்கான மாநில நிறுவனம்
SLC	மாநில அளவிலான குழு
SLC	மாநில நூலக ஆணைக்குழு
SRS	கணினி அமைப்பு தேவைக் குறியீடு
TEQIP	தொழில்நுட்பக் கல்வி தரமேம்பாட்டுத் திட்டம்
TNHSP	தமிழ்நாடு சுகாதாரத்திட்டம்
TNMSC	தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்
TNSCB	தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
TNSTC	தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
URS	பயன்படுத்துவோர் தேவைக் குறிப்பீடு